
13697

# தவத்திரு
# வடிவேற் சுவாமிகள்
# மலர்



270
வடிவே

வெளியீடு:
திருநெறிய தமிழ் மறைக் கழகம்
இணுவில்
ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில்
1993

உ

13697

தவத்திரு

# வடிவேற் சுவாமிகள் மலர்

வெளியீடு

**திருநெறிய தமிழ் மறைக் கழகம்**

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்,
இணுவில்.



THAVATHTHIRU

# VADIVĒL SWAMIGAL MALAR

*Published by*

**THIRUNERIYA THAMIL MARAI KAZHAGAM**

SRI PARARAJASEKARA PILLAIYAR TEMPLE,
INUVIL.

1993

பதிப்பு : 1993 செப்தெம்பர்

பதிப்புரிமை : திருநெறிய தமிழ் மறைக் கழகம், இணுவில்.

பதிப்பகம் : அருண் பிறிண்டேர்ஸ் அன்ட் பப்பிளிஷேர்ஸ்
யாழ்ப்பாணம்.

*Date of Publication:* **1993 September**

*Copy right* : **Thiruneriya Thamil Marai Kazhagam, Inuvil.**

*Printers* : Arun Printers & Publishers
Jaffna.

---

உ

திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின்

## நன்றி

*கலை ஞானமும் மெய்ஞ் ஞானமும் பொங்கித் ததும்பிப் பூரண அனுபூதிச் செல்வராய் விளங்கிய தவத்திரு வடிவேல் சுவாமிகள் பற்றிய இவ்வழகிய மலர்வெளிவருதற்கு எல்லா வகையிலும் எமக்கு உதவிய அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.*

*தலைவர்:*

பண்டிதர் நா. இராசையா

*செயலாளர்:*

திரு. சோ. பரமசாமி

*பொருளாளர்:*

திரு. மா. இராசரத்தினம்

# அர்ப்பணம்

## இருபத் தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காரேறு சூர்ப்பகை கடந்தேறு சஷ்டியிற்
கலைநன்மெரு கேறுண் ணதக்
கடாவே றுதைத்தேறு கந்தவே ளூர்தரக்
கற்பனா கௌர வத்திற்
காசினிக் கபூர்வமாங் கவினுருப் பெருமஞ்சங்
காண்பித்தில் வகிலம் ஒருதன்
கருவேறு ஞானமெய்த் திருவே றுயர்மகிமை
கண்டுகேட் டுயர்வ ளித்த
பேரேறு பெரியசந் நியாசியார் வாக்கருட்
பிரசாத மாயு தித்தோன்
பிள்ளைப் பதத்திலே பிரபஞ்ச வைராக்யப்
பெருவிசா ரமுங்கை வந்து
பிணங்கலில் வேதாந்த ஞானமுணர் சாதனச
துட்டயத் தெளிவி னொளிர்மெய்த்
தேசிக மகாதேவ சாமியுப தேசவுயர்
பேறுபெற் றிடுமே தை, யாழ்
ஊரேறு தலமெலாம் ஒருநால்வர் பாவினிமை
உரைத்துரைத் தூட்டு மன்பன்
உத்தர ரணத்தொனியி னொவ்வா மதத்தவ
றுணர்த்து பிரசங்க சிங்கம்
ஒப்பில்திரு முகநகையி னொளியினாற் கிளிநொச்சி
உராவிருள் வனபூ மியின்
னொளிர்சைவ பூமியா யுருத்திரிந் திடநோக்கும்
உயர்ரகத் திரசவாதி
சீரேறு மாதேவா ஆச்ரம மமைத்தங்கண்
சிஷ்டர்பலர் சிவமாண் புறச்
செய்தவடி வேற்சாமி சைவஞா னத்தியல்
தெரிக்கும் வேதாந்த மோடு
சித்தாந்த முந்தமிழ் முரணாமை காணுமுய
ரநுபூதி மாண்சீர் கமழ்
தெய்வீக நறுமலரி துய்ய வெமை யாளுமவர்
திருவடிக் கர்ப்பண மதாம்.

பண்டிதர் மு. கந்தையா
ஏழாலை.

## இணுவை

# நொச்சியம்பதி முருகன் தோத்திரம்

### கட்டளைக் கலித்துறை

ஆராரும் காண்டற் கரியன் அருமறை தேடரியன்
நீராருஞ் செஞ்சடை நிர்மல னார்க்கு நிறைபுதல்வன்
பாராரும் விண்ணகத் தாரும் பரவும் பழம்பதியாம்
சீரார் இணுவையில் நொச்சிப் பதியுறை சேவகனே. 1.

காராரும் கண்டத்தர் கண்ணினில் தோன்றிய கற்பகமே
சீராருஞ் செந்திற் பதிமேவி நின்ற செழுஞ்சுடரே
பேரூர் பிறப்பிறப் பில்லையென் றென்வினை பேதலித்த
சீரா ரிணுவையம் நொச்சிப் பதிவளர் சேவகனே. 2.


கல்லா அறிவிற் கடைப்பட்ட என்னைக் கருணையினால்
வல்லாள னாக்கிய வானவன் வார்கழற் கேநிதமும்
சொல்லாற் துதித்து சுடர்வடி வேலவென் றேத்துதற்கு
நல்லா ரிணுவையில் வைத்தநொச் சிப்பதி நாயகனே. 3.

எத்தனை சென்ம மெடுத்தெடுத் தெய்த்திளைத் தேயிருந்தேன்
அத்தனை யுமறிந் தாண்டான் அறுமுகன் சற்குருவாய்
வித்தகக் கோலம் விளங்கிய வேற்பெரு மானிதமும்
சத்தியம் நொச்சி இணுவைப் பதியினிற் சார்ந்தனனே. 4.

சேவற் கொடியன் சிவன்மகன் செய்ய சிவக்கொழுந்து
காவற் புனத்தில் களவொடு வள்ளியைக் கைப்பிடித்து
காவிற் கலந்து கழலடி காட்டிய காரணனைச்
சேவித்து நற்றவர் சேர்ந்தார் இணுவையஞ் சீர்பதிக்கே. 5.

கருவுற்ற நாள்முத லாகக் கழலடி காண்பதற்குப்
பெருகுற்ற செல்வமும் பேணா தொழிந்து பிறப்பறுக்க
உருகுற்ற உள்ளமும் யானும் உனதடி யார்தொகையுள்
ஒருவனென் றாக்கு மொருவன் இணுவை யறுமுகனே. 6.

— தவத்திரு வடிவேல் சுவாமிகள்



இனிதினிது ஏகாந்த மௌனமகிழும் இணுவைநகர் வடிவேல் சுவாமி
கனிவுநுதல் திருநீறும் கண்ணேறைக்கும் இறைநோக்கும் கருதுவாராய்
பணியவெய பொற்முடி பரிச்சிட நல் கிளிநொச்சி பராவர நீழல்
நவிலௌரும் சிவயோக நற்றவத்தில் மிளிர்கின்றார் நன்று நன்றே!

— வை. க. சி.

உ

# வெளியீட்டுரை

இறையுணர்வும் இயற்கை ஞானமும் நிறைந்த வடிவேல் சுவாமிகள் இனுவை தந்த தவசீலர். இவர் பிஞ்சு வயதிலேயே சான்றோர் மெச்ச வாழ்ந்தவர். இவரது கொஞ்சும் குரல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் ஈறாகவுள்ள அனைவரின் நெஞ்சங்களையும் கொள்ளை கொள்ளச் செய்தது. கேட்டார்ப் பிணிக்கும் அவரின் சொல்லில் இனிமை சொட்டும்; அன்பு தவழும்; ஆறுதல் பொங்கித் ததும்பும்.

தவத்திரு வடிவேல் சுவாமிகள் இளமைக் காலத்தில் இருந்து சித்தத்தைச் சிவன் பால் இருத்தி இன்பம் கண்டவர். சைவசமய சாத்திர தோத்திரங்களையும் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் ஐயமறக் கற்றவர். அத்துடன் வடமொழி அறிவும் இவருக்கு உண்டு. ஆதிசங்கரர் அருளிய ''சிவானந்தலகரி'', ''சௌந்தர்யலகரி'' நூல்களை விரும்பிப் படித்தவர். பூரணை தோறும் அம்பிகைக்கு லலிதா சகஸ்ர நாமம் சொல்லி அர்ச்சிக்கும் பழக்கமும் இவரிடம் இருந்தது.

சுவாமிகள் தாம் கற்றடங்கியதோடு அமைந்துவிடாமல், ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்றாங்கு படித்தவர்கள் யாராய் இருந்தாலும் மூப்பு இளமை நோக்காது அவர்களைத் தம்மிடம் அழைத்து உரையாடுதல் அவரின் பண்பு. இறை இன்பம் காண்பதில் பேரார்வம் கொண்ட சுவாமிகள், ஓய்வான வேளைகளிற் பொதுப்பணிகளுக்கும் தம் பங்களிப்பினைச் செய்துள்ளார். அதனாலேயே யாழ். குடாநாட்டுக்குள் மட்டும் தமது சேவையை முடக்கிக் கொள்ளாது, புதுக் குடியேற்றப் பிரதேசமான கிளிநொச்சிக்குச் செல்ல மனம் கொண்டார்.

பொதுப் பணியிலும், சமயச் சீர்திருத்தத்திலும் ஊக்கம் காட்டிய சுவாமிகள் பழைமை பேணிப் புதுமை வேட்டலில் நாட்டம் கொண்டவர். இப்புவியில் எண்பத்து நான்கு ஆண்டுகள் எமது காலத்திலே அருளுருத் தாங்கி இருந்த சுவாமிகள், சிறந்த அனுபூதி பெற்றவர்; யாழ்ப்பாணத்து ஞானபரம்பரைச் சித்தர் கூட்டத்தைச் சேர்ந்த இவர் வாக்குச் சித்தியும் உள்ளவர்.

இத்தகைக் குணங்கள் நிரம்பிய சுவாமிகள் தம்மைப்பற்றிய குறிப்புகள் எதையுமே வைத்திருக்க வில்லை. அவற்றை யாரேனும் கேட்டால் வேறேதாவது சொல்லிச் சடத்திவிடுவார். அதனால் அவரின் வரலாற்றுக் குறிப்புக்களைக் குறித்துக் கொள்வது சங்கடமாய் இருந்தது.

எனினும், 1982 ஏப்பிரல் மாதம் கொழும்பில் நடைபெற்ற **அகில உலக இந்து** மகாநாட்டில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் ''**கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம மலர்**'' என்ற கல்லச்சுப் படியைப் பார்வைக்கு வைப்பதற்குத் தயாரித்தபோது, சுவாமிகளது முக்கிய குறிப்புக்களைக் குறித்துக் கொள்ள வாய்ப்பு உண்டானது.

காலமெல்லாம் இறையின்பத்தில் நீந்தித் திளைத்த சுவாமிகள் 26 - 06 90 அன்று பரிபூரணம் எய்திய போது, அவர் நினைவாக மலர் ஒன்று வெளியிட ஆவல் தூண்டியது. குறித்த அவாவின் விளைவே இன்று உங்கள் கைகளை அலங்கரிக்கும் இந் நறுமலராகும்.

இந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் ஈழத்துச் சித்தர்கள் பற்றி ஆய்வுகள் நடத்தும் இக் காலத்தில், நல்ல பல செய்திகளை உள்ளடக்கிய இம் மலருக்குக் கட்டுரைகள், கவிதைகளைத் தந்துதவினோர் சுவாமிகளை நன்கு தெரிந்தவர்களாவர். இம் மலரில் உள்ள விடயங்களைச் சுவாமிகளின் வரலாறு, பொதுப்பணி, கவிஞர் நெஞ்சம் என மூன்றாக வகுத்துக் கூறலாம். மேலும் ஈழத்துத் திருத்தலங்கள் மீது காலத்துக்குக் காலம் சுவாமிகள் பாடிய பாடல்களும் இம் மலரில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் காலத்தில் காத்திரமான முறையிலே மலர் ஒன்றினை வெளியிடுவது இலகுவான காரியமன்று. சுவாமிகளை நன்கு அறிந்தவர்கள் எமது கழகத்துக்கு அளித்த உதவியும் ஊக்கமுமே எம்மை இத்துறையில் ஈடுபடவைத்த தென்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

அட்டைப் படத்தினையும் ஏனைய படங்களையும் நல்ல முறையில் தயாரித்து உதவியவர்களான திருநெல்வேலி ''பேபி போட்டோ'' நிலைய உரிமையாளர் ந. இராசரத்தினம் அவர்களும் வண்ணை இ. கணேசன் அவர்களும், யாழ்ப்பாணம் ''லங்கா'' அவர்களும், படங்களை அழகாக அச்சிட்டு உதவிய கொழும்பு ''ஸ்பாட்டன்'' அச்சகத்தினரும், தாளையான் அச்சகத்தினரும், பெரு நன்றிக்கு உரியவர்கள். அத்துடன் சுவாமிகளோடு தொடர்புடைய பெரியார்களின் பட அச்சுக்களைத் தந்துதவியவர்களும் பாராட்டுக்கு உரியவர்கள்.

மலருக்கான கட்டுரைகள், கவிதைகளை நல்கியவர்களும் அவற்றைத் தொகுக்க உதவியவர்களும் ஆற்றிய சேவை மறக்கற்பாலதன்று. மலர் வெளியீட்டுக்குத் தாபனரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் உதவியவர்கள் பலர். மிகவும் குறுகிய காலத்தில் அழகானமலரினை அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் ''அருண் பிறின்டேர்ஸ்'' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் காட்டிய ஒத்துழைப்பு மகத்தானது. அனைவருக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

இன்னும், திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின் தலைவர், பொருளாளர் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் இம் மலர் வெளியீட்டின் பொருட்டு ஆற்றிய பணிகள் எண்ணிறந்தவை. அப்பணிகள் மிகவும் பாராட்டுக் குரியனவாம்.

இம் முயற்சிக்கு எம்மைத் தூண்டியதுடன், நிதியுதவி புரிந்தவர்கள், விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு ஒத்தாசை புரிந்தவர்கள் யாவருக்கும், சுவாமிகளின் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என இறைவன் திருவடிகளைப் பிரார்த்திப்பதுடன் மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறி அமைகின்றோம்.

வணக்கம்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்,
இணுவில் தெற்கு, இணுவில்.
20 - 08 - 1993.

சோ. பரமசாமி
செயலாளர்,
திருநெறிய தமிழ் மறைக் கழகம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| வாழ்த்துரைகள் : | ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் | |
| | ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் | |
| | திரு. கா. மாணிக்கவாசகர் | |
| | திரு. வை. கதிர்காமநாதன் | |
| | சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | |
| | திரு. மு. ஞானப்பிரகாசம் | |
| | திரு. வே. ந. சிவராசா | |
| பிரார்த்தனைக் கவிதை : | '' பண்டிதர் '' | |
| **வரலாற்று நோக்கில்** | | |
| இணுவை தந்த கர்ம யோகி : | திரு. மா. ஆனந்தர் | 01 |
| வடிவேலுச் சாமியாரும் சிந்தாவளைக் கொட்டிலும் : | பண்டிதர் க. நாகலிங்கம் | 07 |
| ஈழத்துச் சித்தர் பரம்பரையில் தவத்திரு வடிவேல் சுவாமிகள் : | பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் | 09 |
| காட்டூரில் ஒரு காருண்ய மூர்த்தி : | '' நம்பி '' | 12 |
| மலையகத்தில் ஸ்ரீமத்வடிவேற் சுவாமிகள் : | ஆத்மஜோதி நா. முத்தையா | 14 |
| உலகுக்கு வழிகாட்டிய உத்தமர் : | தமிழவேள் க. இ. க. கந்தசாமி | 16 |
| அவர் ஒரு தெய்வம் : | செல்வி ப. தமயந்தி | 20 |
| இணுவை தந்த இறையருட் செல்வர் : | திரு. நா. இராசையா | 22 |
| வணங்க வேண்டிய தவமுதல்வர் : | சிவதர்ம வள்ளல் க. கனகராசா | 31 |
| **பொதுப்பணி நோக்கில்** | | |
| உண்மை வாழ்வு : | உயர்திரு க. வடிவேலு அடியார் | 33 |
| அடிகளார் என்னை ஆட்கொண்ட வண்ணம் : | பண்டிதர் சபா. ஆனந்தர் | 36 |
| வடிவேல் சுவாமிகளின் கற்பித்தலியல் : | கலாநிதி சபா. ஜெயராசா | 38 |
| மஞ்சத்தடி...... அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கிறேன் : | வைத்தியர் க. இராமலிங்கம் | 41 |
| சித்தர்கள் கோட்டத்தில் வடிவேல் சுவாமிகள் : | திரு. செல்லப்பா நடராசா | 44 |
| சமாதி நிலையும் நினைவாலயமும் : | பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் | 48 |

சைவ நீதி : பண்டிதர் மு. கந்தையா 52
திருமுறைச் சிறப்பும் பண்ணிசைச்
சுருக்கமும்: சங்கீத பூஷணம் நா.வி.மு. நவரத்தினம் 55
தொண்டின் சின்னம் மகாதேவ ஆச்சிரமம்: திரு. சு. பொ. நடராசா 64
அறப்பணியில் வடிவேல் சுவாமிகள் : திருமதி கலைவாணி இராமநாதன் 67
சிந்திப்பார்களா! : பரமானந்தவல்லி அம்மையார் 73
அப்பரை நினைவிக்கும் அடிகளார் : வைத்திய கலாநிதி க வேலாயுதபிள்ளை 76
சுவாமிகளை மெச்சிய
சமகாலப் பெரியோர்கள்: திரு. சோ. பரமசாமி 79

**கவிஞர் நோக்கில்**

நின்பெருமை மலைபோல் வாழி : அருட்கவி சி. விநாசித்தம்பி 84
கல்லாலின் மேவினார் போல் திகழ்ந்தார்: இணுவையாசிரியர் வை. க. சிற்றம்பலம் 85
மகானுபாவர் வடிவேல் சுவாமிகள் : பண்டித, வித்துவான் இ. திருநாவுக்கரசு 87
வடிவேல் சுவாமி சீர்சிறந்து வாழி : 'கவிமாமணி' ந. வீரமணி ஐயர் 89
தர்மநல் இணுவையின் நற்பயன் : பண்டிதர் ச வே. பஞ்சாட்சரம் 91
அஞ்சலில் நெஞ்சங்கொண்ட
அருள் ஞானி: ''அளவைக் கிழவனார்'' 92
தரணியில் யான் மறவேனே : சங்கீத கலாவித்தகர் சி சிவானந்தராஜா 93
வேதாந்த சித்தாந்த ஒளியாய் வாழி : கவிஞர் செ. குணரத்தினம் 94
சுவாமிகள் பாடல் பக்திப் பயிரை
வளர்த்திடும்: புலவர் ம பார்வதிநாதசிவம் 95
நீ வந்த வேலையைப் பார் : சைவப்புலவர் சு. செல்லத்துரை 96

**தவத்திரு வடிவேல் சுவாமிகள் பாடிய தோத்திரப் பாக்கள்**

உருத்திரபுரீஸ்வரர் தோத்திரப்பாக்கள் 97
உருத்திரபுரீஸ்வரர் திருக்குறுந் தொகை 100
கோயில் கொண்ட கோலம் 104
செந்நெல்கள் காய்த்திடும் ருத்ர நற்பதி 105
உருத்திரபுரீஸ்வரர் அபயப்பத்து 106
அருளையளித்த ருத்ரபுர அம்பிகை 108
இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை
அம்பாள் திருப்பதிகம் 109
ஞானசற்குரு மகாதேவர்க்குப் பல்லாண்டு 110
தவத்திரு வடிவேல் சுவாமிகள் பற்றிய
முக்கிய குறிப்புக்கள் 112

**அநுபந்தம்**

நீங்காத நினைவலைகள் : திரு இ. சுந்தரலிங்கம் 114
ஆயிரம் பிறைகண்டவர் : ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் 115

இதழாசிரியர்: திரு. சோ. பரமசாமி (நம்பி)

# குருவருள் தோன்றாத் துணையாய் முன்னின்று உதவுவதாக

யாழ்ப்பாணத்து ஞான பரம்பரையில் ஸ்ரீ வடிவேல் சுவாமிகள் நமது காலத்தில் வாழ்ந்த ஞானசிலர். இக்குருதேவர் கடந்த பிரமோதூத ஆண்டு ஆனித் திங்கள் (26-06-90) செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.00 மணிக்குச் சரியான பிரம்ம முகூர்த்தம் கூடியிருந்த ஆயிலிய நன்னாளில் கைவல்ய முத்தியாகிய பெரும் பேற்றினைப் பெற்றுள்ளார்.

ஸ்ரீ குருதேவரின் ஜெனன பூமியிலே தமது பூர்வாச்சிரமத்தில் இருந்த காலத்தில் ''நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா'' என்று நித்தமும் அழைத்து, தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர். அத்துடன் தன்னை அறியும் தகவுடையார்க்கு முத்திப் பேற்றைத் தரவல்ல ஞான நூல்களையும் சமய சாத்திரங்களையும் ஐயமறப் போதித்து வந்தார்.

சுவாமிகள் ஆத்ம நலனுக்காக யோக சாதனைகளில் ஈடுபட்டிருந்த போதிலும், பொதுப் பணிகளிலும் அயராது முன்னின்று உழைத்ததை யாரும் மறந்துவிட முடியாது

சீலம் மிகுந்த சுவாமிகளின் பணிகளை உளத்திற் கொண்ட அவரது அன்பர்கள், அடியார்கள, தொண்டர்கள் அனைவரும் கூடி அவர் அவதரித்த இணுவையூரில் அன்னாரின் திருவுருவப் படத்துக்கு ஆராதனைகள் செய்து விழாவெடுத்து, மலர் ஒன்று வெளியிடுவதற்குமான ஏற்பாடுகள் செய்துள்ளமை பாராட்டற்பாலது.

மெய்யடியார்களின் உள்ளத்திற் குருதேவர் உள்நின்று உணர்த்திய சிவப்பணிகள் வெற்றி பெறக் குருவருள் தோன்றாத் துணையாய் முன்னின்று உதவவேண்டு மெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

ஓம் தத்சத் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அடியான்
கணேசானந்த மகாதேவ சுவாமி

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

# ஆயிரத்தில் ஒருவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

அருட் பெருந்தகையீர்!

சிவபரிபூரணத்துவம் எய்திய ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் இணுவைப் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். அவ்வூர் வாழ் அன்பர்கள் சுவாமிகளை நினைவுகூர்ந்து ஒரு மலரினை வெளியிடுவது பாராட்டற்குரியது.

ஸ்ரீ வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சியில் ஆஸ்ரமம் அமைத்து, சைவத்துக்கும் தமிழன்னைக்கும் ஆற்றிய அருந்தொண்டுகளை அறியாதார் இலர். சுவாமிகள் தமது குருதேவரின் பெயரில் நிறுவிய மகாதேவ ஆஸ்ரமம் அத்துணைப் பிரபல்யம் வாய்ந்து விளங்கியமைக்குக் காரணம், சைவமக்கள் சுவாமிகள் பால் வைத்திருந்த அளப்பரிய அன்பும் பக்தியும் எனின் மிகையாகாது.

வேதாந்த உட்பொருள்களைப் பாமரரும் விளங்கிக் கொள்ளும்வகையில் உபதேசித்து உய்யும் நெறிகாட்டிய வேதாந்த வித்தகர் இவர். ஆஸ்ரமத்தில் குருகுலம் அமைத்து சிறார் உள்ளங்களிலும் தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை, தமிழ்மொழி ஆர்வம் ஆகியன வளர்த்த பெருந்தகை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகப் பற்றற்று வாழ்ந்த மகான். இவர் ஆயிரத்தில் ஒருவர், அவர்களின் அருளாசிகள் எல்லோருக்கும் என்றும் நிலைத்து நிலவும் என்பதுண்மை.

இக் கைங்கரியத்தில் பங்கு கொள்ளும் அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி, எல்லோருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம். திருவருள் பொலிக.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.
30-05-1992.

# உடல் உழைப்பின் மூலம்
# ஆத்மிக நெறியை வளர்த்த பெரியார்

தவத்திரு வடிவேல் சுவாமிகள் இந்த நாடறிந்த பெரியார். இணுவிலைப் பிறந்தகமாகக் கொண்ட இத் தவசீலர் ஏழைகளிடத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். சன்னியாசி என்ற வட்டத்துக்குள் தம்மை முடக்கிக் கொள்ளாது தமது உடல் உழைப்பைக் கொண்டு ஆத்மிக நெறியை வளர்த்தவர்.

திருமுறைகளிலும் சமய சாத்திரங்களிலும் சிறந்த புலமை பெற்றிருந்த சுவாமிகள், அல்லற்பட்ட மக்களுக்கு ஆறுதலளிக்கும் பெருநிழலாய் விளங்கினார். உளம் நொந்து வந்தோர்க்குச் சமய சாத்திரங்கள், புராணங்களிலிருந்து சான்றுகளைக் காட்டி, அவர்களின் மனத்துயர் தீர்த்தவர். அவ்வாறே வறுமையால் வாடி வந்தோர்க்கும் அவர் துயர் களைந்தவர்.

கிளிநொச்சியில் அவர் அமைத்துள்ள மகாதேவ ஆச்சிரமம் மக்களுக்குச் சாந்தியளிக்கும் சாந்தினி கேதன் எனலாம். அங்கு நிகழும் பூசை, வழிபாடு, பஜனைகள் பக்திமயமானவை. கல்வி கேள்விகளில் பின்தங்கிய மக்கள் வாழும் அப்பகுதியில் சைவ சமய வளர்ச்சிக்கு மகாதேவ ஆச்சிரமம் பெருந் தொண்டு ஆற்றுகின்றது.

ஆத்மிகத்திலும் பொதுப் பணியிலும் முன்னின்றுழைத்த வடிவேல் சுவாமிகள் மக்களால் என்றும் நினைவு கூரத்தக்கவர். யாழ்ப்பாணத்து ஞான பரம்பரையில் வழிவந்த சுவாமிகளின் பெயரிலே மலர் ஒன்று வெளியிடுவது சாலப் பொருத்தமானது. இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைவதுடன் அதனை வெளியிடும் இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தையும் உளமார வாழ்த்துகிறேன்.

அரசாங்கச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
12 - 08 - 93

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரச அதிபரும் மாவட்ட ஆணையாளரும்.

# சிவமணம் பரப்பிச் சிறப்புடன் மலர்க

இணுவைப் பதியிற் கோயில் கொண்டிருக்கும் சர்வ ஜீவ தயாபர னாகிய வடிவேற் கரத்தோனைச் சந்நாசி கந்தரும் சின்னக்குட்டி அம்மை யாரும் இடையறாது வழிபாடாற்றிய தவப் பயன் ஸ்ரீவடிவேற் சாமியார். இவர் தமது ஆரம்பக் கல்வியை எமது தந்தையார் ஸ்ரீமான் அ. க. வைத்திய லிங்கபிள்ளை அவர்களிடம் இணுவில் ஸ்ரீ அம்பிகைபாகர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் பயின்றார்.

அங்கு நாவலர் பால பாடங்களையும் எழுத்திலக்கணங்களையும் கற்று, ஆண்டு தோறும் முதல் மாணவனாகச் சித்தியெய்தினார். இவருடன் பயின்ற திருவாளர்கள் சு. செல்லையா (சாமியார்), வை. தம்பு போன்ற வர்கள் நல்லொழுக்கமும் சமய ஈடுபாடும் கொண்டிருந்தனர்.

இளம் வயதிலே ஆத்மிக நாட்டமுடையவரான ஸ்ரீ வடிவேல் சாமி யார் புராணங்களுக்கும் பாடம் கேட்டறிந்தார். அவரிடம் இயல்பாய் இருந்த இசைஞானத்தால் சங்கீத கதாப் பிரசங்கங்களும் செய்யத் தொடங்கிவிட்டார்.

இவரின் ஞானசற்குரு கந்தமடத்து ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளா கும். அவரிடம் வேதாந்த சித்தாந்த சாத்திரங்களைத் துறைபோகக் கற் றார். இவரது ஞான நலன்களை அவதானித்த பெரியார் பலர் இவரிடம் வந்து போவதுண்டு. அவர்களுள் நயினாதீவுச் சாமி குறிப்பிடத்தக்கவர்.

ஸ்ரீவடிவேல் சாமியாரின் உபாசனா தெய்வம் பரமானந்தவல்லி அம்பாள். அனுதினமும் அம்பாளைப் பூசித்த இவர், தமது மூதாதையர் கொட்டிலாக அமைத்திருந்த கோயிலை இன்றிருக்கும் அமைப்பிலே மாற்றி அமைத்துள்ளார்.

பின்னர் உருத்திரபுரம் சென்று அங்கு ஒரு தபோவனம் தாபித்துச் சிவப்பணிகள் ஆற்றினார். அங்கே ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்க்கு உணவு, உறையுள் கொடுத்து ஆதரித்துள்ளார். அவ்விடத்தில் அவர் ஆற் றிய தொண்டுகள் காலத்தால் அழியாதனவாகும்.

இப்பெரியார் பெறற்கரிய பேறாகிய சிவபதப் பேறெய்தியமை குறித்து இவரது அன்பர்களின் சார்பில் இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் இவரின் பெயரில் மலர் ஒன்று வெளியிடுவது பாராட்டத் தக்கது. இம்மலர் சிவமணம் பரப்பிச் சிறப்புடன் வெளிவரத் திருவருளைத் துதித்து மனமார வாழ்த்துகிறேன்.

**வை. கதிர்காமநாதன்**
புரவலர்
திருநெறிய தமிழ்மறைக் கழகம்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்,
இணுவில்.

# இணுவில் தந்த ஞானப்பழம்

ஆத்மீகத் துறையில் வாழ்ந்து, அருளொளி பரப்பி, ஞான வாழ்க்கைக்கு உரிய முத்திரை பதித்த பல சாதுக்களையும் தபோதனர்களையும் தன்னகத்தே கொண்ட பெருமை இணுவில் கிராமத்துக்கு உண்டு. சைவ மணம் பரப்பும் திருவீதிகளையும், சிவனை மறவாச் சிந்தையில் திளைக்கும் சிவனடியார்களையும், இவ்வூரில் காணும் போது நான் பெருமகிழ்ச்சியடைவேன். இணுவில் தந்த ஞானப்பழமாக - நல்ல குருநாதனாக - வாழ்ந்து எம் மத்தியில் உள்ளத் தெளிவை ஏற்படுத்தியவர் தவத்திரு வடிவேல் சுவாமிகள் அவர்கள். அன்னாரின் "கலகல" என்ற சிரிப்பே எம்மை வாழ்விக்கும் ஒரு மந்திரமாக அமைந்தது.

கிளிநொச்சியில் இவற்றையெல்லாம் நேரிலே அனுபவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்ற பாடலடியை இவர் தோற்றம் என்றும் காட்டி நிற்கும். சுவாமிகளின் அருள் வழி காட்டுதலினால் ஆயிரமாயிரம் உள்ளங்கள் தெளிவு பெற்றன என்று கூறினால் அதில் மிகையொன்று மில்லை. ஆகவே அவர்களின் புனித சேவையை நினைவு கூர்வதும், குருபூசை நிகழ்த்தி வழிபாடு செய்வதும் சைவ மக்கள் அனைவரதும் இன்றியமையாத கடமையாகும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துர்க்காபுரம்,
தெல்லிப்பளை,
16 - 08 - 92.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

# தெய்வ நம்பிக்கையும் ஒழுக்க விசேடமும் சேர்ந்த சிறப்பினர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

இப்போதைய சூழ்நிலையில் எங்கள் யாழ்ப்பாண தேசம் திரிகரண சுத்தியோடு தொண்டாற்ற வல்ல புனிதர்களாகிய அடியவர்களையும், அந்தணர்களையுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அடியார்களுக்குரிய அதிதீவிர தெய்வ நம்பிக்கையும், அந்தணர்களுக்குரிய செந்தண்மை பூண்டொழுகும் ஒழுக்க விசேடத்தையும் சரிவரப்பெற்ற சிறப்பினராக வாழ்ந்தவரே இணுவை யம்பதியில் தோன்றிய ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் ஆவார். சுவாமிகளது நாமமும் புகழும் இவ்வுலகின் கண்ணே நீடூழி நிலைபெறுதல் வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இந்த வெளியீடு வெளிவருகிறது.

இதன் பொருட்டு உழைத்த அன்பர்கள் அனைவர்க்கும் எமது ஆசீர்வாதத்தை வழங்கி, எல்லாம் வல்ல சிவபிரானாரின் திருவருளை மன மொழி மெய்களால் வணங்குகின்றேன்.

சிவப்பிரகாசபுரம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

சைவப் பெரியார்
**மு. ஞானப்பிரகாசம்**

# மற்றவர் அறியா மாணிக்க மலை

வாழையடி வாழையென ஞானமரபில் வந்த மகான் தவத்திரு வடிவேல் சுவாமிகள் இவ்வருளாரை நான் நேர்முகமாகக் கண்டு வணங்கி, மகிழ்ந்துள்ளேன். **இந்த நாட்டில் முதன்முதலாக நிறுவப் பெற்ற இந்து சமயத் திணைக்களம்** சிவராத்திரியை யொட்டி ஒரு மலர் வெளியிட்டது. அம்மலரில் தவத்திரு வடிவேல் சுவாமிகளின் படத்தையுஞ் சேர்க்கும் வாய்ப்புக் கிடைத்ததால், அம்மகானை நாடு முழுவதிலுமுள்ள மக்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளத் திருவருள் கூட்டியது.

மலர் வெளியீட்டு வேலை நடந்து கொண்டிருந்தபோது, கொழும்பிலுள்ள நாளையான் அச்சக மண்டபத்தில் சுவாமிகள் தங்கியிருப்பதாக அறிந்தோம். அங்கிருந்த சுவாமிகளைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தவர் சுவாமிகளின் அன்புக்குரிய சீடருள் ஒருவரான திரு. பரஞ்சோதி அவர்களாகும். திரு. பரஞ்சோதி அவர்கள் எமக்கும் சிலத் திரு சுவாமிகளுக்கும் நன்கு பழக்கமானவர்.

யாழ். பல்கலைக் கழகம் அதன் விவசாய பீடத்தையும், எந்திரவியல் பீடத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கும் முயற்சி தொடர்பாகப் பதிவாளர் என்ற முறையில் நான் அங்கு செல்ல நேர்ந்தது. அவ்வமயம் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் ஓர் இரவு தங்கிய பொழுது, அங்கு நிகழ்ந்த காலை, மாலைப் பூசை வழிபாடுகளிற் கலந்து கொள்ளவும் சுவாமிகளுடன் ஆத்மிக விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது மேற்குறிப்பிட்ட பீடங்கள் இரண்டும் நிறுவும் முயற்சி வெற்றியளிக்கும் என அவர் ஆசி கூறியமை இன்றும் என் செவிகளில் எதிரொலிக்கின்றது.

வசதி, வாய்ப்புக்கள் இல்லாத காலத்தில் கிளிநொச்சிக்குச் சென்று, வடிவேல் சுவாமிகள் மேற்கொண்ட முயற்சிகளும் ஆற்றிய சேவைகளும் இளம் தலைமுறையினர் அறிய வேண்டியன. சுவாமிகளின் அரிய சேவைகள் பற்றி பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளிற் காரியாதிகாரியாகப் பணியாற்றிய திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள் மூலம் நான் அறிந்திருந்த போதிலும், அவரது ஆச்சிரமத்துக்கு நேரடியாகச் சென்றபோதே சுவாமிகளின் பன்முகப்பட்ட பணிகளைக் கண்டறிய முடிந்தது.

விளம்பரம் இடம்பிடிக்கும் இக்கால கட்டத்தில் இலைமறைகாயாக வாழ்தவர் வடிவேல் சுவாமிகள். அவர் ஒரு கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி. அன்னாரின் பேரில் மலர் ஒன்று வெளியிடுவது மற்றவர் அறியா மாணிக்க மலையை அனைவரும் அறியச் செய்யும் பெருந் தொண்டாகும்.

இது போன்ற ஒரு மலர் 1982 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டில் இடம்பெற வேண்டுமெனப் பெரிதும் விரும்பினோம். அவ்விருப்பம் முழுமை பெற்று அச்சுவாகனமேறி அழகுற வெளிவருவதற்குக் கருத்தறிந்து உதவும் கடவுளை வணங்குவதுடன் இம் மலரை வெளியிடும் கழகத்தினரையும் வாயுற வாழ்த்துகிறேன்.

வே. ந. சிவராசா
முன்னாள் பணிப்பாளர்,
இந்து சமயத் திணைக்களம்

கொழும்பு,
10 – 04 – 93

௬

# புந்தியில் எந்நாளும் இருத்துவோமே

"பண்டிதர்"

கலைமலிந்த புலவோர்கள் கவிசி றக்க
    கழனியெலாம் பயிர்விளைந்து வளம்பொ லிய
நிலை சிறந்த நெறிநின்று வாழும் மக்கள்
    நிமலனடி வாழ்த்துமொலி நிரம்ப ரந்து
சிலைமலிந்த கோயில் தொறும் நிறைந்தே அங்கு
    சிவனடியே சிந்திப்பார் வினை யகல
அலை மலிந்த விரிசடையா னருள்சு ரக்கும்
    அழகுடைத்தா மிணுவையூ ரென்ப ராலே;

அந்தணர்கள் அகந்தனிலே மறையொ லிக்கும்
    ஆலயங்கள் யாவிலுமே விழாப்பொ லியும்
செந்தமிழ்சேர் சைவநெறி செழித்தி ருக்கும்
    சேயிழையார் கற்புநெறி தழைத்தி ருக்கும்
பந்தமிலாச் சித்தர் பலர் வந்து தித்தே
    பாருயரக் காட்டும்வழி நிலைத்தி ருக்கும்
அந்தமிலாப் புகழ்படைத்த இணுவை யூரின்
    அருமைதனை யறியாதார் யாரு ளரோ.

அப்பதிக்கண் ணரனடியே யகத்தி ருத்தி
    அவனடியார் தாளிணைகள் தலையிற் சூடும்
ஒப்பரிய குணநலத்தான் கந்த ரென்னும்
    ஒருமகனின் திருமகனாய் வந்து தித்த
செப்பரிய கலை ஞானத் தெளிவு டையோன்
    சிவனடியே பரகதிக்கு வித்து என்னும்
அப்பரிசு படைத்திட்ட அருந்த வத்தோன்
    அவனிபுகழ் வடிவேல் சுவாமி தானே.

சிவயோக சுவாமிகளின் சீட னாகிச்
    சிந்தையிலே மெய்யுணர்வு தேக்கி நின்றே
பவமாயப் பிறவிதனைப் பாற்று தற்கே
    பற்றின்றித் துறவுநிலை பூண்ட சித்தர்
அவமாய நெறியதனிற் செல்லா தெம்மை
    அரனடிக்கே ஆளாக்கி யருளே தந்து
தவமாய வழிநின்றே வீடடைந் தார்
    தாளிணைகள் தலைமிசை நாம் சூடு வோமே.

கருவாதை யினியடையா வண்ண மோர்ந்து
    கருத்தினிலே சிவஞானத் தெளிவு கூடப்
பெருமாய வுலகதனிற் பற்று விட்டே
    பெருவேத மாமறைகள் தமக்கு மெட்டா
அருவாய பொருளானை யறிய லுற்றே
    யணையாத வொளிதேடி யணைத லுற்ற
பெருஞானி வடிவேல் சுவாமி தம்மை
    புந்தியிலே எந்நாளும் இருந்து வோமே,

இணுவில்

# சந்நியாசி கந்தர் அவர்கள்

(பெரிய சந்நியாசியாரின் அணுக்கத் தொண்டர்)



# இணுவை தந்த கர்மயோகி

திரு. மா. ஆனந்தர்
ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில்.

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்பது சிவஞான போதம் பதினோராம் சூத்திரம்.

பொருள்கள் யாவற்றையும் பார்க்கின்ற கண்ணுக்கு அப்பொருள்களைக் கண்டறியுமாறு அதனோடு வேறுபடாது நின்று, அதற்குக் காட்டி, அக்கண் மூலம் தானும் அப்பொருளை அறிவது உயிர். அவ்வுயிர் எவ்வாறு கண் பொருள்களை அறியுமாறு செய்து, தானும் அறிகின்றதோ, அதேபோன்று அவ்வுயிர் பொருளை அறியுமாறு இறைவன் அவ்வுயிரோடு பிரிவின்றி நின்று அதனை அறியும்படி செய்கின்றார். அவ்வாறு வேறுபடாது இரண்டறக் கலந்து அருள்புரியும் இறைவனின் பெருங் கருணையை மறவாது அவ்விறைவனுடைய திருவடியாகிய சிவானந்தத்தை அன்பின் மூலம் ஆன்மா பெறும் என்று மேற்படி சூத்திரத்தின் பொருளை விரித்துக்கூறலாம்.

உடனாய் நிற்றல், காட்டுதல், காணல் என்ற மூவகை உபகார நிலையை (அருள் நிலையை)ப் பெற்றவர்களே அடியார்கள். சேக்கிழார் தாமருளிய பன்னிரண்டாம் திருமுறையில் அடியார்களின் வரலாற்றினைக் கூறுவதன் மூலம் மெய்யடியார்களைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அடியார்கள், அருளாளர், பக்தர் ஆகியோரை இனம்கண்டு, அவர்களது சிறப்புக்களை எடுத்துக் கூறவல்லவர்கள் அம்மெய்யடியார்களின் அடியார்களேயாவர். குருடர்களால் பூஞ்சோலையையும் காட்டையும் கண்டு மகிழமுடியுமா?

இந்தவகையில் இணுவை தந்த வடிவேல் சுவாமிகளுடன் கற்ற மாணவர்களும் அவரிடம் பயின்ற மாணவர்களும் பலர் உளர். அவர்களின் அணிந்துரைகள் சுவாமிகளின் சீரிய உண்மைகளை வெளிவிடுவனவாகும். நண்பர் சோ. பரமசாமி அவர்கள் வடிவேல் சாமியாரை அவரின் நிழல்போல் தொடர்ந்தவர். சுவாமிகளைப் பற்றிய குறிப்புக்களை உடனுக்குடன் குறித்துவைப்பவர். அவருடைய "கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம மலர்" என்ற நூலை வாசிப்பவருக்குச் சுவாமிகளின் உண்மைத் தோற்றம் நன்கு புலப்படும். என்போன்றவர்கள் அவரைச் சந்திக்கும் வேளைகளில் உரையாடியவர்கள். எம்மால் அவரின் பூரண வடிவத்தைக் காட்ட இயலாது. ஆயினும், கூறத்துணிவது அன்னாரிடத்தில் நாம் கொண்டுள்ள மதிப்பின் வெளிப்பாடாகும்.

## கருவை மாற்றிய கருணைத் தெய்வம்

இணுவையூர் சந்தப்பரும் சின்னக்குட்டியாரும் வறிய குடும்பத்தவர். எனினும், தெய்வ நம்பிக்கையும் அடியார் பக்தியும் மிக்கவர். விவசாயத்தின் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். அவர்களுக்கு அடுத்த குழந்தை ஆண் — அடுத்தது, ஆண் — என்று நம்பிக்கை இழக்கும்வரை ஐந்து பெண்குழந்

தைகள் பிறந்தனர். சின்னக்குட்டி அம்மையார் மறுபடியும் கருவுற்றார். ''ஆறாவதும் பெண் குழந்தையானால் ... ........'' என்றொரு கற்பனை; ''கடவுளும் கைவிட்டு விட்டால்'' என்ற ஏக்கம் அம்மையாரின் மனதைப் புகுந்தது.

அம்மையாருக்கு வாழ்க்கை கசந்தது; விரக்தியின் எல்லை; தன்னுயிரைப் போக்கிக் கொள்ளவும் துணிந்தார். இணுவிலின் வடகிழக்கில் இருந்த ஒரு தனிமையான இடம் நோக்கிப் புறப்பட்டார். குறித்துச்சென்ற இடம் நெருங்கியதும் அவருக்கு இரத்தஓட்டம் அதிகரித்தது: மயங்கி வீழ்ந்துவிட்டார்.

முனகல் ஒலியுடன் மயங்கிக் கிடந்த அம்மையாரைக் காப்பாற்ற யாருமில்லை; அங்கு தோன்றாத் துணையாய்த் தோன்றினார் இணுவிலில் அருளாட்சி செய்த பெரிய சந்நாசியார். அவரின் கண்பார்வை பட்டதும் அம்மையாரிடம் அசைவு காணப்பட்டது. கண்களை விழித்து எங்கும் பார்த்தார். தன்னிலை விளங்கிவிட்டது. எழுந்து சந்நாசியாரைக் கும்பிட்டார்;

## நல்வாக்கு

''ஏய் சின்னக்குட்டி! ஒன்றுக்கும் பயப்படாதே. உனக்குப் பிறக்கப்போவது ஆண் குழந்தை. அவனால் நீ புகழடையப் போகிறாய். அவனுக்கு 'வடிவேல்' என்று பெயர் வை. பயப்படாமல் வீட்டிற்குப்போ' என்றார் சந்நாசியார். அவரின் வாக்கு அம்மையாரின் காதுகளில் அமிர்தமாய் இனித்தது. அன்றிலிருந்து அம்மையார் ஆசைக்கனவுகள் காணத் தொடங்கினார்.

## அரிய குழந்தை வடிவேல்

ஐந்து பெண் சகோதரிகளுடன் தாய் ஒன்றும் சேர்த்து ஆறு ஆதாரங்களினூடாக உண்டு, மகிழ்ந்து, நிலத்தில் கால் படாத் 'தேவனாய்' தான் ஒருவனே எல்லோருக்கும் ஆதாரம் என்பதையுணராமல் வளர்ந்து வந்தான் வடிவேல்,

## கல்வி

வடிவேல் குறுநடை பயிலத்தொடங்கியபின் ஏடு தொடக்கப்பட்டது: பள்ளியிற் சேர்ந்து இயற்றமிழ் ஆசிரியர்களான அ. வைத்திலிங்கம் உபாத்தியாயர், எனது தந்தையார் அ. மாணிக்கத்தியாகராசா (மாணிக்கச் சட்டம்பியார்) ஆகியோரிடம் கல்வி பயின்றார்.

அத்துடன் நின்றுவிடாமல், மாலை நேரங்களிலும் ஒய்வு வேளைகளிலும் சேதுலிங்கம் (சேதர்) சட்டம்பியாரிடம் நிகண்டு, நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும் ஆத்திசூடி முதலிய நீதி நூல்களையும் பயின்று மனப்பாடம் செய்தார்.

குழந்தையின் நடைமுறைகளைக் கண்டு "இது ஞானக் குழந்தையப்பா, கொண்டு போய் யோக சுவாமியிடம் விடு'' என்று யாரோ கந்தப்பரின் காதில் போட்டுவிட்டார்கள். ஒரு நல்ல நாளிலே குழந்தையை தோளில் சுமந்துசென்ற கந்தப்பர், யோக சுவாமி முன்னிலையில் விட்டுத் தமது விருப்பத்தையும் கூறினார்.

"இது பள்ளிக்கூடம் இல்லை. இங்கு பாடம் சொல்லிக்கொடுக்க ஆளும் இல்லை. கொண்டு போய் கந்தமடத்திலுள்ள வேதாந்த மடத்தில் விடும்'' என்றார் யோகசுவாமி.

அந்த வாக்கை அருள் வாக்காக ஏற்று, தன்மகனை வேதாந்த மடத்திற்குப் பிறிதொருநாள் கொண்டுசென்றார் கந்தப்பர். அப்பொழுது அங்குள்ள சிவகுருநாத பீடத்துக் குருமூர்த்தியாய் இருந்தவர் தவத்திரு மகாதேவ சுவாமிகள். சிறுவன் வடிவேல் குருமூர்த்தியைக் கண்டதும் காந்தம் இரும்பை இழுப்பதுபோல் குருதேவரிடம் ஓடிச்சென்று வணங்கினான்.

சிலநாள் கழிந்தபின் குருதேவரிடம் வேதாந்த சாத்திரங்கள், தர்க்கம், ஞான நூற் பொருள்கள் முதலியவற்றை ஐயந் திரிபறக் கற்றான். தேவையானவற்றை மனனம் செய்து, அவற்றை உடன்மாணாக்கருக்கு உரைத்து மகிழ்வான். அதனால் குருநாதரின் பேரன்புக்கு ஆளானான்; இயம, நியமங்களோடு தியான வழியிலும் மனதைச் செலுத்தினான். நாளடைவில் இளைஞரான வடிவேல் எல்லாருக்கும் ஒரு சாமியாராகத் தென்பட்டார்.

வடிவேல் சுவாமியைப் பின்பற்றிப் பலர் மடத்துக் கல்வியை விரும்பினர். மாணவர் குழாம் அதிகமாயிற்று. வேதாந்த மடம் '' கலகலப்பாக ''விளங்கியது. திருமுறைகளும், விவாதங்களும், விளக்கங்களும் மடத்து வளவெங்கும் ஒலித்தன. அவற்றின் மீதி வடிவேல் சுவாமிகளின் இணுவிற் குடிசையிலும் தொடரும். கேட்பதற்குச் சுவாரஸ்யமாயிருக்கும்.

## வேதாந்தம் மட்டும் போதுமா

வேதாந்திகள் சிற்சில சமயங்களில் சித்தாந்திகளோடு மோதிக்கொள்வர். வடிவேற் சுவாமியார் அதிற் கலந்துகொள்ளார். அதனால் நண்பர்களுக்கு அவரிடம் மனக்கசப்பு ஏற்படுவதுமுண்டு. '' உங்களில் யாராவது சித்தாந்தத்தைப் படித்திருந்தால், அதைப் பற்றி எனக்குச் சொல்லித் தாருங்கள்; அதிலுள்ள தவறுகளை எனக்கு விளக்குங்கள். அறியாத விடையத்தை தர்க்கித்து, அவமானப்பட நான் விரும்பவில்லை '' என்று சமாதானப் படுத்தி விடுவார்.

அத்துடன் சும்மா இருக்காது சித்தாந்த நூல்களை அறிந்தோரிடம் சென்று விளக்கமாகக் கேட்பார். வேதாந்தம், சித்தாந்தம் என இரு பகுதியாகப் பிரித்துத் தர்க்கிப்பது, அவர்களின் மூடத்தனத்தைக் காட்டும் என்பது வடிவேற் சுவாமிகளின் உள்ளார்ந்த கோட்பாடு. வேதாந்தத்தின் சாரமே சித்தாந்தம் என்றும் சித்தாந்தக் கல்வியைக் கற்றவர்களே சிறந்த வேதாந்திகள் என்றும் சுவாமிகள் தெரிந்து கொண்டவர்.

## பழகுவதற்கு இனியவர்

தேவார, திருவாசகங்களைப் பண்ணுடனும் தாளத்துடனும் பாடக் கற்றவர். அவற்றின் பொருளும் தெரிந்தவர். இறை பக்தியினால் குழந்தையுள்ளம் கொண்டவர். அவரின் இனிய மொழி பகைவனையும் நண்பர்களாக்கும். அவருடன் பேசிக் கொண்டிருப்பதில் ஓர் இன்பம் பிறக்கும். நோயாளிக்குத் தெரியாமல் ஊசிமூலம் மருந்து ஏற்றுவது போல் குழைந்து குழைந்து பேசி, விடையத்தைப் புகுத்திவிடுவார். அது ஒரு தெய்வீக ஆற்றல். எவரையும் குற்றம் சொல்லார்; தன்னிடம் அக்குற்றம் இருப்பதாகக் காட்டி, அதனால் ஏற்படும் விளைவுகளையும் கூறுவார். உள்ளத்தில் ஒளியுடைய சுவாமிகளின் வாக்கில் மந்திர சக்தி உண்டு. அவ்வருளாற்றல் அவரது சிறு குடிசைக்குப் பலரை அழைத்தது.

## தெருவீதியில் நிர்வாண தீட்சை

இளைஞர் வடிவேலின் உள்ளத்தில் ஞானப் பயிர் வளர்ந்து கொண்டிருக்க, அவரது தோட்டத்தில் சாமிப் பயிர் வளர்கிறது. ஒருநாள் தோட்ட வேலை முடிந்து, தோளில் மண்வெட்டியுடன் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தார். இணுவில் ஆஸ்பத்திரிக்கு வட புறத்திலுள்ள அரசமரத்துக்கு அண்மையாக வண்டில் ஒன்று அவரைக் கடக்கிறது. உள்ளே யோகசுவாமிகள். விரைந்து சென்று சுவாமிகளை வணங்கினார் வடிவேலர். அவரைப் பார்த்த சுவாமிகள்,

''கிட்டவா, எங்கிருந்து வருகிறாய்?'' என்றார்;

'' தோட்டத்திலிருந்து '' என்று விடை பிறந்தது.

"" என்ன பயிர் செய்கிறாய்? ''
"" சாமி செய்கிறேன்''
"" ஓ! உனக்குச் சாமியும் செய்யத் தெரியுமா? ''
"" ஆம். நன்றாகச் செய்வேன்.'' இவரின் விடையில் இருபொருள் இருந்ததைக் கேட்ட சுவாமிகள்-
"" உம். என்னுடன் Logic பேசுறியா?'' என்று கேட்டவாறு, அவர் உடுத்திருந்த வேட்டியைத் தனது கையில் எடுத்துக் கொண்டு, தெருவீதியில் வாலிபரைக் கோவணாண்டி ஆக்கிவிட்டார்.

வாலிபர் கவலையோ, வெட்கமோ எதுவுமின்றிச் சிரித்த முகத்துடன் வண்டியின் பின்னே சென்றார். இந்நிலை இணுவில் கந்தசாமி கோவில் வாசல்வரை தொடர்ந்தது. வாலிபரின் குடிசை கோயில் வாசலுக்கு அண்மையில் இருந்ததால், அவ்விடத்தே அவரது வேட்டி திருப்பிக்கொடுக்கப்பட்டது.

அவர்கள் இருவரது சந்திப்பும், உரையாடலும் அன்றைய நிகழ்வும் வடிவேலருக்கு நிர்வாண தீட்சை ஆயிற்று. சுவாமிகளின் பரீட்சையில் வடிவேல் தேறிவிட்டார்.

ஆம். வடிவேலரை யோக சுவாமிகள் '' சாமி '' செய்துவிட்டார்.

## பக்தி வழிகாட்டல்

வடிவேல் சுவாமிகளின் தோற்றப் பொலிவும், குரல் இனிமையும் அவரின் பன்னசாலைக்குப் பலரை அழைப்பதாயின. அடியார்கள் தனித்திருந்து தியானிப்பதற்கும், புராணபடனஞ் செய்வதற்கும் இடம் போதாதிருந்தது. இதனால் அடியார்கூடும் இடத்தை மஞ்சத்தடிக்கு மாற்றினார். இங்கே சொற்பொழிவு, கதாப்பிரசங்கம், பண்ணிசை, புராண படனம் போன்றவை ஒழுங்குற நடந்தன. மாலை வேளையில் அவ்விடம் பக்தி மயமாக விழாக்கோலம் பூண்டிருக்கும். நாயன்மார் குரு பூசைகளை அடியார்கள் போட்டிபோட்டு முன்வந்து செய்தனர். சமயகுரவர் நால்வரின் குரு பூசைநாட்களில்-

"" இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினார் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருப்பால்...... ''

எனக் கூறுமளவுக்கு அவ்விடம் சிவமணம் கமழ்ந்து சிறப்புற்றிருக்கும்.

## பிற ஊர்களிலிருந்து அழைப்பு

இவ்விழாக்களைக் கண்டோர் அனைவரும் தம்முடைய ஊர்களிலும் இவ்வாறு செய்ய வேண்டுமென்று விரும்பினார். அதனால் இவற்றை முன்னின்று நடத்திய வடிவேல் சுவாமிகளைத் தேடிச் சொற்பொழிவு, பண்ணிசை, கதாப்பிரசங்கம் போன்ற நிகழ்ச்சிகளுக்கான அழைப்புக்கள் வந்தன. மறுக்காது மகிழ்வுடன் சென்றார். இவற்றைப் பிழைப்பாகவோ, வியாபாரமாகவோ ஆக்கியிருக்கலாம். அதனை அவர் விரும்பவில்லை.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே'


என்னும் மந்திரமொழியைத் தெரிந்தவர்; எனவே தனது பணியை பக்தி வழியில் செலுத்தியதோடு மற்றையோரையும் அவ்வழியில் ஈடுபடுத்தினார்.

## காரைக்காட்டில் சித்தர் கூட்டம்

சுவாமிகளின் பக்தி வலையிற்பட்டோரில் நயினாதீவுச் சாமி என அழைக்கப்பட்ட முத்துச்சாமியும் ஒருவர். அவர் அமைதி நாடி அடிக்கடி காரைக்காடு செல்வார்.

இணுவில்

# பெரிய சந்நியாசியார் அவர்கள்



அங்கு பெரிய சந்நாசியார் கட்டிய சிவன் கோயிலின் இடிபாடுகளையும் பற்றைகள் வளர்ந்து காடாயிருப்பதையும் கண்டு வருந்துவார். அங்கு வெவ்வெறு இடங்களிலிருந்து தியானத்தில் ஆழ்வார். தாம் தியானத்தில் கண்டவற்றைப் பக்குவர்களுக்கு விளக்குவார். மூலத்தானத்துக் கருகிலிருந்து தியானித்து, இணுவில் கந்தசாமி கோயிலில் நடப்பவற்றைக் கூறுவார். அவரவர் அமைந்திருக்கும் இடத்திலிருந்து தியானித்து, அதற்குப் பக்கத்தில்நின்ற 'நெல்லி மரத்தடியில் இருந்து ஒருவர் வைத்தியம் செய்தால், தீராதநோயும் தீரும்' என்றார்.

## கோவிற் கதவுகள் திறந்தன

அமைதி நாடிவந்த சித்தரின் வார்த்தைகள் வடிவேல் சுவாமிகளைப் பேச வைத்தன. "சாமி, இக்கோயில் பூசையைத் தொடங்குவோமா?" எனக் கேட்டார் வடிவேல் சுவாமியார்.

"கட்டாயம் செய்யவேண்டும், அதற்குரிய காலம் வரும், அப்பொழுது சொல்வேன்"

என்றார் நயினாதீவுச்சாமி.

அவ்விருவரின் உரையாடலைக் கேட்டதும் அங்குநின்ற ஏனையோர் உள்ளத்திலும் அவ்வெண்ணம் அரும்பலாயிற்று.

வேறொருநாள் அங்குவந்த நயினாதீவுச்சாமி ஊஞ்சல் கட்டி ஆடவிரும்பினார். உடனே அவ்விடத்தில்நின்ற ஆலமரக்கிளையில் பலகை ஊஞ்சல் கட்டப்பட்டது. முத்துச்சுவாமிகள் அதில் கொலுவிருக்க, ஊஞ்சல் ஆடத்தொடங்கியது. ஊஞ்சல் பாட்டு வானைப் பிளந்தது. எங்கும் நாத ஒலி.

காரைக்காட்டுக்கு அஞ்சிய குழந்தைகள் எல்லாம் அங்குவரத் துணிந்தனர். சித்தர்கள் மத்தியிலே பற்றைகளைச் சுற்றிக் குழந்தைகள் ஓடி விளையாடினர். எங்கும் ஒரே குதூகலம்.

காலம் கனிந்துவந்தது. சித்தர் கூட்டத்துக்குக் கூழ் குடிக்க எண்ணம் உண்டானது. பக்குவமான கூழ் பதமாகக் காய்ச்சுவதற்கு நாள்குறிக்கப்பட்டது. குறித்தநாளில் கூழ் காய்ச்சி ஆயிற்று. எல்லோருக்கும் நல்ல உற்சாகம். பயந்த பேய்கள் எல்லாம் பயமின்றிக் கூழ் காய்ச்சினர். மாரியம்மன் கோயில் உள்ள இடத்தைச் சுற்றி அனேக பாத்திரங்கள். நடுவில் கூழ்ப் பானை. சுவையான கூழை எல்லோரும் வாயூறிக் குடித்தனர்.

சித்தர் நயினாதீவுச் சுவாமிகளின் வாய் மெல்லத் திறந்தது. "வடிவேல், கோயில் பூசையைத் தொடங்கு" என்றார்.

பூசை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பெற்றன. நித்திய பூசைக்கு வேண்டிய வசதிகளும் ஏற்பாடாயின. சுபவேளையில் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாக அசையாதிருந்த ஆலயமணி ஒலிக்க, அடியார்கள் "அரோகரா" சொல்ல, கோயில் கதவுகள் திறந்தன. பூட்டிய கதவினுள் இருந்த பெருமானைப் பலரும் பார்த்துத் தொழுதனர். நவராத்திரி விழாவிலிருந்தே முதல் பூசை ஆரம்பமானது.

கோயில் பூசை தொடங்கியாயிற்று. அதன் பொறுப்பை யாரிடம் விடுவதென்பது கேள்வி. இது கொக்குவிலைச் சேர்ந்த பரிகாரி நடராசா என்பவரின் காதில் விழுந்தது. அவர் ஒரு பேர்போன வைத்தியர். நோயாளியைப் பார்த்த மாத்திரமே அவரின் நோயைச் சொல்லி, அதற்கான மருந்தளிக்கும் குணவான். அவரை நடராச முனிவர் என்றும் அழைப்பர். அப்பெரியாரும் இக்கோவிலில் ஈடுபாடு கொண்டிருந்ததால், இதன் பொறுப்பைத் தக்காரிடம் ஒப்படைக்க விரும்பினார்; ஆளையும் கண்டுபிடித்தார். அந்த அதிட்டசாலிக்கு வைத்தியமும், மந்திரமும் கற்பித்து, கோயிற்பொறுப்பை ஏற்குமாறு நல்லாசி வழங்கினார்.

நடராச முனிவரின் முழுமையான ஆசையைப் பெற்றவரே 'மணிப்பெடியன்', 'காரைக்கால் சாமியார்' என்றெல்லாம் அழைக்கப்பெற்ற 'கோயில்மணியம்' கதிரித்தம்பி அம்பலவாணர் ஆகும். அவரது முகாமைக் காலத்தில் கோவில் மறுசீரமைக்கப்பெற்றது. அடியாரின் உளநோயும், உடல்நோயும் தீர்க்கப்பட்டன. பக்தர்கூட்டம் பெருகியது. ஆலயப் பூசைகளும் முட்டின்றி நடைபெறலாயின; இவற்றைக் கண்டு வடிவேல் சுவாமிகள் உளம் குளிர்ந்தார்.

### எண்ணியதை எய்திய ஏந்தல்

பற்பல தொண்டுகளில் ஈடுபட்டு, அவற்றில் வெற்றி கண்டவர் வடிவேற் சுவாமிகள். அவரது தொண்டு குடாநாட்டிற்கு வெளியேயும் விரிவடைந்து, இனி நொச்சி மகாதேவ ஆச்சிரமம் என்ற பெயருடன் முழுமை பெற்றது. எத்தகைய குறுக்கீடுகள் ஏற்படினும் எடுத்த பணியைத் திறம்படச் செய்யும் திண்ணிய நெஞ்சம் சுவாமிகளிடம் உண்டு. அவர் தெளிந்த அறிவுடன் செய்த சாதனைகள் காலத்தால் அழியா.

### நிறைவுரை

அமைதிச் சூழல், கோவில், பாடசாலை விவசாயம் ஆகியவற்றில் விருப்புடைய சுவாமிகளுக்குச் சிவதொண்டு, அடியார் தொண்டு, ஏழைகள் தொண்டு என்பவற்றைச் சலிப்பின்றிச் செய்யும் பெருமனத்தையும் இறைவன் கொடுத்திருந்தார். தம் பணிகளில் வெற்றியீட்டிய சுவாமிகள் மனநிறைவு பெற்றவர். சுவாமிகள் நிறைந்த மனதுடன் நிமலன்தாள் சேர்ந்துள்ளார். அன்னாரை எண்ணும்போது—

''ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ண ரெழுத்தென்பர் இன்புலவோர்''

என்ற திருக்கோவையார் செய்யுளே நினைவுக்கு வரும். ✶

---

இணுவை — நொச்சியம்பதி

## முருகன் தோத்திரம்

கருவுற்ற நாள் முதலாகக் கழலடி காண்பதற்குப்
பெருகுற்ற செல்வமும் பேணா தொழிந்து பிறப்பறுக்க
உருகுமென் உள்ளமும் யானும் உனதடியார் தொகையுள்
ஒருவனென் றார்க்கு மொருவன் இணுவை யறுமுகனே.

காலை மலர்கொடு கற்றவர் நற்றவர் கண்களிக்க
சீலத்தை வேண்டிச்செஞ் சேவடித் தொண்டினைச் சேர்ந்துநின்று
கோலக் குறமகள் குஞ்சரி பங்கன் குணம் பரவும்
சீலத்தர் வாழிணுவை நொச்சியம்பதி சேர்மின்களே.

— வடிவேற் சுவாமிகள்.

# வடிவேலுச் சாமியாரும் சிந்தாவளைக் கொட்டிலும்

பண்டிதர் க. நாகலிங்கம்
அளவெட்டி.

'' அறந்தா னியற்று மவனிலும் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே''

இது பட்டினத்துப் பிள்ளை வாக்கு இப்பாடலில் அறஞ்செய்பவன், இல்லந் துறந்தவன், உள்ளத் துறவுடையவன், இரு வாதனையற்று இறந்தான் என நால்வர் பற்றிப் பட்டினத்தடிகள் பேசுகிறார். இந்த நான்கு வகுப்பிலும் எவ்விடத்தும் வைத்து இணைத்துப் பார்க்கக்கூடியவர் வடிவேலுச் சாமியார். வடிவேலுச் சாமியார் காட்டிற் கேகியோ, மலை முழை நாடியோ தவம் மேற்கொண்டிலர்: இல்லத் துறவியான அவர் உள்ளத் துறவுடையோராக இருந்தார். மனத்தகத்தழுக்கறாத மௌன ஞான யோகியாகத் திகழ்ந்தார்: வனத் தகத்திருப்பினும் மனத்தகத் தழுக்கறாத மௌன ஞான யோகிகள் போலல்லாது இவர் விளங்கியமை இவருடன் பழகியோர் அனைவரும் அறிந்தவுண்மை.

இப்பெரியார் இணுவிற் பதியிற் பிறந் தவராயினும் இவரின் வதிவிடம் ஒரு காலத்தில் அளவெட்டியூராகவே இருந்தது. இற்றைக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டு களுக்கு முன் அளவெட்டியில் செல்லப்பா நாகலிங்கம் என்னும் வள்ளலார் குடும்பம் வடிவேலுச் சாமியார் முதலிய நல்லறிஞர் களை ஆதரிப்பதில் தலைசிறந்து விளங் கியது. கம்பநாட்டான் வாருக்கு ஒரு சடையப்பவள்ளல் போல வடிவேலுச் சாமி ருக்கு ஒரு நாகலிங்க வள்ளல் வாய்த்தார்.

திரு. நாகலிங்கம் அவர்கள் '' அன்ன சத்திரம் ஆயிரம் கட்டலின், ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல '' மேலான தென உணர்ந்தவர். அவரது பெருமுயற்சி யால் உருவானதே அளவெட்டி சதானந்த வித்தியாசாலை. அப்பெரியார் தமது ஓய்வு நேரத்தைத் தவப் பொழுதாக்கு தற்காகச் சிந்தாவளையில் கொட்டில் ஒன்றும் அமைத்திருந்தார்.

வடிவேலுச் சாமியாருக்குச் சதானந்த வித்தியாசாலையும் சிந்தாவளைக் கொட் டிலும் சொந்த இடங்கள் போலாயின. சிந்தாவளைக் கொட்டில் நாகலிங்கம் அவர்களின் திருவோலக்க மண்டபம் என்று கூடச் சொல்லிவிடலாம். அது அவரது வீட்டிற்கு எதிராக அமைந்திருந்தது. நாகலிங்கம் அவர்களை இந்தக் கொட்டி லில் தரிசிக்க வருபவர் பலர். குறைவேண் டியோ, முறைவேண்டியோ வருவோரும் புகையிலை வியாபார நோக்கமாக வரு வோருமெனப் பலர் அங்கு குழுமுவர். நாகலிங்கம் அவர்களின் மந்திரிபோல வும் குருபோலவும் வடிவேலுச் சாமியார் அங்கு காட்சிதருவார். அவரின் போத

ளைகள் அங்கு பணிவுடன் வரவேற்கப் படும்.

வள்ளல் நாகலிங்கம் அவர்களின் முகாமைத்துவத்தில் வளர்ந்த சதானந்த வித்தியாசாலையில் திருமுறை கற்பிக்கும் பணி சாமியாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. சாமியார் அரசினர் நியமனம் பெற்ற ஆசிரியரல்லர். அவர் வேதனமாக ஏதும் நாகலிங்கமவர்களிடம் பெற்றாரோ இல்லையோவென்பது எவருக்கும் தெரியாது. வலக்கையாற் கொடுப்பதை இடக்கை அறியாத கொடையாளியாகத் திரு. நாகலிங்கம் இருந்ததால், அவ்விடயம் அவரது குடும்பத்தாருக்கே தெரிந்திருக்க முடியாது. சதானந்த வித்தியாசாலையில் தலைமை ஆசிரியருக்கும் புத்திசொல்லும் ஒருவராகச் சாமியார் விளங்கினார்.

பள்ளிக்கூடம் பற்றிய செய்திகளைச் சாமியாரே நாகலிங்கம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவாரென ஆசிரியர்கள் கருதினர். சாமியார் சொல்லத்தக்க தெது, தகாதெதுவெனத் தமது மதிநுட்பத்தால் ஆராய்ந்து, சொல்லத் தக்கனவற்றைச் சொல்லிவந்ததாற்போலும் அங்கும் பெரும் பிரச்சனைகள் உருவாகவில்லை.

நகை முகமும் ஆஜானுபாகுவான தோற்றமும் உச்சியிலிருந்து தொங்கிய சிறிய குடுமியும் காவி உடையும் அவரை மற்றையோரிலும் வேறுபடுத்திக் காட்டின. அவரது குரல் மிகமிக இனிமை வாய்ந்தது. ஒருகாலத்தில் சமய அறிவுப் போட்டி, தேவாரப் பண்ணிசைப் போட்டி என்பனவற்றில் யாழ்ப்பாணத்திலுள்ள பென்னம்பெரிய கல்லூரிகளுடன் சதானந்த வித்தியாசாலை போட்டி போட்டு வெற்றி கண்டமைக்கு வித்திட்ட பெருமை வடிவேலுச் சாமியாருக்கே உரியது.


திரு. செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டளவில் அமரத்துவம் எய்தியபோது சாமியார் பெரிதும் மனம் தளர்வுற்றார். கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் போல வாழ்ந்தவர்கள் நாகலிங்கமும் வடிவேலுச் சாமியாரும் என்பது நாடறிந்த உண்மையன்றோ! நாகலிங்கம் அவர்கள் மறைந்தபோது வடிவேலுச் சாமியார் உளம் நொந்த போதினும், யாக்கை நிலையாமையை நன்கு தெரிந்து கொண்டவர்; ஆதலால் தம்நிலை குலைந்தாரல்லர். ஆயினும் தமது வருகையைப் படிப்படியாக அளவெட்டியிலிருந்து விலக்கிக் கொண்டார்.

அமரர் நாகலிங்கம் இல்லாத அளவெட்டியூரைக் காண அவரால் சகிக்கமுடியவில்லைப் போலும். எனினும், நாகலிங்கம் அவர்களின் குடும்பமும் அவரின் சகோதார் மூறையினரான திரு. தாமோதரம் பிள்ளையின் குடும்பமும் சாமியார் மகாசமாதி எய்தும்வரை அவருடன்தொடர்பு கொண்டு, பெருமதிப்புச் செய்தமை நாமறிந்ததே. சாமியாரது நண்பர்கள் பலர் அவரைப் பற்றிச் சான்றுரைக்க இன்றும் அளவெட்டியூரில் உளர் என்பது மிகமிக மகிழ்ற்பாற்று.

வடிவேலுச் சாமியார் அளவெட்டியை அகன்று, இணுவிலில் தாமிருந்த சிறுகொட்டிலைப் பெரிதாக்கி, ஆச்சிரமம் அமைக்கத் துணிந்தார். ஆயினும், அவரது சேவை கிளிநொச்சியில் நிலைகொள்ள வேண்டியிருந்ததால், அவர் தமது வதிவிடத்தைக் கிளிநொச்சிக்கு மாற்றிக்கொண்டதும், அங்கே அவரால் அமைக்கப்பெற்ற கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தோடு தம்மை இணைத்துக் கொண்டதும் பழைய கதைகள்.

சிலர் உயிருடன் இருக்கும்வரை மட்டுமே நினைக்கப்பட்டு, மதிக்கப்படுகிறார்கள். இறந்தபின் நினைப்பொழிந்த கதைகள்பல. இவற்றைப் பட்டினத்துப் பிள்ளையார் தமது பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார். பதவியிலிருக்கும் ஒருவரைக் காமதேனுவே கற்பகதருவே எனப்பாராட்டுவோர், அவர் பதவியிலிருந்து விலகியதும் நாயே, பேயே என இகழ்வது உலகில் காணும் நிகழ்வுகளாகும். ஆனால் வடிவேலுச்சாமியார் மறைந்து சமாதிநிலை எய்தியபின்னும் அவரை நினைத்துக் கௌரவிக்கும் குழுவொன்றிருப்பதே, அவர் மறக்கமுடியாத மாபெரும் ஆற்றல்படைத்தவர் என்பதைப் பறைசாற்றிநிற்கிறது.

வடிவேலுச் சாமியார் புகழ் நீடு வாழ்க. ★



ஞானகுரு
சிவயோக சுவாமிகள்



தவத்திரு
வடிவேல் சுவாமிகள்

ஈழத்துச் சித்தர் பரம்பரையில்

# தவத்திரு வடிவேற் சுவாமிகள்

பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம்
யாழ்ப்பாணம்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் இணுவில் தந்த வடிவேற் சுவாமிகளும் ஒருவர். முன்னர் இணுவில்பதி பரமகுரு சுவாமிகளால் புனிதமாக்கப் பெற்றது. இணுவில் ஒரு காலத்தில் யோககுரு சுவாமிகளின் தலைமையில் சற்சங்கம் ஒன்று காலந்தோறும் கூடிக் கருத்துப் பரிமாறிக் கொண்டனர். வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய போக்குகள் அலசியாராயப் பெற்றன. அங்கே சமரச சன்மார்க்கத்தினர் ஆலயந் தொழுதலும், அடியார் வழிபாடு செய்தலும்' அன்பு நெறியில் வாழ்தலும் போதும் எனக் கண்டவர். சாதுக்கள், மெய்யடியார்கள், சீவன் முத்தர்கள் என்றித் திறந்தவர் இவ் ஊரில் சீலத்தோடு வாழ்ந்து, வழிகாட்டினர். இவர் ஏகனாகி இறைபணி நின்று மல மாயையோடு வல்வினை அகற்றும் வழிகண்டனர். சுருங்கக் கூறின் இணுவிற்பதி ஓரளவுக்கு வழிகாட்டும் ஊராக விளங்கியது. அன்றேல், புகழ்பெற்ற வைத்தியப் பெரியராகிய டாக்டர் கேர் என்னும் பெண்மணி " இலந்தை முள்ளை நிமிர்த்தினாலும் இணுவிலாரை மதம் மாற்ற முடியாது '' என்று கூறியிரார்.

சைவத் திறனை வளர்க்கவும் வாழ்விக்கவும், கலை, கலாசாரப் பகுதிகளையும் இணுவிற்பதி வளர்த்தது. ஆடல், பாடல். நாடகம், நாட்டியம், கும்மி, கோலாட்டம், கரகம், காவடி யாட்டம், கருவிகள் இயக்கல் முதலிய பல துறைகளிலும் இணுவில் முன்னணியில் நின்றது. அம்பலத் தரசன்-ஆடவல்லான் - எங்கள் தெய்வம் என நினைந்து என்றும் திருநீறு பொலிய இணுவிலார் வாழ்ந்தனர்.

இணுவிலில் வாழ்ந்த சித்தர்கள், துறவிகள், மெய்யடியார்கள் திறனைப் படம் பிடித்துக் காட்டினாற் போல நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அருமையாகப் பாட்டிசைத்துக் காட்டுகிறார்:

'' மடங்கிய பயிர்கள் எல்லாம்
மழைவர நிமிர்ந்து நீளும்
மருண்டிடும் குழந்தை பெற்ற
மாதினைக் கண்டு தேறும்
ஒடுங்கிய தேகம் நல்ல
உணவினால் உறுதி கொள்ளும்
ஒழித்திடும் நாகம் நல்ல
ஓசையால் வெளிவந் தாடும்
அடங்கியித் தேகந் தன்னில்
அவித்தையில் அழுந்தும் ஆன்மா
அன்பில் நல்லுரு வமாய
அறிஞரைக் கண்ட போது
முடங்கிய மயக்கம் நீங்கி
முன்னைய உணர்ச்சி ஓங்க
மொய்ச்சுடர் கொழுந்து போல
முடுகிடும் மேலே யன்றோ.''

எங்கள் பாரம்பரியப் பண்பாடு என்று ஒன்றுண்டு. அது எங்கள் மண்ணில் தோன்றி எங்கள் மூதாதையரின் மூச்சுக் காற்றில் வளர்ந்தது. இந்தப்பண்பாடு எமக்கு என்றும்

நிலைக்க வேண்டும் என்று கருதியே நல்லவர்கள், பெரியவர்கள், ஞானச்சுவடு களை நோக்கி தம்மவர் ஓடித்திரிகிறார்கள். வீடு கட்டுவதற்கு அத்திபாரம் போடும் போது பெரியவர் உலாவிய இடத்து மண் ணும், நவதானியங்களும், சங்கும், பொன் னும் இடுகிறார்கள். பெரியவர்களின் காலடி பட்ட மண்ணுக்குப் பண்பாடு வளர்க்கும் பயிற்சி உண்டு. அவர்கள் வாயில் வரும் உபதேசம் எல்லாவற்றுக்கும் உயர்ந்தது. எனவேதான் வார்த்தை சொல்லவல்ல சற் குருவை நாடியோடித் திரிதல் மரபாயிற்று.

கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், சின்மயானந்த சுவாமிகள், சார் ஜன் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சடைவரத சுவாமிகள், கனகரத் தினம் சுவாமிகள், யோக சுவாமிகள், மகா தேவ சுவாமிகள் என்றித்திறத்த திருநாமங் களோடு தங்கள் ஞானச் சுவடு பதித்த பெரியவர்கள் பலர் எங்கள் நாட்டை வாழ்வித்தார்கள். இவர்கள் எக்கோலம் கொண்டு எதனைக் கூறினாலும் அவர்கள் கோலம் தவக்கோலமாயும் அவர்கள் கூற்று உறுதி பயக்கும் சிவமயமான கூற்றாயுமே இருந்தன.

இவ்வாறாக இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே சிவயோக வாழ்வில் ஈடுபட்டிருந்த சிவனடியார்கள் சிலரின் சீலத்திரு வாழ்வு இளைஞர் சிலரை ஈர்த் தது. இந்தவகையில் இழுக்கப் பெற்றவர் களுள் ஒருவர் ஆஜானுபாகரராய வடிவேல் சுவாமி அவர்கள். அடியார்களோடு சேர்ந்து சிவஞான ஆய்வும் சிவநாம பஜ னையும் செய்துவந்த வடிவேலர், பஜனைக் கூட்டத்தாரோடு நல்லூரை நாடி வருவா ராயினர். இவருக்கு ஞானமயமான போக்கு வழிகாட்டவே, நல்லூரை யடுத்த கந்தமட லுகில் அமைந்த வேதாந்த மடம் புகலிட மாயிற்று.

அக்காலத்தில் கந்தமடத்திலே கந்தபுராண மடம், சந்நியாசிகள் மடம், செல்லப் பிள் ளையார் மடம், அன்னசத்திரம், வியாழக் கிழமை மடம் முதலியனவும் சிவனடியார் களின் புகலிடமாய் இருந்தன. வேதாந்த மடம் என்பது சிவகுருநாத பீடம் உடைய தாய், வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற வித்தகர்கள் கூடுமிடமாயிருந்தது.

அதுவுந்தான், கடையிற் சுவாமிகள் வழி- சார்ஜன் சுவாமிகள், கனகரத்தினம் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள் என்றித் திறத்தார் குருசீட பரம்பரையில் ஆன்ம விசாரம் செய்த மடமாயிருந்தது. அங்கே தன்முனைப் பற்றவர்கள் குருவருளே திரு வருளாமெனக் கூடியிருந்தனர். அங்கே 1924 ம் ஆண்டு ஆவணி மாதத்தில் குரு பீடமேறி யருளிய மகாதேவ சுவாமிகள் சீடர்களை அன்னை, பிதா, குரு, தெய்வ மென அரவணைத்து, ஆன்மீக நெறியில் தலைநின்றிட உருவாக்கி வந்தார்கள்.

மகாதேவ சுவாமிகளிடம் உருவாகிப் பக்குவ முறுக்கேறியவர்களுள் வடிவேற் சுவாமிகளும் ஒருவர். இனிய குணமும் இனிய சாரிர உறுதியும் வாய்த்த இவர், தாயுமான சுவாமிகள் பாடல்களை மனமுருகப் பாடு வதில் இணையில்லாதவராய்த் திகழ்ந் தார். அங்கு படித்தவர்களுள் ஞானசம் பாத்தியம் இவரிடம் அதிகமாயிருந்தது.

இத்தகைய வித்தகர் ஒருவர் கிளி நொச்சி மாவட்டத்துக்கு இன்றியமையாது வேண்டப்பட்டவராயினார். இதனை உய்த் தறிந்து கூறியவர் சிவயோக சுவாமிகளே யாவார். ''நீர் அங்கே போங்காணும்; உமது சேவை அங்கேதான் தேவை'' என்று தோளில் தட்டி வழிகாட்டிவிட்டார்.

கிளிநொச்சி அன்று கரடிப் போக்கினா லும், ஆனை அசைவினாலும், நரி ஊளை யினாலும், நுளம்பு, பச்சைப்பூச்சி உபத்திர வத்தாலும் உருத்திரபுரம் என்பது வழக்கி ழந்து உபத்திரவ புரமாயிருந்தது. அங்கே தாருகாக்கன், கமலாக்கன், வித்துயுன்மாலி எனக்கூறுமளவில் மூன்று கோட்டைகள் இருந்தன. அவை திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து என்பனவற்றை மறைத்தன.

இந்த மறைப்பாய திரோதானத்தைப் புன்சிரிப்பால் நீக்கி நல்லவழி காட்டுவதற்குக் குடில் அமைத்தவர் வடிவேற் சுவாமிகள். நமது குருநாதன் மகாதேவ சுவாமிகள் திருநாமத்தை முன்னிட்டுப் பெயர் வழங்கிய குடில், பெரிய ஆச்சிரமமாய் அயலிடத்தார் எல்லோருக்கும் சைவசாரம் பழக்கியதாய் அஞ்சல் என்று அபய கரமேந்தியதாய் வயிறார உணவும் மனம் நிறைய உபதேசங்களும் கொடுத்து வந்தது.

எமையாளும் ஈசனாய உருத்திர புரத்தவன்மேல் திருப்பள்ளி எழுச்சி பாடிய வண்ணம் வடிவேற் சுவாமிகள் சைவசாரம் பழக்கி வருவராயினர். வித்தியாரம்பம் சிவதீட்சை, சமய போதனை வகுப்பு, நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை முதலியன செவ்வனே செய்து, சிவனடியார் வழிபாடு, மகேசுவர பூசை முதலியன செய்து வந்தார். சைவம் கொழிக்கும் ஜயந்திபுரம் அயலில் குருகுல வளர்ச்சிக்கும் வித்திட்டது.

சுவாமிகளின் பீடம் கிளிநொச்சி மாவட்டத்தின் தனித்தவிசு, இப்பீடத்தை அலங்கரிக்க ஞானப் பரம்பரையில் வருபவர்கள், புனித முறையில் பூதபரம்பரை பொலியப் பூவும் நீரும் கொண்டு பூசை முதலியன செய்துதிருவருள்பொலியச் செய்வார்களாக.

வாழ்க வடிவேற்சுவாமிகளின் வழியடியார் வளர்க மகாதேவ ஆச்சிரமப்பணிகள். ✶

## சோம்பல் மிகக் கெடுதி

உண்மையை உணரும் வரை வேலையைச் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும். அறிந்த பின் விட்டும் விடலாம், செய்தும் இருக்கலாம். சோம்பல் மிகக் கெடுதி, வேலையில் ஞானம் இல்லை. வேலையைச் செய்யும் மனப்பாங்கிற்றான் ஞானம் உண்டு.

காலத்துக்குக் காலந் தோன்றிய ஞானிகளும் ஏனைய பெரியோரும் ஏதோ சிலவெல்லாம் கூறிச் சென்றனர். ஆனால், அது அதாக, என்றும் அறிய முடியாததாக, புதிதாக, புதிராக இருக்கிறது.

எத்தந்திரத்தில் தேடிப் போனாலும் அவரவர்க்கு அது அத்தந்திரத்தில் மறைந்து நிற்கும்.

உள்ளே பார்க்க இன்பம்; புறத்தே பார்க்கத் துன்பம். அத்துன்பத்துக்குள்ளும் அவ்வுண்மைப் பொருள் இருக்கிறது.

மாயப் பிரபஞ்சம் என்றும் இடையறாது மாறிய வண்ணம் இருக்கிறது. மாறாது இருந்து கொண்டு மாற்றங்களைச் செய்விப்பதுதான் உண்மைப் பொருள்.

— யோக சுவாமிகள்.

# காட்டூரில் ஒரு காருண்யமூர்த்தி

"நம்பி"

கடந்த எட்டுத் தசாப்தங்களுக்கு மேலாக எம்மத்தியில் வாழ்ந்து அருளாசி வழங்கியவர் அருட்திரு வடிவேல் சுவாமிகள். அவர் காட்சிக்கு எளியர்; கடுஞ்சொல் பேசாதவர். கண்ணுற்றார்க்குக் கருணா மூர்த்தி. வடிவேல் சுவாமிகள் காலமெலாம் கர்மயோகியாய் இருந்து மெய்ப்பொருள் உணர்ந்த மெஞ்ஞானி. துறவி என்ற போர்வையுள் மறைந்துநின்று, பிறரின் உதவியை நாடாது "தன் கையே தனக்குதவி" என்பதைத் தமது உடல் உழைப்பின் மூலம் செய்துகாட்டிய தீரர். அருட்திரு வடிவேல் சுவாமிகளின் சீர்மை மக்கள்மனதில் என்றும் பசுமையாகவே பதிந்திருக்கும்.

இணுவைப் பதியிலே பிறந்து, கந்த மடத்து வேதாந்தமடத்திலே கல்விபயின்று, கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திலே குருமணியாய் இருந்து அருள்மழை பொழிந்தவர் வடிவேல் சுவாமிகள். எளிமை வாழ்வில் நம்பிக்கைகொண்ட சுவாமிகள் தமது பணிகளைத் தாளமேளமின்றித் தனித்துவமாய்ச் செய்தவர்.

சுவாமிகள் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த போதிலும், சிறந்த வள்ளன்மை பூண்டவர். வீட்டில் உணவு இருக்கிறதோ இல்லையோ என்று எண்ணாது, வயிற்றுப் பசியுடன் வந்தவர்களுக்கு உணவளிப்பதில் சுவாமிகள் சலிப்படைய மாட்டார். இறை வழிபாட்டிற்குரிய நேரம் தவிர்ந்த நேரங்களைப் பிறர் நலத்திற்காகச் செலவிடும் போது சுவாமிகள் அடையும் இன்பத்திற்கு ஓர் எல்லையில்லை.

கற்பனைவளமும், கருத்தாழமும், சாத்திர அறிவும் சுவாமிகளிடம் நிரம்பவுண்டு. அறிவுப்பசியால் அலைந்து வந்தோர்க்கு அவர்களின் உள்ளம் கொள்ளுமட்டும் சமய சாத்திர தத்துவங்களை அள்ளிக்கொடுத்து, அவர்களது தாகம்தீர்த்த செம்மையர் வடிவேல் சுவாமிகள்.

சுவாமிகள் வேதாந்தத்தில் நிரம்பிய புலமை பெற்றுள்ளவராயினும், அதனையே மற்றையோருக்கும் திணிக்கவேண்டுமென்று அவர் எண்ணுவதில்லை. அவர் சமயங் கடந்த பண்பாளர்; வேதாந்த சித்தாந்த சமரசவித்தகர் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

ஆத்மீக வாழ்விற்குச் சமயவாதம் ஒரு வீண் வினைக்கேடு என்பது சுவாமிகளின் கருத்து. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டாம்; சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்று அடிக்கடி சொல்லி அடியார் மனத்தை அலையவிடாது மனவுறுதி அளிப்பார். இறைவன் "பார்க்கு மிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம்" என்பதை மூற்றுமுழுதாய் ஏற்று, எல்லாரிடத்திலும் இறைவடிவைச் சுவாமிகள் கண்டவர். சிவனடியார் எவராயினும் அவரை இன்முகத்துடன்வரவேற்கும் இயல்பினர். நாலுபேர் மத்தியில் ஒருவர் புகழப்படுபவராக இருப்பின், அவரில் குற்றம் காணாது அவரை நெறிப்படுத்தி, மேம்படுத்தத் தாமும் முன்னின்று உதவுவார்.

அப்பழுக்கில்லாத அவரின் இதயத்தைத் தெரிந்துகொண்டவர், அவரைத் தமது

தேவைக்குப் பயன்படுத்தி, தமக்கு வாய்ப் புத்தேடிக்கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு. அவ்வேளைகளில் வடிவேல் சுவாமிகள் நிலை குலைந்துவிட மாட்டார்.

இயல்பாக இசைஞானம் கைவரப் பெற்ற சுவாமிகள் சைவத் ,திருமுறைகளை இளமையிலே மனனஞ் செய்துகொண்டவர் தாம் படித்தவற்றை முதுமைக்காலம்வரை மறந்துவிடாது மீண்டும் நினைந்து பண்ணோடு பாடிமகிழ்வார். சுவாமிகள் அறிந்தவற்றையும், கேட்டவற்றையும் பிறருக்குப் போதிப்பதிலும், பொது மேடைகளில் பிரசங்கம் செய்வதிலும் மிகவும் வல்லவர். சுவாமிகளின் போதனையில் ஈடுபட்டுத், தமது வாழ்வைத் திருத்திக் கொண்டவர் பலருண்டு.

நாட்கணக்காக - மாதக்கணக்காக - ஏன், ஆண்டுக் கணக்காகப் பூசைகள், வழிபாடுகள் இன்றி இருந்த ஆலயங்களுக்குச் சென்று: 'முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில் கன்னங் களவுகள் மிகுத்திடும் '' எனச் சொல்லி, ஆலயக் கதவுகளைத் திறக்கச் செய்து, நித்திய பூசைகள் நிகழ வழியமைத்து நெஞ்சங்களித்தவர் சுவாமிகள்.

சிறுத்தையும் சிங்கமும், களிறும் பிடியும், ஓநாயும் நரியும் உலாவித் திரிந்த கிளிநொச்சிப் பகுதியை, குடியேற்றப் பிரதேசமாக மாற்றியபோது, ஏழை எளியவர்களும் கல்வி, கேள்விகளில் நாட்டமற்றவர்களுமே அங்கு வந்து முதலில் குடியேறினர். வறுமைக் கோட்டின் கீழ் தமது நாளாந்த வாழ்வைக் கழிக்க இயலாது வாழ்ந்த மக்களுக்குக் கல்வியைப் பற்றியோ, கடவுளைப்பற்றியோ சமயத்தைப் பற்றியோ எண்ணுதற்கு ஏற்ற மனப்பக்குவம் அப்பொழுது அவர்களிட மில்லை. தம் வறுமை நீங்கக் காடு திருத்தி, நடாத்துவதிலும் புன்செய் நிலத்தை நன் செய் நிலமாக்குவதிலுமே அவர்கள் குறிக்கோளாய் இருந்தனர்.

முரட்டுக் குணத்தின் கோரப் பிடியில் இருந்த மக்கள் சமய அறிவின்றித் தடுமாறிப் போவது திருவருட்குறிப் புன்று. கிளிநொச்சியிலே நாதியற்று நலிவுற்றிருந்த மக்களுக்கு நல்வழி காட்டுவதற்காக இறைவடிவே குருவடிவாய் சுவாமிகள் அங்கு எழுந்தருளினார். இராமபிரான் செல்லுமிடமெல்லாம் அயோத்தியாவதும், காடெல்லாம் நாடாகிப் போவதும் இயல்பென்று இராம காதையில் நாம் படித்தது ண்டு; கண்டதில்லை.

வடிவேல் சுவாமிகளின் வாழ்க்கைப் பாதையை ஒரு கணம் நோக்கும்போது, அவர் செல்லும் இடமெல்லாம் சிவபூமியாய் விடும். சைவம் தழைத்து, நறுமணம் வீசும், பண்ணும் தீஞ்சொற் பனுவலும் அவர் சந்நிதியில் ஓங்காரமாய் ஒலிக்கும். அதனால் காட்டு விலங்குகளின் அட்டகாசம், அவர் கொலுவிருந்த ஆச்சிரமச் சூழலை என்றுமே எட்டிப் பார்த்ததில்லை.

கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலிலுள்ள ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவ ஆச்சிரமத்திலே நீறுபூத்த மேனியில் நான்கு முழக் காவியுடை உடுத்து, கழுத்திலே உருத்திராக்க மாலை அணிந்து கொண்டு, சுவாமிகள் எந்நாளும் காட்சியளிப்பார்கள். அவரின் திருக்கோயிலில் சாந்தம் தவழும். அங்கு அமைதி நாடி வந்த அடியார்களுக்கு அருளுரைகளும், ஆத்ம போதனைகளும், இசையுடன் கூடிய சற்பிரசங்களும் சுவாமிகள் செய்வார்கள். அவ்வேளையில் நாம் காட்டுரில் நிற்பதாகவே தோன்றாது. வடிவேல் சுவாமிகள் காட்டுரில் ஒரு காருண்ய மூர்த்தி. அன்னார் பிரமோதூத ஆண்டு ஆனித் திங்கள் ஆயிலிய நாளன்று பரிபூரணம் எய்தியுள்ளார்.

சுவாமிகளின் தூல உடல் அவரது ஆச்சிரமத்திலே சமாதிக் கோயிலில் இப்பொழுது குடிகொண்டுள்ளது. அன்னாரின் பொன்னுடல் உலாவிய சந்நிதியில் திருமுறைகளும் அகண்ட நாம பஜனைகளும் ஒலிக்கச்செய்ய வேண்டும். கல்விஞானம் நிரம்பிய சுவாமிகளின் ஆச்சிரமத்தில் சமய சாத்திர, தோத்திர பாராயணங்கள் இடையீடின்றி நிகழக் குருவருள் கைகூட்ட வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

—நன்றி

வீரகேசரி - 07 - 07 - 91 ★

# மலையகத்தில் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள்

ஆத்ம ஜோதி நா. முத்தையா
ஆசிரியர்

ஒரு நாள் வசுவண்டியில் செல்லும் போது இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் காவி உடைதரித்த ஒருவர் தோளில் மண் வெட்டியுடன் செல்வதைக் கண்டேன். சிவ பெருமான் செம்மனச் செல்விக்காகப் பிட்டுக்கு மண்சுமந்த தோற்றமும் இப்படித் தான் இருந்திருக்குமோ என்று எண்ணிக் கொண்டேன்.

மற்றொரு நாள் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது முதல் வரிசையில் இருந்து ஒருவர் பிரசங்கத்தை ரசித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். முன்பு இணுவில் வீதியில் கொட்டுடைத் தோளராகக் காணப்பட்டவரே இவர் என்பதையும் அறிந்து கொண்டேன்.

மிருசுவிலைச் சேர்ந்த த. நல்லதம்பி அவர்கள் திருநெறிக் கழகம் அமைத்து கிளிநொச்சியில் சமய சமூகப் பணியில் ஈடுபட்டிருந்த காலம், சைவசமயத்தைச் சார்ந்தவர்களுக்கு கைகொடுத்து உதவவேண்டிய காலமும் அதுவாய் இருந்தது. அடியேனுக்கும் ஓர் அழைப்பு வந்தது. அங்குதான் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகளை முழுமையாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுவாமிகளிடத்தில் காணப்பட்ட சமய, சமூகப்பணியின் ஆர்வம், அவரின் பிரசங்க வன்மை, குரல்இனிமை, எளிமையான வாழ்வு இவையெல்லாம் சேர்ந்து அவரை மலையகத்திற்கு அழைக்க வேண்டும் என்று என் மனதில் தூண்டியது. அடியேனுடையகருத்தைச் சுவாமிகளிடம் கூறியபோது ''கொல்லை தெருவில் ஊசி விற்க வேண்டாம். அந்த கைய இடங்களில் முழுநேரப் பணியாற்றுவதே நன்று ''எனத் தாம் விரும்புவதாகவும் கூறினார்கள்.

அக்காலத்தில் யோக சுவாமிகளிடம் அத்தியந்த பக்தி கொண்டவரும் றெயில் வேயில் FPL உத்தியோகம் பார்த்தவரும் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா என்பவர் கற்றனில் இருந்தார். அவர் குடும்பத்தினர் சுவாமிகளிடம் நல்ல ஈடுபாடு கொண்டவர்கள். அதனால் திரு. கந்தையா அவர்களுடைய இல்லத்தை மையமாகக் கொண்டு சுவாமிகள் தமது பணியைத் தொடங்கினார்கள். அடியேனும் பாடசாலை முடிந்ததும் நாவலப்பிட்டியில் இருந்து தினமும் கற்றன் சென்று அப்பணிகளில் பங்கு கொண்டு திரும்பும் வழக்கம் இருந்தது.

இவ்வாறு ''டெக்லஸ் பாகை'' என்ற இடத்தில் தாமரைவல்லித் தோட்ட முகாமையாளரான திரு. கிருஷ்ணபிள்ளை குடும்பம் இருந்தது. அக்குடும்பத்தினர் சுவாமிகளிடம் நல்ல ஈடுபாடுள்ளவர்களாக விளங்கினர். அவர்களுடைய அழைப்பின் பேரில் அங்கு சென்று தாமரைவல்லித் தோட்டத்தை மையமாகக் கொண்டு அப்பகுதியிலுள்ள பல தோட்டங்களுக்கும் சென்று சுவாமிகள் தமது பணியை ஆற்றினார்கள்.

நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நிலையத்தல் இருந்துகொண்டே சுவாமிகள் சுற்று வட்டாரத்தில் உள்ள தோட்டப்பகுதிகளுக்குச் சென்று பணியாற்றும் ஒழுங்கினை

" ஆத்ம ஜோதி நிலையம் " செய்து வைத்தது.

இதற்குத் துணையாக கதிரேசன் கல்லூரி அதிபராக இருந்த பண்டிதர் திரு க. சபாஆனந்தர் B. A., B.O.L அவர்களும் நாவலப்பிட்டி மாரியம்மன் தேவஸ்தானத்தினரும் கதிரேசன் கல்லூரி மனேஜராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களும், ஓவசியர் திரு. வேலுப்பிள்ளை அவர்களும் கதிரேசன் கோயில் முகாமையாளராக இருந்த இராமன் செட்டியார் அவர்களும் சுவாமிகளின் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

இங்கிருந்து கொண்டே உழப்பனை, கம்பளை, கண்டி வரையிலும் தலாவாக்கொல்லை, நுவரெலியா, பண்டாரவளை, பதுளை வரையிலும் சுவாமிகளின் பணி விரிவடைந்தது.

சுவாமிகளின் தோற்றமும் இனிய பண்பாடும் மக்கள் மனதைக் கவர்ந்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. சுவாமிகளுக்கு இப்பணி மலையக யாத்திரை என்றே குறிப்பிடலாம்

மலையகச் சூழலும், அங்கு நிலவும் அமைதியும் இயற்கை எழிலும் சுவாமிகளின் உள்ளத்தைக் கவர்ந்ததோடு அவரது தியான சமாதிகளுக்கும் அவை பெரிதும் துணை போயின.

ஆயினும் சுவாமிகளுக்குக் கிளிநொச்சியில் பெரும்பணிகள் காத்திருந்தன. ஆதனால் சுவாமிகள் கிளிநொச்சியில் ஜயந்தி நகர் என்றஇடத்தில் மகாதேவ ஆச்சிரமம் அமைத்து தமது பணிகளைத் தொடர்ந்தார் அவர் மகாதேவ ஆச்சிரமத்தில் இருந்த காலத்தில் மலையகமக்கள் வடக்கே வரும் போதெல்லாம் சுவாமிகளைத் தரிசிக்கத் தவறுவதில்லை. சுவாமிகளும் அவர்களை, இன்முகத்துடன் வரவேற்று ஆறுதலளித்து ஆசிகூறி அனுப்பிவைத்த காட்சி கண்ணை விட்டு நீங்காது. ★

## சுவாமிகளின் அருளுரை

1960 இல் ஆச்சிரம வாசிகளுக்குச் சுவாமிஜி வழங்கிய அருளுரை நான், எனது என்ற வாசனை இறந்தமனம் தன்மூலம் ஆத்மாவுடன் ஒன்றாகின்றது. இரவில் தூங்கினோம், சுகமாக இருந்தது என்று கண்டது யார்? எப்போதும் சுகத்தில் ஆத்மாவாயிருக்கிறோம். ஆனால், தெரிவதில்லை. மனம் ஆத்மாவை எதிரிட்டறிய முடியாது. இருட்டறையில் உள்ளவற்றைப் பார்க்க விளக்கு ஒளி வேண்டும். பகலில் சூரியன் பிரகாசிக்கும் போது விளக்கொளியால் பிரயோசனமில்லை. கண் சூரியனை நோக்கித் திரும்புவதே போதும். சூரியனை விளக்கொளி கொண்டு காண வேண்டாம். சுயம் பிரகாசமான சூரியன் தானே ஒளிதந்து பிறவனைத்தையும் ஒளிர்விக்கின்றது. அவ்வாறு உண்மை ஒளிமூலம் விடயங்களைக் காணலாம். மனத்தில் எழும் தெளிந்த அறிவைக் கொண்டு நிஜ சொருபத்தைத் தானே உணர்தல் வேண்டும். இதய சொருபத்தை உணர்தல், அவ்வொளியல்ல. மனம் இதயத்தே பதிய, இதயம் பரிபூரணமாம் ஏக சொருபமாய்த் தன்னந்தனியே விளங்குகிறது. இவற்றுக்கு ஆதாரமாக கைவல்ய நவநீதத்திலிருந்து சில பாக்களையும் மேற்கோள் காட்டி விளக்கினார்.

மகாதேவ ஆச்சிரம மலர், 1992.

# உலகுக்கு வழிகாட்டிய உத்தமர்

"தமிழவேள்" க. இ. க. கந்தசாமி
செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

அருட்திரு வடிவேற் சுவாமி அவர்கள் இந்நாட்டிற் தோன்றிய ஞானகுரவர்களுள் ஒருவர். இவரது அறிவும், ஆற்றலும் பணிகளும் பரந்து விரிந்து உலகிற்கு வழிகாட்டியுள்ளன.

இந்நாட்டிலே வரலாற்றுச் சிறப்பு உள்ளதும், முத்தமிழுக்கும் சைவத்திற்கும் உறுதுணையாய் உள்ளதுமான இணுவில் என்னும் ஊரில், இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் வடிவேற் சுவாமிகள் பிறந்தார். இவர் கடவுள் வழிபாடும், சமயப் பற்றும் உள்ளவர். இவரது தந்தையார் இல்லற ஞானி. அவர் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய பெருஞ்சித்தரான பெரிய சந்நியாசியாருக்கு உறுதுணையாக இருந்தவர். பெண்பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்ததனால் ஆண்பிள்ளை இல்லையே என்று சுவாமிகளின் பெற்றோர் கவலையுற்றிருந்தபோது, ' அருளாற்றல் உள்ள ஆண்பிள்ளை பிறப்பான்' என சித்தர் வடிவிலே இறைவன் திருவாக்கு இவர்களுக்குக் கிடைத்தது. அதற்கு இணங்க இவரது பெற்றோர்க்குக் கடைசிப் பிள்ளையாக இவர் பிறந்தார்.


ஆங்கிலேயர் ஆட்சியின் பயனாக இந்நாட்டில் மேற்றிசைக் கல்விமுறையும், நிலையங்களும் கடந்த நூற்றாண்டிலேயே பரவியிருந்தன. எனினும், பண்டைய திண்ணைப் பள்ளிக்கூட முறையும் இந்நூற்றாண்டுத் தொடக்கத்திலும் நிலைத்திருந்தன. சுவாமி அவர்கள் தமது தொடக்கக் கல்வியைத் தமது தந்தையிடமும் பின்பு ஊர்த் திண்ணைப்பள்ளிக்கூட நல்லறிஞர்களிடமும் பெற்றார். பெரிய சந்நியாசியாரின் அருளாற்றலில் ஈடுபாடு கொண்டிருந்த சுவாமிகள் இளமையிலேயே உலகியல் வாழ்வை விரும்பாமல் மெய்யியல் வாழ்வில் நாட்டம் கொண்டார். அதனால் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கந்தமடவூரில், வேதாந்தமடம் எனப்பெயர் பெற்ற சிவகுருநாதபீடத்து ஞான குரவராக விளங்கிய மகாதேவசுவாமிகளை அடைந்து, மெய்யியல் ஞானத்தைக்கற்று, அருளுபதேசமும் பெற்றார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணருக்குச் சிறந்த மாணவர் கூட்டம் இருந்ததுபோல அருட்திரு மகாதேவசுவாமிகளுக்கும் சிறந்த மாணவர் கூட்டம் இருந்தது. அவர்களுட் சுவாமிகள் தலையாயவர்.

சுவாமிகளிடம் பல சிறப்புகள் அமைந்திருந்தன. அவைகளுட் சிறந்தது தூய துறவு வாழ்க்கை ஆகும். முழங்கால் அளவு நாலுமுழக்காவியுடை உடுத்து, சிறு காவித் துண்டு போர்த்து மெய் முழுவதும் திருநீறணிந்து காட்சிதருவார். சுவாமிகளது துறவு வாழ்வும், அருட்திருத் தோற்றமும் அனைவர் உள்ளங்களையும் உருகச்செய்தன. திருமுறைகளை உள்ளம் உருகப் பாடுவதிலும் வல்லவர். அவர் திருமுறைகளைப் பாடினால், அழுகிற குழந்தையும் அழமாட்டாது. சுவாமிகள் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கோளாரும் வேட்ப உரையாற்றுவதிலும் சமத்தர்.

சுவாமிகள் துறவுவாழ்வு வாழ்ந்தபோதிலும், தொடக்கத்தில் உலகத்திற்கு உதவும்

# நயினாதீவுச்
# சுவாமிகள்



சிறப்புள்ள உழவுத் தொழிலைச் செய்து வந்தார். ஓய்வு நேரங்களில் தம் இல்லத்திலும் அளவெட்டி முதலாய வேறு ஊர்களிலும் திருமுறை வகுப்புகளையும் சமய வகுப்புகளையும் நடத்திவந்தார். இவரிடம் கற்றவர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடுவதிலும் சமய அறிவிலும் சிறந்து விளங்கினர். பல பொது இடங்களிலும் ஆலயங்களிலும் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார்.

சுவாமிகள் கதாப் பிரசங்க முறையிலும் வல்லவர். புகழ்பெற்று விளங்கிய சங்கர சுப்பையர், நாகலிங்கப் பரதேசியார் ஆகியவர்களைப் போலக் கதாப்பிரசங்கம் செய்வதில் வல்லவராய் விளங்கினார். சுவாமிகள் வேதாந்தத் திருமடத்திற் கற்று அத்திருமடத்தொடு தம்மை இணைத்திருந்த போதிலும், சைவக் கோட்பாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, சைவ நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்து அவைகளை எங்கும் பரப்பியும் வந்தார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் காளி அன்னையை வழிபட்டு வந்தமைபோலச் சுவாமிகளும் தாம் வாழ்ந்த இடத்தில் பரமானந்தவல்லி அன்னைக்குக் கோயில் அமைத்துத் தாமே பூசை செய்து வழிபட்டு வந்தார். சுவாமிகளது இல்லம் நாளடைவில் ஆச்சிரமமாக விளங்கியது; சமய, ஆத்மீக வகுப்புகளும் பெரியார்களின் ஆத்மீகச் சொற்பொழிகளும் நிகழ்ந்து வந்தன. இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பெரியார்களும் ஞானிகளும் சுவாமிகளது ஆச்சிரமத்திற்கு வந்து தங்கிச் சென்றுள்ளனர். சுவாமிகளது இடத்திற்கு வராத ஆட்களே இல்லை எனலாம். சுவாமிகளினால் இணுவில் ஊர், பெரியார்கள் – மகான்கள் வந்து தங்கும் பேறு பெற்றது.

சுவாமிகள் யோகசுவாமிகளின் ஆசி பெற்றவர். நயினாதிவுச் சுவாமிகள் பல முறை சுவாமிகளின் ஆச்சிரமத்திற் தங்கிச் சென்றுள்ளார். விபுலாநந்த அடிகளார் திருக்கைலாய யாத்திரைசெய்து வந்தபின் சுவாமிகளின் முயற்சியினால் திருக்கைலாய யாத்திரை பற்றி மஞ்சத்தடி ஆலயத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார். மகாதேவ சுவாமிகளும் இவ்வாலயத்தில் சுவாமிகளது முயற்சியினால் சொற்பொழிவு நிகழ்த்தினார். இலங்கைவந்த குன்றக்குடி அடிகளார், சுவாமி சுத்தானந்தர், கிருபானந்த வாரியார் முதலிய பெரியார்கள் சுவாமிகளோடு நட்புரிமை கொண்டு சுவாமிகளைப் பாராட்டியுள்ளனர். சுவாமிகளும் குடையிற் சுவாமிகளும் வேதாந்த மடத்தில் ஒருங்கு கற்ற மாணவர்கள்.

சுவாமிகளது சமய ஆத்மீகப் பணிகளோடு கல்விப்பணியும் செய்துள்ளார். பல பாடசாலைகள் புதிதாகத் தோன்றுதற்கும் பல பாடசாலைகள் நன்கு நடைபெறவும் துணைசெய்துள்ளார். சுவாமிகள் சாதி சமய வேறுபாடுகள் இல்லாமல் தமது சமய - கல்விப்பணிகளைச் செய்துள்ளார். திருக்கோயில்களும் நன்கு நடைபெற உதவி புரிந்துள்ளார். சுவாமிகள் இணுவைக் கந்தப் பெருமானிடம் மிக ஈடுபாடு உள்ளவர் இக் கோவில் வளர்ச்சிக்குப் பெரும் முயற்சிகள் செய்துள்ளார். 'முருகன் தோத்திரமாலை'ப் பாடல்கள் இக்கோயிற் பெருமானைப் பரவிப் பாடியன ஆகும்.

இணுவிற் சிவகாமி அன்னையிடம் சுவாமிகள் மிக ஈடுபாடு உள்ளவர். சிவகாமி அன்னை உலகுக்கு அன்னை எனக் கூறுவார். இளைஞர் சேவா சங்கம் ஒன்று இக்கோவிலில் பல ஆண்டுகள் நடைபெற்று வந்தது. இச்சங்கத்தின் காப்பாளராக இருந்து இச் சங்கம் இத்தலத்தில் நல்ல சமயச் சொற்பொழிவுகள் நிகழ உதவி செய்துள்ளார்.

காரைக்காற் சிவன் கோவிலைப் பெரிய சந்நியாசிரியர் கருணாகரத் தொண்டமான் வசித்ததாகக் கூறப்படும் காரைக்காலில் அமைத்தார். இக் கோவிலில் அவரது காலத்

தில் நாற்றிசையும் புகழ்பரப்பிப் பெரும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்தது. அப்பெரியார் சமாதியடைந்தபின் இக் கோவில் தகுந்த பரிபாலனம் இல்லாமற் சிதைவடைந்தது. காடாக மக்கள் நடமாட்டம் இல்லாமல் இருந்த இவ்விடத்தில் மகான்கள் பலர் வந்து தங்கிச் சென்றனர். இங்கு வந்து தங்கிய நயினாதீவுச் சுவாமியின் அறிவுறுத்தலின்படி இக்கோவிற் பூசைகள் நிகழ்வதற்கு வடிவேற் சுவாமிகள் பெரும் முயற்சிகள் செய்து வழிவகுத்தார். இக் கோவில் இன்று சீரும் சிறப்பாக விளங்குவதற்கு வழிவகுத்தவர் வடிவேற் சுவாமிகளே ஆவர்.

சுவாமிகள் சமுதாயப் பணிகளிலும் மிக ஈடுபாடு உள்ளவர். சொந்த ஊரிலும் பிற ஊர்களிலும் கிராம, சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். காரைக்காற் சிவன் கோவிலின் முன்பாக வடபால் ஒழுங்கை அமைவதற்குச் சுவாமிகளே வழிகாட்டியவர் ஆவர். உயர் பதவிகளில் இருந்த பலர் சுவாமிகளிடம் பெரும் பற்று உள்ளவர்கள். அதனாற் சமூக, சமய, கல்விப் பணிகள் பல நிகழச் சுவாமிகள் உதவினார்.

குடாநாட்டுக்கு அப்பால் வன்னிப் பகுதிகளில் தமிழ்மக்கள் வாழவேண்டும் என்பதிற் சுவாமிகள் அதிக கருத்துக் கொண்டிருந்தார். அதனால் வருங்காலத்தில் பெரும் பயன் உண்டாகும் என்பதைக் கூறினார். நீர்ப்பாசனப்பகுதி உத்தியோகத்தரின் நட்புரிமை பெற்றுத் தமிழ்மக்கள் கிளிநொச்சிப் பகுதியில் குடியேற உறுதுணை ஆனார். கிளிநொச்சித் திருநெறிக் கழகப் பணிகளுக்குப் பெரிதும் உதவினார். குடியேற்ற முயற்சிக்கு வழிகாட்டற்காகவே கிளிநொச்சியில் நிலம் பெற்றுத் தம் ஞானகுரவர் மகாதேவ சுவாமிகள் பெயரில் ஆச்சிரமம் அமைத்து அங்கு வாழ்ந்து, கிளிநொச்சிப் பிரதேச அபிவிருத்திக்கும் சமய, கல்வி, சமூகப் பணிகளுக்கும் தமது பங்களிப்பை நல்கி உள்ளார்.

கிளிநொச்சிப் பிரதேசத்திற் பல குடியேற்றங்கள் அமைதற்கும் அப்பகுதிகளில் ஆலயங்களும் பாடசாலைகளும் அமைதற்கும் சுவாமிகளே வழிவகுத்தவர்கள். இந்த வகையில் உருத்திரபுரச் சிவன்கோவில் வளர்ச்சிக்குச் சுவாமிகளுக்குப் பெரும்பங்கு உண்டு. அக்காலத்தில் வடபகுதி அரச அதிபராய் திரு. ம ஸ்ரீகாந்தா அவர்களும், நீர்ப்பாசனத் துறை உத்தியோகத்தரான திரு. சிவசுந்தரம் அவர்களும் இருந்தனர். இவர்களுக்குச் சுவாமிகள் உறுதுணையாகப் பெரும்பணி செய்துள்ளார்.

சுவாமிகள் பற்றற்ற துறவியாக வாழ்ந்தவர். எனினும் சமயம், மொழி, சமூகம் ஆகியவைகளில் ஓரளவு பற்று வைத்திருந்தார். சுவாமி விவேகானந்தரின் ஆத்மீக சொற்பொழிவுகள் இந்திய நாட்டின் சமூக அரசியல் எழுச்சிகளுக்கு வழிவகுத்தன. அதேபோல சுவாமிகளது சிந்தனைகள் இலங்கையில் தமிழர் மத்தியில் சமூகம், கல்வி, கலாச்சாரம், அரசியல் ஆகிய துறைகளில் பெரும் எழுச்சியை உண்டாக்கின எனலாம். சுவாமிகள் மலையகத்திலும் பணிபுரிந்துள்ளார்.

சுவாமிகள் இளமைமுதல் எமது நிலைப்பாட்டை உணர்ந்தவர். ஓரளவு உறவினரும் ஆவர். எம்மிடம் அதிக அன்பு வைத்திருந்தார். சமய, சமூகப் பணிகளில் எம்மை ஊக்குவித்தார். மகான்கள் ஞானியர்களிடமும், ஆச்சிரமங்கள், திருத்தலங்கள் ஆகியவைகளிடமும் எம்மை அழைத்துச் சென்று ஆசிகள் பெற்றுத்தந்தார். அரசியலில் ஈடுபட்டுப் பெரும்பணி செய்ததற்குச் சுவாமிகளே காரணமானவர். வேதாந்த திருமடத்திலும் மகாதேவ ஆச்சிரமத்திலும் எம்மை ஈடுபடுத்த பெரும் விருப்பம் கொண்டிருந்தார். தாம் பிறந்து வளர்ந்த பரமானந்தவல்லி ஆச்சிரமத்தை பெரும் நிலையமாக்க விரும்பினார். அதனாலேயே அவ்வாச்சிரமம் ஓலைக் குடிலாய் இருந்துவிடாமல் இப்போதுள்ள அமைப்பில் உறுதி

யான கட்டடம் அமைக்கப் பெற்றுள்ளது. சுவாமிகளுக்கு, அடியவர்களும் அன்பர்களும், மாணவர்களும் பல இடங்களில் உள்ளனர். சுவாமிகள் ஒரு தவ முனிவர். உலகிற்குப் பல வழிகளினால் வழிகாட்டியுள்ளார். அவர் ஆற்றிய பணிகள் பரந்து விரிந்து விளங்குகின்றன. அவர் நிறுவிய கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம் உலகிற்கு ஒளிகாட்டும் பெருநிலையம் சுவாமிகள் ஜீவந்தராய் இருந்தபோதே ஸ்ரீகணேசானந்த மகாதேவ சுவாமிகள் அந்நிலையத்துக்கு ஏற்ற தலைவராக நியமித்துள்ளார். மகாதேவ ஆச்சிரமத்தைப்போல பரமானந்தவல்லி ஆச்சிரமமும் அமைய வேண்டும். இவ்விரு நிலையங்களும் உலகு உள்ளவரை சுவாமிகளை நினைவூட்டும் சுவாமிகளது சிந்தனைகளும் பணிகளும் நிலையங்களும் நன்கு நிலை பெற அனைவரும் துணையாதல் வேண்டும் என்பது பலரின் ஆவல். ★

## நல்ல மழை பெய்தது

1951 இல் நீண்ட நாட்களாக மழை பெய்யாமல் கிணறுகள் வற்றித் தோட்டப்பயிர்களும் வாடி கால்நடைகளுக்கும் நோய் பரவத் தொடங்கி விட்டது.

மழை தொடர்ந்து பெய்யாது விட்டால் அழிவு அதிகமாகி விடும் என்று கருதிய (வடிவேல்) சுவாமிகள் தமது குலதெய்வமான பரமானந்த வல்லி அம்பாளுக்குப் பல குடம் தண்ணீரால் அபிடேகம் செய்யும் படியும், அம்பாளின் கருவறையின் வாசற்படியளவு உயரத்திற்கு நீரை ஊற்றித் தேக்கிவைக்குமாறும் பணித்தார்,

முதல்நாள் காலையில் தேக்கி விடப்பட்ட நீர் மறுநாள் காலையிலேயே திறந்து விடப்பட்டது இவ்வாறு செய்து மூன்று நாட்களின் பின்னர் மரங்கள் தடிகள் செழிக்கவும் உயிரினங் வாழவும் நல்ல மழை பெய்தது.

* * *

சில காலங்களில் மழை இல்லாது நெற்பயிர்கள் வாடி அதனால் விளைச்சல் குறையப் போகிறது என்று சுவாமிகள் கருதினால் தாம் உண்பதை நிறுத்தி, தியானத்தில் மூழ்கி விடுவார்கள் "பொடு, பொடு" என்று மழைத்துளிகள் கீழேவிழும், சுவாமிகள் உளம் மகிழ்ந்து வெளியே காயப்போட்டு இருந்தவற்றை எடுத்துப் பேணுமாறு துதிப்பார்கள்.

மகாதேவ ஆச்சிரம மலர் – 1982.

# அவர் ஒரு தெய்வம்

செல்வி ப. தமயந்தி
இணுவில்

" தோன்றிற் புகழோடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று "

தவமும் தவமுடையார்க்கே ஆவதால் புகழும் தவத்தினால் எய்துதல் எளிதாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் தோன்றியவர் வடிவேல் சுவாமிகள். இவர் இணுவை தந்த தவமுனிவர். இணுவில் கிராமம் ஒரு புண்ணிய பூமி. இதற்குப் பல வகைச் சிறப்புக்கள் உண்டு. இதனாற் போலும் இக் கிராமத்தை " இணையிலி " என முன்னாளில் வழங்கினர்.

இணுவிலில் வாழ்ந்த சந்நாசி கந்தர் என்னும் காசிநாதரும் சின்னக்குட்டி அம்மையாரும் வறிய குடும்பத்தவர். இவர்களுடைய இல்வாழ்க்கையின் நற்பயனாக ஆறாவது ஆண் மகவாய்த் தோன்றியவர் வடிவேல் சுவாமிகள். இவரின் பெற்றோர்க்கு ஆண் குழந்தை இல்லை என்ற குறையைத் தீர்த்த பெருமையும் இவருக்குண்டு. இணுவில் பரமானந்தவல்லி அம்மையும், நொச்சி ஒல்லைக் கந்தனும் இவரது குடும்பத்தின் குலதெய்வங்கள் ஆகும்.

சிறுவயதிலிருந்தே புராணங்கள், தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், நீதி நூல்கள் போன்றவற்றை வாசித்து மனப்பாடம் செய்வதிலும், கேட்டு அறிவதிலும் இவருக்கு மிக்க ஆர்வம் இருந்தது. சமயப் பேச்சுக்கள், கதாப் பிரசங்கங்கள் எங்கு நடந்தாலும், அங்கு சென்று அவற்றைக் கேட்பார். அதனால் அவரது சமய அறிவு இயல்பாக வளரலாயிற்று.

சுவாமி அவர்களின் நிமிர்ந்த நடை, நேரிய நோக்கு, புன்முறுவல் பூத்த முகம், இனிய குரல், இவை அனைத்தும் அவரிடம் அமைந்துள்ள பண்புகளாகும். இத்தகைக் குணங்கள் நிரம்பிய சுவாமி அவர்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எமது குடும்பத்துக்குக் கிட்டியது. எமது தந்தையாருக்குச் சுவாமிகளிடம் மிக்க அன்பும் மதிப்பும் உண்டு. அப்படியே சுவாமி அவர்களும் எம்முடன் அன்பு காட்டி நடந்தார்.

எமது பெற்றோர்க்குச் சிறிது காலம் குழந்தைப் பேறு இல்லாதிருந்தது. அவர்களின் மனக் குறையைச் சுவாமி அறிவார். அதனால் அவர்களைத் தம்மிடம் ஒருமுறை வருமாறு அழைத்தார். அவர்கள் அங்கு சென்றதும் ஆதி சங்கரர் அருளிய "சௌந்தர்யலகரி" என்னும் நூலிலிருந்து ஒரு பாடலை எழுதிக் கொடுத்து, அதனை நாள் தோறும் பாராயணம் செய்யுமாறு பணித்தார். குறித்த அப்பாடலைப் பாராயணம் செய்வோர்க்கு அவர்கள் விரும்பிய பாக்கியம் கிடைக்கும் என்று ஆசியும் கூறினார்.

அதன்படி எம் பெற்றோர் அப்பாடலை நாள் தோறும் பாராயணம் செய்தனர். சுவாமிகளது மெய் வாக்கின்படி அடுத்த ஆண்டிலே எமது அன்னையார் தாய்மை எய்தி, ஒரு பெண் மகவைப் பெற்றார்.

இந்த நற் செய்தியைச் சொல்லுதற்குத் தந்தையார் சுவாமிகளிடம் சென்ற போது, குழந்தைக்கு " சிவ " எனத் தொடங்கும் பெயர் ஒன்றை வைக்குமாறு ஆலோசனை கூறினார். அவரது ஆலோசனைக்கு முன்னமே

மகாதேவ ஆச்சிரமத்

# தவத்திரு வடிவேல் சுவாமிகள்



வேறு பெயர் வைத்து விட்டதாகத் தெரிவித்ததும், அடுத்த குழந்தைக்காவது அந்த எழுத்துத் தொடரில் பெயர் சூட்டும் படி பணித்தார். அவரது அருளாணைப் படியே எனது சகோதரியின் பெயரைச் ''சிவானந்தி'' என்று பெற்றோர் வைத்துள்ளனர். சுவாமி அவர்கள் எங்கள் குடும்பத்துக்கு ஒரு தெய்வம்.

கடந்த 1987 ஆம் ஆண்டு எமது தயாருக்கு ஏற்பட்ட துன்ப நிகழ்ச்சி எம் வாழ்வில் ஒரு பொழுதும் மறக்கவியலாது. துன்பம் தாங்க முடியாத நாம் தந்தையாருடன் கொழும்புக்குச் சென்று தங்கினோம். நாம் அங்கு சென்றிருந்த செய்தி சுவாமிகளுக்குத் தெரிய வந்தது. அவர் எமக்கு ஓர் ஆறுதல் செய்தி அனுப்பி, எம்மைத் தம்மிடம் அழைத்து வருமாறும் அறிவித்திருந்தார். நாட்டு நிலைமை சீரின்மையால் போக்குவரத்தில் பெருந் தொல்லைகள் இருந்தன. அதனால் நாம் அங்கு செல்ல இயலாமற் போயிற்று.

எங்கள் தந்தையாரைப் பொறுத்த வரையில், எத்தகைய இன்னல்கள் நிகழ்ந்த போதிலும், தமக்கு வாய்ப்புக் கிடைத்த வேளை எல்லாம் அவர் சுவாமிகளைச் சென்று தரிசித்து வந்தார். ஆயின், நாட்டில் நிலவிய தீராத தொல்லைகளால் எமக்கு வயது வந்தபின் அவரிடம் சென்று ஆசி பெற இயலாத சூழ்நிலை ஏற்படலானது. என் செய்வது! அவரின் அருளாசியுடன் பிறந்த நாம், அவரது அருளுரைகளைச் செவிகுளிரக் கேட்பதற்கு இடைத் தூரமும், எதிர்பாராத இன்னல்களும் எம்மைத் தடுத்து விட்டன.

யாழ்ப்பாணத்து ஞான பரம்பரையில் வந்த வடிவேல் சுவாமிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தமை, நாம் செய்த புண்ணியப் பேறென்றே நம்புகிறோம்.

சுவாமிகள் எவரோடும் அன்பாகப் பழகுபவர். குழந்தைகளைக் கண்டால் அவருள்ளம் குழையும்; அதனால் குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்களை இனிமை கொட்டக் கை கொட்டிப் பாடுவார்:

''காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா

தெய்வம் நமக்குத் துணை பாப்பா — ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.''

என்பன போன்ற பாடல்களை அவர் பாடும்போது சிறுவர்க்குச் செவி குளிரும். கொஞ்சு மொழி பேசும் பிஞ்சு நெஞ்சங்களில் தெய்விக உணர்வை ஊட்டுவதில் அவர் பேராற்றல் வாய்ந்தவர். அவரது ஆற்றலை எவரும் இலகுவில் அளந்துவிட முடியாது. அவர் ஒரு தெய்வம்.

இன்று அவரது தூல உடல் மறைந்து விட்ட போதிலும், அத் தெய்வத்தின் திருவுருவம் எம் இதயக் கோயிலில் என்றும் உறைந்திருக்கும்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல். ★

''உபாத்தியாரே! உம்முடைய பாத்தியிலே என்ன இருக்கிறது? பொறுமை, தயை, அன்பு முதலிய நற்பயிர்கள் வளரக் காமம், குரோதம் முதலிய களைகளைப் பிடுங்கி விடுகிறீரா?

— யோக சுவாமிகள்.

# இணுவை தந்த இறையருட் செல்வர்

**திரு. நா. இராசையா**
*தலைவர்,*
*திருநெறிய தமிழ்மறைக் கழகம், இணுவில்.*

## இணுவை மூதூர்:

தமிழீழத்தின் வடபாலுள்ள பழம் பதிகளுள் இணுவைப் பதியும் ஒன்றாகும். அதன் கிழக்கில் அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலயம், விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலயம் (காரைக்கால்), எல்லையில்-கருணாகரப் பிள்ளையார் ஆலயம், மத்தியில் அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் ஆலயம் (மஞ்சத்தடி) குருக்கள் சிவன் கோவில், பரமானந்த வல்லி அம்பாள் ஆலயம், தெற்கில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம், மேற்கில் நொச்சியொல்லைக் கந்தன் ஆலயம், ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம், எல்லையில் - கற்பக விநாயகர் ஆலயம், வடக்கில் வட்டுவினிப் பிள்ளையார் கோவில், அம்பாள் கோயில் எல்லையில் - பல்லப்பை வைரவர் கோயிலுமாக நாற்புறமும் தெய்வ மணம் கமழும் தொல்பதி இணுவையம்பதி. இம் மூதூரில் பல்துறையிலும் பெரும் புகழ் ஈட்டிய சான்றோர் வாழ்ந்த சிறப்பும் இதற்கு உண்டு. இவ்வூரின் புகழ் பரப்பிய சான்றோர் வரிசையில் —

### அந்தணப் பெரியார்கள்.

**பிரம்ம ஸ்ரீ. நடராசஐயர்:** இவர் ஒரு சித்தராக விளங்கியவர். விஷகடி வைத்தியத்தில் ஈடிணையற்றவர். சிறந்த கல்விமானும் ஆவார்.

**பிரம்ம ஸ்ரீ. சி. சடாசிவக் குருக்கள்:** வேதாகம வல்லுநர், நாள்தோறும் சிவபூசைசெய்து, விநாயகப் பெருமானைப் பல முறை வீழ்ந்து வணங்கும் நியமம் உள்ளவர்.

**பிரம்ம ஸ்ரீ. சி. சாம்பசிவக் குருக்கள்:** வைத்திய கலாநிதியாக விளங்கியவர். ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றியவர்.

**பிரம்ம ஸ்ரீ. சி வைத்தீஸ்வரக் குருக்கள்:** சிறந்த சங்கீதக் கதாப்பிரசங்கியாகத் திகழ்ந்தவர். திருமுறைகளைப் பண்ணுடன் பாடி, கூட்டு வழிபாடும் நடத்தியவர்.

**பிரம்ம ஸ்ரீ. கு. இராமநாதக் குருக்கள்:** பிரபலம் வாய்ந்த பிரதிட்டா பூஷணமாக திகழ்ந்தவர். ஆலயப் பூசைகளைப் பக்தி, சிரத்தையுடன் செய்யும் பண்பினர். அக்காலத்தில் புகழ் பெற்ற சங்கீத கதாபிரசங்கியான சங்கர சுப்பையரின் சீடருமாவார்.

**பிரம்ம ஸ்ரீ. ந. வீரமணி ஐயர்:** சிறந்த கவிஞர், சாகித்திய கர்த்தா, இசையமைப்பாளர், நடன மேதை, நாட்டிய நாடகம், குறவஞ்சி நாடகத் தயாரிப்பாளர், கர்நாடக இசை வல்லுநர், வானொலிக் கலைஞர், ஆசிரியகலாசாலையில் நுண்கலைப் பிரிவு விரிவுரையாளராய்ப் பணியாற்றியவர். இவரது தந்தையாரான மா. த. நடராசையரும் (சின்னத்துரை ஐயர்) ஒரு சிறந்த சங்கீத வித்துவான்.

### இயற்றமிழ் அறிஞர்கள்

**திரு. சின்னத்தம்பிப் புலவர்:** இவர் வரலாறு அண்மையில் வெளிவந்துள்ளது.

இவர் இணுவில் அருள் மிகு [illegible] சுந்தரி அம்பாள் மீது பஞ்சரத்தினப் பாக்கள், திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல் ஆகியனவும் பஞ்சவர்ணத் தூது என்ற பிரபந்த நூலும் பாடியுள்ளார்.

திரு. அம்பிகைபாக உபாத்தியாயர்: சிறந்த இயற்றமிழ் அறிஞர். திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கியவர். திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களுடன் இருந்து பைந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை அச்சேற்றி வெளியிட உதவியவர். தமிழ்த் தாத்தா சவாமிநாதையரின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர். இவரது இயற் பெயர் கதிர்காமர்.

திரு. அ. க. வைத்தியலிங்கபிள்ளை: இயற்றமிழ்ப் போதனாசிரியரான இவர் மேற்குறிப்பிட்ட அம்பிகைபாக உபாத்தியாயரின் மூத்த மகனாவார். நல்ல இலக்கண இலக்கியப் புலமை பெற்றிருந்ததுடன் புராண படனத்திற்கு விரிவுரை சொல்வதிலும் சிறந்து விளங்கியவர்.

திரு. அ. மாணிக்கத்தியாகராசா: சிறந்த மதிநுட்பம் வாய்ந்த இவ்வாசிரியரை மாணிக்கச் சட்டம்பியார் என எல்லோரும் அன்புடன் அழைத்தனர். தமிழ் அறிஞர் பலரை இவர் உருவாக்கியுள்ளார்.

திரு. க. கார்த்திகேசு (சரவணமுத்து): பண்டிதர்; வடிவேற் சுவாமிகளின் உறவினர். சிறந்த தமிழாசிரியர், கவிஞர், நாடகாசிரியர், தயாரிப்பாளர். இணுவில் ஸ்ரீ அம்பிகைபாக வித்தியாசாலையில் இவரிடம் கல்வி பயின்ற அனைவரும் அதிட்டசாலிகள் என்று பெருமை கொள்வதுண்டு.

திரு. சபா ஆனந்தர், பீ.ஏ; பீ.ஓ.எல்.பண்டிதர்: சிறந்த தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், பல கல்லூரிகளில் அதிபராகப் பணியாற்றியவர். இவரது சேவைகள் இவ்வூருக்கு மாத்திரமன்றி, மலையகம் உள்ளிட்ட பல இடங்களிலும் பயன்பட்டுள்ளன.

திரு. இ. சபாரத்தினம் (இரத்தினம்) பீ. ஏ: அரச கரும கலைச் சொல்லாக்கக் குழுவின் கண்காணிப்பாளராகப் பணியாற்றியவர். ஆங்கிலம், வடமொழி, தென்மொழி ஆகிய மூன்றிலும் சமமான அறிவு பெற்றவர். சங்க இலக்கியங்களில் போதிய புலமையும் பயிற்சியும் இவருக்குண்டு.

திரு. இ. இராசலிங்கம்: மதுரைப் பண்டிதர். இலக்கணம், நாடகம் முதலியவற்றில் ஈடுபாடுள்ளவர். உதவி ஆசிரியராயும் அதிபராயும் பணியாற்றியவர்.

திரு. இ. திருநாவுக்கரசு: பண்டிதர், வித்துவான், சைவப் புலவர் பட்டங்கள் பெற்று பல பாடசாலைகளில் அதிபராகவும், உதவி ஆசிரியராகவும் விளங்கியவர். புராண படனம் செய்வதில் வல்லவர். சங்கீத ஞானமும் சமய அறிவும் பெற்றவர்.

திரு. இரா. சுந்தரலிங்கம்: சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. வட மாநிலக் கல்விப் பணிப்பாளர். கலை, விஞ்ஞான இயல்களில் நல்ல அறிவும், இசை, நடனம் முதலியவற்றில் ஞானமும் உள்ளவர்.

திரு. சோ. பரமசாமி: சென்னைப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பட்டதாரி. அரச திணைக்களங்களில் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டில் ஸ்ரீவடிவேல் சுவாமிகள் பற்றி

"மகாதேவ ஆச்சிரம மலர்" என்ற நூலை வெளியிட்டவர்.

திரு. சபா. ஜெயராசா: கல்வித் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் தலைவராக இப்பொழுது பணியாற்றுகிறார். நல்ல எழுத்தாளர்; கவிஞருமாவார்.

திரு. கே. எஸ். ஆனந்தன்: சிறந்த நாவலாசிரியர், வீரகேசரி முதலான பத்திரிகைகளில் எழுதியவர்.

## வைத்தியர்கள்

திரு. இராமுப்பிள்ளை வைத்தியர்: நடராச ஐயரின் மாணவர். மிகப் பிரபலம் வாய்ந்த விஷகடி நிபுணராக விளங்கியவர்.

திரு. செல்லப்பாப் பரிகாரியார்: சிறந்த ஆயுள்வேத வைத்தியர்; அருள் வாக்குச் சொல்லும் திருவருள் பேறும் இவர் குடும்பத்திற்கு இருந்தது

திரு. செ. கந்தையாப் பரிகாரியார்: குழந்தைப் பிள்ளை வைத்திய நிபுணர். கைநாடிச் சாத்திர வல்லுநர்.

திரு. அ. வயிரவப்பிள்ளை: ஆயுள்வேத சித்த வைத்தியர். கைநாடிச் சாத்திரத்தில் ஈடிணையற்று விளங்கியவர்.

திரு. க. இராமலிங்கம்: வாதநோய் வைத்தியத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தவர். எடுத்த கருமத்தை நிறை வேற்றும் திறமையும், நிருவாக ஆற்றலும் இவரிடம் இருந்தன.

திரு. க. அம்பலவாணர்: காரைக்கால் சாமியார் என அழைக்கப்பட்ட இவர் மணி, மந்திர ஔடதங்களில் சிறந்து விளங்கினார். இவர் திருநீறிட்டுத் தீராத நோய்களைத் தீர்த்தவர்.

## நாடகத்துறை அறிஞர்கள்

திரு. ராஜபாட் வீ. எம். நாகலிங்கம்: கண்டியரசன், பூதத்தம்பி, கோவலன், சத்தியவான் சாவித்திரி முதலான அளவிறந்த நாடகங்களில் கதாநாயகனாக நடித்துப் பெரும் புகழ்பெற்றவர். நல்லகுரல் வளமும் இவருக்கு உண்டு.

திரு. வைரமுத்து: சிறந்த நாடக நடிகர்: கோவலனாக நடித்துக் கோவலன் வயிரமுத்து எனப் பெயர் பெற்றவர்.

திருமதி கே. நவமணிதேவி: சிறந்த திரைப்பட நடிகையாக விளங்கியவர். தென்னிந்தியத் திரையுலகில் பிரபல குணசித்திர நடிகர் எம். கே. ராதாவுடன் கதாநாயகியாக நடித்தவர்.

திரு. இ. சுப்பையா: காவடி ஆட்டம், நாடகம் இவற்றில் கைதேர்ந்தவர். நாடகத்தில் அல்லிராசனாகப் பலமுறை நடித்து, அல்லிராசன் சுப்பர் எனப் பெயர் பெற்றிருந்தார்.

திரு. கந்தர்: அத்திராசி நாடகத்தில் அத்திராசியாக நடித்து அத்திராசிக் கந்தர் எனப்பெயர் பெற்றவர்.

திரு. கதிர்காமர்: அநுமானாக வேடந்தாங்கி நடித்து அதில் ஈடிணையற்றவராய் விளங்கினார்.

திரு. க. பொன்னையா: வள்ளி திருமணத்தில் வேடனாக நடித்து வேடன் பொன்னர் எனப்பெயர் பெற்றவர்.

திரு. க. முதலித்தம்பி: நாரதராக வேடந்தாங்கி நடித்து நாரதர் முதலித்தம்பி எனப் பெயர் பெற்றவர்.

திரு. சி. பொன்னையா: அக்காலத்திற் புகழ் பெற்ற வள்ளியம்மன் நாடகத்தில் நம்பிராசனாக நடித்து நம்பிராசன் பொன்னையா எனப் பெயர் பெற்றவர்.

திரு. சண்முகம்; நகைச்சுவை நடிகராக நடித்து பபூன் சண்முகம் எனப் பெயர் பெற்றவர்.

அண்ணாவி சுப்பர்
அண்ணாவி ஏரம்பர் } இருவரும் சிறந்த அண்ணாவிகளாக விளங்கிப் பல நாடகங்களை மேடையேற்றியவர்கள்: ''டப்பா செற்'' என்ற நாடகக் குழுவை உருவாக்கியவர்.

திரு. கார்த்திகேசு: பண்டாரக்கிழவன் வேடத்தில் நடித்து மிகு புகழ் பெற்றவர்.

திரு. கதிர்காமர்; பல நாடகக் குழுக்களை வருவித்து நாடகங்களை நடத்தி ஏஜெண்டர் கதிர்காமர் எனப் பெயர் பெற்றவர்.

திரு. நடராசா: பல நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்.

திரு. செ. கந்தையா: இவர் தசரதன், கர்ணன், சத்தியவான் முதலான பல பாத்திரங்களில் நடித்துப் புகழ் படைத்தவர். இனிமையாகப் பாடும் திறன்படைத்தவர்.

திரு. வே. சரவணமுத்து: பெண் வேடந் தாங்கி நடித்தவர். கைகேயி வேடத்தில் நடிப்பதில் சிறந்தவர்.

திரு. ஏ. சுப்பையா: பெண் வேடந்தாங்கி நடித்தவர். சீதையாக நடித்துப் புகழ்பெற்றவர். பின்னாளில் சிறந்த நடன ஆசிரியராகப் புகழ்பெற்று விளங்கியவர்.

திருவாளர்கள்: மூ. தம்பிஐயா, சி. இராமநாதன், ம. சுப்பிரமணியம், செ. சுப்பிரமணியம், அங்கிளிப்பாய் கா. சுப்பையா முதலானோர் 'டப்பா செற்றில்' உப நடிகர்களாகச் சிறந்து விளங்கியவர்கள்.

## இசைக்கலைஞர்கள்

திரு. பழனிவேற்பிள்ளை (பெரியபழனி): ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் புகழ் வாய்ந்த தவில்மேதை. தவில் கலைஞர் பலராலும் வணங்கிப் போற்றப்பட்டவர்.

திரு. ச. சிவலிங்கம்: சிறந்த தவில் வித்துவான். இணுவில் பெரிய சந்நாசியாரின் அருளாசியினால் நன்மக்களைப் பெற்று மகிழ்ந்தவர்.

திரு. வி. உருத்திராபதி; நாதஸ்வரம், வயலின் போன்ற இசைக் கருவிகளை இசைத்துப் பலரின் பாராட்டைப் பெற்றவர். ஸ்ரீ வடிவேற் சுவாமிகளின் கதாப்பிரசங்கத்திற்குப் பல முறை வயலின் வாசிக்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்துள்ளது.

திரு. வி. கோதண்டபாணி: சிறந்த நாதஸ்வரக் கலைஞர். பல்லவி வாசிப்பதில் மிகவல்லுநர், தென்னிந்திய நாதஸ்வரக் கலைஞர்களால் பெரிதும் போற்றப் பெற்றவர்.

திரு. நா. சின்னத்தம்பி: தவித்தவில் வித்துவான். இவர் பெரிய பழனிவேற் பிள்ளையின் மாணவர். நாதஸ்வரம் இன்றித் தனித்தவில் வாசித்துப் புகழ் ஈட்டியவர்.

திரு. வி. மாசிலாமணி: தவில், நாதஸ்வர, நாடகக் கலைஞர், கர்நாடக சங்கீதத்தில் வல்லவர். சங்கீத கதாப் பிரசங்கமும் செய்வார். பல நாடகங்களில் கதாநாயகனாக நடித்துப் புகழ் பெற்றவர்.

திரு. என். ஆர். கோவிந்தசாமி: சிறந்த நாதஸ்வரக் கலைஞராக விளங்கி பலரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

திரு. வி. தெட்சணாமூர்த்தி: தமிழ்நாட்டிலும் ஈழத்திலும், தலை சிறந்த தவில் மேதையாக விளங்கி 'லயஞானகுபேர பூபதி' என்ற பட்டமும் பெற்றவர்.

திரு. க. பழனிவேல்: பின்னாளில் கைதடிப் பழனி என அழைக்கப்பட்டவர்.

தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் சிறந்த தவில் மேதையாக விளங்கியவர்.

திரு. என். ஆர். சின்னராசா : தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் புகழ் வாய்ந்த தவில் மேதை. தவில் வித்துவான் பலரை உருவாக்கியவர்.

சைவாசார சீலர்கள்.

திரு. சேதுலிங்கம் : இவர் சேதர்ச் சட்டம்பியார் எனப் போற்றப்பட்டவர். சமயநெறி பேணி வாழ்ந்தவர். தமிழ் இலக்கண இலக்கிய அறிவுடன் சோதிடத்திலும் வல்லவர். பலரைச் சமய நெறியில் ஒழுக வைத்தவர். புராண படனத்திலும் புகழ் பெற்றிருந்தார்.

திரு. சைவச்சின்னப்பிள்ளை : (சின்னத்தம்பி) சிறந்த சைவாசாரசீலர். வேதாரணியத்திலிருந்து சைவக் குருமார்களை வருவித்து ஆதரித்தவர். இணுவில் குருக்கள் சிவன் கோவில் தாபகர்.

திரு. க. சண்முகம் சுவாமி : வேதாந்த சித்தாந்த அறிஞர். துறவு வாழ்க்கை மேற்கொண்டு தமிழ்நாடு சென்று வாழ்ந்து நற்பெயர் பெற்றவர்.

திரு. வ. முத்தையா : ஆலயங்களில் உற்சவ மூர்த்திகளை வீதியில் எழுந்தருளச் செய்வதற்கு மூன்று கூட்டு முத்துச் சப்பறம் தயாரித்துப் பெரும் புகழ் படைத்தவர்.

திரு. வை. கதிர்காமநாதன் : தமிழ், ஆங்கிலம், வடமொழி வல்லுநர். சிறந்த தமிழ் அறிஞர். சைவப் பிரகாச வித்தியாலய அதிபராய் விளங்கியவர். சைவ சித்தாந்தத்தில் மிக்க பயிற்சி உடையவர். சைவநெறி முறைப்படி வாழ்பவர். அறிஞர் பலரது குருவாகத் திகழ்பவர்.

திரு. சி. இராமையா: ஆசார சீலர், நியமந் தவறாது நாள்தோறும் சிவபூசை செய்தவர். சுவாமிகளை அபிஷேகிப்பதில் சிறந்த கலைஞர். தென்னிந்தியத் திருத்தல யாத்திரைக்காகச் சிதம்பரம் சென்ற போது, அங்கேயே சிவபதம் எய்திவிட்டார்.

திரு. வ. அல்லமாப்பிரபு: ஆசார சீலமும் வேதாந்த விசாரமுமுள்ளவர். கற்றவர்களோடு பழகும் பண்பும் வடிவேற் சுவாமிகளுடன் நெருங்கிப் பழகியதால் வேதாந்த மடத்துத் தொடர்பும் இவருக்கிருந்தது.

திரு. க. செல்லையா: செல்லையாச் சுவாமியார் எனப் பலராலும் அழைக்கப் பெற்ற இவர், ஓர் இல்லற ஞானி. சமய அறிவும் ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர். அடியார்களிடத்தில் அதிக அன்பு பூண்டவர். தனது குடும்பத்தினரையும் தெய்வீக வழியில் நாட்டம் கொள்ளச் செய்தவர். இவரது பெறாமகரே "அண்ணா தொழிலக" உரிமையாளர்களாவர்.

திரு. வை. தியாகராசா சாமியார் நல்ல சாரீர வளம் பெற்றவர். எத்தனை கட்டைச் சுருதியிலும் எவ்வளவு நேரத்துக்கும் சலிப்பின்றிப் பாடுவார். கூட்டுவழிபாடு, திருப்புகழ் ஓதுதல் போன்றவற்றைத் தமக்கே உரித்தான பாணியில் பாடி, அடியார்களை மெய்சிலிர்க்க வைத்த பெருமை இவருக்கு உண்டு.

திரு. சங்கரலிங்கம்: சுவாமியார்; இசை ஞானம் உள்ளவர். பக்திச் சுவை சொட்டக் கூட்டுவழிபாடு செய்யும் நல்லடியவருமாவார்.

சித்தர்கள்

அண்ணன்மார்; சகோதரர்கள் இருவர் பெரும் சித்தர்களாக விளங்கியவர்கள். இவர்களின் தெய்வீக ஆற்றலை உணர்ந்த மக்கள் இவர்களுக்குக் கோவிலமைத்து வழிபாடு செய்து

வருகின்றனர். இவர்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரை மொரிசியஸில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளர் க. இ. க. கந்தசுவாமி ஆசிரியரால் சமர்ப்பிக்கப்பட்டு பாராட்டுப் பெற்றுள்ளது.

**கந்தாரிகள்:-** அன்னைமாரின் சீடர்: இவர்களும் மக்களால் வழிபாடு செய்யப்படுகின்றர்.

**ஸ்ரீ சுப்பிரமணியம் சந்நியாசியார்:** பெரிய சித்தராக விளங்கியவர். பெரிய சந்நியாசியார் எனவும், அப்பர் எனவும், சந்நாசிஅப்பா எனவும் மக்கள் இவரைப் பக்தியுடன் வணங்கிப் போற்றினர். இவர் தமது சித்தினால் மக்களது நோய் பிணிகளைத் தீர்த்தார். நொச்சிபம்பதிக் கந்தனுக்கு இந்திய சிற்ப ஆசாரிகளை வரவழைத்து இந்தியாவிலும் இலங்கையிலும் வேறெங்குமே காணமுடியாத கலைச் சிறப்புமிக்க மஞ்சத்தை உருவாக்கினார். இவர் வரலாறு "இணுவை அப்பர்" என்ற பெயரில் நூல்வடிவாக வெளிவந்துள்ளது.

**ஸ்ரீ வேலாயுதர் சந்நியாசியார்:-** பெரிய சந்நியாசியார் மகாசமாதி எய்தியபின் அவர் ஆற்றிய பணிகளை அவரது தமையனாரான இவர் செய்து மக்களின் நோய்பிணிகளைத் தீர்த்தார். மஞ்சத்தடி ஆலயத்தை இவரே முன்நின்று கட்டுவித்தவர்.

**திரு. ஆறுமுகம் சந்நியாசியார்:-** இவர் மஞ்சத்தடி முருகன் ஆலயத்திலிருந்து மக்களின் நோய்பிணிகளைப் போக்கியருளியவர்.

**திரு. க. அம்பலவாணர்:-** 'மணியப்பெடியன்' எனவும் 'காரைக்கால் சுவாமி' எனவும் மக்களால் அன்போடு அழைக்கப்பெற்றவர். தமது சித்தினால் தீராத நோய்பிணிகளைத் தீர்த்தவர். எல்லா ஊர் மக்களாலும் அன்புடன் போற்றி மதிக்கப் பெற்றவர். காரைக்கால் சிவநாதர் ஆலய பரிபாலகராய் விளங்கி, அவ்வாலயத்துக்கு ஆக்கவேலைகள் பல செய்துள்ளார்.

**சாத்திரகார அம்மா (திருமதி. நா. சிவகாமசுந்தரி):** (அருள்மிகு சிவகாமி, பத்திரகாளி தேவியரின் அருள்வயப்பட்ட இவ்வம்மையார், அருள் வாக்குச் சொல்லி மக்களுக்கு ஆறுதல் அளித்தவர்.

அம்மையார் அருள்வயப்பட்டு நிற்கும் வேளையில் கையில் ஒற்றைப் பாக்கை வைத்து உருட்டி, அது போகும் திசையின்படி அருள்வாக்கு உரைப்பார். இவ்வம்மையார் வாரம் தோறும் பிடியரிசி எடுத்துச் செய்த திருப்பணிகளே வைரவர் - பத்திரகாளி ஆலயமும், அன்னை சிவகாமியின் வாயிற் கோபுரமுமாகும். இந்த அம்மையாரின் தாயார் கற்பகம் அம்மாவும் சாத்திரம் சொல்வதில் வல்லவராய் இருந்தார்.

## முத்து மணிகளுள் ஒரு வைரமணி

அரியவற்றுள் அரியவர்களை எல்லாம் தந்த பெருமை பெற்ற இணுவைப் பதியில் காசிநாதர் (சந்நாசி கந்தர்) என்ற வேளாண்குடிச் செம்மல் சிறந்த சிவபக்தராய் வாழ்ந்தார். அவர் அக்காலத்திலே இவ்வூரிலிருந்த பெரிய சந்நியாசியாரிடம் பெரும் பக்தி பூண்டு விளங்கினார். பெரியவரின் ஆணைப்படி இவ்வூரைச் சேர்ந்த சின்னக்குட்டி அம்மையை மணம் முடித்தார்.

மணவாழ்வில் ஈடுபட்ட இப்பெரியார் இறைவழிபாட்டுடன் பெரிய சந்நியாசியாரின் அணுக்கத் தொண்டராய் இருந்து பணி செய்யத் தவறவில்லை. அதனால் இவரைச்

சந்நியாசி கந்தர்' என எல்லோரும் அழைத்தனர். ஐந்து பெண் குழந்தைக்குத் தந்தையான இவரை, வறுமையும் சூழ்ந்து கொண்டது. அவரது மனைவியார் ஆறாவது குழந்தைக்குத் தயானதும் அதுவும் பெண்ணாய்ப் பிறந்து விடுமோ என ஏங்கி வாழ்க்கையில் வெறுப்பும் கொண்டார். வறுமையில் உழல்வதைக் காட்டிலும் வாழ்க்கையை முடித்துக் கொள்வதே நன்றென எண்ணினார். எண்ணியதை நிறைவேற்றத் துணிந்த வேளையில், சந்நியாசியார் அவர் முன் தோன்றி ''உனக்கு மகன் பிறப்பான்; நீ வீணாக உயிரை மாய்க்காதே; திரும்பி வீட்டுக்குச் செல்'' என்று கூறித் தடுத்து வீட்டுக்கு அனுப்பினார்.

நாட்கள் கழிந்தன. பிரபவ வருடம் வைகாசி பதினொராம் நாள் (24-05-1906) அன்று சின்னக்குட்டி அம்மையார் ஓர் ஆண் மகவைப் பெற்றார். மகன் பிறந்த மகிழ்ச்சியுடன் பெரிய சன்னியாசியாரிடம் கந்தர் ஓடிச் சென்றார். அவரைக் கண்ட சந்நியாசியார் ''மகன் பிறந்து விட்டான் தானே! அவனுக்கு 'வடிவேல்' என்று பெயர் வை'' எனப பணித்தார். அவ்வாறே குழந்தைக்கு 'வடிவேல்' எனப் பெயர் சூட்டப்பெற்றது.

## கல்வியும் யோக சுவாமிகளின் திருநோக்கும்

அருமைக் குழந்தை வடிவேல் அன்புடன் வளர்க்கப்பெற்றுப் பாடசாலைப் பருவம் எய்தினார். வித்தியாரம்பம் முறைப்படி நடந்தேறியது. சிறுவனான வடிவேல் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் தனது உறவினரான சேதர் சட்டம்பியாரிடம் நிகண்டும், நீதிநூல்களும் பயின்றார். குடும்பத்தின் வறுமை நிலை காரணமாகத் தனது கல்வியை ஆறாம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டார். பள்ளிப் படிப்பை நிறுத்தியவர், தந்தையாருக்குத் துணையாகத் தோட்ட வேலைகளில் ஈடுபடலானார். தனது ஓய்வு நேரங்களில் திருமுறைகள், புராணங்கள், சமய நூல்கள் என்பவற்றை விரிவாகப்படிக்கத் தொடங்கினார்.

பதினொரு வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுது மருதனார்மடம் சந்தியில் உள்ள பல்லப்பை வயிரவர் கோயில் வாயிலில் சிவயோக சுவாமிகளைத் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றார். சுவாமிகளும் இவரை அன்புடன் அழைத்துக் கட்டித் தழுவி 'ஒரு குறையும் இல்லை; நன்றாகப்படி; எல்லாம் வெற்றியாகும்' என ஆசீர்வதித்தார். அன்றிலிருந்து சுவாமிகளை வடிவேல் அடிக்கடி சந்திப்பார்.

ஆசானும் ஈசானும் ஒன்றேயாகும் அவனே
வனு மொன்றாகும் அது தானாகும்
பேசாத மந்திரமும் இதுவேயாகும்
பேரொளியின் வடிவமாகும் பேருமாகும்
னேசாகுங் கலைகளெல்லாந் தானேயாகும்
நிலையான ஓங்கார பீடமாகும்
ஈசானை ஆசானாய் காணும் பேர்க்கு இங்
கின்பமுடன் கைலாய மெய்தலாமே.

என்ற சித்தர் பாடலுக்கேற்பச் சிவயோக சுவாமிகளையே சிவனாகக் கருதிப் போற்றிவந்தார். காலப்போக்கில் இவரது பரிபக்குவ நிலை கண்டு இவரையும் 'வடிவேற் சுவாமி' என எல்லோரும் அழைக்கலாயினர்.

## மகாதேவ சுவாமிகளுக்குச் சீடராதல்

வடிவேற் சுவாமியாரின் போக்கினை அவதானித்த யோக சுவாமிகள் அவரைக் கந்தமடத்திலுள்ள வேதாந்த மடத்துக்குச் செல்லுமாறு நெறிப்படுத்தினார். அங்கு குருமூர்த்தியாய் இருந்தவர் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆவார். அவரிடம் சென்று சமய சாத்திரங்களைக் கற்கும்படி ஆலோசனை கூறினார். வடிவேல் சுவாமியார் குடும்பச் சூழலில் வளர்ந்தாலும், அவர் மனம் —

ஞானசற்குரு

# மகாதேவ சுவாமிகள்

(வேதாந்த மடம்)



அடியார் உறவும் அரன் பூசை நேசமும்
அன்புமன்றி
படியிற் வேறு பயனுளதோ பங்கயன்
வகுத்த
குடியான சுற்றமும் தாரமும் வாழ்வும்
குயக்கலன்கள்
தடியால் அடியுண்ட வாறொக்கு மென்றி
ணைஞ் சார்ந்திலரே

என்ற பட்டினத்தடிகளின் பாடலை உணர்ந்து உள்ளத்தே துறவு பூண்டார். ஆனால் வீட்டைத் துறக்கவில்லை. வீட்டிற்கு அருகிலிருந்த பரமானந்தவல்லி அம்பாளைப் பூசித்துவந்தார். எனினும், யோக குருநாதரின் அறிவுரை அவர் மனத்தில் இருந்து தூண்டியதால் மகாதேவ சுவாமிகளிடம் சென்று அவரின் அருளாசிக்கு ஆளானார். பின்னர் வேதாந்த மடத்தில் ஸ்ரீ மகாதேவருக்குச் சீடராய் கல்விபயின்று அவருக்குப் பணிவிடையும் செய்தார்.

அத்துடன் அக்காலத்தில் சிறந்த சங்கீத கதாப்பிரசங்கிகளான ஸ்ரீசங்கர சுப்பையர், நாகலிங்கப் பரதேசியார போன்றோரது பிரசங்கங்களைக் கேட்டுத் தாமும் பிரசங்கம் செய்ய முற்பட்டார். இயல்பாகவே இசை ஞானம் வாய்க்கப் பெற்றிருந்தமையால் சங்கீதக் கதாப்பிரசங்கம் செய்வதில் சிறந்து விளங்கினார். இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், கந்தசுவாமி கோயில் என்பவற்றில் மார்கழித் திருவாதிரை நாட்களில் அவர் செய்த "நந்தன் சரித்திரம்" பிரசங்கம் எக்காலத்தும் மறக்க முடியாது.

## பரமானந்த வல்லி ஆலயமும், ஆச்சிரமமும்

தான் வழிபட்ட தெய்வமான பரமானந்த வல்லியின் திருவருளும் மகாதேவ சுவாமிகளின் குருவருளும் கைவரப்பெற்ற சுவாமிகள்—

'வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்
வேறொருவர்க்கு
எட்டாத புட்பம் இறையாத தீர்த்தம்
இனிமுடிந்து
கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சம்
கருத்தினுள்ளே,
முட்டாத பூசை யன்றோ குருநாதன்
மொழிந்ததுவே.

என்ற பட்டினத்தடிகளின் பாடலைப் பொன்னே போல் போற்றி உள்ளங்களித்தவர் பரமானந்தவல்லி ஆலயத்தில் சாதுக்களை எல்லாம் வரவழைத்து மக்களுக்கு அருளுரைகள் வழங்குவித்தார். தினமும் திரளான மக்கள் இரவு வேளையில் வந்து அறிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.

அங்கு வேதாந்த சித்தாந்த வகுப்புகள் நடைபெற்றன. சமய விளக்கங்கள் அளிக்கப் பெற்றன. நவினாதிவுச் சுவாமிகள், ஸ்ரீபதி சுவாமிகள், ஸ்ரீ அவ்வயானந்த சுவாமிகள் போன்ற அருளாளர்கள் வந்து தங்கியிருந்து அருளுரைகள் வழங்கியதோடு மக்களுக்கு அருணோக்கமும் செய்தருளினர். திருமுறை ஓதல், சொற்பொழிவுகள் என்பன நாள்தோறும் நிகழ்ந்தன. சிறுவனாக இருந்த யானும் அங்கு சென்று இவற்றையெல்லாம் நேரிற் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

சுவாமிகளின் அருளுரைகளினாலும் ஏனைய மெய்யடியார்களின் அருளுரைகளினாலும் இணுவில் மக்கள் மட்டுமன்றி அயற் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் ஆசார சீலர்களாகிச் சிவநெறிச் செம்மல்களாகும் வாய்ப்பினைப் பெற்றனர். திரு. செ. நடராசா பீ.ஏ, பண்டிதர் இ. திருநாவுக்கரசு, திரு. சோ. பரமசாமி பி. எஸ். ஸி, திரு. இ. க. கந்தசாமி ஆசிரியர் போன்றவர் சுவாமிகளின் வழிகாட்டலில் வளர்ந்தோராவர். சுவாமிகள் அடியேனுக்கும் அறிவுரைகள் தந்துள்ளார். அடியேனது வளர்ச்சிக்கும் அவரது ஆசீர்வாதமே காரணம் எனலாம்.

சுவாமிகள் மூலம் பரமானந்தவல்லி அம்பாள் ஆலயமும், அவரது பரமானந்த வல்லி ஆச்சிரமமும் அருளொளி பரப்பும் தெய்வீக நிலையங்களாக மிளிர்ந்தன.

## கிளிநொச்சியில் ஆச்சிரமம் அமைத்தல்

பரமானந்தவல்லி அம்பாள் ஆலயம், ஆச்சிரமம், கந்தமடத்திலுள்ள வேதாந்த மடம் ஆகியவற்றில் பணிபுரிந்த சுவாமிகள், சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி கிளிநொச்சி சென்றார். அங்கு சென்றதும்—

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரைக்கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

என்ற அப்பர் வாக்குக்கமைய ஆச்சிரமம் ஒன்றினை நிறுவி, பணிசெய்ய எண்ணங் கொண்டார். அன்பர்கள் பலரது துணையுடன் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் தமது குருதேவரான மகாதேவ சுவாமிகள் பெயரில் 'மகாதேவ ஆச்சிரமம்' என்ற ஆச்சிரமத்தை நிறுவி, அங்கிருந்து மக்களுக்குத் தொண்டாற்றலானார்.

மகாதேவ ஆச்சிரமம் மக்களின் அஞ்ஞான இருளகற்றி, மெய்ஞ்ஞான ஒளி வீசும் புனித இடமாக மிளிர்கிறது. சாதுக்கள் பலரும் அங்கு வருகை தந்தனர். வேதாந்த சித்தாந்த விளக்கங்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தன. நாடி வந்தோர்க்கு ஆத்ம சாந்தியும் ஞானத் தெளிவும் ஏற்பட்டன. திருமுறை வகுப்புகள், சமய வகுப்புகள், சொற்பொழிவுகள் நடைபெற்றன. சமயப் பணியுடன் சமூகப் பணிகளும் சிறப்புற இடம் பெற்றன. சமய தத்துவத்தில் சந்தேகம் ஏற்பட்டவர்கள் சுவாமிகளிடம் அவற்றைச் சொல்லி, ஐயம் நீக்கினர். சுவாமிகளின் நெடிதுயர்ந்த கம்பீரத் தோற்றமும் தெய்வீக ஒளிவீசும் திருமுகப் பொலிவும் அருள் ஒழுகும் இரு விழிகளும், கணீரென்ற குரல் நாதமும் எல்லோரையும் கவர்ந்தன.

'தெளிவு குருவின் திருமேனி தீண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே'

என்ற திருமூலர் வாக்கின்படி பலரும் சுவாமிகளை நாடிச்சென்று தெளிவு பெறலாயினர். சுவாமிகள் தம்மை நாடிவந்தோர்க்கெல்லாம்—

'இக்காயம் நீங்கி இனியொரு காயத்திற்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்காலம் உன்ன அருள்பெற லாமே.'

என்ற மந்திர வாக்கின்படி பிறப்பறுக்கும் வழியிதுவென்று நன்னெறி காட்டிய மெய்ஞ்ஞானி, வடிவேற் சுவாமிகள். அவர் அக இருள் நீக்கி உள்ளொளி பெருக்கிய ஓர் உத்தம ஞானி.

## சமாதிநிலை அடைதல்

மகாதேவ ஆச்சிரமத்தில் அருளொளி பரப்பி, பல்வகைப் பணிகள் ஆற்றிய சுவாமிகள்—

பொய்க்குடத்தில் ஐந்தொதுங்கி போகம் வீசுமாறு போல்
இச்சடமும் இந்திரியமும் நீருமேல் அலைந்ததே
அக்குடம் கலத்தைமொண்டு அமர்ந்திருந்தவாறு போல்
இச்சடம் சிவத்தை மொண்டு உகந்து அமர்ந்து இருப்பதே

என்ற சிவவாக்கியர் கூற்றின் பொருளுணர்ந்து, பிரமோதூத வருடம் ஆனி மாதம் 12ம் நாள் வளர்பிறைச் சதுர்த்தித் திதியிலே ஆயிலிய நட்சத்திரத்தில் (26-06-90) செவ்வாய்க் கிழமையன்று சமாதி நிலை எய்தினார். சுவாமிகள் சமாதியுறினும் அவர் தோற்றுவித்த ஆச்சிரமங்களும் நிலையங்களும் என்றும் நிலைத்து நின்று மக்களுக்கு அருள்நெறி காட்டி ஞான ஒளி வீசும். ★

# வணங்க வேண்டிய தவ முதல்வர்

சிவதர்ம வள்ளல் க. கனகராசா, ச. நீ.
உரிமையாளர், மில்க்வைற் தொழிலகம்; யாழ்ப்பாணம்.

**தவ** முதல்வர் வடிவேற் சுவாமிகள் வணங்க வேண்டிய பெரியார். இத்தவசீலர் அடியார் நடுவுள் இருப்பதிற் பேரார்வம் உடையவர். இவர் ஒரு நாள் யோகசுவாமிகளைச் சந்தித்தபோது, அவரது நலம் விசாரித்த யோக சுவாமிகள் '' உமக்குக் கிளிநொச்சியில்தான் வேலை; நீர் அங்கே போம் '' எனக் கூறி, அவரைக் காட்டுப் பகுதிக்கு ஆற்றுப்படுத்தினார். காடு நாடாவதற்காக, முன்னதாகவே யோகசுவாமிகள் அங்கே - இரணைமடுக் குளக்கரையில் - ஒரு மாமரம் நாட்டியிருந்தார். அம்மரம் இன்று முதிர்ந்து வருகிறது. மாமரத்துக்கும் முருகனுக்கும், தமிழுக்கும் சைவத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

வடிவேற் சுவாமிகளுக்குப் பூர்வாச்சிரமப் பெருவாழ்வும் சிறப்பாய் அமைந்தது. பல கலைகளும் நிரம்பிய இணுவில் மண்ணில் சைவப் பெருங் குடும்பத்தில் தோன்றி, சந்நியாசிகள், சங்கீத கதாப் பிரசங்கிகளோடு இருந்த அனுபவம், அவருக்குப் பரிபக்குவத்தை உண்டாக்கியது. அவருடைய பரிபக்குவத்தை அறிந்தவர் ஆசான் சீலத்திரு மகாதேவ சுவாமிகள் ஆவார்.

மகாதேவ சுவாமிகள், கடையிற் சுவாமிகள் காலடியில் உருவான சார்ஜன் சுவாமிகளின் மூத்த சீடராய்த் திகழ்ந்த கனகரத்தினம் சுவாமிகளின் உத்தம சீடர். அமைதியே உருவான கனகரத்தினம் சுவாமிகள் ஞான மார்க்கத்தில் ஆன்ற விந்தடங்கிய கொள்கைச் சான்றோர். அவர் வழி வந்த குரு சீட பரம்பரை திருநெல்வேலி வளாகத்தின் அயலில் உள்ள சிவகுருநாத பீடத்தில் உருவாகி நிலவி வந்தது. அக் குருபீடத்தை அலங்கரித்தவர் கரம்பொன் தந்த ஸ்ரீ மகாதேவ சுவாமிகள். அவர் வேதாந்தசித்தாந்த சமரச நன்னிலையடைந்த வித்தகர். அவர் பணி செய்து புகழ்பெற்ற வரப்பிரசாதி. அந்த வரன்முறையில் பணி செய்யப் பழகிய வடிவேற் சுவாமிகள் பண்ணொன்றிய திருமுறையின் ஓதிய பழக்கம் உள்ளவர். அதனால் குருவின் உவப்புக்கு உள்ளாகினார். சமய, சாத்திர தோத்திரங்களிலும் வல்லவரானார்.

தாயுமான சுவாமிகளை உபாசனா மூர்த்தமாகக் கொண்டு, அவர் பாடல்களை வீதிகள் தோறும் ஓதிப் பஜனைகளும் செய்தவர். '' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் '' என்று உரக்கப் பாடி உள்ளங் களித்தவர் வடிவேற் சுவாமிகள். அத்துடன் அவற்றைத் தமது வாழ்வில் கடைப்பிடித்தற்கும் யோக குருநாதரின் ஆணையை நிறைவேற்றுதற்குமாகக் கிளிநொச்சிக்குப் போன வடிவேற் சுவாமிகள், காட்டை வீடாகக் கொண்டு கரடிப்போக்கை நீர் போக்குள்ள நிலமாக்கிப் பண்டைய உருத்திரபுரம், இடையில் உபத்திபுரமாக மாறியிருந்ததைப் பழையபடி உருத்திரபுரமாக்குவதிற் பேரூக்கம் காட்டினார்; புதுக் குடியேற்றத்தில் உருவாக்கப்பட்ட பகுதிகளுக்குச் சைவப்பெயர்களைச் சூட்டுவதற்கு ஆலோசனை வழங்கினார். அவ்வாறு பெயர் சூட்டப் பெற்ற ஊர்களுள் ஒன்றே ஜெயந்தி நகர் ஆகும்.

அங்கே தம் குருநாதனாய மகாதேவ சுவாமிகள் திருநாமத்தை முன்னிட்டு ஆச்சிரமமாகிய கோட்டை அமைத்துச் சைவ பரிபாலனஞ் செய்து வந்தார். அவருடைய ஆச்சிரமத்தில் பூசை ஒழுங்கு, சிவதீட்சை ஒழுங்கு மற்றும் மகேஸ்வர பூசை ஒழுங்கு எல்லாம் பாரம்பரிய முறையில் நடைபெற லாயின. இன்று சுவாமிகள் சமாதியாகி, அறிதுயில் கொண்டிருக்கும் போதும் அவை தொடர்ந்து நடைபெற, அவர் அருள் வழி நின்று நாம் வணங்குவோம்.

கூடும் அன்பினில் கும்பிடலே எங்கள் பணி. சேர வாரும், சேர்ந்து கும்பிட்டுப் பயன் பெறுவோம். குருவருள் துணை கொண்டு அனைவரும் உய்தி பெறுவோமாக.

★

## மகாதேவ ஆச்சிரமம்

அவர்களுடைய (வடிவேற் சுவாமிகள்) தொண்டின் விழுப்பத்தினைக் கண்டறிய விரும்புவோர். கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்தியில் இருந்து தெற்குத் திசைநோக்கிச் செல்லும் உருத்திரபுர வீதியில் 7ம் வாய்க்காலைச் சார்ந்து இடம்பெற்றிருக்கும் மகாதே ஆச்சிரமத்துக்கு ஒருமுறையாவது சென்று பார்த்தல் வேண்டும். மகாதேவ ஆச்சிரமம் 1957 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் நிறுவப்பெற்றது. 19 - 8 - 73 இல் இவ்வாச்சிரமத்தின் 16 ஆம் ஆண்டு விழாவும் மகாதேவ சுவாமிகளின் நினைவு விழாவும் கொண்டாடப்பட்டன.

உண்மையில், இவ்வாச்சிரமம் அமைந்திருக்கும் இடப் பகுதியின் வனப்பு எவரையும் கவராமல் விடாது. இயற்கை எழிலும் அமைதியும் குடிகொண்டிருக்கும் ஆச்சிரமச் சூழல், சாந்தி அளிப்பதாயும் பட்டண வாழ்க்கையைப் பழிப்பதாயும் மிளிர்கின்றது. இவ்வளவு வனப்பு வாய்ந்து கிடக்கும் இவ்விடப்பகுதி, பதினாறு ஆண்டுகளுக்கு முன்னதாகக் கரடி, புலி முதலான காட்டு விலங்குகள் மட்டும் உலாவுகின்ற வெறுங் காடாகக் கிடந்ததென்று வடிவேற் சுவாமிகள் கூறுகின்றார்கள். ஆச்சிரமச் சூழலை நோக்கிய போது-

"கானமு மெயினர் கடமுங் கடந்தா
லைவண வெண்ணலு மறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகுங்
காயமு மஞ்சளு மாங்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழடுத் தோங்கிய ..." என்ற

இளங்கோவடிகள் கூறுகின்ற பாடலடிகளே நினைவுக்கு வந்தன.

— திரு. க. இளையதம்பி
நடைமுறைத் தமிழியக்கம்

தவத்திரு மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு விழா நினைவு மலர்.

# உண்மை வாழ்வு

உயர்திரு க. வடிவேலு அடியார் அவர்கள்

இறைவனால் இவ்வுலகம் சிருட்டிக்கப்பட்டது. இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு சீவர்களும் தாங்கள், தாங்கள் செய்து கொண்ட வினையின் பயனால் மரம், செடி, கொடி முதலிய தாவர சென்மங்களையும் அதற்குமேல் பசு, பட்சியாதிய சென்மங்களையும் அதிலும் மேலான மனிதர், தேவர் ஆகிய சென்மங்களையும் அடைகிறார்கள். இவற்றைக் கொண்டு நாம் எண்ணக் கிடப்பது என்னவென்றால் ஒவ்வொரு உயிர்களினதும் எண்ணமும் செய்கையுமே அவர்கள் வாழ்வு எனத் தெரிகிறது. அதற்கு-

"அவாவென்ப தெல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்றும்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்றும் வள்ளுவர் கூறுவது சான்றாகும்.

முன்னே கூறிய சீவர்கள் தாமத சீவர்கள், இராசத சீவர்கள், சாத்துவிக சீவர்கள் என மூவகையாய் இருப்பர். தாமத சீவர்கள் மரம், செடி, கொடி முதலியனவாயும் இராசத சீவர்கள் பசு, பட்சி முதலியனவாயும் சாத்துவிக சீவர்கள் மனிதரும், தேவருமாயும் இருப்பர். இவை அனைத்தும் இச்சையினாலும், கருமத்தினாலும் வந்தவை. இவைகளுள் மனித சென்மத்தை அடைந்தவர்கள் நான்கு பேதமாய் இருக்கிறார்கள். அவை உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்பனவையாம்.

அதமாதமம் என்னும் நிலையில் இருக்குமொருவன் உலகில் உயர்ந்தவர்களால் விலக்கப்பட்ட கொடுந் தொழில்களைச் செய்து, தனக்கும் பிறனுக்கும் பலனற்றவனாய்க் கீழான நரகத்தையே அடைகின்றான். அதமன் என்பவன் எச்செய்கையிலும் சுயநலமே கருதுபவன். அவனாலேயே இன்றைய உலகம் துன்புற்றுக் கொண்டு இருக்கின்றது. அவன் எவ்வளவோ கீழான சென்மங்களை எடுத்து உழல்வான். மத்திமன் என்பவன் தன் தேவைக்காகக் கடவுளை வழிபட்டும் தன் தேவைக்குரிய தான தருமங்களைச் செய்தும் தன்னளவில் உள்ள பெருமையைக் குறித்துப் பெரும் விழாக்களெடுத்தும் மனைவி, மக்கள், சுற்றம் போற்ற வாழ்ந்தும் இவ்வுலக போகங்களை அடைவான். உத்தமனாலேயே இவ்வுலகம் நடைபெறுகின்றது. அவன் அறவழியிற் சமூகத்தைக் காக்கிறான். வேத விதிகளைக் காக்கிறான். பதினொரு விதக் கடமைகளை ஆற்றுகிறான். அவை யாவன-தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், துறந்தோர், உதவியற்றவர், உதவியற்று இறந்தவர், பிரமச்சாரி, இல்லறத்தைத் துறந்து தவம் செய்பவன், சன்னியாசி, தான் என்னும் இவர்களாகும்.

அவ்வுத்தமன் அறவழியிற் பொருளைச் சம்பாதிக்கிறான். அப்பொருள் இறைவனால் அளிக்கப்படுகிறதென்று எண்ணுகிறான். மனைவி மக்கள் முதல் தனது

---

நிறைந்த கல்வியும் சிறந்த அனுபூதிச் செல்வருமான சுவாமிகளின் கருத்துக்களை எழுதி வெளியிடுமாறு யாரேனும் கேட்டால், 'எழுதியவற்றை வாசிப்பதற்கு ஆளில்லை புதிதாய் எதை எழுதுவது' என்று மறுத்துவிடுவார். எனினும், அவரின் எழுத்தாற்றலுக்கு இது ஓர் உதாரணம்.

சொத்துக்கள் எல்லாம் இறைவனுடையது என்று எண்ணி, தான் ஒரு சேவையாளனாய்த் திகழுகின்றான். இறைவனுடைய சேவை யென எச் சேவையையும் செய்கிறான். தன்னையும் இறைவனிடத்தில் ஒப்படைத்து விடுகிறான். உயிர்கள் அனைத்திடமும் அன்பே சொரூபமாய்த் திகழ்கிறான். இவன் கடவுளையே செல்வமென எண்ணி, அச்செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் என வாழ்ந்து, வாழ்வின் மறுமலர்ச்சியைக் காணுகிறான். இந்த உத்தமனாலேயே மழை பெய்கிறது. வானுலகத் தேவர்களாற் பூமிக்கு வேண்டிய பொருள்கள் வருகின்றன. இந்த உத்தமன் பிறப்பு நீங்க வழி தேடுகிறான். உலகம் துன்பம் எனக் காணுகிறான். "எப்போ இறைவன் திருவடி அடைவேன்'' என்று பேரவாக் கொள்ளுகிறான். இவன் செய்த கருமங்கள் யாவும் ஈசுவரார்ப்பணமே. ஆனால் அவன் பெற்ற பேறு, மனப் புனிதமே. அப்புனிதத்தினால் இந்தச் சென்மத்திலோ அன்றி அடுத்த சென்மங்களிலோ தெய்வீக வாழ்க்கைக்கு அடியெடுத்து வைக்கிறான். கடவுளை அறியப் பிரியப்படுகிறான். தீர்த்தம், ஆலயம், காடு, மலை ஆகிய இடங்களில் கடவுளைப் பிரத்தியட்சமாய்க் காணப் பிரியப்படுகிறான். அவ்விடங்களில் அவன் விருப்பம் நிறைவேறவில்லை. சிவனடியார் இருக்குமிடங்களுக்குத் தேடிச் செல்கிறான். அவர்களிடத்தில் உண்மை எது? பொய் எது? கடவுள் எங்கே இருக்கிறார்? என்று ஆராய்கிறான். அதிலும் திருப்தி அடையவில்லை. மனம் சலிப்படைந்தவனாய் பலவகை விரதங்களினாலும், தவத்தினாலும் வைராக்கியத்தைப் பெறுகிறான். 'இறைவா, உன்னைக் காணாது இவ்வுடல் கொண்டு இப் பூமியில் வாழேன்' என உறுதி பூண்டு, கண்களிலே நீர் சொரிய அலைகின்ற அவ்வுத்தமனுக்குத் தனது உண்மையையும் அவனது சந்தேகத்தையும் தெளிவிக்க இறைவன் திருவுளம் கொள்கின்றார். அதனால் இறைவனே ஒரு மானுட வடிவந்தாங்கிக் குருவாக அவன் முன்னிலையில் எதிர்ப்படுகின்றார். அவன்மீது கொண்ட கருணையால் அவனது உள்ளம் குளிரும்படி தனது சொல்லமுதங்களால் தேற்றிக் கடவுளின் பிரத்தியட்சத்தைக் காட்ட, அவனும் அனுபூதியிற் காணுகிறான்.

உத்தமனில் உத்தமன், தான் பலசென்மங்களிலே செய்து கொண்ட நிட்காமிய கன்மத்தினால் உத்தமர் குலத்திற் பிறந்து உலகில் உள்ள எல்லா மத நூல்களையும் ஐயந்திரிபற ஆராய்ந்து, அதில் வேத ஆகமங்களே உண்மையின் பாங்கைக் கூறுவனவென உணர்ந்து, அவற்றிற் கூறப்படும் உண்மைகளை அறியப் பிரமச்சரிய விரதத்தை ஏற்று, வித்துவச் சன்னியாசி என்னும் பெயரைப் பெறுகிறான். பின்னர் குருவை அடைந்து, பதி, பசு, பாசங்களின் சந்தேக விபரீதங்களைத் தேர்ந்து, அக்குருவுடனும் அக் குருவினைச் சேர்ந்த அன்பர்களுடனும் அளவளாவி இருந்து, தன்னையும் தனக்கு மேலாய் இருக்கும் தலைவனையும் அனுபூதியில் பெறுவதற்கு விசேட சன்னியாசத்தைப் பெறுகிறான். இப்படிப் பெற்ற உத்தமோத்தமன் மங்களகரமாய்த் தன்னகத்தில் அறிவுக்கறிவாய் விளங்குகின்ற இறைவனைத், தானே அவன் என்றும் அவனே தான் என்றும் காணுகிறான். இதுவே வேதங்களிற் சொல்லப்பட்ட யோக பாவனையும் ஆகும். தன்னகத்திற் கண்ட கடவுளையே உலகிலுள்ள எல்லாச் சீவர்களிடத்திலும், ஏனைய பொருள்கள் இடத்திலும் காணுகிறான். இதுவே இலட்சிய வாழ்வும் உண்மை வாழ்வும் ஆகும். இந்த உண்மை வாழ்வை வாழ்ந்தவர்களே எங்கள் சமய குரவர்கள். எங்கும், எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நீக்கமற இருக்கிறான் என்ற உண்மையை நேராகக் கண்டு, அனைவரையும் இறைவன் எனக் காண்பவர்களை உத்தமத்தின் உத்தமர்கள் எனலாம்.

எல்லா உயிர்களும் இந்த முடிவுக்கு வந்தேயாக வேண்டும் என்ற உண்மையைத் தெரிந்த உத்தமர்கள், மக்களுக்கு உன்னத

சேவை செய்கிறார்கள். இதுவே உத்தம சேவையுமாகும். ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரைப் பின்பற்றித் தற்காலத்தில் பாரத நாட்டிலும் இலங்கையிலும் வாழுகின்ற உத்தமப் பெரியார்களின் ஆத்ம சக்தியே இன்றைய உலகைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதை உலகிற்கு விளக்கிக் காட்டத் தமது குறளிலே:

''சுவை ஒளி ஊறோசை நாற்ற மென்
றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு''
என்றும்,
''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''

என்றும் திருவள்ளுவர் கூறியருளினார்.

இதற்கு இன்றைய உலகில் ஓர் எடுத்துக் காட்டாக வினோபாவா அவர்களைக் கூறலாம். அவர் ஓர் தர்மராட்சியத்தை ஏற்படுத்த அதாவது சத்திய உலகத்தை உருவாக்கிவிட வேண்டும் என்ற பெருநோக்குக்காக உழைக்கின்றார். ஏழைகளிடத்திலும் அவர்கள் வசிக்கும் சிறிய குடிசைகளிலும் கடவுளின் காட்சியை அவர் காண்பதால், அவ்வேழைகளுக்குள் இருக்கும் இறைவன் களிகூரும்படி உண்மைத் தொண்டாற்ற அகில உலகத்தையும் கூவி அழைக்கிறார். உலக சேமத்திற்காக உலகில் மனியும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய முப்பொருளாசைகளையும் களைந்து விடுவதற்கு பூதானம், சம்பத்துதானம் முதலாய புதுப்புது மார்க்கங்களைக் கண்டு பிடித்து, மக்கள் சமுதாயத்துக்குக் கொடுக்கிறார். இத்தகைய அருட் பெரியார்களில்தான் உலகம் தங்கி நிற்கிறது எனல் சிறிதும் மிகையாகாது. அந்த வகையிலே தனக்கும், பிறர்க்கும் பயன் விளையக் கூடியதாய், தானும் நிறைவுறுதற்காய நெறியில் வாழும் உன்னத வாழ்வே, உண்மை வாழ்வு.

ஒருவரின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரின் எண்ணமும் செய்கையுமே காரணம் என்பதை உணர்வோமாக. தூய நினைப்பும் தூய செயலும் உடைய உண்மை வாழ்வே இன்று எமக்குத் தேவை. இப்பூவுலக வாழ்விலேயே பரிபூரண வாழ்வை எய்துதற்கு நாம் எல்லோரும் உண்மை வாழ்வினைக் கடைப்பிடிப்போமாக.

ஓம் தத் சத் சாந்தி! ★

— நன்றி

சதானந்தன் வெள்ளி விழா மலர் 1955,
அளவெட்டி

---

**அம்மன் சந்நிதி அமையலாயிற்று**

*உருத்திரபுரம் சிவன் கோவிலுக்கு அதிகாலையிலே பல அடியார்களுடன் கூடிச்சென்ற சுவாமிகள், அவ்வாலயத்துக்கு அருகிலுள்ள குளக்கட்டில அமர்ந்திருந்து பகல் முழுவதும் தவம் செய்தார்.*

*மாலை வந்ததும் காடடர்ந்த அவ்விடத்தில் தாம் இருந்து தோத்திரம் செய்த இடத்தைப் பார்த்தவாறு அம்பாள் சந்நிதி ஒன்று அமையவுள்ளது எனக்கூறிவிட்டு ஆச்சிரமத்துக்குத் திரும்பினார்கள்.*

*சில மாதங்கள் கழித்து, சுவாமிகள் குறிப்பிட்ட இடத்திலே குளத்தை நோக்கிய வாயில் கொண்ட அம்மன் சந்நிதி அமையலாயிற்று.*

— மகாதேவ ஆச்சிரம மலர், 1982

# அடிகளார் என்னை ஆட்கொண்ட வண்ணம்

பண்டிதர் சபா. ஆனந்தர், B. A; B. O. L
ஓய்வு பெற்ற அதிபர், இணுவில்.

யாழ்ப்பாணத்திலே இணுவில் தனக்கென ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இவ்வூர் பரந்த நிலப்பரப்பையும் நிறைந்த கோயில்களையும் உள்ளடக்கியது. நான் பிறந்தது இணுவிலின் கிழக்குப்பகுதி, எனது தந்தையார் சபாபதி அவர்கள் விவசாயத்திலும் கோயில் வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். இணுவில் சிவகாம சுந்தரி அவரின் குல தெய்வம்.

தோட்ட வேலை தவிர்ந்த நேரங்களைக் கோயில் வழிபாட்டிலேயே தந்தையார் செலவிடுவார். நான் சிறுவனாக இருந்த காலத்தில் தந்தையார் கோவிலுக்குச் செல்லும்போது நானும் அவருடன் செல்வேன்.

மாலை வேளைகளில் அவர் இணுவில் கந்தசாமி கோயிலுக்குச் செல்வது வழக்கம். கந்தசாமி கோயிலுக்குப் போகும் வழியில் இவ்வூருக்கு நடுவே வடக்குத் தெற்காகச் செல்லும் காங்கேசன்துறை வீதியைக் கடந்ததும் வலது புறத்தில் அம்பாள் சந்நிதியும் சிறு கொட்டிலும் தோன்றும். அம்பாள் சந்நிதியில் பூசை வழிபாடுகளும் சிறு கொட்டிலில் சிவனடியார் கூட்டமும் பக்தி பூர்வமாய் நிறைந்திருப்பதை நான் காண்பேன். அதன் மத்தியில் ஓங்கி உயர்ந்த வாலிபச் சாமியார் ஒருவர் திருமுறை ஓதிக்கொண்டும் புராண படனம் செய்து கொண்டும் இருப்பார். அந்த இளம் சாமியாரின் தோற்றப் பொலிவு என் மனத்தை அவரிடம் ஈர்க்கத் தொடங்கியது. அதனால் அங்கு செல்லும் பழக்கத்தைக் கூட்டிக் கொண்டேன்.

அங்கு செல்வதால் கோயில் வழிபாட்டுடன் நல்லாரைக் காணும் வாய்ப்பும் கிட்டியது. நாளடைவில் அக்கொட்டிலுக்குச் செல்ல வேண்டும்; பெரியார்களைப் பார்க்க வேண்டும்; அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் என்னைத் தூண்டியது. அங்கே உச்சியிலிருந்து தாழ்ந்து தொங்கிய குடுமியுடன் நெற்றி நிறையத் திருநீற்றுப் பூச்சும் கழுத்திலே உருத்திராக்க மாலையும் அணிந்து கொண்டு வாலிபரான வடிவேற் சுவாமிகள் காட்சியளிப்பார். சுவாமிகளின் திருமுறை இசையும், திருக்குறள் முதலிய நீதி நூல்களுக்கு அவர் சொல்லும் விளக்கமும் அவற்றின் மீதிருந்த என் ஆர்வத்தைப் பெருக்கின.

நான் வளர்ந்து, பால பண்டித, பண்டித பரீட்சைகளுக்குப் படித்த காலங்களில் திருக்குறள், திருவாசகம், திருத்தொண்டர் புராணம் முதலிய நூல்களுக்கு சுவாமிகளிடம் சென்று பாடம் கேட்டுள்ளேன். அவ்வேளைகளில் எனது நண்பர்-இணுவை ஆசிரியரும் அளவை வாசருமான திரு. வை. க. சிற்றம்பலம் அவர்களும் என்னுடன் வந்திருந்து பாடம் கேட்டார்.

நாம் இருவரும் படித்துப் பரீட்சையில் சித்தி யெய்துவதற்கும் பின்னர் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கும் அடிகளார் தோன்றாத் துணையாய் இருந்து, தமது அன்பையும், ஆசியையும் வழங்கியமை மறக்க முடியாது.

கல்வியில் முன்னேறி, ஆசிரியப்பணியில் நான் உயர்வடைந்த காலங்களில் வடிவேற் சுவாமிகள் என்னை வாயார வாழ்த்தினார். பேச்சுத் துறையில் நான் ஆர்வம் காட்டிய போது, சுவாமிகளின் ஆசியும் கிடைத்தது. என் பேச்சில் விருப்பம் கொண்ட சுவாமிகள், தாம் வணங்கும் பரமானந்தவல்லி அம்பாள் ஆலயத்துக்கு என்னைப் பலமுறை அழைத்து, என பேச்சைக் கேட்டு மகிழ்ந்துள்ளார்.

அடிகளாரின் அருளாசியுடன் வளர்ந்த நான் திருமணத்துக்குரிய காலம் வந்த போதிலும் கல்வியிற் கொண்ட நாட்டத்தால் அதனைச் செய்யாது காலம் கடத்தி வந்தேன். ஈற்றில் சுவாமிகளே எனது திருமணத்தையும் நிறைவேற்றி வைத்தார். எனது வாழ்வில் நான் மேன்னிலை எய்திய சந்தர்ப்பங்களி லெல்லாம் அடிகளார் என்னை உளமார வாழ்த்தினார்.

தவத்திரு வடிவேற் சுவாமிகள் தோற்றத்தில் உயர்ந்தவர். அது போல் அவரது உள்ளமும் உயர்வுடையது. அவர் பழகுதற்கு நல்ல பண்பாளர். எடுத்த பணியை எத்தகைய சூழ்நிலையிலும் இடையிலே விட்டுவிடமாட்டார். தமது இலக்கு நிறைவேறும் வரை அதனைத் தொடர்ந்து செய்வார். ஈற்றில் வெற்றியும் காண்பார்.

எனது சொந்த வாழ்வில் ஒரு நெருக்கடி நேர்ந்தபோது, அதில் தலையிட்டு என்னை மேன்மைப்படுத்திய மகான். நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியில் நான் அதிபராய் இருந்த காலத்தில் அவரை அழைத்துப் பெருமதிப்புச் செய்துள்ளேன். அவ் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்துப் பார்த்து இப்பொழுது மிகவும் மனம் மகிழ்கிறேன்.

அடிகளார் இணுவிலில் இருந்த காலத்திலும், கிளிநொச்சியில் ஆச்சிரமம் அமைத்து இருந்த காலத்திலும் நான் அவரைச் சந்தித்து ஆசி பெறுவதுண்டு. அன்னாரின் இணுவில் ஆச்சிரமத்தில் நயினாதீவுச் சாமி என வழங்கும் முத்துச்சாமி அடிக்கடி வந்து தங்கிச் செல்வது வழக்கம். அந்நாட்களில் அவ்விடம் ஒரு புதுப் பொலிவு பெற்றிருக்கும். சாம்பிராணியின் நறும் புகையும், கற்பூரச் சுடர் மணமும், பழனித் திருநீற்று வாசனையும், உள்ளத்தில் தெய்விக உணர்வை ஊட்டும். அந்த அற்புதமான அருட்காட்சி என் நெஞ்சில் இன்றும் பசுமையாகப் பதிந்துள்ளது.

சுருங்கக் கூறின் தவத்திரு வடிவேற் சுவாமிகள் இணுவில் தந்த ஒரு தவமுனிவர். அந்த அருந்தவச் சீலர் என்னை ஆட்கொண்ட வண்ணம் சொல்லில் அடங்காது. அன்னாரை வாயார வாழ்த்தி, மனமார வணங்குவதே பொருத்தமாகும்.

'' வாழ்க சீரடியா ரெல்லாம்'' ✶

---

**சுயநலத்தை விட்டு வாழுங்கள்**

*"நீங்கள் திருந்துங்கள்: உலகம் திருத்தமாய்த் தெரியும். எல்லா உலகமும் மனதில்தான் உண்டு. மனதைச் சரியான இடத்தில் வையுங்கள். அதன்பின்னர் யாவும் தெளிவாய் விளங்கும். உலக நன்மையின் பொருட்டுச் சுயநலத்தை விட்டு வாழுங்கள். நீங்கள் மட்டுமன்றி, மற்றவர்களையும் அவ்வாறு வாழும் படி கூறுங்கள்''*

— வடிவேல் சுவாமிகள்.

# வடிவேல் சுவாமிகளின் கற்பித்தலியல்

கலாநிதி சபா. ஜெயராசா, எம்.ஏ;பி.எச்.டி.
தலைவர், நுண்கலைப் பிரிவு,
யாழ். பல்கலைக்கழகம்.

சமூகத்தில் வாழும் மனிதனைத் தெய்விகப்படுத்தலுக்கான கல்விச் செயல்முறை பற்றிய சிந்தனை அருட் குரவர் வடிவேல் சுவாமிகளிடத்து முகிழ்த்தெழுந்தது. ஆங்கிலக் கல்வியின் எதிர்மாறுடப்படுத்தலை உணர்ந்த சுவாமிகள் தமிழ் மொழி வாயிலான கல்வியையும் அதன் வழியாக நிகழ்த்தப்படக்கூடிய தெய்விகக் கற்றலையும், முன்னெடுத்துச் சென்றார்.

தெய்விகக் கல்வியானது உலகியல் தொடர்பான கட்டற்ற விசாரணைகளை உட்படுத்தி நின்றது. இந்தப் பிரபஞ்சம் எதற்காக? பொருள்தேடல் எதற்காக? சொத்துரிமை எதற்காக? என்றிவ்வாறான கட்டற்ற வினாக்களைத் தொடுத்து, விடை காணும் கல்வியைச் சுவாமிகள் மேற்கொண்டார். கட்டற்ற விசாரணை என்பது பொறுப்பற்ற சிந்தனையன்று. சிந்தனையை வரன் முறையாக ஒழுங்கமைக்கும் பொழுது, தெய்விகமே விடையாக அமையும் என்ற கற்பித்தலியலை வடிவேல் சுவாமிகள் முன் மொழிந்தார்.

தாம் மேற்கொண்ட கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளின் வாயிலாக "புலன் சார் இன்பம்", "பேரின்பம்" என்பவற்றுக் கிடையே வேறுபாடு காணும் பண்பைச் சுவாமிகள் வளர்த்தெடுத்தார். மெய், வாய், கண், மூக்கு, செவி போன்ற புலன்களாற் பெறப்படும் வரையறுக்கப்பட்ட இன்பமே புலன்சார் இன்பம் என்பதை விளக்க முயன்ற சுவாமிகள், அவற்றின் வழியாக எழும் இன்பங்கள், துன்ப மூட்டங்களினாற் சூழப் பட்டுள்ளமையை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார். ஆனாற் பேரின்பம் என்பது துன்ப மூட்டங்களாற் சூழப்படாத தென்றும், முழு நிறைவானது என்றும் சுட்டிக் காட்டினார்.

சுவாமிகள் தமது கற்பித்தலின் பொழுது "சத்சித் ஆனந்தம்" என்ற தொடரைப் பயன்படுத்தியதாகத் தெரிகின்றது. "சந்" என்பது பூரணத்துவம் பொருந்தியது என்றும், அதுவே உண்மையென்றும், அதுவே நித்தியம் என்றும் விளக்கப்படுகிறது. "சித்" என்பது உணர்வு பூர்வமாயும், அறிவாயும் விளங்கும் பொருளைக் குறிப்பிடுகின்றது. "ஆனந்தம்" என்பது துன்பம் சூழாத பேரின்பத்தைக் குறிப்பிடுகின்றது. தெய்விகத்தில் மூழ்கும் பொழுது, பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறையும் உயர்நிலையான பேரின்பத்தைக் காணலாம் என்பது சுவாமிகளின் முடிவு. இதனைப் "பரமானந்தம்" என்ற தொடராலும் சுவாமிகள் குறிப்பிட்டுத் தாம் வணங்கிய அம்பிகைக்கு "பரமானந்த வல்லி அம்பாள்" என்ற பெயரையும் சூட்டினார்.

தமது கற்பித்தலியலிற் சுவாமிகள் அறிவை இரண்டாகப் பாகுபடுத்திக் காட்டினார். அவை :

(அ) புறவய அறிவு
(ஆ) அகவய அறிவு

புறவய அறிவு என்பது கற்பவனது புலன்களாற் புறத்தூண்டிகளை விளங்கிக் கற்கும் அறிவாகும். இந்த அறிவின் வழியாக உலகியல் இன்பங்களையும் அனுபவங்களையுமே பெறமுடியும் என்பது சுவாமிகளின் துணிபு. ஒருவன் தனது உள்ளார்ந்த தெய்விகத்தை அறியும் செயல்முறையே ''அகவய அறிவு'' என்று கொள்ளப்படும். இது ''பிரம்ம வித்தியா'' என்றும் குறித்துரைக்கப்பட்டது.

ஒருவன் தனக்குரிய உள்ளார்ந்த விகாரங்களை அறிந்து கொள்வதற்குக் கல்வி பயன்படல் வேண்டும். காமம், குரோதம், லோபம், மோகம், அகங்காரம் போன்றவை ஒருவனிடத்து உள்ளமைந்து செயற்படும் விகாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. கல்விச் செயல் முறையானது இந்த விகாரங்கள் மீது ஒளி பாய்ச்சுதல் வேண்டும் என சுவாமிகள் தமது மாணாக்கருக்கு வற்புறுத்தினார்.

கல்வி நோக்கிலே ''உயர் நிலை மனம்'', ''தாழ் நிலை மனம்'' என்றவாறு மனத்தின் இயககங்கள் வேறு பிரித்துக் காட்டப்படுகின்றன. தாழ் நிலை மனமானது உலக இன்பங்களுக்குரிய கல்விச் செயற்பாடுகளுடன் கட்டுப்பட்டு நிற்கின்றது. உயர்நிலை மனமானது தெய்விக இன்பத்தைத் தேடும் கல்விச்செயல் முறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தாழ்நிலையிலிருந்து உயர்நிலைக்குரிய ''பெயர்ச்சியை'' ஏற்படுத்தும் கற்றல் — கற்பித்தல் முயற்சிகளை வடிவேற் சுவாமிகள் மேற்கொண்டார். இத்தகைய ஒரு நிலையிலே தான் யோக சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள், சுவாமி விபுலாநந்தர் முதலியோரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

ஆத்மாவே கற்றலுக்குரிய வலுவின் நிலையமாகத் திகழ்கின்றது என்பதைச் சுவாமிகள் தம்முள் விளங்கிக் கொண்டார். ஆத்மாவே உடலை இயக்குகின்றது —ஐம்பொறிகளையும் செயற்படவைக்கின்றது. அனுபவங்களைத் தொடுப்பதற்கும் கோவைப்படுத்துதற்கும் அதுவே துணை செய்கின்றது. ஆத்ம அறிவைத் தனக்குரிய முழு முதல் நோக்காகக் கல்வி கொள்ளல் வேண்டும் என்று சுவாமிகள் கருதினார்.

சுவாமிகளின் கற்பித்தலியல் எதிர் மறைப் பண்புகளை விளக்குவதாகவும் அமைந்தது. ''அறியாமை'', ''அவித்தை'' போன்ற தொடர்களைச் சுவாமிகள் பயன்படுத்தினார். ஆத்மாவை அகங்காரத்தால் மூடச்செய்யும் கல்வி ''அவித்தை'' எனப்படும். இந்நிலையிற் கல்வியினூடாக ஆத்மாவை உணர்த்த வேண்டியுள்ளது. ''வேறு பிரித்தறியும்'' ஆற்றலைக் கற்பித்தல் தொடர்ச்சியாக வளர்த்தெடுத்தல் வேண்டும். உண்மைக் கல்வியைப் பெற்றவன் தனது உடல் அல்ல தனது ஆத்மாவே மேலானது என்று சிந்திக்கத் தொடங்குவான். உடல் என்பது செயற்பாட்டுக்குரிய ஒரு கருவியாகவே அமைகின்றது. அந்தக் கருவியை நல்வழியிற் பயன்படுத்துவதற்கு ஏற்ற கல்வியே வேண்டும் என்று சுவாமிகள் கருதினார்.

தெய்வவித்தை அனுபவிப்பதற்கும், அணுகுவதற்கும் ஒருகருவியாகவே உடல் விருத்தி செய்யப்படல் வேண்டும். இந்நிலையில் உடற் கல்வியையும், உடல் சார் ஒழுக்கங்களையும் சுவாமிகள் வற்புறுத்தினார். இணுவிற் கிராமத்தின் செம் மண்ணை அகழ்ந்து, பண்படுத்தி தமது உணவைத் தாமே உற்பத்தி செய்து உடல் வளம் காக்கும் நல்லாசிரியராக விளங்கினார்.

அவர் வாழ்ந்த குடில் தானியக் குடிலாகவும், கல்விக் குடிலாகவும், ஞானக் குடிலாகவும் விளங்கியது. அவர் காலத்து ஞானிகள் பலர் அந்தக் குடிலுக்கு வருகை தந்தனர். குடிலின் வடக்குப்புறமாக அம்பிகையின் ஆலயம் இருந்தது. அதன் வட எல்லையில் பண்டிதர் க. கார்த்திகேச

என்ற முத்தமிழ்ப் புலவர் (சரவணமுத்து ஆசிரியர்) வாழ்ந்தார். அதன் கிழக்குப் புறமாகச் சேதுலிங்கம் சட்டம்பியாரின் திண்ணைப் பள்ளிக்கூடமும், அதனை அடுத்து தெற்கிலும் சற்றுக் கிழக்கிலும் அண்ணாவி ஏரம்பர் இல்லமும், தவில் வித்துவான் விசுவலிங்கம் இல்லமும் அமைந்திருந்தன. குடிலின் நேர் கிழக்கே அமைந்த தீர்த்தம் — ''புனித கங்கை'' என்று கிராமத்தவர்களாற் குறிப்பிடப்படும். அது நோய்கள் தீர்க்கும் ஔடதக் கலப்புக் கொண்ட ''தீர்த்தம்'' என்பது கிராம மக்களின் நம்பிக்கை.

சுவாமிகள் தமது கற்பித்தலிலே தியான மரபை வலியுறுத்தினார். தியானத்தின் வழியாகச் ''சாந்தி'' நிலைபேறு கொள்கின்றது. தியானத்தின் வழியாக ''அவித்தை'' ஒழிக்கப்படும்; ஆத்மவலு உய்த்தறியப்படும். ஆத்மாவையும், அனாத்மாவையும் வேறு பிரிப்பது ''தியானம்'' என்று சுவாமிகள் சுட்டிக்காட்டினார். தியானமே உலக மாயையில் ''விழிப்பை'' ஏற்படுத்துகின்றது. ''உலகம் நிலைபேறு கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த நிலைபேறு நிச்சயமல்ல'' என்ற வேத வாக்கியங்கள் சுவாமிகளாற் குறிப்பிடப்படுகின்றன.

உலக மாயைகளிலிருந்து விடுபடுதற்கான வழிமுறைகளிலே திருமுறைகளின் முக்கியத்துவத்தையும் சுவாமிகள் வலியுறுத்தினார். திருமுறைச் செல்வம் இணுவில் கிராமத்திலே ஆழ்ந்து வேர் கொள்ளச் செய்த பெருமையின் முக்கிய பங்காளராகச் சுவாமிகள் விளங்குகின்றார். தெய்விகத்தைப் பெறுவதற்குத் திருமுறைகளைத் தவிர்ந்த சுலபமான வழிகள் வேறில்லை என்பது அவர் தம் துணிபு. திருமுறைகள் வழியாகப் பக்தி கிளர்ந்தெழச் செய்யப்படுகின்றது; தெய்விக ஒருங்கிணைப்பும் ஏற்படுத்தப்படுகின்றது.

இந்துக் கல்வி மரபிலே முகிழ்த்தெழுந்த ஓர் உன்னத முறைசாராக் கல்வி நிறுவனமாக சுவாமிகளின் தெய்வக் குடில் அன்று விளங்கியது. பாடசாலைகளிலே கிடைக்கப் பெறாத ''மாற்று வகைக் கல்வியை'' அவர் மிகவும் பரந்த மனத்துடன் வழங்கினார். தமது கற்பித்தலில் அவர் இந்து சமயத்தின் அகமுரண்பாடுகளுக்கு அழுத்தம் கொடுத்திலர். சமயங்களை அவர் பரிபூரண வடிவங்களாகக் கண்டார். ஆறுமுகநாவலரையும், இராமலிங்க வள்ளலாரையும் அவரவர் நிலையில் உயர்ந்தவர்களாகக் கருதியமை வடிவேல் சுவாமிகள் தம்முள்ளே அடக்கியிருந்த சமய முழுமையைக் காட்டுகின்றது. சுருங்கக்கூறின் அவர் ஓர் அப்பழுக்கற்ற ஆத்ம ஞானி. அவரது பரந்த நோக்கில் எழுந்த கருத்துக்கள் இந்நா நிலத்தில் என்றும் நிலவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ★

---

குருவருளுக்கு இலக்கானவன் குறிக்கோளை எய்துவான்

ஐம்பொறி யின்பவழியே தன்னையலைய விட்டவன் தான் வந்தவாறும், போமாறும் யாதெனக் குறிக்க முன் இறந்துவிடுகிறான். ஆனால், நல்லாசிரியனது திருவருளுக்கிலக்காகி, அவர் நல்லுபதேச மொழிக்கிணங்கத் தன்னறிவைத் தெருட்டி நடப்பவன் தன் நோக்கதின் முடிவைப் பெறுகின்றான் என்பது திண்ணம்.

— விவேக சூடாமணி.

# மஞ்சத்தடி....
# அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்

திரு. சு. இராமலிங்கம்
ஆயுள்வேத வாத வைத்திய நிபுணர், இணுவில்.

ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் காணக்கிடைக்காத திருமஞ்சம் இணுவில் கந்தசாமி கோயிலில் உள்ளது. சிற்ப சாத்திரத்துக்கு அமைவாக மிக உயர்ந்து, அகன்றுள்ளது இம்மஞ்சம். இதில் சிற்பங்கள் பல பொருத்தப் பெற்றுள்ளன. இதனைச் செய்வித்தவர் பெரிய சன்னாசியார். இவர் ஒரு சித்தர். இது செய்த இடம் மஞ்சத்தடி எனப் பின்னாளில் வழங்கப் பெறுகிறது. மஞ்சத்தடிப் பகுதி கோண்டாவில் எல்லைக்குள் அமைந்துள்ள போதிலும், இவ்விடம் இணுவிலூரைச் சேர்ந்ததாகவே சொல்லுவதுண்டு. முன்னாளில் இங்கு நடந்த தெய்விகக் காட்சிகளை ஒரு கணம் நினைக்கும் போது உடல் புல்லரிக்கும்!

இணுவை அப்பர் என்றும் பெரிய சன்னாசியார் என்றும் ஆசையால் ''அப்பா'' என்றும் அழைக்கப் பெற்ற சித்தர் இங்கு தான் குடில் கட்டி வாழ்ந்தார். சுப்பிரமணியம் என்ற பிள்ளைப் பெயர் கொண்ட இவர் இணுவில் கந்தர் – தெய்வானை குடும்பத்தின் இரண்டாவது புதல்வராவார்.

அந்தக் காலத்தில் பெரிய சன்னாசியாரின் தலைமையிலே அருள்வயப்பட்ட அடியார்களின் ஆடலும் பாடலும் ஒரு புறம் நிகழ, சகல இசைக் கருவிகளின் ஓசை மறு புறம் பேரொலி எழுப்ப, ஓங்கார ஒலி எங்கும் பரந்தொலிக்கும். நாட்பட்ட நோயாளர் பலர் இங்கு நோய் நீங்கப்பெறுவர்.

பெரிய சன்னாசியார் பிணி நீக்கும் முறை அருள்வயமானது. தீராத பிணியாளர் முன்னே அன்னம், கறி முதலிய படைப் பொருள்களைப் படைத்து விட்டு, அவ்விடத்தில் பெரியவர் ஆவேசமுற்று ஆனந்தக் கூத்தாடுவார். அவர் முன் கொணரப்பெற்ற பேய், பிணிகள் தாமாக நீங்கிவிடும். கீழே சிந்திய படையல் பண்டங்களை எறும்பு முதல் பறவை இனங்களெல்லாம் உண்ணும். அங்கு பார்க்கும் இடமெங்கும் தெய்விக மணம் கமழும். நீங்காத துன்பங்கள் நீங்கப்பெற்ற இவ்விடம் ஒரு புனித பூமி. இப்புண்ணிய பூமியிலேயே அங்கிருந்து அருளாட்சி செய்த சன்னாசியார் கோயில் கொண்டுள்ளார்.

மஞ்சத்தடி முருகன் ஆலயக் கருவறையின் கீழே பெரியவரின் பொன்னுடல் சமாதி வைக்கப் பெற்றுள்ளது. சித்துக்கள் பல நிகழ்ந்த இவ்விடத்திற் கோயில் கொண்டுள்ள முருகன், அருள் மிகுந்த தெய்வமாகும்.

இவ்வாலயத்தின் தென் மருங்கில் அமைக்கப் பெற்ற திருமடத்தில் வடிவேல் சுவாமி என்ற இளம் துறவி தங்கி இருந்தார். அவர் அங்கிருந்து ஆற்றிய தொண்டுகள் பல. காலை, மாலைகளில் தாமே தேவாரப் பண் பாடுவார். அவ்வாறு பாட விரும்புவோர்க்கும் பண்ணிசை பழக்குவார். கோயில் சாயங் காலப் பூசை வேளையிற் கூட்டு வழிபாடு நடத்துவதும் அவர் வழக்கம்.

பூசைக்கு வரும் அடியார்கள் சமய அறிவைப் பெறவேண்டுமென விரும்பிய வடிவேல் சுவாமியார், ஆலயத்தில் புராண படனத்தைத் தொடக்கி வைத்தார். இவர் தொடக்கி, நடத்திய புராண படனங்களுள் பெரிய புராண படனம் மிகப் பிரசித்தமானது. புராணப் படிப்பைக் கேட்பதற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் மக்கள் கூட்டம் வந்து சேரும். உரை சொல்வதற்கு இணுவிலைச் சேர்ந்த தா. வைத்திலிங்கச் சட்டம்பியார், சேதுலிங்கச் சட்டம்பியார், கோண்டாவிலைச் சேர்ந்த அம்பலவாணச சாமியார் முதலியோர் வந்திருப்பர். இளம் துறவி வடிவேல் சுவாமியார் 'கணீர்' என்ற குரலில் சொற்களைப் பிரித்து, கேட்போர் செவி குளிரும்படி வாசிப்பார். இடையிடையே உரையாசிரியர் சதாசிவச் சட்டம்பியார் போன்றவர்கள் அவரை மாற்றி விடுவதோடு உரை சொல்வதிலும் கலந்து கொள்வர்.

புராண படனம் பக்தி பூர்வமாக நடந்து கொண்டிருக்கும். முக்கிய திருத்தலங்கள் ஒவ்வொன்றுக்கும் நாயன்மார் சென்று திருப்பதிகம் பாடுகின்ற செய்தி வந்ததும், புராண படனத்தை நிறுத்தி விட்டு, குறிப்பிட்ட அத்திருத்தலத்தில் பாடிய திருப்பாடல்களை வடிவேல் சாமியார் சுருதி சேரத் தாளத்துடன் பக்தி சொரியப் பாடுவார். புராண படனம் கேட்க வந்தவர்கள் அனைவரும் மெய் மறந்து போவார்கள். அவ்வேளையில் சித்தர் செல்லர் படிப்புத் தொடங்கிய நேரம் முதல் வாசனைத் தூபமிட்டு மூக்கிய சந்தர்ப்பங் களிற் கற்பூரமும் கொளுத்துவார். அவ்விடம் ஒரு தெய்விகச் சூழலாய் விடும்.

பக்தி மயமாக நடை பெற்று வந்த புராண படனமும் பண்ணிசையும் பிற ஊரவர்களையும் கவரத் தொடங்கியது. இளஞ் சிறார்களுக்கு வடிவேல் சாமியார் பண்ணிசை பயிற்றவும் ஆரம்பித்தார்.

அவ்வேளையில் வலிகாமம் வடக்குப் பிரதேசப் பண்ணிசைப் போட்டி ஒன்று நடத்த ஏற்பாடானது. வேலுப்பிள்ளை மணியம் தலைமையில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியில் வடிவேல் சாமியாரின் மாணவரான இணுவில் தவில் வித்துவான் விசுவலிங்கத்தின் மகன் மாசிலாமணியும் பங்கு பற்றினார். மாசிலாமணி மேடைக்கு அழைக்கப்பெற்றதும் ''சிறையாரும் மடக்கிளியே, இங்கே வா ......'' எனத் தொடங்கும் சம்பந்தர் தேவாரத்தைப் பாடியபோது, வேலுப்பிள்ளை மணியம் அழுதுவிட்டார். அப்போட்டியில் மாசிலாமணிக்கே முதலிடம் கிடைத்தது. வெற்றியீட்டியவருக்குரிய பரிசில் வழங்குகையில், மாசிலாமணியின் பாடல் தனது உள்ளத்தை உருக்கி விட்டதாகக் கூறிய மணியம் அவர்கள், தேவார அடங்கன் முறை ஒன்றைப் பரிசாகக்கொடுத்து, பாராட்டுரையும் வழங்கினார். அப்பாராட்டைப் பெற்ற மாசிலாமணியே பிற்காலத்தில் சிறந்த பாடகனாயும், நடிகனாயும், பிரசங்கியாயும், நாதஸ்வர வித்துவானாயும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பண்ணிசைப் போட்டியில் மாசிலாமணிக்குக் கிடைத்த முதற் பரிசில் அவரைக் கற்பித்த வடிவேல் சுவாமிகளுக்குப் பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது. மஞ்சத்தடி ஆலயத்தில் பண்ணிசை பயிற்றிய சுவாமிகளை பாடசாலைகளிற் பண்ணிசை கற்பிக்கக் கோரிப் பலரும் அவரைத் தேடி வந்தனர். கோண்டாவில் சைவ வித்தியாசாலை, அளவெட்டி சதானந்த வித்தியாசாலை, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை ஆகிய வித்தியாசாலைகளுக்குச் சென்று, சுவாமிகள் பண்ணிசை பயிற்றி வந்தார். கோண்டாவில் வடக்குப் பகுதியில் – அன்னங்கையில்-இராப் பாடசாலை ஒன்று நடத்தி, அதைப் பகலிலும் இயங்கச் செய்து, பரஞ்சோதி வித்தியாசாலை என்ற பெயருடன்

சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமை யிடம் ஒப்படைக்கச் செய்தார். பின்னர் இது பதிவு பெற்ற பாடசாலையாக உயர் வடைந்தது.

கோயிலில் தேவாரம் பயிலும் பிள்ளை களுடன் வடிவேல் சுவாமிகளும் சேர்ந்து பஜனை நடத்துவார். வெள்ளி, செவ்வாய் நாட்களில் சாயங்காலப் பூசை முடிந்ததும் சிறிது நேரம் சொற்பொழிவு செய்வார். காலக்கிரமத்தில் அச்சொற்பொழிவு கதாப் பிரசங்கமாக மாறியது.

வடிவேல் சுவாமிகளின் கதாப்பிரசங் கத்துக்கு இசையாசிரியர் நடராசையர் (சின்னத்துரை ஐயர் - இயலிசைவாருதி வீரமணி ஐயரின் தந்தையார்), நாதஸ்வர வித்துவான் வி. உருத்திராபதி, திரு. சி. ஆறுமுகதாஸ் ஆசிரியர் போன்ற கலைஞர் கள் வயலின் இசை வாசிப்பர். அத்துடன் பிரபல மிருதங்க வித்துவான்களும் பிற் பாட்டுக்காரர்களும் சுவாமிகளுடன் சேர்ந்து அவரது பிரசங்கத்தைச் சிறப்பித்தனர்.

மஞ்சத்தடியில் பெரியபுராண படனம் நடத்திய காலகட்டத்தில் அறுபத்துமூவர் குருபூசைகளும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டன.

குருபூசை நாட்களில் பெரிய சன்னாசி யாரின் திருவுருவப் படமும் அலங்கரிக்கப் பெற்று, பூசை வழிபாடு நடத்தப்பெறும். நால்வர் குருபூசைகளின்போது, நூற்றுக் கணக்கான அடியார்களுக்கு மகேசுரபூசை நடைபெறும். அன்னம் படைக்கும் பொழுது சிவபுராணம் ஓதத் தொடங்குவர். ஒருவர் பா ஓதிக் கொண்டிருக்க, ஏனையோர் பாத தீர்த்தமிடல், சிரசில் பூவைத்தல், திருநீறு, சந்தனம் சாத்தல், கற்பூர ஆராத்தி முத லிய கைங்கரியங்களைச் செய்வர். மகேசுர பூசையில் கலந்துகொண்ட அடியார்கள் அனைவரும் பன்னூறு உருத்திரர்களெனப் போற்றப்படுவதாகவே அவ்வுபசாரங்கள் பொருள்படும். இத்தினங்களில் அந்தணர்க் கும் மகேசுர பூசை தனியாக நடைபெறும்.

நால்வர் குருபூசைகளில் சிறப்பம்சமாக குருபூசைக்குரிய நாயனாரைத் திருவீதி எழுந்தருளச் செய்வர். சமய குரவரின் திருவுருவம் வீதியில் வரும்போது, வீதிக்கு வீதி வெவ்வேறு வகையில் அடியார்கள் தோத்தரிப்பர். அந்தணர் வேதம் ஓதுதல் ஒரு வீதியிலும், வீர சைவர் சங்கு வாத்தி யம் இசைத்தல் மறுவீதியிலும், சொரிபூச் சொரிதல் அடுத்த வீதியிலும், பக்கவாத்தி யங்களுடன் பண்ணிசைத்தல் அதற்கு அடுத்த வீதியிலுமாக நின்று பக்தி சொட்டப் பாடித் திருவுலா எடுத்த காட்சி மிகவும் அற்புதமானது. அத்தகைய அற்புதத் திருவு லாவைத் தவத்திரு வடிவேல் சுவாமிகளே முன்னின்று செய்வித்தார்.

இளம் துறவியான வடிவேல் சுவாமி களின் பல்வகைப்பட்ட பணிகளைப் பலரும் பாராட்டியதோடு அவற்றைப் பார்த்துக் களிப்பதற்கும் பலர் வந்து கூடுவர். விழா விலே சுவாமிகளைப் பார்த்து மனம் பூரித்ததோடு நில்லாமல், அவரைத் தனி யாகச் சந்தித்து உரையாடவும் விரும்பினர். அதனால் அவர் இருந்த சிறு கொட்டிலைத் தேடி அடியார் கூட்டம் வரத் தொடங்கி யது. அவர்களுள் கந்தமடத்து மகாதேவ சுவாமி, நயினாதீவு முத்துச்சாமி, கலட்டி உருத்திரகோடி ஐயர் குடும்பத்தினர், இமாலய ஜோதி சிவானந்தரின் சீடர் அப்புக் குருக்கள், அமெரிக்கன் சுவாமி எனப் பெயரிய சுப்பிரமுனிய சுவாமி, சிருங் கோமலை அத்வைதானந்த சரஸ்வதி, அளவெட்டியைச் சேர்ந்த கொடைவள்ளல் நாகலிங்கம், அவரது ஒன்றுவிட்ட தம்பி தாமோதரம்பிள்ளை ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

சித்தர்கள், ஞானிகள், மெய்யடி யார்கள் அனைவரதும் அன்புக்கும் ஆசிக் கும் இலக்கான வடிவேல் சுவாமிகள் இளம் துறவியாய் இருந்த காலத்திலே மஞ்சத்தடி யிற் செய்து காட்டிய புராண படனம், நால்வர் குருபூசைகள், கூட்டு வழிபாடு, பண்ணிசைப் பயிற்சி என்பன மீண்டும் ஒருமுறை அதே பாணியில் நடைபெறுமா என்று முதிர்ந்த நிலையிலிருந்து நான் நினைத்துப் பார்க்கிறேன். கடந்து போன காலங்கள் மீண்டும் வராதோ! ✶

# சித்தர்கள் கோட்டத்தில் வடிவேல் சுவாமிகள்

திரு. செல்லப்பா நடராசா
கோண்டாவில்.

எனது தந்தையார், அமரர் இளைய தம்பி செல்லப்பா, இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் காரைக்கால் சிவன் கோவிற் திருப்பணிகளில் முன்னின்றுழைத்தவர். தந்தையார் இத் திருப்பணி வேலைகளில் ஈடுபடக் காரணமாயிருந்தவர் கொக்குவிலில் புகழ்பூத்த ஆயுள்வேத வைத்தியராக விளங்கிய திரு. கோ. க. நடராசபிள்ளை அவர்கள். நடராசபிள்ளையும், செல்லப்பரும் ஒருவர் மேல் ஒருவர் அளவிலா அன்புடையவர்கள். நான் பத்துவயதுக்குட்பட்ட சிறுவனாக இருந்த காலத்தில் எனது தந்தையார், நடராசபிள்ளையின் இல்லத்துக்கு என்னை அழைத்துச் செல்வதுண்டு. நாங்கள் அங்கு அமுது கொள்ளாமல் வீடு திரும்பமுடியாது. அன்னாரது அன்பும் பண்பும் அத்தகையது. பிற்காலத்தில் எனது தந்தையாரைப் போலவே நானும் நடராசபிள்ளையுடைய அன்புக்குரியவர்களில் ஒருவரானேன்.

## அற்புதம்

திரு. நடராசபிள்ளை அவர்கள் ஏதோ ஒருவித உபாதையால் மிக நீண்டகாலம் துன்பப்பட்டதாகவும் காரைக்கால் வயிரவரின் அற்புதத்தால் அவரின் அவ்வுபாதை நீங்கப்பெற்றதாகவும், எனது தந்தையார் கூற நான் கேட்டதுண்டு.

## தெய்வீக அருள்

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் 1935-40 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் என நினைக்கிறேன். மாடுகள் மேய்த்துக் கொண்டிருக்கும் சிறுவன் ஒருவனைக் காரைக்காலில் குடிகொண்டுள்ள இறை அருள் நடராசபிள்ளைக்குக் கனவில் காட்சியாக்கியதுடன் அடுத்துச் செய்ய வேண்டிய சில பணிகளைப் பற்றி தெய்வீகமாக உணர்த்தியது. அக் கனவின் மெய்ப்பொருளை உணர்ந்துகொண்ட நடராசபிள்ளை அந்தக் கணத்திலிருந்தே செயற்படத் தொடங்கினார்.

இந்தக் காலத்தில்தான் எனது தந்தையார் நடராசபிள்ளையுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். நடராசபிள்ளை தனது கனவிற் காண்பிக்கப்பட்ட அங்க அடையாளங்கள், முகபாவங்களை விளக்கி அச்சிறுவனை இணுவிலில் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு என் தந்தையாரிடமும் அவர்தம் சகாக்களிடமும் கூறியதை யான் அறிவேன். அவரது வாக்கை நிறைவேற்றுவான் வேண்டித் தந்தையார் இணுவிலில் அச் சிறுவனைத் தேடியபோது இக்கிரிப்பற்றைகள் நிறைந்த பனம் கூடல் ஒன்றில் அவர் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கக் கண்டு பிடித்தார். எனது தந்தையாரும் நடராசபிள்ளையின் மற்றைய சீடர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அச்சிறுவனை அண்மித்து தந்தையார் கதைக்க முற்பட்ட போது அவர் மிகவும் பயந்து அழும் நிலையில் நின்றதாகவும் அத்தருணம் அவரது பீதியைப் போக்குவான் வேண்டித் தந்தையார் பலவித இன்மொழிகளைப் பேசி அவர்தம்

பீதியைப் போக்கியதாகவும் அதன்பின்பே அச்சிறுவன் எனது தந்தையாருடன் நடராசபிள்ளை வீட்டிற்குச் சென்றதாகவும் தந்தையார் கூற நான் கேட்டிருக்கிறேன். தந்தையாரால் அழைத்துச் செல்லப்பட்ட சிறுவனைக் கண்டதும் நடராசபிள்ளை அவர்கள் தமக்குத் தெய்வீக அருளால் கனவில் காண்பிக்கப்பட்ட சிறுவன் வேறு யாருமல்ல, இவனே என்று பரவசம் அடைந்தார்.

எனது தந்தையாரும் பேரனாரும் இணுவிலைச் சேர்ந்தவர்களே. இதன் காரணமாக நடராசாபிள்ளையின் கனவில் தோற்றமளித்த சிறுவனே காரைக்கால் சிவன்கோயிலின் வாரிசு என்பதை உணர்ந்து கொண்ட எனது தந்தையார் மிக இலகுவாக நடராசபிள்ளையின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்துவிட்டார்.

### காரைக்கால்

காரைக்கால் என்றதும் பலருக்குப் பல பொருள் பொதிந்தவிடயங்கள் ஞாபகத்துக்கு வரும். முதலில் பழமுதிர்சோலையை ஞாபகப்படுத்தும் சூழலைத்தான் பலர் நினைப்பர். அடுத்து நினைவில் வருவது சிவன் கோவிலின் பிரசித்தி பெற்ற வயிரவர் கோயிலுமாகும். காரைக்காலில் பிரசித்தி பெற்று விளங்கிய ஆயுள்வேத வைத்திய நிலையத்தையும், வைத்தியபூபதி அம்பலவாண சுவாமிகளையும் பல நூற்றுக் கணக்கானோர் நினைவு கூருவர். மேலும் எல்லோரது மனதிலும் தோற்றமளிப்பது சிவன் கோயிலின் கிழக் கெல்லையில் அமைந்துள்ள அவன் நடனமாடும் உருத்திர பூமி.

### யோக சுவாமிகள்

நடராசபிள்ளை அவர்களிடம் சிறுவனாகச் சென்றடைந்த அம்பலவாணர், ஆயுள்வேத வைத்தியத்தையும் மணிமந்திர சிகிச்சை முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். இவரைச் சிறுவயதில் ''மணியப் பெடியன்'' என்றே எனது தந்தையை ஒத்தோர் அழைத்தனர். நடராசபிள்ளையின் இல்லத்துக்குச் சென்றுவரும் கால கட்டத்தில் காரைக்காலுக்கும் தந்தையார் என்னைக் கூட்டிச் செல்வது வழக்கம். 1940 ஆம் ஆண்டளவில் இது நடைபெற்றதாகக் கணிப்பு. மணியப் பெடியனை நடராசபிள்ளையின் அறிவுறுத்தல்களுக் கிணங்க எனது தந்தையாருடன் இணுவையூர் சித்தர் செல்லர் போன்றோரும் சேர்ந்து – அவர் பிற்காலத்தில் அம்பலவாண சுவாமிகளாக ஆளாகும் வரை – அவருக்குப் பக்கபலமாக இருந்து கோவிற் பணிகள் அனைத்தும் செவ்வனே நடைபெற உதவினார்கள். காலம் செல்லச் செல்லத் திருப்பணி வேலைகளும், பாரிய முன்னேற்றங்களைக் கண்டன. நடராசபிள்ளை, இளையதம்பி செல்லப்பா, சித்தர் செல்லர் ஆகியோருக்கு யோக சுவாமிகளுடனும் நயினாதீவுச் சுவாமிகளுடனும் தொடர்பிருந்தது. காரைக்கால் பிரசித்தியடைய இவர்கள் அனைவரும் மூலகாரணமா யிருந்தனர். இங்குள்ள சூழல் யோக சுவாமிகளைக் கவர்ந்திருந்ததாலேயே அவர் அங்குவந்து சென்றதாகக் கூறுவர்.

### குழை சாதம்.

காரைக்கால் சிவன்கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை வேளைகளில் நடைபெறும் பூசை வழிபாடுகள், அன்று பிரசித்தமானவை. பலநூற்றுக்கணக்கில் மக்கள் கூடுவதுண்டு. வயிரவக் கடவுளுக்குப் பிடித்தமான முரசு முழங்கும். பலர் கலைவந்து ஆடுவர். எல்லாவற்றிக்கும் நடுநாயகமாக அம்பலவாண சுவாமிகள் செயற்படுவார். இவையெல்லாம் சிறுவனாக இருந்த என்னை மிகவும் கவர்ந்தன. பொய்க்கால் குதிரை, கரக ஆட்டங்களுக்கும் காரைக்காலில் குறைவில்லை.

இக்காலத்தில் புதுமை ஒன்றைப் புகுத்திய பெருமை சித்தர் செல்லருக் குண்டு. 1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் நாட்டில் உணவுப் பஞ்சம் நிலவியது. அந்நாட்களில் சித்தர் செல்லரின் முயற்சியால் வயிரவர்

சுவாமிக்கு நிவேதிக்கப்படும் குழைசாதம் அடியார்களுக்கு விநியோகிக்கப்படும்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்,
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற வள்ளுவன் குறளுக்குச் சித்தர் செல்லர் காரைக்காலில் இலக்கணம் வகுத்தார்.

## வடிவேல் சுவாமிகள்.

நயினாதீவுச் சுவாமிகள் போன்ற சித்தர்களின் நடமாட்டம் காரைக்காலில் அதிகரித்தது. உடுக்குகள், மத்தளங்கள் முழங்க பஜனைக் கோஷ்டிகள் காரைக்காலைப் பரிமளிக்கச் செய்தன, இக்காலப் பகுதியிலேயே வடிவேல் சுவாமிகளின் தரிசனம் எனக்கு இங்கே கிடைத்தது. இவரது கதாப் பிரசங்கங்கள் காரைக்காலில் அடிக்கடி நடைபெறுவது வழக்கம். அப்பொழுது அவரது தோற்றப் பொலிவும், தேவார திருவாசகங்களும், இசையும் என்னைப் பெரிதும் பரவசப்படுத்தின.

## சுவாமிகள் சமைத்த கூழ்

காரைக்காலை வளம்படுத்திய அருளாளர் கூட்டத்தில் வடிவேல் சுவாமிகளுக்கு முக்கிய இடம் உண்டு. இணுவை அப்பர் எனப் போற்றப்பட்ட மாபெரும் சித்தர்–மகாஞானி – பெரிய சன்னாசியரால் (1860-1917) தோற்றுவிக்கப்பட்ட பழமுதிர் சோலையில் தாபிக்கப்பட்டவையே காரைக்கால் சிவன்கோவிலும், வயிரவர் கோவிலும் ஆகும்.

பிரபல ஆயுள்வேத வாத வைத்திய நிபுணரான இணுவையூர் வைத்திய பூபதி சு. இராமலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டதும் இணுவையூர் தந்த நல்லாசிரியர் திரு. கா. செ. நடராசா அவர்களால் 1977 ஆம் ஆண்டு ஆக்கப் பெற்றதுமான ''இணுவை அப்பர்'' என்னும் நூல் பின் வருமாறு தெரிவிக்கின்றது:

''பெரிய சன்னியாசியார் சமாதி நிலையடைந்த பின் காரைக்கால் கோயில் அதன்பின் வந்தோரால் நடத்த முடியாது போகவே, பூசை மட்டும் சிறுகாலம் நடைபெற்றது. பின் எதுவும் நடைபெறாது தடைப்பட்டதனால் காடு மண்டியது. காரைக்கால் சிவன்கோயில், சிதைவடைந்திருந்த காலத்தில் அருள் முனிவர் யோக சுவாமிகளும், நல்லருளாளர் நயினாதீவுச் சுவாமிகளும், கொக்குவில் வைத்தியர் ஞானபண்டிதர் நடராசனாரும் இங்கு வந்து தங்கிச் சென்றவர்களுள் முக்கியமானவர்கள், இவர்களின் ஆத்மீக சிந்தனையினால் காரைக்கால் மீண்டும் உயர்நிலை அடைந்தது. இவையாவற்றுக்கும் வழிவகுத்தவர் இணுவை ஞானக் குழந்தை வடிவேற் சுவாமிகளாவார். 1937 ஆம் ஆண்டளவில் சித்திரை நிறை நிலாத் தினத்தன்று காரைக்கால் கோயிலில் கூழ் உணவு சமைக்கப்பட்டது. இதனைச் சித்தர் நயினாதீவுச் சுவாமிகளும் தவத்திரு வடிவேற்சுவாமிகளும் செயற்படுத்தினர். ஞானபண்டிதர் நடராசனார் இக் கோயிலின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த செயல்கள் பலவுண்டு. அவரின் தொடர்பினாலே இணுவையூர் சித்தர் செல்லர், கோண்டாவில் இ. செல்லப்பா ஆகியோர் காரைக்காலின் ஆக்கத்துக்கு அரும் பணி பல செய்தனர், அவர் வழிவந்தோர் இன்றும் அதனைச் செய்துவருகின்றனர்.''

## பொற் காலம்

காரைக்காலில் வடிவேல் சுவாமிகள் கதாப் பிரசங்கங்கள், பஜனைகள் கூட்டு வழிபாடுகள் செய்து மக்களைப் பரவசப் படுத்திய காலம் காரைக்காலின் பொற்காலம் எனலாம். பூட்டப்பட்டிருந்த கோவிற் பூசைகளை திரு. வ. அல்லமாப்பிரபு என்ற சைவக் குருக்கள் ஆரம்பத்தில் நடாத்தி வந்தார். இவர் ஒரு வேதாந்த விற்பன்னர்; வடிவேல் சுவாமிகளுடன் ஒத்த கருத்துடையவர்; மிக எளிமையான கம்பீரத் தோற்றம் உடையவர்; ஆசார சீலர். வடிவேல் சுவாமிகளுடன் சேர்ந்து இவரும் காரைக்காலில் தொண்டாற்ற வந்ததில் வியப்பில்லை. கரைக்காலில் அல்லமாப்பிரபுவும் அவரது

பெறாமகன் சோ. பரமசாமி அவர்களும் பூசை வழிபாடுகளைச் செய்த காலம் முதல் தான் நானும் காரைக்காலுக்குப் போகத் தலைப்பட்டேன். நயினாதீவுச் சுவாமிகள், நடராசபிள்ளை, வடிவேல் சுவாமிகள் முதலான பெரியோர்கள் இவர்களது பூசையை மிகவும் நயந்தனர். திரு. சோ. பரமசாமி ஐயர் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு மேற்குறித்த பெரியோர்களின் நல்லாசியே காரணம் எனலாம். காரைக்கால் பூசை வழிபாடுபக்தி பூர்வமாக முன்னேறிக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் அங்கு நடைபெறும் அன்னதானங்கள் பிரசித்தியானவை. இன்று வருடாந்த உற்சவ காலங்களில் மாத்திரம் நடைபெறும் இந்தப் பணி, வடிவேல் சுவாமிகள், சித்தர் செல்லர், இ. செல்லப்பர், ஞானபண்டிதர் நடராசப்பிள்ளை ஆகியோர் காலத்தில் ஒரேவாரத்தில் பல தினங்கள் கூட அடுத்தடுத்து நடைபெறுவதுமுண்டு. ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கோர் அமுதசுரபியாக அன்று காரைக்கால் விளங்கியது. இந்த அமுத ஊற்றுக்கு வடிவேல் சுவாமிகளும் நயினாதீவுச் சுவாமிகளும் சமைத்த கூழ் உணவுதான் காரணமோ அல்லது ஞானபண்டிதர் நடராசப்பிள்ளை தம்மிடம் வரும் தீராத நோயாளர்களின் கர்ம வினைதீர 'காரைக்காலில் அவித்துப் போடு; எல்லாம் குணமாகும்' என்று இட்ட கட்டளைகள் தான் காரணமோ எதுவென்று யான் அறியேன். எல்லாச் சித்தர்களும் சேர்ந்து செய்த சித்து விளையாட்டின் மகிமையே இதுவன்றி, வேறெதுவுமல்ல.

## சமாதி நிலைகள்

நடராசாபிள்ளை அவர்களின் காரைக்கால் சீடர்களில் ஒருவரான இளையதம்பி செல்லப்பா 1963 ஆம் ஆண்டு பிற்பகுதியில் அமரரானார். யோக சுவாமிகள் 1964 இல் சமாதிநிலை எய்தினார். இவர்களுடன் இணைந்து செயற்பட்ட இணுவையூர் சித்தர் செல்லர் 1967 ஆம் ஆண்டு தையில் சிவபதம் அடைந்தார். 1893 ஆம் ஆண்டு தோற்றியவரான நடராசபிள்ளை 1967 ஆம் ஆண்டு புரட்டாதியில் சமாதி ஆனார். இவரின் சமாதியைக் காரைக்கால் சிவன் கோயிலின் தெற்கெல்லையில் காணலாம். காரைக்கால் ஆதீன கர்த்தரும் விஷகடி நிபுணரும் காரைக்கால் வைத்தியத்தின் தந்தையுமான அ.க. அம்பலவாண சுவாமிகள் 1979 ஆம் ஆண்டு சமாதி நிலையில் அடங்கினார். கடந்த பிரமோதூத ஆண்டு (26-06-90) ஆனி ஆயிலிய நாள் அன்று வடிவேல் சுவாமிகள் சமாதியானார்.

அம்பலவாண சுவாமிகளது காலத்தில் (1920 - 1979) பல நூற்றுக்கணக்கான தீராத – நாட்பட்ட - பிணியாளர்கள், காரைக்காலிலே குடில்களில் பல தினங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தேகினர். அந்தப் புகழ்பூத்த காரைக்கால் வைத்தியத்துக்குப் பரம்பரை இன்று செயற்படாதுள்ளது. இருப்பினும், காரைக்கால் சிவாலயம் தொடர்ந்து பெருமையுடன் இயங்கி வருகின்றது.

## சித்தர்களின் கோட்டம்

ஞான பண்டிதர் நடராசனார், நயினாதீவுச் சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் உலாவிய அந்தக் காலத்தில், யார் யார், எவர் எவர் என்று சொல்லமுடியாத அளவுக்கு நூற்றுக்கணக்கான சித்தர்கள், ஞானிகள் கூடுகின்ற பாசறையாகவும், கோட்டமாகவும், குகையாகவும், சரணாலயமாகவும் காரைக்கால் விளங்கியது. வரலாற்றில் ஏற்றம் மிகுந்த அக்காலத்தில் காரைக்காலில் ஓங்கி உயர்ந்த ஆல், அரசு, இலுப்பை, வேம்பு, ஆதியாம் மரநிழல்களின் கீழ் பல சித்தர்களும் வேதாந்திகளும் கூட்டம் கூட்டமாகக் கூடி, அமர்ந்திருந்து திருமுறைகள் ஓதுவதும் கந்த புராண, மகா பாரத, இராமாயண சர்ச்சைகள் செய்வதும் தெய்வீகக் காட்சி. இவை கேட்போருக்கும் சிந்தனைக்கும் பெரிய விருந்தாகும். காரைக்கால் வளர்ச்சியை நன்கு அறிந்தவர்கள் வடிவேல் சுவாமிகளையும் நன்கறிந்தவர்களாவர். காரைக்கால் உள்ளவரை அதன் வரலாற்றில் தவத்திரு வடிவேல் சுவாமிகளின் நாமமும் நிலை பெற்றிருக்கும்.

★

# சமாதி நிலையும் நினைவாலயமும்

பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள்,
உரும்பிராய்.

சென்ற ஆண்டு (1990) சமாதி எய்திய அருள்திரு 'வடிவேலுச்சாமி' அவர்கள் இறைவிலைச் சேர்ந்தவர். இவர் தான் தோன்றிய ஊரிலிருந்து அளப்பருந் தொண்டுகள் ஆற்றிய பின்னர், தமது சேவைகளை விரிவாக்கும் நோக்குடன் கிளிநொச்சிக்குச் சென்றார். ஆங்கு ஏழாம் வாய்க்கால் எனச் சொல்லப்படும் ஜெயந்தி நகரிலே தமது குருவின் பெயரில் '' மகாதேவ ஆச்சிரமம் '' எனப் பெயரிய ஆச்சிரமம் ஒன்றமைத்து, தாம் பரிபூரணம் எய்தும் வரை அங்குள்ள குடியேற்ற வாசிகளுக்குச் சமய உணர்வை ஊட்டினார்.

இப்பெரியார் இளமையிலே கல்வி, கேள்விகளில் மிகுந்த நாட்டமும் ஆத்மீகத் தாகமும் கொண்டிருந்தமையால் கந்த மடத்து வேதாந்த மடத்திலே குருதேவராய்த் திகழ்ந்த ஸ்ரீ மகாதேவ சுவாமிகளிடம் சமய சாத்திரங்களையும், தருக்க நூல்களையும் பயின்றார். இவருடன் கூடப் பயின்றவருள் ஒருவரே அன்னங்கைச் சாமி அல்லது குடைச் சுவாமி எனப்படும் கந்தையாச் சுவாமி யாவார். அவர் சமாதியாகிச் சில் ஆண்டுகள் கழிந்தே வடிவேல் சுவாமிகள் சமாதியானார். கந்தையாச் சுவாமிகளது சமாதி பலாலி வீதியிலுள்ள கோண்டாவிற் சந்தியிலிருக்கும் நர்த்தன விநாயகர் ஆலயத்தின் வட பாங்கரில் அமைந்துள்ளது. அவரது சமாதியைத் திரு. வடிவேல் சுவாமிகளே முன்னின்று அமைத்து, சிவலிங்கத் தாபனமும் பின்னர் செய்யப்பட்டுள்ளது.

சமாதி என்பது சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகும் நிலையைக் குறிக்கும். 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்' என்றமையால் —

''சார்பு தானே தியானமுமாஞ்—சார்பு
கெட ஒழுகின் நல்ல சமாதியுமாங் கேதப்
பட வருவதில்லை வினைப்பற்று.''

எனத் திருக்களிற்றுப்படியார் பேசுகிறது. இதை அனுசரித்து வள்ளுவரும்:

'' சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்
மற்றழித்து
சார்தராச் சார்தரும் நோய் ''

என்கிறார்.

இயமம் முதல் எட்டு அங்கங்களைக் கொண்ட யோக பாதத்தில் எட்டாவது அங்கமே சமாதி. அவ்வாறான பாதத்தை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நான்கு அங்கங்களையுடைய ஞான நிலையிலே நாலாவ தாகிய நிட்டைகூடலும் சமாதியே.

சமாதி நிலையடையப் பின்வரும் படி முறைகளைப் பயில வேண்டும்:

1) சாத்வீக, இராசத, தாமத குணங்களாகிய முக்குணங்களை அடக்கல்;

2) மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்புலன்களையும் அடக்கல்;

3) மூலவாயுவாகிய பிராணனை எழுப்பல்

4) இடைநாடி, பிங்கலை நாடி யெனும் இரு நாடிகளையும் நன்றாக அடைத்தல்;

5) அவ்விரு நாடிகளி னிடைப்பட்ட சுழு முனா நாடி வழியைத் திறத்தல்;

6) அச்சுழுமுனா நாடி வழியே பிராணனைச் செலுத்தல்;

7) தியான ஸ்தானமாகிய லலாட ஸ்தானத்து நடைபெறும் அம்பலக் கூத்தனின் திருவடிச் சிலம்பொலியுடன் கலத்தல்;

8) ஆங்கு (லலாட ஸ்தானத்தில்) ஸ்ரீ பஞ்சாட்சரமாகிய ஐந்தெழுத்தும் ஒரெழுத்தாகிச் சிகாரமாவதைக் காணல்;

9) பின் துவாதசாந்த ஸ்தலமாகிய திருவருள் நிரம்பிய சிதாகாச வெளியுட் புகுந்து, ஆங்கே ஆன்மாவை அழுத்தி நிற்றல்;

ஆகிய படிமுறைகளை நன்கு பயின்றோர் சமாதி நிலையை இலகுவிற் கைவரப் பெறுவர்.

இவற்றைக் குறித்துத் திருவாதவூரடிகளுக்குச் ஸ்ரீ பரமாசாரியர் உபதேசித்ததாகக் கூறுமிடத்து—

''முக்குணம் புலனைந்து டனடக்கி
மூலவாயுவை எழுப்பி, இரு வழியைச்
சிக்கெனும்படி அடைத் தொரு வழியைத்
திறந்து,
தாண்டவச் சிலம்பொலியுடன் போய்த்
தக்கவைந் தெழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டருடரும் பெருவெளிக்கே
புக்கழுந்தின ரெமதுருப் பெறுவார்
புவியில் வேட்டுவ னெடுத்த மென்புழுப்
போல் ''

எனக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் கூறுகிறார்.

இதனை அருணகிரிநாதர் —

'' காட்டிற் குறத்தி பிரான் பதத்தே
கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுதல் மிக எளிதே; விழி நாசி
வைத்து
மூட்டிக் கபால மூலாதார மேலண்ட
மூச்சை யுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல் சாதிக்
கும் யோகிகளே ''

எனச் சமாதி நிலையைப் பற்றிக் கந்தலரங்காரதிற் குறிபபிட்டுள்ளார்.

'' உற்றாரும் பெற்றாரும் ஓவாது
ரையொழியப்
பெற்றாரும் அற்றார் பவம் ''

எனத் திருவருட் பயனிற் கூறியாங்கு, சமாதி நிலையடைந்தவரும், அதற்குக் காரணமாகிய படிமுறையில் நின்றவரும், மௌன நிலையடைந்தவரும் பிறவியற்றவராவர்.

'' உடம்பெனும் மனையகத்து உள்ளமே
தகளியாக
மடம்படு முணர் நெய்யட்டி, யுயிரெனுந்
திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள
விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி
காணலாமே ''

என்ற அப்பர் தேவாரம், சமாதியாய் இருந்து சிவனடி காணலைப் பற்றிக்கூறுகிறது.

சமாதிநிலை கைவரப் பெற்றவரின் தூய உடம்பைப் பூமியிற் புதைப்பதும், அதன்மேல் நினைவுக் குறியாகக் கட்டடம் அமைப்பதும் சமாதியென்றே சொல்லப்படுகிறது.

மனித உடம்பை மண்ணுட் புதைப்பதால் அவ்வுடம்பிலுள்ள நீர், நிலம், தீ, வளி, வான் ஆகிய ஐம்மூலகங்களும் மண்ணிலுள்ள ஐம்மூலகங்களுடனும் கலக்கின்றன. சிவரூபமான அவ்வுடலைச் சிவனென்றே மதிக்க வேண்டும்.

''அந்தமில் ஞானியருளை யடைந் தக்கால்
அந்தவு டல்தடன் குகைசெய் திருந்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப வருள்பெறு வாரே''

எனத் திருமூலர் திருமந்திரமும் சமாதி நிலை யடைந்தவரைச் சமாதி செய்க என்கின்றது. அதனால் அவ்வுடலி லிருந்த ஆன்ம சக்தி ஆங்கமைந்து அருள் பாலிக்கிற தென்கிறார்.

சமய நூல்களில் ''சமாதி வைத்தல்'' எனக் குறிப்பிடுவதே பழந் தமிழ் இலக்கியத்தில் ''நடுகல் நாட்டல்'' என வழங்கி வந்துள்ளது. சங்க காலத்தில் போர்முகத்து உயிர் விடும் பாவீரர்க்கு 'நடுக்கல்' நாட்டி, அதில் அவர்களது பீடும் பெருமையும் பொறித்தார்கள்.

''என் ஐ முன் நில்லன்மின் தெவ்விர் பலரென் ஐ
முன்னின்று கல்நின் றவர்''

எனத் திருக்குறள் கூறும்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்துள்ளும்.

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்''

என நடுகல் நடுதலைப் பற்றிப் பேசப் படுகின்றது. அந் நடுகல் எவ்வாறு நாட்டப் படுகின்றது என்பதை

''அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனிநட் டனரே கல்லும்''

என்கிறது புறநானூறு.

''ஆடவர் பீடும் பெயரும் எழுதி அதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்''

என அகநானூற்றுச் செய்யுளொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும்,

''அவன் பெயர் கன்மிசைப் பொறித்துக்
கவின் பெறக்கல் நாட்டின்று''

எனப் புறப் பொருள் வெண்பா மாலையிற் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புகழ்ந்தேத்தும் நடுகல் நடும் வழக்கமே பிற்காலத்துச் சமாதியாயிற்று.

நீத்தாரின் உடலைப் பேணி நினைவுக் குறியாகக் கட்டடம் அமைக்கு முன், நிலத்திலே முக்கோண அமைப்பில் குழி வெட்டி, கீழே உப்புப் பரவி, அதன் மேல் சடலத்தைப் பத்மாசனத்தில் இருத்தி, அதனைச் சுற்றியும் உப்பு, நெல், விபூதி என்பவற்றால் குழியை நிரப்பி, தலைக்கு மேல் இருந்து கண்டம் வரையாவது தனி விபூதியாலேயே மூடி, சட்டியோ குண்டானோ கவிழ்த்து, குழியை முற்றாக மூடி விடல் முறையாகும். கி. மு. 400 ஆண்டுகளுக்கு முன் எகிப்திய அரசர்களைத் தைலத்தில் மூழ்குவித்துப் 'பிரமிட்ஸ்' கட்டினார்கள் என வரலாறு பகருகிறது.

சிவப்பேறெய்திய ஞானிகள் பற்றிக் கூறுமிடத்து,

''தேஷாம் சமாதி சிவைங்ய நிஷ்டானாம் தகனாதி கர்ம!
நிஷித்தத்தியாத் சமாதி கிரியைவ கர்த்துயுக்தா!!
சர்வ கர்மா நிவிர்த்தஸ்ய தியான யோரதஸ்யச!
நதஸ்ய தகனம் கார்யம் நச பிண்டோதக் கிரியா!

என வேதாந்தசார சிந்தாமணி - உத்தர காண்டம்-20ஆம் பிரகரணம் கூறும்.

எனவே சமாதி நிலையடைந்தவரைத் தகனஞ் செய்யாது, பூகர்ப்பத்துள் அடக்கஞ் செய்யவேண்டும். அவர்களுக்குப் பிண்டோதக் கிரியை இல்லை. நினைவாலயத்துள் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிக்கலாம்.

பூர்வத்தில் எல்லோரையும் புதைத்ததாக மொஹஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாய்வுகள் நிரூபிக்கின்றன. தாழியிற் புதைத்தல் என்றொரு வழக்குமிருந்தது. பட்டினத்துப் பிள்ளையாரின் வேண்டுகோள்படி விளையாட்டுப் பிள்ளைகள் திருவொற்றியூர்க் கடற்கரையில் அவரைத் தாழியால் மூடிவிட்ட பின்னர், அவர் சிவலிங்கருபமானார் என்றொரு கதையுண்டு. சீதக்காதி என்ற முஸ்லீம் கொடை வள்ளலைப் புதைத்த சமாதியினின்றும் கையொன்று வெளிவந்து, அவரைப் பாடிய பொய்யாமொழிப் புலவருக்குக் கையிலணிந்த மோதிரங் கொடுத்ததென்பர்.

ஞானிகள், வாழ்ந்த காலத்தும் நினைவாலயம் ஆகிய பின்னரும் அவர்களை நினைந்து குறையிரந்து கேட்டோர்க்கு அருள்சொரிந்த செய்திகள் ஆங்காங்கு பேசப்படுவதை நாம் காதாரக் கேட்கலாம்.

எமது ஈழத்திருநாட்டிலே கடையிற் சுவாமி, இணுவில் பெரிய சந்நாசியார், நயினாதீவுச் சுவாமி, அன்னங்கைச் சுவாமி, சேர். பொன். இராமநாதன் ஆகியோருக்குக் கட்டிய சமாதிக் கோயில்கள் இங்குமங்கும் காணப்படுகின்றன. கீரிமலையில் குழந்தைவேற் சுவாமி சமாதி, சங்கர சுப்பையர் சமாதி, சாந்தம்மா சமாதிகளுமுள்ளன. அவ்வாறு இலிங்காங்க சம்பன்னரான வீரசைவர்களுக்கும் சமாதி செய்வதுண்டு.

மனித வடிவில் தோன்றிப் பூமியில் அருளாட்சி செய்த ஞானிகளின் புனித உடம்பை அவர்களின் விருப்பப்படி தகனம் செய்து, சாம்பரை வீண்போக விடாது பேழையில் அடைத்து வைத்துச் சமாதி கட்டும் வழக்கமும் உண்டு. கொழும்புத்துறை யோக சுவாமி, நரியங்குண்டு பத்திரகாளி அம்மையார், வேதாந்த மடத்து இராமலிங்க சுவாமி போன்றோரின் சமாதிகள் அந்த வகையினைச் சார்ந்தவை ஆகும்.

எப்படியெனினும், முதலிற் கூறியாங்கு சமாதிநிலை அடைந்தவருக்கு நினைவாலயமாக அமைக்கப்படும் சமாதியே சிறந்தது. கொழும்பிலே முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் ஆனைக்குட்டிச் சுவாமி சமாதியும், நாவலப்பிட்டி 'குயின்ஸ் பேரி, தோட்டத்தில் நவநாத சித்தர் சமாதியும்' கந்த மடத்திலுள்ள வேதாந்த மடத்துக் குருமூர்த்திகளான கனகரத்தினம் சுவாமிகள் சமாதி, மகாதேவ சுவாமிகள் சமாதி, தல்லையாதீன முதல்வர் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமாதி ஆகியனவும் நினைவுகூரத்தக்கன.

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் திருவுடல் அவர் அமைத்த கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திலே மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு அமையச் சமாதி வைக்கப்பெற்றுள்ளது. தற்பொழுது நிலமட்டத்திலுள்ள அச்சமாதியை மேலே எழுப்பி, நிறைவுற்ற நினைவாலயமாக்கும் நன்னாளை ஆதிபரம் பொருள் விரைவிற் கூட்டிவைப்பாராக. ★

**மோட்சகாலத்தில் யாவும் பரம்பொருளில் ஒன்றாகின்றன**

*மோட்ச காலத்தில் பதினைந்து கலைகளும் தத்தம் மூலஸ்தானத்துக்குச் சென்று விடுகின்றன. இந்திரியங்கள் அனைத்தும் தத்தம் அதிஷ்டான தேவதைகளிடம் சென்று விடுகின்றன. எல்லாக் கருமங்களும் ஆத்மாவும் அழிவில்லாப் பரம்பொருளில் ஒன்று படுகின்றன.*

— **முண்டக உபநிஷத்து.**

# சைவ நீதி

பண்டிதர் திரு. மு. கந்தையா, B.A.
ஏழாலை

உலகில் ஹிம்சை இருத்தலாகாது; அஹிம்சையே நிலவ வேண்டியது என்ற கோஷத்துடன் இரண்டாயிரத் தைந்நூறு ஆண்டுகளாக இயங்கிவருகின்றது சமய மொன்று. அன்பொன்றே யன்றி வன்பென்பது எவ்வாற்றானும் இருத்தலாகா தென்றெழுந்து இரண்டாயிர மாண்டுகளாகத் தன்னைப் பரப்பிக் கொண்டிருக்கிறது மற்றொன்று. சகோதரத்துவ மன்றி, உலகிற் பேதம் நிலவலாகாதென்று சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளாக உலாவுகின்றது இன்னொன்று. இத்தகைய கோஷங்கள், கொள்கை இலைமைகளால் ஈர்ப்புடையன போல் உலகிற் கூடுதலான நாடுகள் இச் சமயங்களி னாட்சிக் குட்பட்டிருந்தும், ஹிம்சை நிகழாத நாடாக — வன்செயல் தலை தூக்காத நாடாக—பரஸ்பர விரோத மனப்பான்மை அற்ற நாடாக எந்த நாடும் இருந்ததைச் சரித்திரம் பிரதிபலிக்குமா றில்லை. கிறீஸ்த சகாப்த உதயத்துக்குச் சற்று முன்னாகப் புகழ்பெற்ற அசோகச் சக்கரவர்த்தியாற் பெருமளவிற் பரப்பப்பெற்ற அஹிம்சை உபதேசமுங்கூடத் தற்காலிக பூச்சு மருந்தளவுக்கே பயன்செய்து, அவருக்குப் பிற்காலம், பரத கண்டத்தைப் பெரும் அவலத்துக் குள்ளாக்கி யிருப்பதற்குச் சரித்திரம் சான்று. அதே அஹிம்சையை வழிமொழிந்த சமீப காலத்து மகான்கள் அதிவிரைவில் மறக்கப்பட்டொழியும் நிலையே உண்டு. இது ஏன்? எதனால் என்பதுபற்றிச் சிந்தியாமல் விடுதற்கிடமில்லையாகும்.

மக்கள் தத்தம் உணர்வெழுச்சிகளுக் கேற்பச் செயற்பட்டுச் செயற்பலன்களாகிய நன்மை, தீமைகளில் அழுந்தி அழுந்திப் பட்டுப் படித்துப் பிறவிக்குப் பிறவி தாவித் தாவிப் போய், மிக நீண்ட அடைவில் உண்மை யுணர்வு பெற்று, அதன்பின்பே அன்பு, அஹிம்சை, சகோதரத்துவ மனப் பான்மைகளுற்று ஈடேறுதற்கு நிலைக்களமாயுள்ளது இந்த உலகம்.

எல்லோர் உணர்வெழுச்சியும் என்றாயினும் ஒன்றாயிருப்பக் காண்பதற்கில்லை. அது அவரவர் ஆணவ, கன்ம, மாயா மலப் பிடிப்புகளின் சார்பில் எழும் காமக் குரோத லோப மோஹ மத மாற்சர்யங்களுக்குத் தக வேறுபடு மியல்பினதாம். அங்ஙனமாதலின் அவற்றுக் கநுகுணமான ஹிம்சை, வன்பு, சுயநலம், பகை என்பவற்றின் பிடியிலிருந்து ஒரேயடியாக விலகிவிட முடியாத நிலையில் மக்களுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

குறிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் மிக அற்பமான ஒரு தொகையினர் மட்டுமே தம் அகமுகத் திருத்தம் வாயிலாக அன்பு அஹிம்சை முதலிய அறப் பண்புகளில் நிலை பெறுபவராக, மற்றைய மிகப்பெரும் பகுதியினர் அவற்றுக் கெதிர்மாறான மறப்பண்புகளில் வலுத்திருப்பது உலக சரித்திரங் கண்ட நீண்ட கால அநுபவமாகின்றது. எனவே, மக்கள் சுய இயல்பை நேருக்கு நேர் எதிர்த்துச் செய்யும் உபதேசங்களும், வற்புறுத்தல் களும்பயன்செய்யாஎன்பதுடன்

இவை ஒரு வகையிற் பரமேஸ்வரனா லான படைப்பு நியதிக்குச் சவால்விடுவன வாய் அமையும் ;விபரீதம் விளைதலுந் தப்பா தாகும்.

ஜனனம் மரணம் போல, நன்மை தீமை, இன்பம் துன்பம், அறம் மறம், போர் சமாதானம், அன்பு வன்பு, ஹிம்சை, அஹிம்சை ஆகிய முரண்பாட்டியல்புகள் எல்லாம் மேற்கண்டவாறான மனித இயல்பு நோக்கில், இருந்தேயாக வேண்டியவை என்ற விளக்கம், அவற்றுள் ஒவ்வொன்றும் நிகழ்ந்தாக வேண்டியதற்கான சூழ்நிலை கள் படைப்பு நியதியோ டொன்றியிருக்கக் காணுதலாற் பெறப்படும். எனவே அவற் றில் ஏதொன்றாயினும் படைத்தவனாகிய இறைவனின் ஐந்தொழிலியக்க வளாகத் துக்கு அப்பாற்பட்டதெனக் கொள்ளுதற்கு இடமின்மையால், இவ்விரட்டைகளில் ஒன்றுதான் இருக்கலாம்; மற்றது இருக்க லாகா தென்பதற் கேதுமோரியல் பில்லை யாம். எனில், மனிதன் இவ்விரட்டைகளில் வேண்டாததை விலக்கி, வேண்டுவதைத் தழுவிநிற்றல் தெய்வ சம்மதமன்றாகுமோ எனின், அது ஆகாதென்பதல்ல; இறைவன் ஆணை வழிவரும் அவ்விரட்டைகளில், ஒன்றைமட்டும் அங்கீகரித்து மற்றதைப் பரி கரித்தல் மாத்திரத்தான், அது அமையா தென்பதே உண்மைநிலையாம். பின்னை இதற்குப் போம்புத்தி என்னெனில், அதுவரு மாறு காணப்படும்.

மேற்குறித்த ஐந்தொழி லாணையாகிய நியதி முற்றுமுழுதாக நம்மவரின் ஒட்டு மொத்தமான கன்ம நியதிக் கூட்டத்தை உள்ளடங்கக்கொண்டே அமைவதாம். ஆத லின், நாம் நல்லன என நினைப்பன போல, தீயன என நினைப்பனவும் இறைவனா லேயே தரப்படுவனவாயிருக்கையில், அவை நம் வலுவாலாவன எனக்கொள்ளுதல் சுத் தத் தவறாயொழியும். ஆகவே, இறைவ னால் எதுவொன்றும் ஒழிய வேண்டில் அது இறைவனால் மட்டுமே சாத்தியமா கும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

இனி, இறைவனும் தானாக நம்மைச் கொண்டு வேண்டத் தகாததொன்றைச் செய்விக்க ஏதோரு காரணமும் இருக்க முடியாத தாகையால், அதற்கு இன்றி யமையாக் காரணமான மனச்சார்பு நம்மிடத்தில் இருப்பதே இறைவன் அங்ங னஞ் செய்வித்தற்குரிய காரணம் என்பதும் பெறப்படும்.

இவ்விளக்கத்தின் அடிப்படையிற் காணும் போது வேண்டாதது நம்மை விட் டகலுதற்குச் சிறந்த மார்க்கம், அதற்கான நம் மனச்சார்பு நீங்குதல் என்பதும் அம் மனச்சார்பும் இறைவனது ஐந்தொழில் நியதியோ டைக்கியப் பட்டிருப்பதாதலால், அது நீங்குமாறும் சாமானிய உபதேசங்கள், வற்புறுத்தல்களால் மட்டும் அமையாது, இறைவன்பால் நமது மனஞ்சாரும் நிலை யைப் பொறுத்தே அமையும் என்பதும் புல னாகும்.

எனில், இறைவன் எங்கே? இறைவன் இருப்பை மறைப்பதே தம் முழுத்த பண் பாகக் கொண்டியலும் மல சக்திகளின் பிடி யிலிருக்கும் உயிருக்கு இறைவன் சார் பெங்கே என்பது மிகப் பாரதூரமான ஒரு சிக்கல் பிரச்சினையாகிறது. இப்பிரச்சினை விடுபடுவதற்குச் சாதகமாக நமது காலங் கண்ட பாரம்பரியங் காட்டும் வழிமுறை ஒன்றுண்டு. அது யாதெனில்—

தூராதி தூரத்தினனாகிய இறைவன் நமது அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையி லும் நம்மை அறியாமலே யுள்ளான். அவனை நேருக்கு நேர் அணுகும் வசதியும் வாய்ப்பும் நமக்கு இப்போதைக்கு இன் மையால், நமது வாழ்க்கைச் சூழ்நிலையை உரிய முறையில் உணர்ந்து உகந்த நன் முறையில் அனுசரிப்பதன் மூலம் அதாவது, நமது வாழ்க்கைச் சூழ்நிலையில் முக்கியத் துவம் பெறும் உடல், உயிர், உலகம் மூன் றும் இறைவன் நிலைக்களங்கள் என உணர்ந்து, அக்கருது நிலைக் கணியத்திற் கும் அவற்றின் கண்ணியத்திற்கும் விரோத

மேற்படா வகையில் நமது அன்றாட வாழ்க்கையை அமைத்து, அனுசரித்தல் மூலம் படிமுறைக் கிரமமாக, மென்மெல இறைவனை அணுகும் நெறியில் நிற்றலாகும். அதன் விவரங் கூறிற் பாரதமாய் விரியுமாகலின், பாணினி சூத்திரம் போல இரத்தினச் சுருக்கமாக, அதனைச் **'சைவாசரா வாழ்வாக அமைத்துக் கொள்ளுதல்'** எனுமளவிற் கண்டு கொண்டு, மேற்செல்வாம். சைவாசார வாழ்வென்றதுமே சகல வைதிக ஒழுக்கப் பிடிமானங்களுடனும் வாழ்தல் என்ற அதன் அதியுயர் மட்ட நிலையை மட்டுங் கருத்திற் கொண்டு குழறுபடி பண்ணுதல் தவறாகும்.

மக்கள் தாமே பொறுப்பேற்க வேண்டியுள்ள அவர்களின் கன்மாநுசார வேறுபாட்டுக்கு அமையச் சைவாசாரத்துக்குள்ளேயே படிநிலைகள் பல வுண்மையை ஏற்க வேண்டும். எனினும் எல்லா நிலைகளுக்கும் பொதுப் பண்பான ஒன்றுண்டு. ஏதோன்றையும் ஆன்மாவான தன் கன்மாநுசாரத் தகுதிக் கிணங்க, இறைவனே செய்விக்கின்றான். அதன் மூலம் தன்னை வாழ்விக்கின்றான் என்ற நன்றிக் கடப்பாட்டுணர்வும் அதற்கேற்கு மளவு விநயமான பயபக்தி யொழுக்கமுமே அப்பொதுப் பண்பாம். அது ஒன்று இருக்குமேல், ஆகத்திர இழி தொழில் அதாவது, கொலை புலை சார்ந்த தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலையிலுள்ளோரிடத்துஞ் சைவாசாரம் ஒரு நிலையில் உளதாதலும், அது சற்றேனும் இல்லையேல் அதியுயர் வைதிகாசார முடையாரிடத்தும் அது இல்லையாதலும் உற்றுணர்ந்து கொள்ளத் தகும்.

திருத்தொண்டர் புராணத்துச் செம்பொருளும் இதுவே; பகவத்கீதை வற்புறுத்த முயன்றதும் இதனையே. இது சாமானிய வாழ்க்கை நிலையாகிய தற்போதைக்கு மட்டுமன்று; எப்போதைக்குமே. சித்தாந்த பரிபாஷையிற் கூறில், அறியாநிலையாகிய மலபெத்த நிலையிலிருந்து, அறிநிலையாகிய சீவன் முத்திநிலை முடியவும் அதற்கப்பாலுங்கூட ஆன்மாவை வாழ்வித்துக் கொண்டிருக்குஞ் சைவாசாரம் இதுவாகும். ஆண்டானடிமைத்திறம் என விதந் தோதப்படுவதும் உற்றுணரின் இதுவே ஆகும். ஆண்டானடிமைத் திறம் சீவன் முத்தி நிலையிற் சொரூபித்துப் பிரகாசிப்பதன்றி, அந்நிலையில் மட்டும் அது உளதெனக் கோடல் துர் அதிஷ்டவசமானதாகும். அநாதி முறையான ஆண்டானடிமைத் திறம் என்னும் பிரசித்தமான வழக்குண்மையே அக்கருத்தின் திருத்தமின்மை காட்டும்.

இது உலகில் ஒரு நாட்டுக்கோ, ஒரு குலத்துக்கோ மட்டும் உள்ள ஒரு நீதியல்ல. அனைத்துலகுக்கும் அனைத்து மக்கட் குலத்துக்கும் உரிமையாயதொரு பொது நீதி. இந்நீதி, **'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'** என்ற கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் எண்ணக் கருவின் உருவும் திருவும் இதுவேயாம்.

இந்த மகத்தான சைவ நீதி பற்றிய பேருண்மை விளக்கம் மங்கு நிலையடைந்தமையே கச்சியப்ப சிவாசாரியர் அதனை 'விளங்குக' எனக் கூறவந்த காரணமாதலின், அவர் காலத்திலேயே இதற்கு மங்குதிசை ஆரம்பித்து விட்டமை கண்கூடு. தொடர்ந் தேர்ச்சியாக வந்த இம்மங்குதிசையின் செல்வாக்கினாலே சமூகத்தில் ஒரு பகுதியினர் பர மதத்தாரின் துர்ப்போதனையால் ஏமாந்து, மதமாற்றம் பெற வந்ததும், அதற்கு மாற்றீடு பண்ண வந்த பெரியார்கள் மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் சமூகத் தரத்தை உயர்த்துவதற்கு நேர்ந்த ஈடு செய்ய முடியாத பேரிழப்பாதல் உற்றுணர்ந்து உருகத் தகும். ★

# திருமுறைச் சிறப்பும் பண்ணிசைச் சுருக்கமும்

**திரு. நா. வி. மு. நவரத்தினம்**
பண்ணிசைத் துறைப் பொறுப்பாளர்,
இராமநாதன் நுண்கலைப் பிரிவு,
யாழ். பல்கலைக் கழகம்.

## தேவார இசைப் பெருமை

செந்தமிழ் இசைக் கனியைப் பிழிந்து, தெளிந்தெடுத்த தெய்வீக கானரசமே தேவாரங்கள். தேவாரத் திருமுறைகளிற் காணும் பொருள் பொதிந்த கானம் தமிழோடு இரண்டறக் கலந்து பேரின்பம் அளிக்கிறது. திருமுறைகளில் மொழி, சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், ஆத்மீகம், நுண்கலை, சித்தாந்தம் ஆகிய அரும்பெரும் புதையல்கள் பொதிந்துள்ளன.

தேவாரம் ஐந்தவித்த தூய்மையரால் கண்ணீர் மல்க ஓதிய பொய்யா மொழி. இதுவே இறைவன் ஏற்றுகந்த அர்ச்சனையுமாம். பொன்னும், மணியும், போகமும், சர்வசித்தியும் நல்கிய இறைவன் இதை விரும்பிக்கேட்டு, மனம் உகந்து திருநடனம் ஆடினார். அதோடு நின்றுவிடாமல் தானும் இன்புறப் பாடினார் என்பது ஞான போனகர் வாக்கு.

திருமுறையைப் பாடி, பேசி, எழுதிய பெருமை சிவனையே சாரும். அவை நிகழ்ந்த இடங்கள் வருமாறு:

பாடியது: தருமை
பேசியது: திருக்கோலக்கா,
திருவெண்ணெய் நல்லூர்
எழுதியது: சிதம்பரம்.

*தவத்திரு வடிவேல் சுவாமிகள் திருமுறைகளைப் பொருளுணர்ந்து பயின்றவர். சிலகாலம் பண்ணிசை ஆசிரியராயும் பணியாற்றியவர். அவரின் ஞான குரவர்களுள் ஒருவர் நயினாதீவு முத்துச்சாமி. அப்பெரியார் நயினையின் புனிதத்தாய் புவனேஸ்வரியின் நல்லருள் பெற்றவர். அன்னையின் அருட்கடலில் திளைத்த நயினாதீவுச் சுவாமிகளின் குடியிற் பிறந்த இக்கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ள திருமுறை பற்றிய ஆய்வுக் கட்டுரை ஸ்ரீ வடிவேல் சுவாமிகளின் திருமுறைத் தொண்டினைப் பயனுறச் செய்வதாக.*

''பாடல் வீணை, முழவம், குழல், மொந்தை, பண்ணாகவே ஆடுமாறு வல்லான்'' என்பதும்,

''பூத இனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்'' திரும்பத்தாமே வேதமொடு ஏழிசையாம் தமிழ்ப் பண்ணிசையையும் இறைவன் தமது திருவாயால் பாடி, உகந்தமை இங்கு சுட்டப்பெறுகிறது.

''பண்ணும் பதமேழும், பல ஓசைத்
தமிழ் அவையும்
உண்ணின்ற தோர் சுவையும் உறுதாளத்
தொலி பலவும்
மண்ணும் புனல் உயிரும் வருங்காற்றும்
சுடர் மூன்றும்
விண்ணும் முழுதும் ஆன ...... ''
பொருள் ஒன்றே.

அது இனிய தமிழ்ப் பண்ணிசையாய்-ஞானப்பாலாய் - சித்தத்துள் தித்திக்கின்றது.

## பரமன் உவந்த பாசுரம் — திருமுறை

தேவார இசை கேட்டு இறைவன் இன்புற்ற அருளாளருள் சுந்தரர் முதன்மையானவர்.

''நாளு மின்னிசையாற் றமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன், தாளமீந்து அவன் பாடற்கிரங்கும் தன்மையாளன்'' என்றும் –

''நல்லிசை ஞானசம்பந்தனும், நாவுக்கரசனும்'' பாடிய நற்றமிழ்மாலை கேட்டு, 'நாவுக்கரசன்' எனத்திருநாமம் சூட்டியவர் என்றும் –

தோழனாகிய சுந்தரர் பாடல் கேட்ட களிப்பால் இறைவன் கல்லும், முள்ளும் கடந்து கால் நோகப் பரவை மனைமீது தூது சென்ற வரலாறை –

''பரவை மனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற பரமன்'' என்ற திருப்புகழ் அடியினாலும் தெளியலாம்.

முருகப் பெருமானே சம்பந்தர் வாயிலாகத் திருமுறைத் தமிழை அருளினார் என்பது மறுக்க முடியாத உண்மை. முருக வழிபாடாற்றுவோர் குறிப்பாக யாழ்ப்பாணத்து மெய்யடியார் முருகனுக்கும் சம்பந்தருக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

''சம்பந்தன் எனத் தமிழ் தேக்கிய
பெருமாளே''
''சமணரைக் கழுவேற்றிய பெரு
மாளே''

''வழுதி கூனிமிர்த்த பெருமாளே''

எனத் திருப்புகழில் சம்பந்தப் பெருமான் குறிப்பிடப்பட்டுள்ளார். இவ்வரிசையில் இராமலிங்கர், சிவப்பிரகாசர், தாயுமானார், சிவஞான முனிவர், குமரகுருபரர், பாம்பன் சுவாமி, பட்டினத்தார், கணநாத நாயனார், மெய்கண்டார் உள்ளிட்ட பலரும் திருமுறையால் பெரும்பயன் எய்தியுள்ளனர்.

## திருமுறையில் ஆத்மிக சிகிச்சை

திருமுறை பாடுவதால், கேட்பதால், பாடுவிப்பதால் ஆத்மிக சிகிச்சை உண்டாகும் என்பது நம்பிக்கை, இடர்நீங்க ஓத வேண்டிய பதிகம், பண், பாடியதலம் என்பன வருமாறு:

| 1. பதிகம் | | பண் | தலம் |
|---|---|---|---|
| 'தோடுடைய ......' | சம்பந்தர் | நட்டபாடை | திருப்பிரமபுரம் |
| 'விங்குவிளை ......' | சம்பந்தர் | சாதாரி | திருமாகறல் |
| 'விருது குன்ற ......' | சம்பந்தர் | நட்டராகம் | திருக்கேதீச்சரம் |
| 'உண்ணாமுலை ...' | சம்பந்தர் | நட்டபாடை | திருவண்ணாமலை |
| 'பட்டி ஏறுகந் ......' | அப்பர் | திருக்குறுந்தொகை | திருவண்ணாமலை |
| 'நத்தார் படை ......' | சுந்தரர் | நட்டபாடை | திருக்கேதீச்சரம் |

2. இயம பயம், வேடிடர், இடி மின்னல், நாள்கோள், நச்சுப் பிராணிகள், நோய், விபத்து, எதிரி, பேய் பூதம், ஆயுதம் ஆகியவற்றினாலாய பயம் நீங்க,

| பதிகம் | பண் | தலம் |
|---|---|---|
| கோளறு பதிகம் — சம்பந்தர் ( வேயுறுதோளி பங்கன் ) | பியந்தைக் காந்தாரம் | பொது |
| 'கண்டு கொள்ளரி' — அப்பர் | காலபாசத் திருக்குறுந்தொகை | பொது |

3. இடர் நீங்க,

'மறையுடையாய் ......' சம்பந்தர்
'அந்தணாளன் ......' சுந்தரர்

4. பாவம் தீர,

'மருந்து வேண்டில் ......' சம்பந்தர்
'பற்றற்றார் ......' சுந்தரர்

5. இடர்வரும் வேளையில்,

'மாசில் வீணை ......' திருக்குறுந்தொகை — அப்பர்
'சுண்ணவெண் சந்தன ......' காந்தாரம் — அப்பர்
'ஈன்றாளுமாய் ......' திருநேரிசை — அப்பர்

6. உலகியலில் பொன், பொருள், போகம் வேண்டி,

'பத்தூர் புக்கு ......' — சுந்தரர்
'பொன்னும் மெய்ப்பொருளும் ......' — சுந்தரர்

7. வறுமை நீங்க,

'இடரினும் தளரினும் ......' — சம்பந்தர்
'மெய்யை ......' — சுந்தரர்
'நெய்யும் பாலும் ......' — சுந்தரர்
'மதிமலிபுரிசை ......' — திருமுகப் பாசுரம்

8. பிடைநீங்கி, பெருமணம் நிகழ,

'சடையா யெனுமால்' — சம்பந்தர்
'மட்டிட்ட புன்னை ......' — சம்பந்தர்

9. கன்னியர் திருமணம் நிகழ,

திருவெம்பாவை — மாணிக்கவாசகர்

10. இகத்தில் அலைமகள், கலைமகள், மலைமகள், பூதேவி சமேத வாழ்வு வாழ,

'புவனம் வளிகனல் ...' — சம்பந்தர்
'வாசி தீரவே ......' — சம்பந்தர்

11. பிள்ளை வரம்பெற,

'கண்காட்டு நுதலா ......' — சம்பந்தர்

12. சத்துருவை வெற்றிகொள,

'வளைந்தது வில்லு ......' — மணிவாசகர்
'கோளறு பதிகம் ......' — சம்பந்தர்
'திருமுருகாற்றுப்படை ......' — நக்கீரதேவர் (11 ஆம் திருமுறை)

13. தத்துவாய், ஊமை நீங்க,

'பூசுவதும் வெண்ணீறு ......' — மணிவாசகர்

14. அகால துர்மரணம், பாம்பு முதலியவற்றின் விடம் நீங்க,

'ஒன்று கொலாமவர் ......' — அப்பர்
'ஏற்றான் மறக்கான் ......' — சுந்தரர்
'சடையாய் எனுமால் ......' — சம்பந்தர்
'மட்டிட்ட புன்னை ......' — சம்பந்தர்

15. தீராப் பிணி, விஷக்காச்சல் தீர,

'ஒடுங்கும் பிணி...' — சம்பந்தர்
'அவ்வினைக்கிவ்வினை...' — சம்பந்தர்
'பேராயிரம்...' — அப்பர்

16. நீச்சுரம் முதலிய பிணிகள் தீர,

'மந்திரமாவது...' — சம்பந்தர்

17. சூடல் நோய் அனைத்தும் நீங்க,

'கூற்றாயின வாறு...' — அப்பர்

18. காக்கை வலி, பாரிச வாயு, கூன் நோய் நீங்க,

'துணிவளர் திங்கள்...' — சம்பந்தர்

19. உடல் நோய், குத்து, வலி நீங்க,

'மின்னுமா மேகங்கள்...' — சுந்தரர்

20. கண்ணின் ஒளிபெற, (குருட்டுத்தன்மை நீங்க)

'ஆலந்தா னுகந்து...' — சுந்தரர்
'மீளா அடிமை...' — சுந்தரர்

21. உடல் தூய்மை பெற,

திருவங்க மாலை — அப்பர்

22. சிவ அபசாரம் சாராது விலக,

'சூலபாணியைச் சுடர்தரு வடிவினை...'
(11ஆம் திருமுறை) — நக்கிர தேவர்

23. பெருஞ் செல்வம், நீண்ட ஆயுள், உடல், உயிர் பேருறுதி பெற,

பஞ்சாக்கரப் பதிகங்கள்

'துஞ்சலும்...' — சம்பந்தர்
'காதலாகி...' — சம்பந்தர்
'சொற்றுணை...' — அப்பர்
'மற்றுப்பற்று...' — சுந்தரர்

24. தெய்வத் திருவருட் பேறு வேண்டி,

'வாழ்க அந்தணர்...' — சம்பந்தர்
'வடிவேறு திரிசூலம்' — அப்பர்
'ஓருரு வாயினை...' — சம்பந்தர்
'கல்லூர்ப் பெருமணம்' — சம்பந்தர்
'தானெனை முன்படைத்தான்' — சுந்தரர்
'அரவணையான்...' — அப்பர்

25. நிலவளம், மழைவளம், பயிர்வளம் சிறக்க,

பண் — மேகராகக்குறிஞ்சி— சம்பந்தர்

26. அரனடியார் அருள் பெற,

'தில்லை வாழ் அந்தணர்...' — சுந்தரர்

மேற் குறிப்பிட்ட தேவார இசைப் பொருள் அனைத்தும் மருந்தையும், மந்திரங்களையும் விட உயர்ந்த தமிழ் மந்திரங்களாம். இவற்றைக் கற்றறிந்த – உளத் தூய்மையும் சிவப் பொலிவும் உள்ள – உத் தமர் வாயிலாக இசைக்க வைப்போரும், கேட்போரும் தாம் வேண்டும் இன்பம் பெறு வர் என்பது திண்ணம்.

இனி, பண்ணிசையின் பழமையைச் சிறிது கவனிப்போம்:

## தொன்மைப் பண்

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப''

பாட்டியலாய பண்ணத்தி — பாவகை அருகு பெருகு, அகம் புறம்—இசை நீட்டம் நான்கு வகை யாழ், அகவழியிசை (நாத வியக்கம்), ஒழிபிசைக் கிளவி முக்கியமாகப் பரிபாடல்: இசை நுட்ப உணர்வு — எல்லாம் இதில் காணப்படுகின்றன.

## பரிபாடல் - பண் உறவு

பரிபாடலின்கண் பண் - பாலை யாழ், பண் – காந்தாரம், பண்ணோ திறம் ஆகிய பண்களில் சுமார் இருபத்திரண்டு பாடல்

களும் - பண்ணிசை வகுத்தோரும் குறிக்கப்பட்டுள்ளனர்.

## சங்க நூலில் - பண் உறவு

கால உணர்வு, இசை நுட்பம், நிலத் தன்மை சுவைப் புலப்பாடு ஆகிய கூறுகளுடன் சங்க காலத்தில் பதினொரு பண்கள் இசைக்கப்பட்டிருப்பதை வரலாற்று ரீதியாக அறிகின்றோம்.

அவையாவன பண், ஆம்பல், காஞ்சி, காமரம், குறிஞ்சி, செவ்வழி, நைவளம், பஞ்சுரம், படுமலை, பாலை, மருதம், விளரி, இவற்றில் ஐந்து பண்கள் தேவாரத் திருமுறையிலும், ஏனையவை நூற்று மூன்று பண்களிலும், பரிபாடலில் ஒரு பண்ணும் காணப்படுகின்றன. சங்கீத ரத்னாகரம், தேவார வர்த்தனியிலும் இப்பண்களைப் பற்றிய செய்தி காண முடிகின்றது. திவ்வியப் பிரபந்தம் சுட்டும் பண்களிலும் இவற்றிற் சில காணப்படுகின்றன.

## சிலப்பதிகாரத்தில் - பண்

சிலப்பதிகாரம் 2 ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது. ஏழ் பெரும் பாலைத் தோற்றம், அவற்றிற்குரிய தேற்றம் முதலியன அடியார்க்கு நல்லார் தரும் உரை விளக்கத்தால் தெரிய வந்துள்ளன.

## ஏழ் பெரும் பாலைப் பண்களாவன :

1. செம்பாலை, 2. படுமலைப்பாலை, 3. செவ்வழிப்பாலை, 4. அரும்பாலை, 5. கோடிப்பாலை, 6. விளரிப்பாலை, 7. மேற் செம்பாலை என்பனவாம்.

செம்பாலை - 8 பண்களும், படுமலை - 22 பண்களும், செவ்வழி – 26 பண்களும், கோடிப்பாலை - 12 பண்களும், விளரி – 5 பண்களும், மேற் செம்பாலை - 18 பண்களும் சேர்ந்து அகம் புறம், அருகு பெருகு சாதிகளினால் குறிஞ்சி, பாலை, மருதம் நெய்தல் ஆகிய நாற் பெரும் பண்களின்றும் இப்பண்கள் நூற்றெட்டாகப் பிறப்பது கூறப்பெற்றுள்ளது.

ஏழிசைப் பிறப்புப் பற்றிய சூத்திரம், ஆயம், திரிகோணம், சதுரம், வட்டம் ஆகிய பாலைகளது தேற்றம் கூரத் கிராம முறைமை. இனிக் கிராம முறைமை, உழைக் கிராம முறைமை, குரல் - இளி முறைமை, யாழ், குழல், மத்தளம், தண்ணுமை, இசையாசிரியர், ஆடலாசிரியர் இலக்கணம், பண்டைய இசை நூல்களான இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்ச மரபு கூத்த நூல் போன்றவற்றின் குறிப்பும், பெருநாரை, பெருங்குருக, பஞ்ச பாரதீயம், இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை, இந்திரகாளியம், தாளசமுத்திரம், பதினாறு படலம் போன்ற இறந்துபட்ட இசை நூல்களது குறிப்பும் இவ்வுரையிற் சிறப்பாக காணப்படுகிறது.

மேலும் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை, அரங்கேற்று காதை, வேனிற் காதை, நடுகற் காதை என்ற நான்கு பகுதிகளிலும் இசை பற்றிய விடயங்கள் சிறப்பாக உள்ளன. இதில் ஆய்ச்சியர் குரவையும், அரங்கேற்று காதையும் தமிழிசைப் பண்களின் மூலமான வட்டப் பாலையில் இராசிச் சக்கரத்தில் நரம்புகள் நிற்கும் நிலையையும் இதினின்று ஏழ் பெரும் பாலைகளும் குரல் திரிபால் பிறக்கும் முறைமையும் வல முறை, இட முறைமையும் தற்காலம் அவை கொண்டிருக்கும் நரம்பு குறிக்கும் இணை ராகத்தைச் சுட்டுவதையும் தொல்காப்பியம் சுட்டும் நாற் பெரும் பண்கள் எவ்வாறு வட்டப் பாலையிற் பிறக்கின்றன என்பதும், இளி அடிமணை முறைமையிலும் 103 பண்கள் பிறக்கு முறைமையுமான பல இசை நுட்பங்கள் விளக்கப்பட்டுள்ளன.

## பன்னிரு திருமுறையில் பண்கள்

பன்னிரு திருமுறையில் முதல் ஏழு திருமுறைகளும் அரிய பண்ணிசைக் கரு மூலங்

களாக விளங்குகின்றன. முதல் மூன்று திருமுறைகளிலும் ஏறக்குறைய இருபத்துமூன்று பண்களில் அண்ணளவாக நாலாயிரம் திருப்பாடல்கள் உண்டு. இத்திருமுறை மூன்றிலும் அடங்கியுள்ள பண், பதிகத் தொகை, கட்டளை முதலியவற்றைப் பின் வருமாறு அட்டவணைப் படுத்திக் காட்டலாம்:

| திருமுறை ஒன்று | பண் | பதிகம் | கட்டளை |
|---|---|---|---|
| | நட்டபாடை | 22 | 8 |
| | தக்கராகம் | 24 | 7 |
| | பழந் தக்கராகம் | 16 | 3 |
| | தக்கேசி | 12 | 2 |
| | குறிஞ்சி | 29 | 5, 3 யாப்பு |
| | வியாழக் குறிஞ்சி | 25 | 6 |
| | மேகராகக் குறிஞ்சி | 07 | 2, 2 யா. வி. ★ |
| | யாழ்மூரி | 01 | 1 |
| திருமுறை இரண்டு | | | |
| | இந்தளம் | 39 | 2, யாப்பு – 9 |
| | சீகாமரம் | 14 | 2, ,, – 2 |
| | காந்தாரம் | 29 | 3, ,, – 10 |
| | பியந்தைக் காந்தாரம் | 14 | 3 |
| | நட்டராகம் | 16 | 2, ,, – 4 |
| | செவ்வழி | 10 | 1 |
| திருமுறை மூன்று | | | |
| | காந்தார பஞ்சமம் | 23 | 3, ,, – 3 |
| | கொல்லி | 18 | 4 |
| | கொல்லிக் கௌவாணம் | 01 | 1 |
| | கௌசிகம் | 13 | 2, ,, – 2 |
| | பஞ்சமம் | 11 | 1, ,, – 2 |
| | சாதாரி | 33 | 3, யா. வி. |
| | பழம்பஞ்சுரம் | 17 | 3, யா. வி. 4 |
| | புறநீர்மை | 06 | 2 |
| | அந்தாளிக் குறிஞ்சி | 04 | 1 |

★ யா. வி. — யாப்பு விகாரம்

## பண் பாடுவோன் தன்மை, பெருந்தானம், கிரியை

பண் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, சந்தம் எனும் ஆறு உறுப்புக்களுடன் முதல், முறை, முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை என்ற பதினொரு வகைப் பாட்டினாலும் அறிந்து இணை, கிளை, பகை, நட்பின் இசை–

புணர் குறிநிலை – அறிந்து எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குஷலம், ஒலி, உருட்டு, தாக்கு என்ற எண் வகைக் கிரியைகளாலும் நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, உதடு, அண்ணம், பல், தலை என்ற பெருந்தானங்கள் எட்டின் துணை கொண்டு இசைக்கப்படுவதாம். இதன் இலக்கணங்களையும், தொழிற்பாடுகளையும் பாடுவோன் அறிவதவசியம்.

## பண் சுமந்த பாடல்

பண்ணிசைப் பாடல்கள் இருவகை. ஒன்று பாடும்போது இசையுடன் பாடப்பட்டது. இது தேவாரம் முதலியன. மற்றது பாடலை ஒருவர் இயற்ற, இன்னொருவர் பண்ணமைப்பது; இவ்வகைப் பாடல் பரிபாடலிற் காணப்படும். பண்ணை இரு வகையாகப் பாடலாம். ஒரு வகை — சுத்தாங்கம். இது விருத்தமுறை. திருத்தாண்டகம் விருத்த முறை சார்ந்தது. மற்றது தாளாங்கம். இது தாளமிட்டுப் பாடுவது; இதையே பண்ணாங்கம் என்பர்.

## தேவாரப் பொருள்

தெய்வத்தைப் போற்றும் பாடல்கள் '' வாரம் '' என்பதாக இளங்கோவடிகள் கூறுவர். இது சொல், இசை - ஓசை – என இரு ஒழுக்கங்களைக் கொண்டது. இசையில், இயலில் மிக்க நிபுணத்துவமும் நுட்பமும் செறிந்திருக்கும். இவையே பண்ணாரின் தமிழான தேவாரங்கள் ஆகும். இசைத் தமிழ் ஒலி நயங்களும், இயற்றமிழ் சொற்பொருள் நயங்களும் தமிழின் மூல நிதியங்களாய் விளங்குபவை தேவாரத் திருப்பதிகங்கள். தேவாரத் திருமுறைகள் முழுமுதற் கடவுளாகிய சிவனைப் போற்றும் முறையில் மூவர் முதலிகள் பாடியுள்ளனர்.

## மூவர் திருவாய் மொழிச்சிறப்பு

திருஞானசம்பந்தர் தாம்பாடிய திருப்பதிகங்களை '' ஏழின்னிசை மாலை '' என்றும் ' மூன்றியலிசை யியல்பா ' என்றும் ' சந்தமிவை தண் தமிழின் இன்னிசையெனப் பரவு பாடல் ' என்றும் சிறப்பித்துள்ளார். இப்பாடல்களது சிறப்பை உணர்ந்த சுந்தரர் ' நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளமீந்து, அவன் பாடற் கிரங்கும் தன்மையாளன் ' எனச் சம்பந்தர் புகழையும் ' நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை ' என்று நாவுக்கரசரின் சிறப்பையும் அவர் புகழ்ந்துள்ளார்.

## பாடுவோர், பாடுவிப்போர், கேட்போர் பெறும் பயன்

திருமுறைப் பண்களைப் பாடுவோர் புவியிலே ஈசன் எனும் இயல்பினர் என்பர். கேட்போர் மண்ணுக்கும் விண்ணுக்கும் மன்னராய் வாழ்வர். பாடுவிப்போர் கலைமகள், மலைமகள், அலைமகள், புவிமகள் ஆகிய நால்வரும் பொருந்தும் உயர் வாழ்வை எய்துவர். அதுமட்டுமன்றி மண்ணுலகாண்டு வியனுலகும் ஆளப்பெறுவர் என்பது ஞானக்குழந்தையின் நல்வாக்கு.

## இந்திய இசையும் பண்ணும்

தமிழ்ப் பண்ணிசை இந்திய இசையின் ஏகத்துவமாக 12 ஆம் நூற்றாண்டு வரை மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிளங்கியது. இந்திய இசை, மொழிவெறி ஆதிக்கத்தால் சின்னாபின்னமாகும் போது, பண்ணிசையின் இலக்கணம், இசை மரபு மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உரிய மதிப்பு அளிக்கப்படாமலும் போனதால், இம்மரபு நெறிக்குத் துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. எனினும், இறைவனது சிரஞ்சிவித் தன்மையை விதந்தோதும் தேவாரத் திருமுறைகள் இருந்தமையால்அது என்றும் வாழும் தன்மை பெற்று விளங்குகிறது.

கர்நாடக இசை 12 ஆம் நூற்றாண்டில் உருவாவதற்கு மூலமாய் விளங்கியவை

தமிழ்ப் பண்களும், தேவாரங்களும் என்பதைச் சங்கீதரத்னாகர ஆசிரியர் நிசங்க சாரங்க தேவர் தமது நூலில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால் அவரும் சிரஞ்சீவியாயினார்.

தமிழ்ப் பண்ணில் மாது (சாகித்யம்) எவ்வளவு முக்கியமோ பின்வந்த கர்நாடக இசையில் தாது (ஸ்வரங்கள்) முக்கியம் பெறலாயின. அவற்றை விரித்தல் இங்கு பொருத்தமில்லை.

தற்கால இராகங்களை (வகுப்பை) ஒவ்வொரு பண்ணுக்கும் இணையாக — ஒத்தவையாக — ஆய்வாளர்கள் கண்டு, பின்வருமாறு காட்டியுள்ளனர்:

| பண்டைய பண்கள் | இன்றைய இணையெனக் கருதும் இராகங்கள் |
|---|---|
| 1. புறநீர்மை | 1. பூபாளம் |
| 2. காந்தாரம் | 2. நவரோசு |
| 3. பியந்தைக் காந்தாரம் | 3. நவரோசு |
| 4. கௌசிகம் | 4. பைரவி |
| 5. இந்தளம் | 5. மாயாமாளவ கௌளை |
| 6. தக்கேசி | 6. காம்போதி |
| 7. சாதாரி | 7. பந்துவராளி |
| 8. நட்டபாடை | 8. கம்பீரநாட்டை |
| 9. பழம் பஞ்சரம் | 9. சங்கராபரணம் |
| 10. காந்தார பஞ்சமம் | 10. கேதார கௌளை |
| 11. பஞ்சமம் | 11. ஆகிரி |
| 12. நட்டராகம் | 12. பந்துவராளி |
| 13. தக்கராகம் | 13. காம்போதி |
| 14. பழந் தக்கராகம் | 14. ஆரபி அல்லது சுத்தசாவேரி |
| 15. சீகாமரம் | 15. நாத நாமக் கிரியை |
| 16. கொல்லி | 16. நவரோசு |
| 17. அந்தாளிக் குறிஞ்சி | 17. சாமா |
| 18. கொல்லிக் கௌவாணம் | 18. நவரோசு |
| 19. வியாழக் குறிஞ்சி | 19. சௌராட்டிரம் |
| 20. மேகராகக் குறிஞ்சி | 20. நீலாம்பரி |
| 21. குறிஞ்சி | 21. அரிகாம் போதி |
| 22. செவ்வழி | 22. எதுகுல காம்போதி |
| 23. செந்துருத்தி | 23. மத்யமாவதி |
| 24. யாழ்மூரி | 24. அடாணா |

## பண்பாட்டு இலட்சியமும், பண் இலக்கணமும்

பண்பாட்டு இலட்சியம் எனக்கூறும் போது பாட்டு எந்தப் பண்ணில் உள்ளதோ அந்தப் பண்ணின் பெயர் பெறும். அதுகட்டளை அல்லது யாப்பு இலக்கம், அப்பண்ணுக்கு இணையான தற்கால இராகம், பண்ணை அருளியவர், திருமுறை இலக்கம், தாளம், அங்கம், பண்பாடற்குரிய தலம், இணைராகத்தின் ஆரோகண, அவரோகணங்கள், பாடற் பெயர், சந்தர்ப்பம், பதவுரை, கருத்துரை, பொழிப்புரை, விளக்கம் ஆகிய பல அம்சங்களைக் கொண்டிருக்கும்.

பண்ணிலக்கணம் என்பதில் பண்ணின் இலக்கணம், அதன் சாதி, வகுப்பு, பண் கொண்டுள்ள பதிகங்கள், கட்டளைகள், யாப்புக்கள், பண்ணைக் குறிக்கும் நூல்கள், சுவை, பகலிராப் பொதுப்பண், அவை கொண்டுள்ள நரம்புகள் நுணுக்கம், நிறுவும் முறை பாடல்களிற் காணப்படும் விசேட அம்சங்கள் — குறிக்கும் பதங்கள், பிரயோகங்கள், இசை — நவசக்திக் குறிப்புக்கள், கவுத்துவக் குறிப்புக்கள், இரத்னாகரர் குறிப்பு, உமாபதியார் குறிப்புகள், திருவாய் மொழிக் குறிப்பு பன்னிரு திருமுறைக் குறிப்பு ஆகிய பல நுணுக்கமான அம்சங்கள் இடம் பெறும்.

மேலும் முதல், முறை முடிபு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை ஆகிய பதினொரு வகைப் பாகுபாடும், தொழிற்பாடும் இலக்கணங்களில் அடங்குதல் வேண்டும். சம்பந்தரின் திருப்பாடல்கள் அனைத்தும் பண்ணிலக்கணத்தில் அடங்கும்.

## தொகுப்புரை

திருமுறைச் செல்வம் தமிழ் மொழியின் தனிச் சொத்து. இதன் சிறப்பை அதனுள் அமைந்துள்ள தத்துவக் கருத்துக்களும் பண்ணிசைப் பண்புகளும் மேம்படுத்துவனவாகும். பயில்வார்க்கு இன்பம் பயக்கும் திருமுறைப் பாசுரங்களைப் பொருளுணர்ந்து பக்தியுடன் பாடுவோர் இவ்வுலகில் பெறலரும் பேறுகளைப் பெறுவர் என்பதும் அவற்றின் அருமை பெருமைகளைச் சைவப் பெருமக்கள் அனைவரும் அறிதல் வேண்டும் என்பதும் இக்காலகட்டத்தில் இன்றியமையாதனவாம்.

★

### பாடுவார் பசிதீர்ப்பாய்

*பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்*
*ஓடுநன் கலனாக உண்பலிக்கு உழல்வானே*
*காடுநின் இடமாகக் கடு இருள் நடமாடும்*
*வேடனே குருகாவூர் வெள்ளடை நீ அன்றே.* — சுந்தரர்.

### யானும் உன்னைப் பரவுவனே

*வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்*
*தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்*
*சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்*
*பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.*

— மணிவாசகர்.

### மனமே உனக்கென்ன வாய்

*ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்*
*நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ*
*சினமே தவிராய் திருமுறைக ளோதாய்*
*மனமே உனக்கென்ன வாய்.* — சிவபோகசாரம்.

# தொண்டின் சின்னம் மகாதேவ ஆச்சிரமம்

திரு சு. பொ. நடராசா
அண்ணா தொழிலகம்,
இணுவில்.

சமய குரவர்கள் நால்வருள் தொண்டினால் உயர்ந்தவர் அப்பர் சுவாமிகள். முருகனே அவதாரமான திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் அப்பர் என அன்பாக அழைக்கப்பட்டவர், திருநாவுக்கரசு நாயனார். நால்வகை நெறிகளுள் சரியைத் தொண்டு பக்திமான்களால் செய்யப்படுவது. அறிவறிந்த நாள் முதலாகச் சமயத் தொண்டும் சமூகத் தொண்டுமே செய்து வாழ்ந்தவர், தவத்திரு வடிவேல் சுவாமிகள் என்பது யாவருமறிந்ததாகும். அதனாலேயே அவர் 'இணுவை அப்பர்' என அன்பாக அழைக்கப்பட்டார்.

அப்பர் சுவாமிகளுக்கு வயது 81; தவத்திரு வடிவேல் சுவாமிகளுக்கு வயது 88. திருவாமூரிலே வேளாண் குலத்தில் அவதரித்தார் அப்பர் சுவாமிகள். அவர் புகழனார் மாதினியாருக்குத் தனிமைந்தன். அவரைப் போலவே இணுவையூரிலே அருளாட்சி செய்த பெரிய சந்நியாசியாருக்குத் தொண்டனாக வாழ்ந்தவரும், பரமானந்த வல்லி உபாசகருமான காசிநாதர் என்னும் கந்தருக்கும் (சந்நாசி கந்தர்) சின்னக்குட்டி அம்மையாருக்கும் தனிப் புதல்வராக அவதரித்தவர் வடிவேல் சுவாமிகள்.

அப்பர் சுவாமிகளுக்குச் சகோதரியாய் இருந்த திலகவதியார் தன் தம்பியைச் சமணப் படுகுழியிலிருந்து நீக்கி, சைவமாம் மெய்ந்நெறியில் நிறுத்தினார்; சமயகுரவருமாக்கினார். விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவ சின்னங்களின் மகிமையை அறிந்து உலகு ஈடேற வழி செய்தார். அவரைப் போலவே மாணிக்கம் என்ற சகோதரியின் துணையினால் பிரமச்சரியமென்ற நெறியில் நின்று பரமானந்தவல்லி அம்மனுக்குத் தாசராய் வாழ்ந்து அன்பர் பணி செய்து அரனடிக்கு ஆளாகினார் வடிவேல் சுவாமிகள்.

அப்பர் பயின்றது சமணப் பள்ளியில். ஆனால் தவத்திரு வடிவேல் சுவாமிகள் பயின்றது அகிலப் புகழ் கொண்ட யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள வேதாந்த மடத்திலாகும். அருள்த்தாகமுற்ற சுவாமிகளின் ஆர்வமுடைமையைக் கண்டு, வேறும் சிலர் அவருடன் அக்காலத்தில் சேர்ந்துகொண்டனர். இணுவிலைச் சேர்ந்த சண்முகம் சுவாமி, செல்லையா சுவாமி, முத்துச் சுவாமி, கோண்டாவில் முருகேசு சுவாமி, குடைச்சாமி எனும் கந்தையா சுவாமி ஆகிய சமயத் தொண்டர்களையும் வேதாந்த மடத்தில் இணைய வைத்து, வேதாகம சாஸ்திரங்களில் மேம்பட்டார். அப்பர் சுவாமிகள் ஞானசம்பந்த சுவாமிகளை உயர்வாக மதித்து, அவரின் சிவிகையைத் தாங்கும் அடியவரானார். தவத்திரு வடிவேல் சுவாமிகள் வேதாந்த மடத்து ஞானாசாரியரான மகாதேவ சுவாமிகளுக்குத் தலைமைச் சீடரானார்.

மகாதேவ சுவாமிகளின் பின் வேதாந்த மடத் தலைமை வடிவேல் சுவாமிகளுக்கே உரியதெனக் கருதப்பட்டது. ஆயின் சுவாமிகளின் இரு முதுகுரவராய தாய் தந்தையருக்கும் சகோதரியான மாணிக்கம் அம்மையாருக்கும் துணையாக வேண்டிய பொறுப்பினால் சுவாமிகள் அத்தலைமையைத் துறந்து, விவசாயப் பணிகளுடன் சமூகத் தொண்டிலும் தலைசிறந்து விளங்கினார்.

சொல்லாற்றலாலும், கல்விஞானத்தாலும், ஒழுக்க சீலத்தாலும், பாரம்பரிய சங்கீதத்தினாலும், சற்பிரசங்கங்களினாலும் தவத்திரு வடிவேல் சுவாமிகளுக்கு நிகர் அவரே. மேலும் அடியார்களுக்கு அமுதளித்தலைத் தலையாய தொண்டெனத் துணிந்து, அதன் வழி நடந்த இளையான்குடிமாற நாயனார் வரலாற்றைப் பெரிய புராணம் கூறுவதை நம்மிற் பலர் அறிவர்.

அதுபோல அந்த மார்க்கத்தில் ஆர்வம் மிகுந்த வடிவேல் சுவாமிகளையும் நெறிப்படுத்த விரும்பினார் யோக குருநாதன். அவர் விருப்பத்துக்கு இணங்கிய வடிவேல் சுவாமிகள் யோக சுவாமிகளின் ஆசிர்வாதத்தோடும் முன்னை நாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. ஸ்ரீகாந்தா அவர்களின் அனுசரணையோடும் உருத்திரபுரத்திலுள்ள புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்கி, அறப்பணி செய்வதற்கு வயல் நிலத்தை அரச மானியமாகப் பெற்றார் அக் குருசேத்திரத்தில் விளைந்த நெல் மணிகளைக் கொண்டு அடியார்களுக்கான திருத்தொண்டை ஆண்டு தோறும் நடத்தி இன்புற்றார்.

மகாதேவ சுவாமிகளிடத்திற் கொண்ட பக்திமையால் உருத்திர புரத்தில் அவர் பெயரால் மகாதேவ ஆச்சிரமம் அமைத்து வேதாந்த குருமூர்த்தியாக விளங்கினார். அவ்ரால் நடத்தப்பட்டு வந்த குருபூசைகளுள் 'குருபூர்ணிமா' வழிபாடு குருவின் மேன்மையைப் போற்றித் துதிப்பதாய் அமையும். திவ்ய ஜீவன சங்கத்தின் வளர்ச்சிக்காகக் கண்டியிலுள்ள தென்னக்கும்பறையில் சங்கம வழிபாடு நடத்திய ஸ்ரீமத் சச்சிதானந்த யோகீஸ்வர் சுவாமிகள் போன்று வடிவேல் சுவாமிகளும் இணுவில், அளவெட்டி, உருத்திரபுரம், கோண்டாவில் ஆகிய இடங்களில் சிவனடியார்களைச் சேர்த்துச் சற் சங்கங்களை நடத்துவித்தார்.

நயினாதீவுச் சுவாமியாரென அழைக்கப்பட்ட முத்து சுவாமிகள், சுவாமி விபுலானந்தர், திருசங்கோய்மலை அத்வைதானந்த சரஸ்வதி சுவாமிகள், சிவத்திரு அப்புக் குருக்கள் போன்ற மெய்யடியார்கள் அவரது ஒத்த காலத்தவரும் தலையாய அன்பினருமாவர்.

வடிவேல் சுவாமிகள் இயல்பாகவே கவி புனையும் ஆற்றல் உள்ளவர். கட்டளைக் கலித்துறை அவருக்குக் கைவந்த பாவினமாகும். 'இணுவை நொச்சியம்பதி முருகன் தோத்திரம்' என்ற நூல் அவரது கவிதை ஆக்கத்துக்கோர் உதாரணமாகும்.

இணுவில் கந்தசுவாமி கோவில், மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், காரைக்கால் சிவன் கோவில் ஆகிய ஆலயங்களில் அவர் ஆற்றிய சேவைகள், சற்பிரசங்கங்கள், புராணபடனங்கள், திருமுறை ஓதல்கள், பஜனை வழிபாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் யாவும் என்றென்றும் அறிஞர்களால் மதிக்கத்தக்கவை. தவத்திரு வடிவேல் சுவாமிகளின் அன்புக்குரிய அடியவர்களில், அளவெட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் பிள்ளை, தாமோதரம்பிள்ளை, கோண்டாவில் ஆசைப்பிள்ளை, இணுவை வைத்தியர் இராமலிங்கம், பண்டிதர் க. கார்த்திகேசு (சரவணமுத்து), பண்டிதர் இ. இராசலிங்கம், சேதர் சட்டம்பியார், அண்ணாவி ஏரம்பர், இசைக் கலைஞர் வி. உருத்திராபதி, பிரம்மஸ்ரீ மா. த. நடராச ஐயர் (சின்னத்துரை ஐயர்) ஆகியோர் அடங்குவர்.

தூய நெஞ்சத்துடன் சுவாமிகள் ஆரம்பித்த கிளிநொச்சியிலுள்ள ஜெயந்தி நகரத்து அறப்பணி பெருமையும், வளர்ச்சியுமுற்று இன்று ஓர் ஆதீனமாக விளங்குகின்றது. வடிவேல் சுவாமிகளின் தொண்டின் சின்னமாய் விளங்கும் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம் அவரது சேவைகளின் மேம்பாட்டை எதிர்காலத் தலைமுறையினருக்கு எடுத்தியம்பும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இணுவைக் கந்த வடிவேல் அருள் வழி
அணுகச் சிறக்கும் அன்பர்க் கருள் வழி
அணுவாயுதித்து ஆலாய் மிளிர் புகழ்
விண்ணுளும் விழுப்புடைத் தொண்டுகள் வாழி
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

★

### தெய்வம் தொழுவார் துயரம்போம்

*காலைதொழ அற்றைவினைக் கட்டகலும்; கட்டுச்சி*
*வேளைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்; — மாலையினில்*
*வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்*
*வெந்துயரம் எல்லாம் விடும்.*

— பழைய வெண்பா.

### உருத்திரபுரீஸ்வரர் திருப்பள்ளியெழுச்சி

*போற்றியெம் புனிதா புண்ணிய முதலே*
*புலர்ந்தது காலைநின் புதுமல ரடியை*
*ஏற்றியே இறைஞ்சி இருள்கடிந்திடவே*
*எழில்நன் மலர்கை யேந்திநிற் கின்றார்*
*சற்குரு வாகிய தாரகப் பொருளே*
*சஞ்சலம் தீர்த்திடென் றேசரண் புகுந்தார்*
*நற்றவர் வாழுருத் திரிபுரி நயந்த*
*நாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே.*

— வடிவேல் சுவாமிகள்.

### கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் துதி

*பொன்னார் புரிசடைப் புண்ணிய னார்தந்த போதவள்ளல்*
*என்னார் அமுது எனையாள என்குரு வாகி வந்து*
*பொன்னும் பொருளும் பொலிவு பெற்றோங் குபதி அதுவாம்*
*கோண்டாவில் நற்பதிக் கோயில் கொண்டான் என்குரு மணியே.*

— வடிவேல் சுவாமிகள்.

# அறப்பணியில் வடிவேல் சுவாமிகள்

1990

திருமதி கலைவாணி இராமநாதன்,
விரிவுரையாளர்,
இந்துநாகரீகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

" .................... இறைவனோ
தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை
சொல்லவும் பெரிதே!''

என்ற ஔவையார் பொன்மொழிக் கேற்றவாறு தவத்திரு வடிவேல் சுவாமிகளின் அறப்பணிகளை நினைவு கூருவதன் மூலம் மெய்யடியார்களின் செயற்கருஞ் செயல்களைத் தெரிந்துகொள்ள ஓரளவு உதவும். சுவாமிகளது அறப்பணிகள் சைவ சமயிகளிடையே மீண்டும் மறுமலர்ச்சி பெறுவதன் அவசியத்தையும் காலத்தின் தேவையை நிறைவு செய்வதையும் யாவருக்கும் உணர்த்தி நிற்கின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே நான்கு மைல் தூரத்தில் உள்ள இணுவில் கிராமம் சுவாமிகளின் பிறந்தகமாகும். அன்னாரின் அறப்பணிகள் நிறைவுற்று வளர்ந்த இடம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் என்னும் கிராமமாகும். அவ்வூரின் தவப்பயனால் 1957 ஆம் ஆண்டிலே ஜெயந்தி நகரில் நிறுவப்பெற்ற மகாதேவ ஆச்சிரமம் மூலமாக அவ்வூர் மக்கட்கு சுவாமிகள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி ......' (புறம். 187)

என்றபடி ஒரு நாட்டிலே வாழும் சிறந்த சான்றோர்களால் தான் அந்த நாடும் மக்களும் சிறப்படைகின்றனர். அதன்படியே தொன்றுதொட்டு இருந்து வரும் மெய்யடியார் வழிவந்த அறச் சான்றோரின் அடியொற்றி ஈழத் தமிழ் நிலத்தில் பெருமை சேர்த்தவர் தவத்திரு வடிவேல் சுவாமிகள்

சுவாமிகளுக்குப் பத்து வயதாய் இருந்த போது அவரது அருட்குரவரான யோக சுவாமிகளின் வழிகாட்டலினால் கந்தமடத்திலுள்ள சிவகுருநாத பீடாதிபதியான மகாதேவ சுவாமிகளிடம் செல்லவும் பின்னர் அவரையே தீட்சா குருவாகப் பெறும் பேறும் கிடைக்கப்பெற்றவர். அத்துடன் நயினாதீவுக் கடப்பைச் சுவாமிகளிடம் தீட்சை பெற்ற நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளாலும் ஆசீர்வதிக்கப் பெற்றவர். நயினாதீவுச் சுவாமிகள் வடிவேல் சுவாமிகளின் வாழ்விடமாயிருந்த இணுவில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில் பலமுறை வந்து தங்கியிருந்தவர். யோக சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள் ஆகிய மூன்று தவஞானிகளிடமும் அருளாசி பெற்ற வடிவேல் சுவாமிகளது சேவைகளைக் கிளிநொச்சி வாழ்மக்களே முழுமையாகப் பெறும் பேற்றைப் பெற்றனர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக உருத்திரபுரப் பகுதியிலே பணிபுரிந்து, நல்லதொரு ஆச்சிரமத்தைத் தரும நெறியிலே நடத்தி, நிலைபெறச் செய்த ஆத்மசக்தி வாய்ந்தவராகவும் சுவாமிகள் விளங்கினார்.

மெய்ந்நெறி உணர்வு மேலோங்காத காலத்தில் மக்களைச் சமயக் கல்வி, ஒழுக்கசீலம், நல்லறிவூட்டல் ஆகியவற்றின் மூலம் நெறிப்படுத்தி, சைவர்களாய் வாழ்வதற்குரிய சமயதீட்சைகளை ஆகம முறைப்படி அளித்து வழிப்படுத்தினார். தத்துவச் சிக்கவில் கிடந்து மயங்காது கடமை, கருமம், நியதி முதலியவற்றிலே மக்களை நெறிப்படுத்தினார். இன்னும் வித்தியாரம்பம் முதலிய கல்விப் பணிகளுடன் பரோபகார, பரார்த்த கடமைகளையும் செய்து காட்டியதுடன் பசியுடன் வந்தவர்கட்கெல்லாம் வயிறு நிறைய உண்டிகொடுத்து தங்குமிடமளித்து உதவியதோடு குரு, லிங்க, சங்கம வழிபாட்டால் உயரலாம் என்றவாறும் வாழ்ந்து காட்டினார். தனது ஞானசற்குரு மகாதேவ சுவாமிகளின் தனிக்கொள்கைகளைப் பேணி ஒழுகுவதில் தன்னிகரற்று விளங்கினார். கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் சுவாமிகளின் பெரும் பணிகளிலே பங்குகொண்டு அரும்பணியாற்றியவர்களில் பரமானந்தவல்லி அம்மையார் தண்பட்ட மகத்துவம வாய்ந்தவர் எனப் பலர் கூறுவதும் நினைவு கொள்ளத்தக்கது.

வடிவேல் சுவாமிகள் பண் இசைப்பதிலும், புராணபடனம் செயவதிலும, பொருள் சொலவதிலும், பஜனைகள் ஆற்றுவதிலும் கூடத் தலைபபட்ட திறமையும் ஞானமும் கைவரப் பெற்றவராக விளங்கினார் என்பதனை அவரை அறிந்த பல அறிஞர்கள் விதந்துரைத்துள்ளனர். உதாரணமாக இணுவில் மஞ்சத்தடி கந்தசுவாமி கோயிலில் தங்கியிருந்த காலங்களில் பெரிய புராணப் படிப்பைத் தாமே நடத்தி, அறுபத்து மூவர் பூசையும் கொண்டாடச் செய்து, புராண படன முடிவிலே மகேஸ்வர பூசையும் திறம்படச் செய்வித்தார். அவ்வாறான புனிதப் பணிகள் மூலம் பாராட்டுப்பெற்ற சுவாமிகளைப் பற்றி அவர்களை நன்கு அறிந்தவரும், அவரது மெய்யடியார்களில் சிறந்தவருமான திரு. சோ. பரமசாமி அவர்கள் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. கதாப்பிரசங்கம் செய்வதிலும், மேடைப் பேச்சிலும் கூட சுவாமிகள் வல்லவராயிருந்தார் என அறிய முடிகிறது.

''விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கினில் விளங்கும் விளக்கவர்''

என்ற திருமந்திரப் பாடலுக்கு உதாரண புருஷராக வடிவேல் சுவாமிகள் தம்மிடத்துள்ள சிவஞான ஒளிவிளக்கால் தம்மையும் விளக்கச் செய்து, தமது ஒளியால் பிறரையும் அவ்வொளியில் திளைக்குமாறு சேவையாற்றினார் என்றால் மிகையாகாது.

ஆறுமுகநாவலரது கல்வித் திட்டத்திலே சைவப் பாடசாலைகள் இயக்கம் எழுச்சி பெற்றது போல அவர் வழியிலே வடிவேல் சுவாமிகளும் கிராமங்கள் தோறும் கல்வி மரபு எழுச்சி பெற வேண்டும் என்ற தூண்டுதலில் திண்ணைப் பள்ளிக்கூட மரபு மீண்டும் எழுச்சி பெறுமாறு கல்வித் திட்டங்களை ஆக்கினார். இத்தகைய கல்வித்திட்டத்திலே சுவாமிகளின் திருமடத்தில் வயது வேறுபாடற்ற யாவரும் கலந்து கல்விச் செல்வத்தைப் பெறுதல், சமூகப்பணிக்குக் கல்வி பயனுடையதாகும் வண்ணம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒடுக்குதல், சாதி வேறுபாடுகள் அற்ற சமத்துவமான சமூகம் மலர வேண்டியன செய்தல், இதனைச் செயற்படுத்துமாறு ' நந்தனார் ' வரலாற்றினைத் தமது கல்விக்குரிய பாடத்திலே இணைத்தமை போன்ற சில செயல்கள் சுவாமிகளது சாதனைகளைப் பட்டியல் போட்டுக் காட்டவல்லன. கல்வி என்ற ஒளியின் மூலமே சமூக அநீதிகட்கு சமயத்தை ஒரு கவசமாகப் பயன்படுத்தியோரை இனம்கண்டு திருத்த வேண்டும் எனவும், நவீனக் கல்விமுறையினைக் கற்றறிந்து கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகள் பயன்பெற வேண்டுமெனவும் உருத்திரபுரம், இணுவில் போன்ற கிராமங்களில்

அவற்றை நடைமுறைப்படுத்தினார். இத்தகைய கல்வித் திட்டங்கள் பிற்கால இந்து சமயக் கல்வி நிறுவனங்கட்குப் பெரிதும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வழிகாட்டு வனவாக அமைந்தன.

கிளிநொச்சிப் பகுதியில் நீண்ட காலமாக்ச் சைவப் பாடசாலைகள் இல்லாத குறையைப் போக்க கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உதவியுடன் சுவாமிகள் முயற்சியால் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் அவ்வூர்ப் பெரியவர்கள் பலரின் முயற்சியினாலும் சுவாமிகளின் ஆதரவினாலும் வளர்ந்து கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், குமரபுரம் மகாவித்தியாலயம், மூன்றாம் வாய்க்கால் இந்துக் கனிட்ட வித்தியாலயம், புத்துவெட்டுவான் இந்துக் கனிட்ட வித்தியாலயம் என நான்கு பாடசாலைகளைத் தொடர்ந்து நிறுவிப் பெரும் சாதனைகளைப் படைத்தது. இவ்வாறான சாதனைகளின் சூத்திரதாரியான சுவாமிகளின் சிந்தனைகள் பாடசாலை நிர்வாகத்தினரால் காலமும், இடமும், தேவையும் நோக்கி நடைமுறைப்படுத்திப் பிற்காலத்தில் பலராலும் பாராட்டப்பட்டன.

கல்வியில் கவனம் செலுத்திய சுவாமிகள் திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணியிலும் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளார். இணுவில் கிராமத்தின் கிழக்கெல்லையில் உள்ள காவரைக்காற் சிவன் கோயில் – ஊரவர்களே செல்ல – அஞ்சும் சூழலில் இருந்தபோது, அங்கிருந்த பற்றைக் காடுகளைத் திருத்திச் செப்பனிட்டு, அந்த ஆலயத்தின் தெய்வீகத் தன்மையினை மீண்டும் மிளிரச் செய்ததுடன் நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடக்கவும் வழியமைத்துக் கொடுத்தார்.

அவ்வாறே இணுவில் கந்தசுவாமி கோவில் நிர்வாகத்திலும் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து, அந்த ஆலய வழிபாடுகளை முட்டின்றி நிகழ்வதற்குத் தாமே முன்னின்று அரும்பணி ஆற்றியுள்ளார்.

கிளிநொச்சிக் கந்தசுவாமி கோயில் காட்டுப் பகுதியில் இருந்த போதிலும், பொதுமக்கள் சென்று வழிபாடாற்றும் வகையிலே காட்டினைக் களனியாக்கி, வழிபாட்டு முறைகளை மக்கள் மனதில் பதியச் செய்வதற்கான சற்பிரசங்கங்கள் செய்ததன் மூலம் ஆக்கபூர்வமான பல அரும் பணிகளைச் சுவாமிகள் செய்துள்ளமை கண்டு நாம் பெருமிதம் கொள்ளமுடிகின்றது.

'திருக்கோயில் இல்லாத திருவிலூரும்...
...அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே'

என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கினைக் கவனத்திற் கொண்டு காடுகள் மத்தியிலே கவனிப்பாரற்றுக் கிடந்த சிவாலயங்களைத் திருக்கோவிலுக்குரிய முறையிலே செப்பனிட்டுப் பூசைகளை வழமையாக்கி, அப்பகுதியைச் செல்வம் கொழிக்கும்படி தொண்டாற்றினார். உருத்திரபுரம் சிவன் கோயிலைப் புனருத்தாரணம் செய்து, 10 ஆம் வாய்க்காலிலுள்ள மாணிக்கப் பிள்ளையார் கோயில் முதலியவற்றிலே புராண படனம், கூட்டு வழிபாடு ஆகியவற்றையும் ஏற்படுத்தினார்.

அருளாற்றல் மிக்க சுவாமிகளின் சேவைகளிற் பெரும் பகுதி அன்னார் பிறந்த கிராமத்தைவிட, பிறிதொரு கிராமமான கிளிநொச்சியிலுள்ள ஜெயந்தி நகருக்கே அதிகமாகக் கிடைத்தது. அருட்குரவரான யோக சுவாமிகளது கட்டளைக்கமைந்து தனது சேவை குடாநாட்டு மக்களிலும் பார்க்க, கிளிநொச்சிப் பகுதி மக்கட்கே அவசியமான தென்பதை உணர்ந்தவர்; அத்துடன் காலத்தின் தேவைகருதிக் குருநாதர் இட்ட ஆணையைத் தலைமேற்கொண்டு சேவை செய்தசெம்மல் வடிவேல் சுவாமிகள்.

யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத்தில் நலிவுற்றிருந்த சமயம், ஏனைய தமிழ்

பிரதேசங்களுக்குச் சென்று விவசாயம் செய்வதே ஏற்ற வழி எனத் துணிந்து அதற்கு முன்மாதிரியாகக் கிளிநொச்சிப் பகுதியைத் தெரிவுசெய்து தமது உடல் உழைப்பின் மூலம் மனித சேவைக்ளைச் சமூகமயப் படுத்தினார். உணவு வசதியோ, பிரயாண வசதியோ, பிற பொருளாதார வசதிகளோ மிக அருகியிருந்த அந்தப் பிரதேசத்திலே, மக்களுக்குப் பல சலுகைகளை அளித்து மதப்பிரசாரம் செய்து வந்த வேற்றுமதச் சூழலில் இருந்து மக்களைச் சைவத்தின்பால் திருப்புவதும் சுவாமிகளது கிளிநொச்சி அறப்பணிகளின் ஒரு முக்கிய நோக்கமாகவும் இருந்ததென்பர் சுவாமிகளை அறிந்த நண்பர்கள். மேலும்-

''யாவர்க் குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க் குமாம் பசுவிற் கொருவா யுறை
யாவர்க் குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க் குமாம் பிறர்க்கின் னுரை தானே''

என்ற திருமந்திர அறவுரையின் படி அறப்பணிகளை மேற்கொண்ட சுவாமிகள், அதன் ஆரம்பமாகப் பரந்தனிலே நெற்காணியைக் குத்தகைக்கு எடுத்து, தாமே ஒரு விவசாயியாகி, மக்களோடு மக்களாகச் சேர்ந்து வயல்வேலை முழுவதையும் கவனித்து ஆவனசெய்தமை குறிப்பிடத்தக்கது. அப்பணியில் தமக்கு உதவுமாறு பலரையும் தனது சேவையால் ஈர்த்துக்கொண்ட செயற்றிறன் படைத்தவராகவும் சுவாமிகள் மிளிர்ந்தார். இவ்வாறு இப்பகுதி மக்களின் கல்வியறிவும், சமய ஒழுக்கமும் மலர்வதற்குக் குருசேத்திரம் ஒன்றை நிறுவும் பணியிலும் முயற்சிகள் மேற்கொண்டு, அவ்வூர் அன்பர்கள் பலரின் ஒத்துழைப்பினால் அப்பணியிலும் சுவாமிகள் வெற்றிகண்டார். சமூகப் பணியும் சமயப் பணியுமே தலையாய குறிக்கோளாகக் கொண்ட சுவாமிகளின் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படச் சில சைவசமயப் பற்றுடையோர் முன்வந்தனர். சுவாமிகளின் தூண்டுதலும், இறைவன் திருவருளும் பல அன்பர்களின் முயற்சியும் இணைந்து திருநெறிக்கழகம், கரைச்சி சைவ வித்தியா விருத்திச்சங்கம் முதலியன உருவாக்கப் பெற்று, அப்பகுதி மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்வனவாயின.

இவ்வாறு கிளிநொச்சிப் பகுதி வாழ் மக்களின் கல்விப் பணி, சமூகப் பணி, சமயப் பணி அனைத்திற்கும் வடிவேல் சுவாமிகள் மூலகாரணமாயிருந்து இக்கழகங்கள் மூலமாகவே சேவையாற்றினார். இத்தகைய நற்பணிகளை ஆற்றுதற்கு 'நிரந்தர அமைப்பொன்று சைவ மக்கட்குத் தேவை என்பதனை உணர்ந்த சுவாமிகள், கிளிநொச்சி ஏழாம் (7) வாய்க்கால் பகுதியிலுள்ள ஜெயந்தி நகரில் அரசிடமிருந்து மானியமாகக் காணி பெற்று, ஒரு குருசேத்திரம் நிறுவினார். அங்கு பல பிள்ளைகளைச் சேர்த்து சமய நூல்கள், ஞானநூல்கள், தத்துவ நூல்கள், திருமுறைகள் போன்ற பலவற்றையும் கற்பித்ததுடன், உணவு வசதிகளையும் தேவையான விடத்து ஏற்படுத்திக் கொடுத்த வள்ளலாக விளங்கினார். காந்திய சேவா சங்கமும் கிளிநொச்சிப்பகுதியில் சுவாமிகளது நற்பணிகட்கு அவ்வப்போது கைகொடுத்து வந்தது.

சுவாமிகளின் அறப்பணிகளுக்குப் பரமானந்தவல்லி அம்மையார் எனச் சுவாமிகளால் தீட்சாநாமம் பெற்ற அன்னை சைவப்பெண்கள் பலருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்து, அவர் வழியில் நின்று கிளிநொச்சியில் அரும்பணியாற்றியுள்ளார். பெண்கட்குத் தனியான புகலிடம் அமைக்கும் பணியும் அன்னையால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பலரின் விருப்பம். இப்பணி நிறைவேற இறைவன் திருவருள் புரியவேண்டும்.

சுவாமிகளது பல்வேறு ஆக்கப் பணிகளுள் கிளிநொச்சிக் குருகுலமும் சிறப்பிடம் பெற்றுள்ளது. கிளிநொச்சி மகாதேவ

ஆச்சிரமத்திற் கண்மையிலே 45 ஏக்கர் விசாலம்கொண்ட காணியில் பல பெரியவர்களின் உதவியுடன் சுவாமிகளது அருளாசியோடு இது தொடக்கி வைக்கப் பெற்றது. இது இளம் சந்ததியின் சமய, சமூக, கல்விப் பணிகளில் ஆக்கமும் ஊக்கமும் பெற்று உழைக்கும் வகையில் மாணவ சமூகத்தைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வே. கதிரவேலு (அப்பு) அவர்களின் முழுநேர மேற் பார்வையின் கீழ் ஆரம்பிக்கப் பெற்றது. குருகுலம் அமைத்ததன் நோக்கம் மேன்மேலும் வளர்ந்து நிலைபெற திருவருளே வழிகாட்ட வேண்டும்.

அந்த வகையில் அவரது சொந்த ஊரிலும் வடிவேல் சுவாமிகள் தொடக்கி வைத்த இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை போன்ற கல்விச்சாலைகள், இணுவில் மத்திய ஐக்கிய நாணய சங்கம், இணுவில் ஐக்கிய முன்னணிச் சேவா சங்கம், இணுவில் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் என்பன சுவாமிகளின் பணிகளிற் பலவற்றை மேற்கொண்டு செய்து வந்தன எனலாம். வடமராட்சியிலே வதுரியில் உள்ள பரமானந்த ஆச்சிரம சுவாமிகளும் வடிவேல் சுவாமிகளின் அடியவர்களில் ஒருவராக விளங்கியவர். அவர் வடிவேல் சுவாமிகளின் ஆசியுடன் அன்னாரின் திருப்பணிகளில் ஒன்றாகிய ஏழைச் சைவச்சிறார் இல்லம் ஒன்றை அமைத்து, ஆதரவற்ற பல முதியோர்கட்கும் புகலிடம் அளித்து நற்பணியாற்றி வருவது பலரும் அறிந்திருப்பதாகும்.

அருள் பழுத்த ஞான சீலரான வடிவேல் சுவாமிகளை அறியாதார் இணுவிற் கிராமத்திலோ அயற் கிராமங்களிலோ யாரும் இல்லை எனலாம். இணுவிலுக்கு அயற் கிராமமாகிய தாவடியைச் சேர்ந்த சித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு) வைத்தியர் அவர்களுடனும் சுவாமிகட்கு நெருங்கிய உறவும் தொடர்பும் உண்டு. இதனை வைத்தியர் ஐயா மறைந்தபோது சுவாமிகள் வழங்கிய இரங்கற் செய்தியிலிருந்து அறியலாம். வைத்தியர் ஐயாவிடம் பல சைவப் பெரியார்கள் வந்து போவதுண்டு. தமிழகத்தில் இருந்துவந்து, ஐயாவின் வீட்டிலே ஒருவருட காலம் வாழ்ந்து, ஐயா அவர்கட்கு வைத்தியமும் சொல்லிக் கொடுத்த சுவாமி அத்வயானந்தா அவர்களை அக்கிராம மக்கள் பலரும் அறிவர்.

அத்வயானந்த சுவாமி அவர்கள் வைத்தியர் ஐயா வீட்டிலிருந்தபோதே சன்னியாசமும் பெற்று, தமிழகம் சென்று திருச்சியைச் சேர்ந்த திருஈங்கோய்மலையிலே ஸ்ரீ லலிதா மங்கல சமாஜமும் அமைத்துப் பெரும் புகழ் அடைந்துள்ளார். அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வந்தபோது இணுவிலைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு சி. சின்னத்துரை அவர்களால் உபசரித்துப் போற்றப்பட்டவர்கள். வைத்தியர் ஐயா வீட்டிலே அத்வயானந்த சுவாமி, வடிவேல் சுவாமி, நயினாதீவுச் சுவாமி, கந்தையா சுவாமி போன்ற பலரும் அடிக்கடி சந்தித்து ஞான விடயங்கள் பற்றி உரையாடியதுண்டு. வைத்தியர் ஐயாவின் துணைவியார் இது பற்றிப் பல செய்திகளை எம்மிடம் கூறியுள்ளார். அவர் வாயிலாக அறிந்த வரையில் அக்காலத்திலே வடிவேல் சுவாமிகட்குப் பல மகான்களுடன் தொடர்புகள் இருந்ததும் சுவாமிகளது பெருமையும் பணிகளும் அவரை உலகறியச் செய்கின்றன என்பதும் தெரியவருகின்றன.

சுவாமிகளின் நெற்றியில் பூசிய திருநீறும் அதன்மேல் மதியென விளங்கும் சந்தனமும் காவி உடையும், பணிந்த உள்ளமும் ஆன்ம வீரமும் கொண்டவராக அவரது வாழும் காலம் முழுவதும் விளங்கினார்.

''சித்தம் சிவமாகவே சித்திமுத் தியாம்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே''

என்றபடி இடையறாது நெஞ்சத்திலே 'சிவ சிவ' என்னும் மந்திரத்தை ஓதுவார் உள்ளம் சிவனுறையும் திருக்கோயிலாகும். இத்தகைய அழகிய சித்தம் உள்ள சிவனடியாரும் தவச் செல்வருமான தவத்திரு

டிவேல் சுவாமிகளது பெருமைகளும் பணிகளும் சொல்லில் அடங்காப் பயனும் பண்புமுடையன. அவர்களது அறப்பணிகளை மேன்மேலும் சைவ சமூகத்திலே வேரூன்றி நிலைபெறச் செய்தற் பொருட்டு சித்தசுத்தியுள்ள சைவ அன்பர்கள் ஒவ்வொருவரும் அப்பணிகளைத் தொடர்ந்து ஆற்ற முன்வருவதே இன்றைய இந்து சமூதாயம் வடிவேல் சுவாமிகட்குச் செய்யும் பெருவழிபாடாகும். ★

### உதவிய நூல்கள்


1. **கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம மலர்;** தொகுப்பாசிரியர்: சோ பரமசாமி (நம்பி), அகில உலக இந்துமகாநாடு. 1982 ( ஆங்கு சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதி ).
2. **மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர்,** மலர் ஆசிரியர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, 1975.
3. **சித்தவைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு) அவர்களின் நினைவுமலர்,** 1972.


### கிளிநொச்சியில் சுவாமிகள் செய்த கோயில் திருப்பணிகள்

| புதிய கோயில்கள் | அமைந்துள்ள இடம் |
|---|---|
| 1. வட்டக்கச்சிப் பிள்ளையார் கோயில் | வட்டக்கச்சி |
| 2. வட்டக்கச்சி முருகன் கோயில் | வட்டக்கச்சி |
| 3. முரசு மோட்டை முருகன் கோயில் | முரசுமோட்டை |
| 4. மாணிக்கப் பிள்ளையார் கோயில் | உருத்திரபுரம் - 10 ஆம் வாய்க்கால் |
| 5. கனகாம்பிகை அம்மன் கோயில் | இரணைமடு |
| 6. மீனாட்சி அம்மன் கோயில் | ஜெயந்தி நகர் |
| **புனருத்தாரணம் செய்யப் பெற்றவை** | |
| 1. உருத்திரபுரம் சிவன் கோயில் [உருத்திரபுரப் பெருங்குளத்தருகில்] | உருத்திரபுரம் |
| 2. வீரவாகு கமம் பிள்ளையார் கோயில் [தாமரைக் குளத்தருகில்] | பரந்தன் - 5 ஆம் வாய்க்கால் |
| 3. தருமபுரம் பிள்ளையார் கோயில் [1958 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் தோற்றுவிக்கப் பெற்றது] | தருமபுரம் |
| 4. பழைய கொலனிப் பிள்ளையார் கோயில் | கிளிநொச்சி பழைய கொலனி |

— மகாதேவ ஆச்சிரம மலர். 1982.

# சிந்திப்பார்களா!

பரமானந்தவல்லி அம்மையார்
கிளிநொச்சி.

"பெண்ணிற் பெருந் தக்க யாவுள?" இப்பிரபஞ்சம் அனைத்தும் தாயிலிருந்து தோற்றியவை. தாய் நாடு, தாய் மொழி என்றும் தாய்ப் பசு, தாய்க் கோழி, தாய் மரம், தாய்க் கொடி, தாய்ச் செடி என்றும் தாய்மையே முன்னிறுத்திப் பேசப்படுகிறது. தாயிலிருந்து உலகம் விரிந்தது. தாய் இல்லையாயின், தந்தையைத் தெரியாது. ஒரு தேசம் வாழ்வதும் தாழ்வதும் அனேகமாகப் பெண்களிடத்திலேயே தங்கியுள்ளது.

கடவுளின் சன்னிதானமாகிய இப்பூமியில் வாழும் உரிமை எல்லாச் சீவர்களுக்கும் சமம். அவரவர் சக்திக்கேற்ற ஆற்றல்; அதற்கேற்ற கர்மம்; கர்மத்திற்கேற்ற வாழ்வு; வாழ்வுக்கேற்ற பயன்; அதற்கேற்ற பெருமை, சிறுமை; இவ்வாறு யாவும் வந்தமைகின்றன. இவ்வுலகில் தெய்வப் பெண்மணிகள் பலர் வாழ்ந்துள்ளனர். பக்தியில் சிறந்தோர், சித்தி பெற்றோர், கற்பிற் பொலிந்தோர், கல்வியில் மலிந்தோர், ஞானம் அடைந்தோர், சித்த வைராக்கியமுடையோர், துறவு நிலை எய்தினோர், தேசப் பணியாற்றினோர், படையிற் பயின்றோராயும் விளங்கினர். அவர்களின் வாழ்வும் சாதனையும் எமக்கு வழிகாட்டியாய் இன்று விளங்குகின்றன.

பக்தி பண்ணிப் பரமனடியில் இருக்கிறார் காரைக்கால் அம்மையார். தான் சூடியதைக் கண்ணனிடம் கொடுத்தார் சூடிக் கொடுத்த நாச்சியார். சித்த யோகினியாய்ச் சிறந்தார் வாகம்பிரணி தேவியார். வணிகர் குலத்துப் பிறந்த கண்ணகி, கற்பிற் சிறந்து கடவுளானார். கல்வியில் முதிர்ந்த ஔவையார் முருகனை நேரில் காணும் பேறு பெற்றார். பக்தி நெறியில் தளராது வாழ்ந்ததால் திலகவதியாரும் மங்கையற்கரசியாரும் திருத்தொண்டர் புராணத்திற் போற்றப் பெற்றனர். சீதை இராமனைத் தவிர வேறெவரையும் துணையெனக் காணாதவர்; இவர்கள் அனைவரும் தேசப்பணியாற்றி, தெய்விகத்தோடு வாழ்ந்தவர்கள் ஆவர். ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு வகைச் சீரிய சக்தி இருந்து அவர்களைச் ஒளிபெறச் செய்தன.

இப்பாரம்பரியத்தில் தோன்றியவர்களே இப்போதுள்ள பெண்மணிகள். ஆனால் ஒருவர் மனம் மற்றவருக்கு இருப்பதில்லை; ஒருவர் புத்தி அடுத்தவருக்கு இல்லை. இவ்விதமே மற்றக் கரணங்களும் கரண பேதத்தினால் ஒவ்வொருவர் போக்கும் ஒவ்வொரு விதமாய் அமைந்துவிட்டது. இவை வாதனைப் பழக்கத்தால் வந்த பிறவிப் பழக்கம். இறந்த கால நிகழ்ச்சியின் நினைவே, நிகழ் காலம்; அதுவே எதிர்காலத்துக்கும் விதையாகும். இது பெரியோர்கள் ஆராய்ந்து கண்ட முடிபு. பெண்ணினம் தாழ்வடைவது பழக்க தோஷம் என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல சிந்தனை, நல்ல சொல், நல்ல செயல் ஆகியவற்றால் அசுத்த வாசனை போகும்; நல்ல வாசனை உதயமாகும். அதனால் நற்கர்மாக்களை இயற்றி முற்கூறிய பெண்மணிகளாகலாம். வாழ்வு முழுவதும் இன்பமாயிருக்க வேண்டுமென்பது எல்லோரினதும் விருப்பம். அடுத்தவரைப் பார்த்து இன்பமடைய இயலாது. காலதேச வர்த்த

மானத்திற்கும் தன் அறிவாற்றலுக்கும் ஏற்ப அமைத்துக் கொள்வதே நல்வாழ்வு.

தேசப் பணி, சமூகப்பணி ஆகியவற்றில் மேல்நாட்டுப் பெண்மணிகள் முன்னின்று உழைத்தனர் எனில், தெய்வப்பணி, தெய்விக வாழ்வு, இல்லறச் சிறப்பு ஆகியவற்றில் நம்நாட்டு நங்கையர் சிறந்து விளங்கினர்.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென்றெண்ணி யிருந்தவர் மாண்டு
விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்
போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.''

என்ற பாரதியின் கருத்து, மக்கள் மத்தியில் வெறும் வேடிக்கை விநோதமாயிருக்கிறது. பாரதியாரின் ஆழமான தத்துவமயின் கருத்து மறைந்ததாயுள்ளது.

இடைக்காலத்தில் பெண்ணினத்துக்குப் பெருந் துன்பம் செய்தவர்களும் உண்டு. மெய்யுணர்ந்த பெண்கள் அழுதழுது காலம் போக்கினர். இதனால் நாடும் கெட்டு, சமூகமும் கெட்டுப் போயின. பெண்ணின் உடலமைப்பைப் பார்த்துப் புலவர்களும் தத்துவ ஞானிகளும் தம் மனம் போன போக்கெல்லாம் பாடிவைத்துள்ளனர். பெண்ணைத் தனது தாயாகவும் மக்கள் மாதாவாகவும் பார்த்தால் நன்றாயிருக்கும். பகவான் ஒருவனே எசமான். ஏனைய சவர்களனைவரும் அவருக்கு அடிமை. இதை விடுத்து, ஒருவர் இன்னொருவருக்கு அடிமை என நினைப்பது ஏற்புடையதல்ல. அறிய வேண்டிய அறிவு உதயமானால் அறியாமை நீங்கும். அது நீங்காதவரை நாடும் முன்னேறாது என்பதே பாரதியின் உள்ளக் கருத்து.

ஒவ்வொருவரும் தனக்கு இயல்பாக அமைந்த கர்மத்தை ஆராய்ந்து சிந்தித்து— அக்கர்மத்தை நன்கு இயற்றினால் அதுவே தர்மம். தனக்கமைந்த கர்மம் எதுவோ அது சுதர்மம். பொது நோக்கின்றிப் பெருமிதங் கொண்டு மனம் வீணாகத் துள்ளுகிறது. அதனால் போட்டி, பொறாமை வளர்ந்து நீயா, நானா முதன்மையானவர் என்ற கேள்வி எழுகிறது. எம்மவர் இந்து தத்துவம் காட்டும் உயர்ந்த நாகரிகத்தை விற்றுவிட்டு, அயல் வீட்டு நாகரிகத்தைப் பெரும் விலை கொடுத்து வாங்கி விட்டனர். அயல் நாட்டவர்களின் பழக்க வழக்கங்களில் உயர்வான குணங்களும் உண்டு. அவற்றை யெல்லாம் தள்ளிவிட்டு, கீழ்மையான நடை யுடை பாவனைகளில் மோகங்கொள்வது எவ்வளவு மதியீனம்? இதனை ஆழமாகச் சிந்திக்கின், அவர்கள் மீது பிழையொன்று மில்லை; மனம் அவர்களை அறியாமல் பிறரைப் பார்த்துப் பற்றி விடுகிறது.

மனத்தைத் திருத்தியமைக்கப் பல வகைகளுண்டு. கோடானுகோடி ஜென்மங்களில் எல்லாம் வெளியிலே பார்த்துப் பழகிய மனம் திருந்துவதற்குச் சாதனைகள் வேண்டும். பெண்கள் தமக்குரிய தர்மத்தின் வழியிலே எக்கருமத்தைச் செய்தாலும் தீமை வராது. அழகைப் பெண்கள் இயல்பாக விரும்புவர்கள். பகவானுக்குத் தொடுத்து வைத்த பூ மாலையைத் தானே முதலில் அணிந்து, அப்பகவானுக்குத் தான் தகுதியுள்ளவளா? என்று மதிப்பிட்டார் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி. அவர் தனது அழகைப் பகவானுக்கு அர்ப்பணித்தார்; வெற்றியும் பெற்றார்.

இவ்வுடல் பஞ்ச பூதக் கலப்பால் ஆக்கப்பட்டது. இது அழியும் தன்மையது. பெண்களின் உடலமைப்பு, காண்போரை மயக்கும் சக்தி வாய்ந்தது. அந்த மயக்கத்தைக் கொடாமலும் தாங்கள் மயக்கப் படாமலும் நடந்து கொள்ளும் தற்காப்பு, பெண்களிடம் இருத்தல் வேண்டும். தான் நிற்கும் நிலையில் நின்று, உடலும் உள்ளமும் தூய்மையாய் இருந்தால் தீமை

அணுகாது; உள்ளம் உண்மையை அறியும். தன் உள்ளம் தூய்மை உடையதாயின் பார்ப்போர் உள்ளமும் தூய்மை அடையும்.

''அநித்தியமாயும் துக்கம் நிறைந்த தாயுமுள்ள இவ்வுலகில், மானிடர் பிறந்துள் ளனர். ஆதலால் என்னை வணங்கி இன்ப மடைவாய்'' என்பது பகவான் கோட்பாடு. நித்தியமாயும் பேரின்ப வடிவாயுமுள்ள பகவானைச் சார்வதே வாழ்க்கையின் குறிக் கோள் என்பதை அறிந்து சாதனையைக் கடைப்பிடித்தால், வாழ்வில் வெற்றி நிட் சயம். எத்தனையோ பெண்கள் பிரமச்சாரி ணியாய் ஆசிரியைகளாகக் கடமையாற்று கின்றனர். அவர்கள் மூலமாகக் கிராமப் புறப் பெண்கள் திருந்தலாம். வெறும் பள்ளிப் படிப்புப் புள்ளிக்கு உதவாது. நல்ல அறிவு நூல்களைக் கற்று மற்றை யோருக்குப் போதிக்கலாம்.

வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தால் குருட்டு நம்பிக்கையும் கொள்கைகளும் போய்விடும். வாழ்வு இறை அன்பின்பாற்பட்டதே அன்றி, அடிமையின்பாற் பட்டதன்று. பெண்கள் அறிவால், ஆற்றலால், பொறுமையால், உறுதியால், புத்தி சித்தத்தால், உயிர் களிடத்துக் கொண்ட கருஷ்ணையால் சிறந் தவர்கள் என்பதை நினைவிற் கொள்ளுதல் நன்று.

''இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை'' என்பது நீதி வாக்கியம். இல்லத்தரசி இல்லத்துக்கு இலக்குமி. இல்லத்து இலக்குமியின் தரிசனம், பரிசனம், அருள், கண்ணோட்டம் என்பன அவள் இருக்கும் இல்லத்திற்கு மாத்திரமன்றி. அவை எங்கும் வியாபிக்கும். இதனால் அடிமைப் பாங்கும் அறியாமையும் நீங்கும். அந்நிலையில் பாரெல்லாம் காக்கும் பரா சக்தியின் அருள் தானே வெளிப்படும்.

எனவே, பராசக்தியின் படிமங்களாகிய தாய்மார் உலகை உயிரால் நிரப்புவதிலும் பார்க்க உணர்வால், அறிவால், ஆற்றலால், ஆனந்தத்தால், பொங்கி வழியும் கருணை யினால் உலகை மகிழ்விக்க வேண்டும். அகம் நிரம்பிய அன்புடன் அன்னையர் வாழ்வு மலர வேண்டுமென ஆசைப்படு கிறேன். தாய்க் குலத்தைக் கெடுக்கும் பண்டாசுரர்களும் பண்பெனக் காட்டிப் பல் லிழிக்கும் பதர்களும் இன்றும் இருக்கிறார் கள். அவர்கள் கண்களிற்படாது, தவவிரதங் காத்துத் தரணியில் வாழத் தவச்சாலைகள் அமைய வேண்டும். பெண்குலம் காப்பதற்கு இது வொன்றே வழியாகும்.

எங்கள் குருதேவர் — ஸ்ரீ வடிவேல் சுவாமிகள் – மேற் குறித்த தவச்சாலை ஒன்றைத் தனியாக அமைப்பதற்குப் பெரிதும் முயன்றார். ஆயினும் அதற்கேற்ற சூழ்நிலையும் நாட்டு நிலைமையும் ஒத்தி சையக் காலதாமதமாயிற்று. தமது குரு நாதரின் பெயரில் நல்லதொரு ஆச்சிரமம் அமைத்த சுவாமிகளுக்கு இது ஒரு பொருட் டன்று. அவரது எண்ணக் கரு என்றோ ஒரு நாள் நிறைவெய்துவதாக. ★

**மகாசக்திக்கு விண்ணப்பம்**

*''எண்ணிய முடித்தல் வேண்டும் நல்லவே யெண்ணல் வேண்டும்.*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்*
*பண்ணிய பாவ மெல்லாம் பரிதிமுன் பனியே போல*
*நண்ணிய நின்மு னிங்கு நசித்திடல் வேண்டு மன்னாய்''*

*— சுப்பிரமணிய பாரதியார்.*

# அப்பரை நினைவிக்கும் அருளாளர்

**வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை**
தலைவர், கொழும்பு விவேகானந்த சபை.

"மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே."

என்ற சிவஞானபோத வழிகாட்டலை பின் பற்றுபவர் நாம். எனவே,

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

எனத் திருமூலர் செப்பியதற்கமைய எம்மை யெல்லாம் குருமொழியால் தெளிவு செய்த வடிவேல் சுவாமிகளைச் சிந்திக்கக் கிடைத்தமை பெறற்கரும் பேறாகும்.

திருவாதவூரடிகள் புராணத்துள் எமது நாட்டைத் "திரு ஈழநாடு" எனக் கடவுள் மாமுனிவர் விதந்தமை, திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், கதிர்காமம் ஆகிய பாடல் பெற்ற திருத்தலங்கள் அமைந்ததனாலேயே என உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் விளக்கந் தந்துள்ளார். இத் திரு ஈழநாட்டில் திருக்கோயில் வழிபாடு சிறப்புற நிலவ வான்முயடி வாழையாகத் திருக்கூட்டங்கள் காலந்தோறுந் தோன்றித் தொண்டாற்றியமை அறியற்பாலது. இத் திருக்கூட்ட மரபில் ஒருவரே வடிவேல் சுவாமிகள்.

எத்தனையோ அருளாளர்கள்-ஞானாசிரியர்கள் – வாழ்ந்து போந்தனர்; இவர்கள் பற்றிய வரலாறுகள் எமக்கு எடுத்தியம்பட்ட போதெல்லாம் இவை யாவும் புனைகதைகளோ என ஐயுற நேர்வதுண்டு. நாம் வாழுங் காலத்தே நம் மத்தியில் வாழ்ந்த, நமது ஆன்ம ஈடேற்றத்திற்கும் வாழ்வு நலத்திற்கும் அருந்தொண்டாற்றி அருட்பிரவாகம் புரிந்த திருவருட் செல்வர்கள் தமக்கு முன்னிருந்தோரின் வரலாற்றை நம்பத் தகுந்த வகையில் ஏற்றுக் கொள்ளுதற்கு உறுதுணை புரிந்துள்ளனர். இவர்களின் வரலாற்றுப் பெருண்மைகள் சிதையா வண்ணம் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏட்டுவடிவில் வழங்குவது எம் தலையாய கடமை. இந்நெறியே புகுந்து வரலாறு படைத்த புருடோத்தமவர் வடிவேல் சுவாமிகள். யாழ்ப்பாணத்து இணுவில் கிராமத்தை நினைக்கும் பொழுது இணுவில் சிவகாமி அம்மன் ஆலயமும், இணுவில் கந்தன் ஆலயமும் நினைவில் ஓடி வரும் இணுவில் கந்தன் மஞ்சத் திருவுலாவும் சிவகாமி அம்மன் மகிடாசுர சங்கார விழாவும் என்றும் நினைவில் நிற்பவை. இத்திருப்பதிகள் அமைந்த ஊரே வடிவேல் சுவாமிகளின் அவதார பூமியாயாம்.

நான் பாடசாலை மாணவனாய் இருந்த காலத்தில் எமது ஊரில் பல ஆலயங்களிலும் அறநிலைகளிலும் வடிவேல் சுவாமிகள் வருகைதந்து அருளுரைகள், அறவுரைகள் ஆற்றியபோது அவற்றைக் காதாரக்கேட்டு மனதார மகிழ்ந்துள்ளேன். தோற்றத்தில் எளிமையும், புன்முறுவல் பூத்த புனித முகமும், ஆடம்பரமற்ற தோய்த்துலர்ந்த ஆடையும், திருநீறு நிறைந்த மேனியில் உருத்திராக்கமும்

பொலிந்திருந்தமை இன்றும் என் நினைவில் உண்டு. பூசும் நீறுபோல் உள்ளமும் புனிதர் என்ற வாக்கிற்கு அமைந்தவர் அப்பெருந் தகை. அக்காலத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் வரலாற்றைப் படித்து, அவரின் உருவப் படத்தை வணங்கிய நாம், வடிவேல் சுவாமிகளைத் திருநாவுக்கரசு நாயனாராக அந்நாளிற் கண்டோம். பின்னைய காலத்தில் –

''தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே''

என்ற கோலத்தில் திருநாவுக்கரசர் திருவீதியில் எழுந்தருளியமை பற்றிய சேக்கிழார் சுவாமிகளின் பாடல் வடிவேல் சுவாமிகளைக் கண்ட பொழுது நினைவு கூர்வதாய் அமைந்தது.

எமது நாட்டிலே உள்ள பல ஆலயங்களில் ஈசன் பூசனை குன்றி, வழிபாடுகள் சீர்குலைந்திருந்த காலத்து அவ்வாலயங்களில் நித்திய நைமித்திய பூசைகள் குன்றாது இருக்கவும் அங்கே அடியார் கூட்டம் பெருகவும் பெருந் தொண்டாற்றியவர் சுவாமிகள். நாட்டின் மூலை முடுக்குகளெங்கும் இருந்த ஆலயங்களிலெல்லாம் சென்று பக்திப் பிரவாகம் பெருக இவர் ஆற்றிய அருளுரைகளும் ஆத்ம போதனைகளும் அளப்பில. இதனால் அக்காலத்து இளம் சமுதாயமும் இவரை நன்கறிந்திருந்தது. இவரின் போதனைகளைப் பின்பற்றி உயர்வெய்திய சமுதாயம் இன்று முதியோராய் நன்நெறியே வாழ்கின்றது. ஆலயங்களுக்கு அண்மையில் அறம் வளர்க்கும் நிலையங்கள் அமைய வேண்டும் என அவ்வழியே சுவாமிகள் தொண்டு புரிந்தமை அறியலாம். இவர் ஈட்டிய இத்தகைப் பணிகள், இணுவில் சிவகாமி அம்மன் கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், இவற்றை அண்மித்துள்ள காரைக்கால் சிவன் கோவில் ஆகியவற்றில் இன்றும் நிலவி வருவதை நாமறிவோம்.

சுவாமிகள் நாமாவழி பஜனைகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டது மன்றி, இப்பணிக்குப் பல அன்பர்களை ஈர்த்த பேராசானும் ஆவார். ''நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்'' என்று யோகசுவாமிகள் நற்சிந்தனையில் பாடினார். அப்பணியை நடைமுறையில் ஆற்றியவர் வடிவேல் சுவாமிகள். நல்லூர் உற்சவ காலத்திலே வடிவேல் சுவாமிகள் தலைமையில் பக்தர் குழாம் பஜனையுடன் நடைபவனியாக வந்தபோது மாணவராய் இருந்த நாமும் அவர்களுடன் இணைவதற்கு ஈர்க்கப்பட்டோம்.

''பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர் தே னேந்தி யெழிலார் – அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது''

என்றார் யோக சுவாமிகள். இவ்விடத்தில் எங்குரு வடிவேல் சுவாமிகளை நாம் அங்கு கண்டு இன்புற்றோம் எனல் பொருந்தும்.

சுவாமிகள் தலைநகருக்கு வரும் போதெல்லாம் கொழும்பு விவேகானந்த சபையில் தங்குவது வழக்கம். அப்போதெல்லாம் அவரைத் தரிசிக்கவும் அவரது ஆன்மீக உரையைக் கேட்கவும் திருக்கூட்டம் திரள்வது கண்கூடு. அவரின் புனித பாதச் சுவடுகள் பதிந்த பூமியில் பணிபுரிவதும் பெறுதற்கரிய பேறே. சுவாமிகள் வெள்ளவத்தையில் எமது மனைக்கு வருகை தந்த காலங்களில் நாம் உவகை கொண்டோம். அவரின் ஆசிகள் எம்மை வாழ்விக்கின்றன.

சுவாமிகளின் பணி சமயத்துடன் மட்டும் அமைந்துவிடவில்லை. கிளிநொச்சிப் பகுதிக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் குடி வந்த மக்களின் நல்வாழ்விற்காக அயராது உழைத்தவர். அவரின் வேண்டுகோளை ஏற்று அவ்விடத்தே தொண்டாற்ற எத்தனையோ தொண்டர் நிறுவனங்கள் முன் வந்தன. மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டெனவும், மகேஸ்வரன் தொண்டுடன் மக்கள் தொண்டையும் இணைத்தவர் எமது சுவாமிகள். புதிதாகக் குடியேறும் இடத்திலேயே கூடுதலான பணிகள் தேவை எனச் செயல் மூலம் பலருக்கு வழிகாட்டியவர் சுவாமிகள். கிளிநொச்சியில் மகாதேவ சுவாமிகளின் பெயரில் ஆசிரமம் அமைத்து அருந் தொண்டாற்றினார். அத்தொண்டு அப்பூதி அடிகள் நாவுக்கரசர் பெயரில் ஆற்றிய தொண்டுகளுடன் ஒப்பிடற்பாலது.

சுவாமிகள் இருந்து பெரும்பணி செய்த மகாதேவ ஆச்சிரமம் புனிதமும், பொலிவும் பெற்றது. அதனால் அவரது சமாதியை அன்பர்கள் அவ்விடத்தில் அமைத்துள்ளனர். அவரின் சமாதிக் கோயிலைப் பூவும் நீரும் கொண்டு மெய்யடியார்கள் வணங்க வேண்டும் என்பதே அன்னாரது தொண்டர்களின் வேணவா. இதனால் மக்கள் மனதில் அவர் நீங்காத நினைவைப் பெறுவதுடன் அவர்களின் நினைவில் அவரது தொண்டு வளரும். காலமெல்லாம் கர்ம வீரராய் இருந்து அவர் ஆற்றிய தொண்டுகளை அவர் வழியில் முன்னெடுத்துச் செல்வதே நமது கடனாகும்.

வாழ்க அவர் நாமம்!
வளர்க அவரின் தொண்டர் பணி! ★

### அடைக்கலங் கண்டாய்

கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே.

படைக்கல மாகவுன் நாமத்தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அலலேன் எழுபிறப் பும்உனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

— அப்பர் தேவாரம்

# சுவாமிகளை மெச்சிய சமகாலப் பெரியோர்கள்

சோ. பரமசாமி B. Sc.
இணுவில்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இணுவிலூரை அருளாட்சி செய்தவர் இணுவில் பெரிய சன்னியாசியார். அவரின் அணுக்கத் தொண்டராய் வாழ்ந்த கந்தர்-சின்னக்குட்டியார் குடும்பத்தின் குலவிளக்கு, வடிவேல் என்ற தவக் குழந்தை தெய்வத் திருவருளால் பெற்றெடுத்த தமது செல்லக் குழந்தையைத் தான் போகுமிடமெங்கும் தூக்கிச் செல்வார் கந்தர். கந்தரின் சிவ வேடத்தையும் அடியார் பக்தியையும் கண்டு அவரைச் சன்னாசி கந்தர் என்றே பலரும் கூறினர்.

அவர் தோளிலே சுமந்து செல்லும் குழந்தை கண்டோர் மனதைக் கவரச் செய்தது. இதனால் தெய்வ தரிசனத்துக்கும் அடியார்களின் அருளாசிக்கும் அக் குழந்தை ஆளாகியது. ஆலயம் தோறும் சென்று தந்தையார் பாடும் தேவார திருப்பதிகங்களைக் கொஞ்சும் குரலிலே தோளில் இருந்த வடிவேல் குழந்தையும் பாடத் தொடங்கிவிடும். மழலை மொழியில் பண்ணிசைக்கும் தன் அருமை மகனை ஆரத் தழுவி ஆனந்தக் கூத்தாடுவார் சன்னாசி கந்தர். தன் மகன் தெய்வம் தந்த பிச்சை என்றெண்ணி அக்குழந்தை சின்னஞ் சிறிதாய் இருந்தபோதே தக்கார் வாயிலாக தேவாரப் பண்களைப் படிக்க வைத்தார் கந்தர்.

இம் மண்ணில் தொண்ணூறு வயதுக்குமேல் வாழ்ந்த அப் பெரியவர் தனது செல்வ மகனைக் கொண்டு மூவர் அடங்கன் முறையைப் பல தடவைகள் தன் முன்னிலையில் படிக்கச் செய்தார்; அத்துடன் நின்று விடாது பன்னிரு திருமுறைகளையும் தமக்கு முன்னே பதினொரு முறை படிக்கவைத்து மகிழ்ந்தவர் சன்னாசி கந்தர். வடிவேல் சுவாமிகள் பின்னாளில் திருமுறைகளிற் புலமையும் அவற்றை இசைப்பதில் திறமையும் எய்த அவரது தந்தையாரே மூலகாரணமாய் இருந்தார்.

ஆலயங்கள் தோறும் சிவசின்னங்களை அணிந்து கொண்டு சிறுவன் வடிவேல் பண்ணிசைத்து வந்தமை ஊர் மக்களை வியக்க வைத்தது. சிறுவனின் இனிய குரலைக் கேட்டற் பொருட்டு அவர் இருந்த குடிலைத் தேடி ஊரில் உள்ள பெரியவர்கள் வந்தனர். பெருமை சிறுமை, படித்தவர் படியாதவர் என்ற வேறுபாடின்றி அவரது சிறு குடிலுக்கு நாள் தோறும் பலர் வரத் தொடங்கியதால் அவர்கள் மத்தியிலே வடிவேல் ஒரு ஞானக் குழந்தை ஆகிவிட்டார்.

பெரியவர்களின் அருளாசியில் திளைத்த வடிவேல் சான்றோர் பலரின் வழிகாட்டலில் நடந்து அவர்களைத் தமக்கு துணையாக்கியும் கொண்டார். இணுவில் பெரிய சன்னியாசியாரின் அருளாசியினால் பிறந்து, சிவயோக சுவாமிகளது ஆற்றுப்படுத்தலின் படி நடந்து, நயினை முத்துச்சாமியின் அன்புக்கு ஆளாகி, கரம்பொன் தந்த ஞான சற்குருவாகிய கந்தமடத்து சிவகுரு

நாத பீடக் குருமணி ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளிடம் ஞானதீட்சை பெறும்பேறு பெற்றவர் வடிவேல் சுவாமிகள். ஞான தீட்சை பெற்ற சுவாமிகள் வேதாந்த மடத்திலே குருதேவரிடம் வேதாந்த சித்தாந்த சாத்திர தோத்திரங்களைத் தமது இருபத்தைந்து வயதுக்குள் கற்றுத் தெரிந்து கொண்டார். அவரது அற்புத ஆற்றலைக் கண்டோர் கேட்டோர் அனைவரும் அவரைப் புகழ்ந்து மலரினைத் தேடி வட்டமிடும் மதுகரங்களாய், அவர் பின்னே சுற்றி வந்தனர்.

திருமுறைகளைப் பொருள் விளங்கப் பாடுவதிலும் வரலாறுகளைப் பிரசங்கிப்பதிலும் வடிவேல் சுவாமிகளுக்கிருந்த உள்ளாற்றலை அறிந்தவர்கள் அவரைச் சங்கீத கதாப்பிரசங்கியாக வெளிக்காட்ட விரும்பினர். நந்தனார் சரித்திரம், காரைக்கால் அம்மையார், சிறுத்தொண்டர், திருநீலகண்டர் போன்ற மெய்யடியார்கள் பற்றிச் சுவாமிகள் செய்யும் பிரசங்கம் கேட்போரை மெய் சிலிர்க்க வைக்கும்.

அவர் நந்தனார் சரித்திரம் பிரசங்கம் செய்யும் பொழுது தில்லைக் கூத்தனின் திருமுன்னே மலையாக மறைத்துக் கிடந்த நந்தியைப் பார்த்த நந்தனார்–

''வழி மறைத் திருக்குதே மலை போலே
ஒரு மாடு படுத்திருக்குதே''

என்று வருத்தப்படுவதை உணர்ச்சி பூர்வமாய் அவர் பாடியதும், இணுவில் மத்தி முதலியள் கோயிலடியைச் சேர்ந்த இசை வல்லாளர்களான சுப்பர் குமாரசாமி, பெரியதம்பி கந்தையா போன்றவர்கள் பக்கப் பாட்டுப் பாடிச் சிறப்பித்த நிகழ்வுகள் மக்கள் மனதில் என்றும் நிழலாடிக் கொண்டிருக்கும்.

வடிவேல் சுவாமிகள் வேதாந்த மடத்தில் ஞான நூல்களைப் பயின்ற காலத்தில் ஸ்ரீமத் மகாதேவக் குருமணியின் அன்பையும் ஆசியையும் பெற்றுத் தலை மாணாக்கராய்த் திகழ்ந்தார். குருதேவர் மடத்தில் இல்லாத வேளைகளில் அவர் நடத்திய ஞான சாத்திர வகுப்புகளை வடிவேல் சுவாமிகள் நடத்திப் பலரின் நன்மதிப்பைப் பெற்றார். அதனால் அங்கு பயின்ற பலர் அவரின் இனிய நண்பர்களாயினர். அவர்களுள் இணுவிலைச் சேர்ந்த சண்முகம் சுவாமி, முத்துச் சுவாமி இருவரும் வாணாள் முழுவதும் பிரமச்சரியம் காத்து, வேதாந்தவிசாரம் செய்து வாழ்ந்தனர். திரு சண்முகம் சுவாமியார் இந்தியத் திருத்தல யாத்திரிகைகள் மேற்கொண்டு மதுரையில் சில காலம் தங்கி இருந்தார். அவர் அங்கிருந்த காலத்தில் திருக்குறள் உள்ளிட்ட பல சமய நூல்களை அங்குள்ளவர்களுக்குப் போதித்து நற்பெயர் பெற்றார். அமைதியான குணமும் இனிமையான பேச்சும் அவரது இயல்பு.

வேதாந்த மடத்தில் வடிவேல் சுவாமிகள் படித்த காலத்திலே அங்கிருப்பவர் யாராய் இருந்தாலும் அவர்களை வெறுமனே பெயர் சொல்லி அழைப்பதில்லை. ஒருவருக்கு இடப்பட்ட பெயருடன் ''சுவாமி'' என்ற சொல்லையும் சேர்த்தே அழைப்பார்கள். அந்த வகையிலே இணுவில் செல்லையாச் சுவாமியார், சுப்பர் சுவாமியார் (சுப்பிறாயர்), அல்லமாப் பிரபு, வட்டுவினிச் செல்லப்பர், இளந்தாரி கோயிலடிச் சிவசம்பு, மஞ்சத்தடிச் சிற்றம்பலம்(சித்தர்) செல்லர், உரையாசிரியர் சதாசிவச்சட்டம்பியார், புராணிகர் வைத்திலிங்கச் சட்டம்பியார், சிவகாமியின் அடித்தொண்டர் பரமுச்சுவாமி, சுப்பிரமனியம் சுவாமி ஆகியோர் சைவ சமய அனுட்டானம் பேணி இல்லற நெறியிலே சித்தத்தைச் சிவன்பால் வைத்து இன்பம் கண்டனர்.

இணுவிலூரவர்களான இம்மூத்த திருக்கூட்டத்தாரோடு அதிதீவிரப் போக்குடன் வேதாந்த மடத்தை நாடியவர் உடையார்

கோண்டாவில்

# கந்தையாச் சுவாமிகள்

( குடைச் சுவாமி )



சாமியார் இவர் இணுவில் சின்னத்தம்பிச் சட்டம்பியார் (புலவர்) குடும்பத்தின் அருமை மகன். பேராயிரம் உடையார் என்ற பிள்ளைப் பெயர் தாங்கிய இவர், அன்னை சிவகாமியின் அருட்குழந்தை என் பது அவரது பெற்றோரின் நம்பிக்கை. பிஞ்சு வயதிலேயே தெய்விக நாட்டங் கொண்ட இவர் ''நித்தலும் எம்பிரானு டைய கோயில் புக்குப் புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையா ரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கரா சய போற்றி, போற்றியென்று'' சிவகாமி அம் பாளின் சந்நிதியில் எந்நாளும் பாடித் துதித்த பக்தர் ஆவார்.

இவர் தமது அருள் தாகத்தைத் தீர்ப் பதற்குச் சற்குரு தரிசனம் தேடியபொழுது கந்தமடத்து வேதாந்த மடக் குருமணியி டம் செல்லுமாறு சில அன்பர்கள் ஆற்றுப் படுத்தினர். அங்கு சென்ற உடையார் சாமியின் உயர்ந்த பக்தியையும் ஆவலையும் உணர்ந்து கொண்ட குருதேவர், அவருக்கு ஆறுதல் அளித்ததோடு சச்சிதானந்தம் எனத் தீட்சா நாமமிட்டு, அவரின் தாகத் தைத் தணித்தார். நாளடைவில் அவரது மனப் பக்குவத்தைக் கண்டு இணுவிலிருந்த வடிவேல் சுவாமிகளிடம் சென்று ஞான நூல்களைப் பயிலுமாறு நெறிப்படுத்தி னார்.

குருதேவரின் ஆணைப்படி வடிவேல் சுவாமிகளிடம் ஞான சாத்திரங்கள் கற்று வரும்போது குப்பிளானிலுள்ள ஆனந்த சடாட்சர சரவணைச் சுவாமி சமாதி மடத்து மாணிக்கம்மா (குப்பிளான் அம்மா) விட மும் அவர் சென்று வந்ததுண்டு.

ஆயினும், அருள் வேட்கை கொண்ட உடையார் சாமியார் —

உத்தம னத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநிலையில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்தம் மனத்தன பேச எஞ் – ஞான்றுகொல் சாவதுவே!

என்ற திருக்குறிப்புடன் ஊற் சுற்றத் தொடங்கி, தென்மராட்சியைத் தமக்கு உகந்த இடமாக ஏற்றுக் கொண்டார்.

தென்மராட்சியில் உலாவந்த சுவாமி களை இனங் கண்ட அன்பர்கள் சிலர் கைதடியிலே ஓர் ஆச்சிரமம் அமைத்து, அதற்குச் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் எனப் பெயருமிட்டு உதவினர். அவர் அங்கிருந்து ஆன்ம விசாரம் செய்து, தமது முப்பத்தைந் தாவது அகவையில் தேக நீக்கம் செய்துள் ளார். அன்னாரின் சமாதி இணுவில் - கோண்டாவில் காரைக்காலில் பழைய அடியார்கள் முன்னிலையில் வைக்கப் பெற்று, வணங்கி வருவது அவரின் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளது.

அந்த வரிசையில், கோண்டாவில் வடக் கிலே வாழ்ந்த கந்தையாச்சுவாமி (குடைச்சாமி), உப்புமடத்தடி (கண்டனம்) முருகேசுச்சாமி, அம்பலவாணர் சுவாமி ஆகியோர் திருமுறைகளில் ஈடுபாடும் சமய ஒழுக்கமும் பேணி, பிரமச்சரியம் காத்த வர்கள். அவர்களுள்ளே கந்தையாச் சுவா மிகள் அடக்கமான குணம் உடையவர். துட்டரைக் கண்டால் தூர ஓடிவிடுவார். ''நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்தலே'' வாழ்வின் குறிக்கோளென வாழ்ந்தவர். வீண்படாடோபமின்றிப் பைத்தியம் போல் திரிந்து, பலருக்கு அருள் வாக்கும் கூறியவர். அவரது சமாதிக் கோயில் பலாலி வீதியிலே கோண்டாவில் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது.

முருகேசு (கண்டனம்) சாமியார் அடி யார்கள் யாராய் இருந்தாலும் அவர்களைப்

போற்றி நடத்தவர். ஓர் அடியவரைப் பற்றித் தாம் அறிந்த சேதியை அவருடன் தொடர்புடைய மற்றைய அடியார்களுக்குத் தெரிவிப்பதில் இன்பம் காணும் பண்பு அவரிடம் உண்டு.

அம்பலவாணர் சுவாமிகள் உருவத்தில் அகத்தியரை ஒத்தவர், திருநீறும் உருத்திராக்கமும் தரித்து, காவியுடையைக் கொடுக்காகக் கட்டி, சடை முடியைக் காவித் துணியால் மூடித் தலைப்பாகை அணிந்து, ஒரு கையில் விசிறியும் மறு கையில் குடையும் தாங்கிய வண்ணம் ஊர் முழுதும் சுற்றி வருவார். பாடசாலைகள், சிறைச்சாலைகளுக்குச் சென்று சிவனடியார்களின் அற்புதங்களைக் கூறி, பக்திச் சுவை சொட்டக் கண்ணீர் பெருக்கித் தேவாரங்களைப் பாடுவார்.

கூத்தப் பெருமானிடத்திலும் நால்வரிடத்திலும் அம்பலவாணர் சுவாமிகள் கொண்டிருந்த பக்தி மேலீட்டினால், அவர்களின் திருவுருவங்களை வெங்கலச் சிலைகளாக வடிப்பித்து வழிபாடு நடத்தினார்.

இப் பெரியவர் வடிவேல் சுவாமிகளின் விருப்பத்தின் படி உப்பு மடம் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக அமைத்த படிப்பகத்துக்கு வேதபாராயண வாசிகசாலை எனப் பெயரிட்டுள்ளார். அந்நிறுவனம் இன்றுவரை அமைதியான பணிகளை ஆற்றி, அம்பலவாண சுவாமிகளை மேன்மைப்படுத்தி வருகிறது.

வடிவேல் சுவாமிகளுக்கு வேதாந்த மடத்தில் இருந்த தொடர்பினால் அளவெட்டி அம்பலம் சுவாமி, முத்தமிழ் வித்தகர், விபுலானந்த அடிகள், திருநெல்வேலி பரமசாமி, கரவெட்டி ஆசிரியர் ஆழ்வாப் பிள்ளை, நுணாவில் செல்லத்துரை வைத்தியர், பருத்தித்துறை சைதன்யானந்தர், டாக்டர் சுந்தரம் சுவாமி ( மறுபிறப்புத் தூஷண பரிகாரம், பகவத்கீதை விளக்கம் ஆகிய நூல்களின் ஆசிரியர் ), தாவடி வைத்தியர் ஆ. பொன்னம்பலம் (பரமு), புங்குடுதீவைச் சேர்ந்த திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தாபகர் தொண்டர் சீர்பரவும் சரவணமுத்துச் சுவாமி, கொழும்புச் சட்டத்தரணி சு. சிவசுப்பிரமணியம், சேர். கந்தையா வைத்தியநாதன், இராமகிருஷ்ண மடம் ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த ஜீ, தாளையான் திருக்கூட்ட மெய்யடியார் மீறான் சாகிப் சுவாமி, டாக்டர் அருணாசலம் சுவாமி, யாழ்ப்பாணம் கலைப்புலவர் நவரத்தினம், மல்லாகம் ச. அம்பிகைபாகன் ஆசிரியர், சாவகச்சேரி அந்தணப் பெரியார் பொன்னுச்சாமிக் குருக்கள், அராலி இராமலிங்க சுவாமி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் இராமலிங்க சுவாமிகள் ஸ்ரீமத். மகாதேவ சுவாமிகளின் பின் சிவ குருநாத பீடத் தலைமைப் பொறுப்பை ஏற்று, தமது குருநாதர் காட்டிய வழியிலே பணி ஆற்றியவர். அடங்கிய உள்ளமும் எளிமைத் தோற்றமும் கொண்ட இச் சுவாமிகள் வடிவேல் சுவாமிகளுக்கு மிகுந்த மதிப்பளித்து நடந்ததுடன் அவரை வேதாந்த மடத்துக்கு இடையிடையேனும் வருகை தருமாறு கேட்பதுண்டு.

இந்நாட்டுப் பெரியவர்கள் வடிவேல் சுவாமிகளிடம் வைத்திருந்த மதிப்பினைப் போல் தமிழகத்தைச் சேர்ந்த சில பெரியார்களும் அவருடன் நெருங்கிப் பழகி, அவரது சிறுகுடிலில் தங்கி இருந்ததுமுண்டு. திருவிங்கோய் மலையைச் சேர்ந்த அத்வைதானந்த சரஸ்வதி, சேலம் நிஷ்ரானந்த பரமேந்திரசரஸ்வதி, பிரம்மஸ்ரீ அப்புச்சாமி (அப்புக்குட்டி) குருக்கள், ஸ்ரீபதி சுவாமிகள் போன்ற பெரியவர்கள் வடிவேல் சுவாமிகளுடன் அவரது கொட்டிலில் இருந்து உண்டு, உறங்கி, உரையாடி மகிழ்ந்துள்ளனர்.

அத்துடன் செஞ்சொற் கொண்டல் முருகேச முதலியார், திருப்புகழ் அமிர்தம் ஆசிரியர், திருமுருக கிருபானந்தவாரியார், திருவண்ணாமலை குன்றக்குடி அடிகளார்,

கவியோகி சுத்தானந்த பாரதியார், ஹவாய் தீவைச் சேர்ந்த சுப்பிரமுனிய சுவாமி (அமெரிக்கன் சுவாமி) போன்ற பெரியவர்கள் வடிவேல் சுவாமிகளிடம் வந்து உரையாடித் தங்கிச் சென்றுள்ளனர்.

இனிய குரல் வளமும் சொல்லாற்றலும் கைவந்த சுவாமிகளிடம் மெய்யடியார் பலருக்குப் பெரு விருப்பிருந்தது. அவரது, கதாப் பிரசங்கத்துக்குப் பக்க வாத்தியம் வாசிப்பதைத் தமக்குப் பேறாக எண்ணி நடந்தவர்களும் உண்டு. அந்த வகையில் ஆவல் கொண்டு நடந்தவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா அவர்கள். திரு வைத்தீஸ்வர சர்மா அவர்கள் ஆறு தந்திகள் பூட்டிய "வயலினில்" இசை மீட்பதிலே பேர்போனவர். இந்த அந்தணப் பெரியார் சுவாமிகள்மீது கொண்ட பெருமதிப்பினால் அன்னாரிடம் ஞான தீட்சை பெற்று, காவி உடுத்துத் தமது பிற்கால வாழ்வைத் துறவு நெறியில் ஈடுபடுத்தி இன்பம் கண்டுள்ளார்.

இவ்வாறு பல்வேறு துறைகளைச்சார்ந்த பெரியவர்கள் வடிவேல் சுவாமிகள் மீது கொண்டிருந்த பேரன்பினால் அவரிடம் வந்து உரையாடி மகிழ்ந்த நாட்களை நினைத்துப் பார்க்கையில் –

நல்லாரைக் காண்பதுவும் நன்றே<br>
நலமிக்க<br>
நல்லார் சொற் கேட்பதும் நன்று –<br>
நல்லார்<br>
குணங்கள் உரைப்பதுவும் நன்றே<br>
அவரோடு<br>
இணங்கி இருப்பதுவும் நன்று.

என்ற ஔவையின் பாடலையே எமது வாய் மெல்லச் சொல்லும். ★

## நற்குணங்களை வளரச் செய்வாயாக

*மாணவனே! நீ வீடுபேற்றை விழைந்தாயாயின், ஐம்பொறி வழிச் சேறலை ஒழித்து, அவாவின்மை, பிறவுயிர்க் கிரங்கல், பொறுமை, நேர்மை, தன்னடக்கம், சாந்தம் ஆதி மேலான அமுதம்போன்ற நற்குணங்களை உன்னிடத்து வேரூன்றி வளரச் செய்வாயாக.*

**உடலை யோம்புவதிலேயே தன் காலத்தைப் போக்கியும், இன்னும், சித்துப் பொருளாயுள்ள ஆன்மாவைத் தேடி நாடுவான் போல நடிப்பவன், ஓர் ஆற்றைக் கடக்க முயல்பவன், கட்டுமரமென நினைத்து முதலையின் முதுகிலிவர் தலை யொப்பானன்றோ?**

*வீடுபேற்றை விழைந்தா நொருவனுக்கு 'யான்' 'எனது' என்னும் அகங்கார மமகாரங்கள் அழிவைத் தருவனவாதலின் அவன் அவற்றை வென்று அவற்றாற் றாக்கப்படானாயின் மேனிலைக் கருகனாகின்றான்.*

— **ஆதிசங்கர்**<br>
விவேக சூடாமணி.

# நின்பெருமை மலைபோல் வாழி

**அருட்கவி சி. விநாசித்தம்பி**
அளவெட்டி.

பொலிவுறு கலைகள் எல்லாம் பொருந்திய இணுவிலூரில்
தலைபெறு கந்தருக்கும் தாய் சின்னக் குட்டி யார்க்கும்
நிலைபெறு மைந்தனாக நிறைமொழி வடிவேல் சுவாமி
நிலமிசை உதித்தாரம்மா, நிருமலன் வடிவு பெற்றார்.

தந்தைதாய்க் காறாம் பிள்ளை தனிமக னாகத் தோன்றி
முந்திசை முதலாங் கல்வி முறைமுறை கற்றுத் தெய்வ
சிந்தனைச் செல்வனாகி சிவமகா தேவ சுவாமி
தந்திடும் தீட்சை பெற்றுச் சந்யாசி நெறிபிடித்தார்.

சுகந்தரு நயினாதிவுச் சுவாமியார், யோக சுவாமி
அகந்திகழ் சீடனாகி அடியவர்க் கடியனாகி
சகந்தனில் இசைபரப்பித் தவத்திரு முறைபரப்பி
முகம்பொலி முனிவனாகி மொழியொணாச் சிவப்பேறுற்றார்.

★ ★ ★

வளர்ஜெயந்தி நகரிலே பக்தர் கூடும்
மகாதேவ ஆச்சிரமம் தனையமைத்து
வளர்சைவத் தொண்டருக்கு வழிகள் காட்டி
மகாதேவன் மலரடிச்சீர் வழுத்தி வாழ்ந்தாய்
வளர்கதிரின் முகத்தாலும் வாக்கினாலும்
மனத்தாலும் எமைக்கவர்ந்த வடிவேலப்பா,
வளர்சைவ சீலர்நினை மறவாச் சோதி
மயமானாய் **நின்பெருமை மலைபோல் வாழி.**



# கல்லாலின் மேவினார் போல் திகழ்ந்தார்

இணுவையாசிரியர் வை. க. சிற்றம்பலம்
அளவெட்டி.

## ஒருபா ஒரு பஃது

### காப்பு

அருள்சேர் வடிவே லடிகளைப் போற்றி
யொருபா வொருபஃதைப் பாட — திருவாரும்
பொற்பமைந்த முக்கட் புனிதனா மைங்கரத்துக்
கற்பகமே தந்தருள்வாய் காப்பு.

### நூல்

கோயில் மணியோசை குன்றா மறையோசை
ஆயுங் குழல்சங் கரவோசை — நேயம் போ (ல்)
எங்குங் கலந்திசைக்க வீசனருளால் வடிவேல்
தங்கியுதித் தாரிணுவை சார்ந்து. 1

சார்ந்த தரிசனத்தால் சந்நாசி யாரிடத்தில்
தேர்ந்த சிவஞானஞ் சிந்திக்க — ஓர்ந்தேகி
அன்பா லருள்பெற் றரன்பாத முள்ளத்தில்
தென்பாகக் கொண்டார் சிறந்து. 2

சிறந்தபண் ணோடு திருமுறைக ளோதிப்
பிறந்த பிறப்பறுப்பான் வேண்டி — துறந்தே
மறைகளோ யாவிணுவை மல்குதல மெல்லாம்
முறையாகப் பண்ணிசைத்தார் முந்தி. 3

முந்தியே தொண்டர் வரலாறு முத்திமுறை
புந்தியே வைத்துப் புரிந்தாய்ந்து — சிந்தித்தே
ஆலயங்கள் தோறு மடியார் வரலாற்றைச்
சாலவிரித் துரைத்தார் தான். 4

தானேநல் வேளாண்மை சாதித்தும் தக்காராய்த்
தானேநல் வேளாண்மை செய்துண்டும் — தானேயாய்
மேவினார் ஞானப் பசிதீர்த்துங் கல்லாலின்
மேவினார் போல் திகழ்ந்தார் மிக்கு 5

மிக்கநெல் வேலியைச் சேர்ந்துவே தாந்தமடம்
தக்கதெனக் கண்டங்கே தான்சேர்ந்தே — அக்கால்
தலைவராம் மகாதேவ சாமிதாள் சூடி
நிலைகொண் டிருந்தார் நெடிது. 6

நெடியமா தேவர் சமாதியுறப் பூசித்
தடிக ளிணுவை யடைந்து — தடையற்
றளவைச் சிறாருக்கே யாதரவாய்ப் பண்கள்
உளமாரக் கற்பித்தா ரோர்ந்து. 7

ஓர்ந்தநன் னீறு மொளிருந் திருமுகமுஞ்
சார்ந்தருத் ராக்கந் தவழ்மார்பும் — சேர்ந்திலங்கும்
ஒவியம்போ னல்லுருவா யோங்கிவடி வேலடிகள்
காவியுட னேவிளங்கி னார். 8

விளங்குமிரு கண்களாய் வேதாந்தத் தோடு
வளங்கொள்சித் தாந்தமும் வைக — உளங்கொண்டு
மாதேவ ராச்சிரம மாக்கி ஜெயந்திக்கண்
பூதேவ ராய்ப் பொலிந்தார் பூத்து. 9

துலங்கிவடி வேலடிகள் தூய பணிகள்
நலந்திகழ நற்கணே சர்க்கே — பலஞ்செய்தே
நல்ல சமாதியுற நல்லடியார் ஆங்கு மலர்க்
கொல்லையுறக் கட்டுவித்தார் கோயில்' 10

## இணுவில் பரமானந்தவல்லி அம்மை மீது பாடியது

பைந்தாது மீது படிந்து மதுவுண்டு பாடுமளி
வந்தார்வ முற்று குலவுகா ஏரி வளவயல் சூழ்
நந்தா இணுவை யானந்த வல்லிநின் நாமமதில்
அந்தாதி பாடவகுமே அரும்புக ழானந்தமே.

ஆனந்தவல்லி அகிலாண்ட நாயகி அம்பிகையே
மோனந்தரு முத்திவித்தே மயக்கு முனைப் பறுத்து
ஈனந்தருவினை யெய்யா தொழிந்து நமனணுகா
மோனம் மொழி கிளியே பரமானந்த நல்லொளியே.

— நயினாதிவுச் சுவாமி,
ஆத்மஜோதி விசேட மலர், 1958.

உ

# மகானுபாவர் வடிவேல் சுவாமிகள்

## மெய்க் கீர்த்திப் பாசுரங்கள்

பண்டித, வித்துவான் இ. திருநாவுக்கரசு,
இணுவில்.

பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சீரார் ஈழ வளநாட் டில் செல்வம் மல்கும் யாழ்ப்பா ண
        தேசந் தன்னில் நடுநக ராம் தெய்வப் பதிநல் லிணுவை யினில்
காரார் வேளாண் குலதில கர் கந்தர் என்றே பெயர் வழங்கும்
        காசி நாதர் மனைவி சின்னக் குட்டி யம்மை தவப்பய னால்
ஏரார் தனிமைந் தன்உதித் தான் இவர்க்குப் பிள்ளைத் திருநா மம்
        ஏற்றம் மிக்க வடிவே லு என்றே முருகன் பெயர் புனைந்தார்
வாரார் முலைமங் கையர் ஐவர் தம்பி யாக வளர்ந்த தனால்
        வளரும் தெய்வக் குழந்தையென வாழ்த்த வளர்ந்தார் வடிவேலு 1

இணுவை நகர்வாழ் அண்ணா வி ஏரம் பர்க்கு மருமக னாய்
        இயற்கைப் புலவன் சரவண முத்துப் பண்டிதர்க்கோர் மாமனுமாய்
அணுகி மாமன் அறமலிந் த சேது லிங்கச் சட்டம்பி யார்
        அரவ ணைப்பில் பகலிர வாய் ஆத்ம ஞானச் சுடரா னார்
நணுகித் தந்தை பூசை செய்து நன்கு காத்த சிறுகோ வில்
        நலமார் பரமா னந்த வல்லி அன்னை யைத்தாமும் பூசித் து
நுணுகி ஞான வாசிட் டம் முதலாம் ஞான சாத்திரங் கள்
        நுண் மாண் குருசீடர் மரபில் முறையாய் உணர மனங் கொண் டார். 2

வேதாந் தமடம் தனையணைந் து மேலாம் சார்ஜன் சுவாமிக ளும்
        மிக்க ஞான குருநா தர் கனக ரத்தின சுவாமிக ளும்
போதாந் தந்தேர் மகா தேவ புகலார் ஞான குருமூர்த் தி
        பொன்னார் ஞானத் திருவடி கள் குருவாய்ச் சிந்தை தனில் நிறைத்து
நாதாந் தத்தின் முடிவா ன ஞான சாத்திரங் களெல் லாம்
        நன்கு கற்றுத் தெளிந்து நிட்டை கூடி ஞான வாரி சாய்
வேதாந் தநன்னூற் பரவை யிலே விளங்கு ஞான முதிர்வெய்தி
        மிக்க ஞானி வடிவே லு சுவாமி ஞான குருவா னார். 3

அளவை யூரின் கொடை வள்ளல் ஆன்ற ஞானி நாகலிங் கம்
அவரின் தம்பி தாமோ தரம் பிள்ளை இவர்கள் இருவரு மாய்
வளமார் இணுவை மாநக ரில் மன்னும் பரமா னந்தவல் லி
மகிழத் தொண்டு புரிவடி வேல் சுவாமி களுக்கன் பினரா கி
அளவை நகரில் ஆச்சிர மம் அமைத்து ஞான குருவாக
அமர்ந்து ஞான ஒளிபரப் ப அணைதல் வேண்டு மென வேண்ட
இளமை தொட்டே துறவு நெறி விழைந்த வடிவேல் சுவாமி களும்
இசைந்து பல்லாண் டளவை நகர் ஏகி ஞான மழை சுரந்தார். 4

தணிகைப் புராண உரை கண்ட சால்பு நிறையம் பிகைபா கர்
தனக்கு மூத்த புதல்வ ராம் தகைமை மிக்க வைத்திய லிங்கம்
அணியார் ஆசான் மாணிக் கத் தியாக ராசா முதலா னோர்
அத்வை தானந்தா நயி னா தீவு முத்துச் சுவாமி களும்
மணியாம் விபுலா னந்த அடிகள் மலி சீர் அப்புக் குருக்கள் மற்றும்
மகிமை சான்ற பண்டிதர் கள் வளரும் சைவப் பெரியார் கள்
குணியா ஞான குரு வடிவேல் சுவாமி யுறைந்த இணுவை நகர்
குறுகி ஞான வாராய்ச் சிக் கொள்கை யோடு வளர்த்து வந்தார் 5

கல்விச் செல்வம் பொருட் செல்வம் கலைசேர் ஞான தவச் செல்வம்
கருதும் வடநூல் செந்தமி ழின் கலைகள் யாவும் கைவந் து
சொல்விற் பனம் சற்பிர சங்கம் சுருதி ஞானம் லயசுத் தம்
தூக்கும் பனுவற் பாசுரங் கள் துதிசெய் செந்நா நலம் சிறந்து
நல்லோர் வணங்கும் கற்பக மாய் ஞானங் கனிந்த தவத்திரு வாம்
ஞானி யோக சுவாமி களின் நாமம் சிந்தை தனில் நிறைத்து
எல்லோ ருக்கும் நல்லவராய் இருந்த வடிவேல் சுவாமி களை
இன்பில் இனிதாம் துறவொ ழுக்கம் இசைந்த அப்பர் அடிகளென் போம். 6

தாயைப் பெற்ற தந்தை தனைத் தகுதிகாண் நற் சுற்றங் களை
தன்னைப் போல நேசித் துத் தக்கோர் சங்கம் பல கூட்டி
மாயைப் பிறவி தனை யொழிக்க மரபாய் நோன்பு பலவி யற்றி
மன்னும் உலகில் தாமரை சேர் மலிநீர்த் துளிபோல் விடுதலை யாய்
நோயை நொடியை யணுகா மே நுண்மாண் ஞானச் சுடர்த் தீயால்
நோற்றல் ஆற்றல் தலைசிறப்ப நுணுகி யாய்ந்து போதனை செய்யும்
வாயை வாழ்த்த மனம் நினைக்க வணங்கச் சென்னி தனைக் கொண்ட
மகானு பாவர் வடிவே லுச் சுவாமி அப்பர் அடிகளே. 7

மங்களம்

சற்குரு நாதர் திருவடி சரணம்.

உ

# வடிவேல் சுவாமியின் சீர் சிறந்து வாழி

''கவிமாமணி'' ந. வீரமணி ஐயர்,
இணுவில்.

செந்தமிழ்சேர் சைவநெறிச் சீலம் ஓங்கும்
செழுமைமிகு இணுவையிலே அருள் சொரியும்
சுந்தரியாம் அன்னையவள் பரமா னந்த
வல்லியின்பொற் பதமலரை நிதமும் பூசை
புந்தியும் உருகிடவே செய்த ஞானி
பூந்தமிழோ டாரியமும் புரந்து போற்றி
சிந்தையில்வே தாந்த நெறி தேக்கி வைத்த
செவ்வடிவேல் சுவாமியின் சீர்சிறந்து வாழி. 1

நெற்றியிலே திருநீற்றுக் குறிகள் தோன்றும்
நேர்கழுத்தில் அக்குமணி மாலை தோன்றும்
நற்றிரு மேனிமேக வண்ணம் தோன்றும்
நல்லுருக் கம்பீர வடிவு தோன்றும்
பற்றிடு பொற்றாளங்கள் கரத்தில் தோன்றும்
பண்ணிசைநற் செய்வாயில் மலர்ந்து தோன்றும்
பற்றிடா அன்புடனே அருளும் தோன்றும்
வடிவேல் சுவாமியெனும் தொண்ட ருக்கே. 2

இணுவையிலே அம்பிகையாம் பரமா னந்த
இனியதாய் உறைகோயில் மருங் கினிலே
இணையில்லாச் சிறுகுடிலில் இருந்தார் அண்ணல்
இறையகப் பொருள் தனிலே ஊறி நின்றார்
கணுமுற்றும் கருப்புபோல் கவிந்த மிழும்
கற்றாரும் சித்தர்கள் இனிமை சொட்டும்
அணுவுக்கு அணுவாக ஆத்மி கத்தை
ஆராய்ந்து உணர்த்தினார் வடிவேல் சாமி. 3

சைவசித் தாந்தமழை சொரிந்த செம்மல்
சாற்றிய சற்பிரசங்கம் மனத் தகத்தே
வையகத்தில் ஆழமுடன் பதிந்தே நிற்கும்
வடிவேல் சுவாமிகளின் தமிழ் இனிக்கும்,
ஐவகைப் புலனடக்கும், அறிவும் ஆற்றல்
ஆனந்தத் தேன்பிலிற்றும் தேவா ரப்பண்
துய்யநல் லருள்பொழியும் பரமா னந்த
வல்லிபதம் தொழுதெழுவார் வடிவேல் சுவாமி. 4

நயினை முத்துச் சாமியெனும் ஞானி ஆசி
நயந்திடவே வேதாந்த ரகசி யங்கள்
பயிலும் எழிற் சீடராகிப் பக்கு வமாய்
பைந்தமிழில் பண்ணிசைத்துப் பரமா னந்தத்
தயிர்கடைந்து தத்துவமாம் நவநீ தந்தைத்
தந்தனரே சுத்தானந் தர்ம கிழ
அயில் வடிவேல் சாமியவர் ஆத்மீ கத்தின்
அருந்தொண்டு செய்தார்வே றொருவ ருண்டோ. 5

ஆறாறு தத்துவங்கள் அழகாய்ச் சொல்லி
அதற்கான வர்ணனைகள், கதைகள் கூறி
ஈராறு முகத்தானின் புராணந் தன்னை
இனித்திடவே பகன்றமொழி செவிக் கினிக்கும்
பேராளன் கிளிநொச்சி (உ) ருத்திர புரப்
பெருமடமாம் மகாதேவ ஆச்சிர மத்தை
தாராள மனத்தோடு தளைக்க வைத்தே
தமிழ் சைவம் தரணிமிசை பரப்பி நின்றார். 6

அன்னவரின் தொண்டெல்லாம் அருந்த மிழ்போல்
அவனியுள் ளளவுநின் றிலங்கி வாழும்
சொன்ன மொழி கல்லெழுத்துப் போல நெஞ்சில்
சோபித்துத் தெய்வீக வாழ்வு காட்டும்
இன்னமுத இன்னிசைப்பண் இதய மெல்லாம்
இறும்பூதச் செய்துபுல் லரிக்கச் செய்யும்
வன்ன அருள் வடிவழகி பரமா னந்த
வல்லிகழல் பணிவடிவேல் சாமி வாழி! 7

✲

நயினாதிவுச் சுவாமி எனப் பலராலும் பாராட்டப்படும் ஞானவள்ளலிடம் போதிய கவியாக்கும் திறமை இருந்ததற்கு அவரின் பாடல்களைக் கண்ணுற்றால் விளங்கும். அன்றியும் அவர் பாடல்களில தேசபக்தி, தெய்வீகம் யாவும் பொலிந்து விளங்குகின்றன. இவர் சென்ற தலங்கள் தோறும் பல பாடல் களைப் பாடியுளளார்.

காரைக்காட்டுச் சிவன்கோவிலுக்கு இவர் எழுந்தருளிய போது உள்ளம்பூரித்து "நாயன்மார்கள் பாடியதுபோல் நானும் பாடட்டுமா" என்று விளையாட்டாகக் கூறி "நந்தார் படை ஞானன்" என்ற தேவாரப் பண்ணில் (நட்ட பாடை) பின்வரும் பாடலைப் பாடினார்.

எல்லாமுடை யெந்தாயேறேற் றுடையாய் செந்நெல் வயல்சூழ்
நல்லார் மலிகாரை வனநந்தா நடுமீதே
சொல்லால் முடிவாகா பலசோலை முகிலோங்க
எல்லாந்தர இருந்தான் அடியெமையா ளுடையானே.

— **வடிவேல் சுவாமிகள்**

ஆத்மஜோதி விசேட மலர், 1958.

# தர்மநல் இணுவையின் நற்பயன்

பண்டிதர் சா. வே. பஞ்சாட்சரம்,
இணுவில்.

சிவத்தமிழ்த் தவத்திரு வடிவேற்சுவாமி
திருவடி சென்னியில் சூடுவமே!
பவத்துயர் அறுத்தெமைப் பரனடிக்கே
பக்குவப் பூக்களாய் வழங்கிடவே!
குவித்தெங்கள் புலனைந்தும் இறைதொழவே
கூட்டிடும் பணிகொண்ட குருபரனே!
தவப்பொழுதாய் வாழ்வு தழைத்திடவே
சாமிநும் பாதங்கள் சார்ந்தனமே. 1

சித்தாந்தம் வேதாந்தம் திகழ்தரவே
தியானத்தில் திளைத்தெமக் கருள்குருவே
உருத்திர புரமகா தேவமடம்
உற்பவித் தாத்மிக ஒளிபரப்ப
சித்தராம் யோகர்தம் ஆணையேற்றே
சேர்ந்தங்கு தவப்பள்ளி படைத்தவரே!
பத்தராய்ச் சீடரை நாட்டிலெங்கும்
படைத்தருள் கனிந்தநல் லுயிர்விளக்கே!. 2

கர்மநல் யோகி, நம் உயிர்க் கலங்கள்
கரையுறச் செய்கலங் கரை விளக்கே
வர்ணயா கஞ்செய்தே படுவரட்சி
மறைந்திட மழை பொழிவித்தவரே
சர்வலோ கங்களும் தலைவணங்கி
சார்ந்த குருவெனும் போதந் தந்தீர்
தர்மநல் இணுவையின் நற்பயனே
சால் கந்தர் சின்னக்குட்டி யார்தவமே!. 3

வடிவேற் சுவாமிகள் மலர்ந் திருந்த
மாதேவ ஆச்சிரம மரபு வாழி!
அடிதொழுஞ் சீடர்தம் அன்பு வாழி
ஆன்மீக பரம்பரை எழுச்சி வாழி!
குடிபல ஏத்தன்ன பூரணியால்,
குகன் கண பதியினால் குளிரிணுவை
அடிஅடி யாய்க்குரு பதம்தொழுதே
ஆன்மிக ஒளியேந்தி வாழி வாழி! 4

**மங்களம்! மங்களம்!! மங்களம்!!!**

உ

# அஞ்சலில் நெஞ்சங் கொண்ட அருள்ஞானி

"அளவைக் கிழவனார்"

**மெய்வைத்த** சமயநெறி மிளிரும்நல் வேதநூற் பொருளை நன்கு
கைவைத்த சைவநெறி காட்டுகின்ற கடவுளையே கருதி நிற்ப
தெய்வநெறி மாறாத வடிவேல்சாமி சிறந்தபெரு ஞானியாக
உய்யவரும் இணையில்நகர் ஓங்குதற்கு ஒருதவத்தால் வந்துதித்தார். 1

செந்தமிழ் சீர்க்கடற்பரப்பில் சேர்ந்தபல புராணங்கள் ஆய்ந்துணர்ந்து
பைந்தமிழிற் சுவை சொட்டப் பேருரைகள் பலவாற்றிப் பண்ணுமோதி
இந்துவென எங்கணுமே ஒளிபரப்பி பற்றுகின்ற பாசநாசக்
கந்தறுத்த வடிவேலர் கதை சொல்வேன் கேண்மின் கேண்மின். 2

மஞ்சுபடி மதில் சூழ்ந்த மாமுருகனுறை பதியில் வாழ்ந்த செம்மல்
கஞ்சமலர் கொண்டுவப்பக் கந்தனடி தொழுதெழுந்து கவலையற்றோன்
விஞ்சுபுகழ் ஞானியாய் வேதமறை கற்றுணர்ந்து விளங்குஞ் சேயோன்
அஞ்சலிலை யெனவாழ்ந்த வடிவேலர் அருட்கருணை அளந்திடுதல் எளிதாமோ. 3


நிலம்புகழும் தமிழ்நாட்டு வித்தரெல்லாம் கொண்டாட நியமம் நீங்காத்
தலம்பலவும் தரிசித்துப் பிரமம் பெற்றுத் தவம்மாறாச் சைவனாகிப்
புலம் தந்த வடிவேலர் சொற்பெருக்கைப் பொறுமையுடன் செவிமடுத்து மும்
மலம் நீங்கி வாழ்வதற்கே வழி சமைத்தார் மா ஞானி வடிவேல் சாமிதானே. 4


## வேறு


கழுத்தினில் கடுக்கைமாலை கையினிற் புத்தகங்கள்
பழுதிலா மேனியெங்கும் பரந்தநீற் றொளியின் கீறு
தழுவிய தண்டும் தோளில் தரித்திடு காவித்துண்டும்
விழுவிலா வடிவேல் ஞானி வரனவர் கொண்டதோற்றம். 5


பிறைசூடும் செஞ்சடிலப் பெருமானை அனுதினமும்
கறையழிந்த நெஞ்சத்துக் கருத்தமைந்த தவசீலர்
நறைவீசும் கடப்பமலர் தாரணியும் முருகனடி
நிறைவாகத் தம்மனத்துள் நிட்டைகொளும் மெய்ஞ்ஞானி. 6


தவத்திரு வடிவேல் சுவாமிகளின் தவக்கோலங்கள்













வடிவேல் சுவாமிகளை வளர்த்தெடுத்த இணுவை நகர்
விடையேறும் வித்தகனை விரும்பித் தொழுதெழுவார்
கடிநாறு கூந்தற் கமலையும் உறைந்திடுவாள்
படையேறி வந்தாலும் பயங்கொள்ளார் அந்நிலத்தோர். 7

நெஞ்சிலே நிறைந்த ஞானம் நினைவிலே ததும்பும் போதம்
அஞ்சிலே ஒன்றுகண்ணில் அரும்பிய சிவனார் பார்வை
விஞ்சிய புகழைப்பேசும் பெருமானின் சரிதை கூறும்
அஞ்சலில் நெஞ்சங் கொண்ட அருள்திரு வடிவேல்ஞானி 8

இணையிலா இணுவை தன்னில் இருளற ஒளிபரப்பி
துணையெனத் தனக்கோர் உற்ற தூசுமிங்கு கொள்ளாராகி
கனைகழல் கந்தன்பாதம் கண்ணீராற் கழுவிமோந்து
புனைதரு முனிவரானர் புனிதராம் வடிவேல் சாமி 9

வாய்த்த மலர்ச் சோலையும் வளம் கனி தடாவையும்
ஏய்ந்த நிதிச் சங்கமொடு இணுவைநகர் பொலிவெய்த
தோய்ந்த பெருஞ் சிவதொண்டைச் சீராகச் செய்தவரும்
வாய்ந்த வர்கள் கவிக்கடங்கா வளம்பெற்றார் வடிவேலர். 10

## தரணியில் யான் மறவேனே

சங்கீதகலாவித்தகர் சி. சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.

குருபத்தி தனைக்கொண்டு கிளிநொச்சி வந்து
    கூட்டுமரக் காடதனை வீட்டிநா டாக்கி
ஒருபத்தி மாதேவ ராச்சிரம மமைத்து
    ஓதுகின்ற பிள்ளைகள்முப் போதும் வரப்பயிற்றி
பெருபத்தி வழிநின்று பெருந் தொண்டு செய்து
    பிறங்கு மொருகுரு வெந்தை அரங்கில் தெரிவாக்கி
இருபத்தி யெட்டாண்டு ருத்ரபுரிப் பெருமான்
    இணையடிகள் ஏத்தினார் எம்வடிவேல் சுவாமி.

பண்ணொன்று திருமுறைகள் சிவகதைகள் அறிந்து
    பாங்கான பக்தருக்குப் பழக்கிப் பயன் சேர்த்தே
கண்ணொன்று வேதாந்த சித்தாந்தங் கனிய
    கடவுளரு ளாற்பொலியும் சிவமெனவே நின்று
விண்ணொன்று புகழ்பெற்ற சங்கங்கள் அமைத்து
    விளங்குதிரு ஜெயந்திக்கண் ஆச்சிரமத் திருந்து
தண்ணென்ற வுபதேச மென்தனுக்கு மளித்த
    தவவடிவேல் சுவாமிகளைத் தரணியில் யான் மறவேனே.

# வேதாந்த சித்தாந்த ஒளியாய் வாழி

கவிஞர் செ. குணரத்தினம்
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

நீர்வளனும் நிலவளனும் வாய்த்த தன்றி
நெறி பிறழா மனவளனும் நிறைந்த தென்று
ஏர் பெருகும் இணுவை வளம் ஏற்றிச் சொல்வார்
இவ்வூரிற் பிறந்த சித்தர் வடிவேல் சுவாமி
பார்புகழும் யோக ரொடு நயினைச் சாமி
பார்வை பெறு திருநெறியே பயின்ற ஞானி
பேர்பெரிய வேதாந்த மடத்திற் சேர்ந்து
பிரிய மகா தேவரருள் பெற்ற யோகி.

உய்வண்ணம் உளதென்று ஆத்ம ஞானம்
உவப்புடைய வடிவேலர் இணுவை யூரின்
செவ்வண்ண நிலவளம் போல் செறிந்த கீர்த்தி
சிறப்புற்றுச் செம்மைபெறச் சீராய் ஏற்றி
மெய்வண்ண அறத்தாறு மிக்குப் போற்றி
மேதினியை உய்விக்க விருப்புக் கொண்டே
மைவண்ணக் கண்டனருள் நாளும் வேண்டி
மாதவங்கள் பலசெய்ய மனமுங் கொண்டார்.

தேவாரப் பண்ணிசையைத் தெரிந்து நாளும்
தெவிட்டாமற் பாடவல்ல வடிவேற் சுவாமி
நாவாரப் போற்றினார் சமய சீலம்
நயந்தேத்திப் பிரசங்க மழை பொழிந்தார்
பாவார்ந்த நாவர் கிளிநொச்சி நண்ணி
பக்தியுடன் மகாதேவக் குருபரர்க்கு
மூவாத ஆச்சிரமம் நிறுவி நித்தம்
முந்துதவ நெறியினிலே மோனங் கொண்டார்.

நற்றவர்கள் நல்லடியார் பாதம் போற்றி
நறியநல் மலர்தூவி நயந்து நின்றார்
கற்றவர்கள் கண்டுவக்கும் காட்சி யாளர்
கடிது வந்து காத்திடு நற்கர்ம யோகி
வற்றாத நினைவதுவாய் வாய்மை யோடு
வடிவேலுச் சுவாமியவர் மலர்த்தாள் போற்றி
வெற்றி யொடு மலர் உருவாய் வெளிவந் தோங்கும்
வேதாந்த சித்தாந்த ஒளியாய் வாழி!

சுபம்.

தோத்திரப் பாடல்கள் பற்றி ஒரு கண்ணோட்டம்

# சுவாமிகள் பாடல் பக்திப் பயிரை வளர்த்திடும்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

ஆலயச் சிறப்பும் அருமறைச் சிறப்பும்
அந்தணர்ச் சிறப்பும் அருங்கலைச் சிறப்பும்
தன்பாற் கொண்ட தனிநிகர் இணுவில்
ஒப்பில் நற்பதி செப்பருங் குணத்து
ஞானியர் பலரை ஞாலமே வியப்ப
நல்கிய பண்பால் நனிசிறந் ததுவே!
அப்பதி தந்த வடிவேல் சுவாமிகள்
உள்ளமாம் கோவிலில் வள்ளலை இருத்தி
நின்றிடும் போதும் இருந்திடும் போதும்
நடந்திடும் போதும் கிடந்திடும் போதும்
வணங்கும் இயல்பு வாய்க்கப் பெற்றவர்;
இறைவெள் ளத்தில தாம்திளைத் ததுபோல்
யாவரும் திளைத்தலை விரும்பிய சுவாமிகள்
எல்லாம் வல்ல இறைபுகழ், தண்டமிழ்ச்
சொல்லால் விளக்கும் கருத்துடை யோராய்
நொச்சி யம்பதி முருகன் தோத்திரம்
உருத்திர புரீஸ்வரர் பள்ளி எழுச்சி
ஆய பாடலும் இன்னும் பலவும்
நேய உள்ளம் கொண்டே பாடினர்.
உள்ளத் தெழுந்த சுவாமிகள் பாடல்
இலக்கண இலக்கிய மரபினைப் பேணி
பக்திப் பயிரை வளர்த்திடும் பாங்கின;
உயிர்க்கெலாம் இரங்கும் உயர்தனிப் பொருளையும்
உயிர்க்குலம் தன்னையும் உறுதளை தன்னையும்
விளக்கும் வகையில் அமைந்த சிறப்பின;
பொற்கலத் தமுதென நற்சுவை பயப்பன;
தெய்வநெறியை தெற்றெனக் காட்டிடும்;
வையம் உய்யும் வழித்துணை யாமே.

மணிமொழிகள் பற்றிய ஒரு நோக்கு

# நீ வந்த வேலையைப் பார்

சைவப் புலவர் சு. செல்லத்துரை,
இளவாலை.

வடிவேல் சுவாமிகளின் திருவாய்மலர் மொழியைத்
திடமாகப் போற்றிடுவோம் — தம்பி
தித்திக்கும் இன்பமடா. 1

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருக்கவைத்த
வல்லவன் பாதமலர் — தம்பி
வழிபடச் சொன்னாரடா. 2

ஆழ்கடலின் ஆணிமுத்தை ஆரறிவாரோ நீ
ஆழ்ந்தநிட்டை கூடிடென்றார் — தம்பி
ஆனந்தமாய் வாழ்வோமடா. 3

இருந்தபடி யேயிருங்கள் எல்லாம் நடக்குமென்ற
அருந்தவ முனிமொழியைத் — தம்பி
மருந்தாகக் கொள்வோமடா. 4

நினைப்புமறப்பு அற்ற நிலையில் இருந்துமன
முனைப்பை விடுங்கள் என்றார் — தம்பி
நினைந்து தொழுவோமடா. 5

அவரவர் வந்தவேலை அவரவர் பார்க்கட்டுமே
நீவந்த வேலையைப்பார் — என்றார்
நித்தம் மறவோமடா. 6

துன்பம் வருவதெல்லாம் தெய்வஅனுக்கிரகம்
நன்றென் றிருந்திடென்றார் — தம்பி
நல்லதைச் செய்வோமடா. 7

உண்மைக்கு அழிவில்லை இன்மைக்கு இடமில்லை
உண்மையைச் செய்திடென்றார் — தம்பி
உண்மையில் வாழ் வோமடா. 8

சுயநலத்தை விட்டிடுவாய் தூய்மையாய் வாழ்ந்திடுவாய்
சுகத்தை நீ காண்பாயென்றார் — தம்பி
தொண்டராய் வாழ் வோமடா. 9

சலனம் அடங்கிவிட்டால் மனமும் அடங்கிவிடும்
சஞ்சலம் இல்லையென்றார் — தம்பி
சாந்தமாய் வாழ் வோமடா. 10

தவத்திரு வடிவேல் சுவாமிகள் பாடிய

# உருத்திரபுரீஸ்வரர் தோத்திரப் பாக்கள்

## பதிகம் 1.

திருச்சிற்றம்பலம்

நீதியே நிறை மெய்ஞ்ஞான நின்மலா நினது பாதப்
போதினைப் பொருந்த எண்ணிப் போற்றினேன் பொய்மை தீர்த்து
வாதியா நின்ற வஞ்சக் கள்வரால் வருந்தும் நெஞ்சம்
சோதி ருத் திரபுரத்துச் சுந்தரா அருள்செய் வாயே. 1

தந்தைநீ என்னையீன்ற தாயும் நீ தமிய னேனை
பந்தியா நின்றபாசப் பகையிருட் படலம் மாற்றி
அந்தியும் பகலுமுந்தன் அடியிணை நிழலைச் சார்ந்து
வந்திக்கும் வாழ்வுநல்காய் வளர்ருத்ர புரத்து ளானே. 2

சிந்தைதான் திகைத்த தையா திருடர்தம் சிதைவினாலே
எந்தைநீ யென்னைக்காத்துன் இணையடி நீழல் சேர்த்து
முந்தைநின் கோலங் காட்டி முடிவிலா வளங்களோங்க
வந்துநீ ஆளவேண்டும் வளர்ருத்ர புரத்து ளானே. 3

சுற்றமுந் துணையும்விட்டு சுந்தர சொரூப ஞானம்
பற்றியான் வாழவேண்டிப் பதப்பிணைபற்றி நின்றேன்
சுற்றைவார் சடையினானே கடுக்கையும் கண்ணி சூடும்
அற்புதா ஆள வேண்டும் அருள்ருத்ர புரத்து ளானே. 4

மாதினைப் பாகமாக மருவிநீ மகிழ்ந்தகோலம்
ஆதியே யடியார் கண் அமர்ந்தனை அன்னா ளின்னாள்
தீதிலா மனத்தார் வந்துன் திருவடித் திறம்வழுத்த
கோதிலாக் கோலம் காட்டி அருள்ருத்ர புரத்துளானே. 5

ஈசனே யிறையே நின்றன் இணையடி இரண்டும் வேண்டி
மாசிலா மனத்தார் வந்தே நின்னுடன் மருவி நிற்க
காசியிற் கண்டகோலம் காட்டினாய் கருணையோடும்
மாசிலா மணியேருத்ர புரப்பதி மன்னினாயே. 6

தில்லையே முதலாயுள்ள திருச்சபை பலகூத்தாடி
எல்லியும் பகலுமெல்லா வுயிரொடும் எழில்சேர் கூத்தா
கல்லைமென் கனிசெய் தாற்போல் கலையறி வில்லா என்றன்
கல்நெஞ்சை யுருகச் செய்தாய் கருணைருத் ரபுரீசா. 7

தின்னனார் கண்ட கோலம் திறம்படத் திருக்காளத்தி
அண்ணலே அடியேம் காண வருளினை யையநின்றன்
தண்ணளி பரப்பி யிந்தத் தாரணி முழுதுங் காக்கும்
புண்ணியத் திருக்கோ லத்தை ருத்திர புரிகண்டேனே 8

காதலித் தன்பர்செய்யும் கற்பனை கருமம் பத்தி
ஓதுதல் உவகைபூத்து உணருதல் உயர்மெஞ் ஞானத்
தீதிலா வழுதையுண்டுன் திருவடிச் சொருப மாகி
தீதுதீர்ந் திருக்க ருத்திர புரப்பதி திகழ்ந்தா யீசா. 9

வனம்பல திருத்திவஞ்ச மதத்தவர் வகுத்த சூழ்ச்சி
தினந்தினம் மனங்கலங்கித் திகைத்திடும் சிறியேமுய்ய
மனந்தனைத் திருத்தி வாய்மை வளம்பட வகுத்தவுன்னை
தினைத்தனைப் பொழுதுந் தொண்டர் மறப்பரோ ருத்ரதேவா. 10

திருச்சிற்றம்பலம்

# நல்லோர் பயில் ருத்ரபதி

திருச்சிற்றம்பலம்

அத்தாவு என்பரகங் குழைந்து போற்றுகின்றார்
இத்தார ணியிலிடர் களைந்துன் இன்னருளால்
கொத்தார் குழலுமையாள் கூறுகந்த கோலமதை
வித்தகா ருத்ரபுரி வேதியனே யீந்தருளே. 1

கல்லாலின் கீழிருந்து காட்டினாய் கையதனால்
சொல்லாமல் விளக்கரிய சோதியரு ளாஞ்சிலனே
எல்லாரும் காண விசைந்தருளும் கோலமதை
நல்லார் பயில்ருத்ர புரத்து நல்கினையே. 2

பெம்மான் பிறைதவழ் செஞ்சடை யானெம் பிறப்பறுக்கும்
எம்மா னிருநிலத் தேயின்ப வாழ்வினை யெய்துதற்கு
எம்மாயை நீக்கி யிருள்கடிந் தின்துணை யாயிருந்த
அம்மா னுருத்திர நற்பதி தன்னிலமர்ந் தனனே. 3

தன்னை யளித்தருள் தத்துவன் சற்குரு வாகிவந்து
என்னைப் பிணிதீர்த் தருளென் றிரங்கிய என்தனக்கு
முன்னை வினையாம் மூல மலத்தை முடித்திடவே
மன்னினன் ருத்ர நற்பதி தன்னில் மகிழ்வுடனே. 4

## கட்டளைக் கலித்துறை

சும்மா விருந்து சுகம்பெற வைத்த சுருதியொன்றால்
இம்மா னிலத்தில் இருத்தியெங் கேயொளித் தாயெனவே
அம்மா னடியர்க் கருள்புரிந்து ஆனந்த வாழ்வுதரும்
எம்மா னுருத்திர நற்பதி யெய்தி யிருந்தனனே. 5

சொல்லா லளப்பரி யான்சுடர்ச் சோதி யுருவுடையான்
கல்லா வெனக்கன்று கல்லாலில் காட்டிய வற்புதத்தை
சொல்லற்றுச் சும்மா விருவெனச் சொல்லிய சுந்தரனை
நல்லோர் பயில்ருத்ர பதியில்நான் சென்று கண்டனனே. 6

கண்டேன் கருணையெம் கண்ணுத லானைக் களிப்படைந்து
விண்டேன் பசுவினை வீடுபெற் றுய்ந்தனன் விண்ணவர்க்காய்
உண்டாய் நும்கண்டத்து தொல்விட மாக்கிய தூயவனே
வண்டாரும் பூம்புனல் மல்கிய ருத்ர நற்புரத்தே. 7

கற்றவர்க்கு நற்றுணையே கருதரிய காரணனே
நற்றவத் தோர் நாளும் நவின்றேத்தும் நாயகமே
சுற்றமெனச் சேர்ந்துன் துணைமலர்த்தாள் சூழ்ந்து நின்றார்
மற்றவரை ருத்ரபுரி மன்னவனே யாண்டருளே 8

தானெனை யாண்டநம் சற்குரு தன்னுரு வாகிவந்து
ஊனினையுருக்கி யுயர்ஞான மன்றினி லேற்று வித்தான்
கானகந் தன்னிற் கழலடி யென்தலை காணவைத்தான்
வானவர் வாழ்ந்திட ருத்திர நற்பதி வந்தவனே. 9

சீர்காழி வள்ளல் சிறப்புறச் சின்மயப் பாலளித்தாய்
நீராரும் வைகையி லேட்டினை யிட்டெதி ரேறவைத்தாய்
பேரருள் நால்வர் பேணிய தொண்டுகள் பேணிவைத்தாய்
பார்புகழ் ருத்திர நற்பதி மேவும் பரஞ்சுடரே. 10

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாற்றும்சொல் வேந்தனுக்கு
நாட்டில் நலந்திகழ் நல்லூரில் நன்மலர்ப் பாதம் வைத்தாய்
வீட்டிற் புகுத விழுந்தெழு வோர்க்கு இன்மலர்த்தாள்
காட்டினை ருத்திர நற்பதி தன்னிற் கருணையனே. 11

ஆரு ரமர்ந்தனை ஆரூர னுக்கன்று தோழனுமாய்
சீரூர் பரவை திருமனை சேர்ந்தனை தூதனென
பேரூர் பிறப்பில்லா வுன்தனக் கென்றன்று பேணிவைத்த
காரூருஞ் சோலைகள் சூழ்ருத் திரபுரிக் கண்ணுதலே. 12

மண்ணினில் மாணிக்க வாசகம் பாடி மகிழவைத்த
அண்ணல ருக்கருள் சற்குரு வாகிய ஆண்டவனே
கண்ணிலி யாருங் கடையேனைக் கைவிடல் நீதியன்றென்
றெண்ணி யுருத்திர நற்பதி யெய்தினை யெம்மிறையே. 13

திருச்சிற்றம்பலம்

## உருத்திரபுரீஸ்வரர் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

தன்னை யேத்தியித் தாரணி யுந்திட
முன்னை வல்வினை முற்றுமொ ழிந்திட
பொன்னை வென்ற புரிசடைப் புண்ணியன்
சின்னம் ருத்திர நற்பெருங் கோயிலே. 1

கோயில் கொண்டு குணம்பல காட்டினர்
தாயினும் இனியான் தன்னடி போற்றிடும்
நாயினேற் குநயந் தருள் நல்கிட
வாய கோலம்ருத் திரபுரக் கோலமே. 2

கோல மில்லை குணமில்லை கூறவே
சீல மில்லை சிறப்பிலை யென்றவர்
ஞால முய்ந்திட நம்மவர் உய்ந்திட
கோலங் கொண்டுருத் திரபுரந் தோன்றினார். 3

தோன்றி நற்குரு வாகத்துணை செய்தார்
நான்றனக் கன்பு செய்திட நல்கினார்
கோன்றானா கிக்குறை தவிர்த் தாண்டவெம்
கோன்றான் ருத்திர நற்பதி கொண்டனன். 4

கொண்டு நன்மலர் தூவி வழிபடும்
அண்டர் யாரும் அறிதற் கரியவன்
தொண்டர் தம்மகத் தூய்மையை நன்றெனக்
கண்டு காட்டிய காரண நற்பதி காணவே 5

பதியுஞ் சுற்றமும் மற்றுள போகம்
கதியும் நின்கழல் என்று கருதுவோர்
நித்திய மேயுன் நிறையருள் நல்கிடும்
கதியு ருத்திர நற்பதிக் காட்சியே. 6

காட்சி நின்கழல் காணுத லல்லது
மாட்சி யில்லை மனிதப் பிறவியில்
ஆட்சி யாக வடியிணை யின்னருட்
சாட்சி ருத்திர சம்புவே சாலவே. 7

சீலமின்றித் திரிந் தேனைச் சிருறஇஞ்
ஞாலந்தன்னில் நலம்பெற வைத்த நற்
கோலம் உருத்திரக் கோயில் கொண்டானென
ஞாலம் மெச்ச இருந்தனை பரசிவனே. 8

சீறும் வல்வினைச் சீற்றம் தவிர்த் தெனைக்
கூறும் நாள்வேத வாக்கியம் என்மனம்
ஊற வைத்த உருத்திர நற்பதி
ஏறு வார்க்கு வினைஏறா திண்ணமே. 9

மற்ற வர்க்கருள் செய்யும் கருணையன்
நற்ற வத்தவர் நாளும் நவின்றேத்த
குற்றம் யாவும் குணமெனக் கொண்டவன்
நற்றுணை நாதன்எம் உருத்திர தேவனே. 10

## பதிகம் - 2

தன்னை யேத்தியித் தாரணி யுய்ந்திட
முன்னை வல்வினை முற்று மொழிந்திட
பொன்னை வென்ற புரிசடைப் புண்ணியன்
சின்னம் ருத்திர நற்பெருங் கோயிலே

கோயில் கொண்டு குணம்பல காட்டிநல்
தாயி னுமினி யான்தன் னடியிணை
நாயி னேற்கு நயந்தருள் நல்கிட
வாயு கோலமு ருத்திரபுரக் கோலமே. 2

கோல மில்லைக் குணமில்லைக் கூறவே
சீல மில்லைச் சிறப்பில்லை என்றவர்
ஞால முய்ந்திட நம்மவ ருய்ந்திட
கோலங் கொண்டு ருத்திரபுரந் தோன்றினார். 3

தோன்றி நற்குரு வாகத் துணைசெய்தார்
ஏன்றெனக் கன்பு செய்து இரங்கினார்
கோன்தா னாகிக் குறைதவிர்த் தாண்டவெம்
கோன்தான் ருத்திர நற்பதி கொண்டனன். 4

கொண்டு நன்மலர் தூவி வழிபடும்
அண்டர் யாரு மறிதற் கரியவன்
தொண்டர் தம்மகத் துள்ளுறு தூய்மையைக்
கண்டு காட்டிய காரண னற்பதி. 5

பதியும் சுற்றமும் மற்றுள போகமும்
கதியும் நின்கழ லென்று கருதுவோர்
நிதிய மேயுன் நிறையருள் நல்கிடும்
கதியு ருத்திர நற்பதிக் காட்சியே. 6

காட்சி நின்கழல் காணாத லல்லது
மாட்சி யில்லை மனிதப் பிறவியில்
ஆட்சி யாக வடியிணை யின்றருள்
காட்சி ருத்திர நற்பதி காட்டினாய். 7

காட்டி யன்ப ரகத்துறு மின்சுவை
ஊட்டி யன்ப ரகத்துறு தீவினை யோட்டி
நாட்டி நான்மறை நல்லற மோங்கிட
காட்டி னாய்ருத்திர பதிக்காவ லாட்சியே. 8

காவ லாவுன் கழலன்றி வேறெனக்
காவ லில்லை எனவறிந் தேனுக்கு
தேவ தேவ திருவடி தந்திட
மேவி னாய்ருத்திர பதிதனில் வித்தகா. 9

வித்தை தந்திடும் வீரம்பல வுடன்
பத்தி தந்து பலன்கள் பலதரும்
முத்தி யின்ப முதல்நிலை தந்திடும்
அத்தன் ருத்திர நற்பதி யண்டுமே. 10

திருச்சிற்றம்பலம்

## பதிகம் — 3

திருச்சிற்றம்பலம்

திருத்த மாகவே சிந்தை திருத்திடும்
கருத்தில் வல்வினைக் கட்டு மறுத்திடும்
திருத்த மாகத் திருவடி சேர்த்திடும்
உருத்தி ரபுர வீசனை யுள்கவே. 1

மங்கை பாகம் மருவிய மாமறை
எங்கள் நாயாக ருக்கிட மாவது
கங்கை யின்கரை பாங்கமர்ந் தின்புறு
மங்கை யர்மகிழ் ருத்திர புரியதே. 2

ஆதி யானை யளப்பருஞ் சோதியை
ஓதி யாரு முணர்தற் கரியனை
சாதி பேதச் சளக்கறுத் தாண்டவெம்
நீதி யான்ருத்தி ரபுரஞ் சேர்மினே. 3

பண்டு செய்த பழவினை போயற
தொண்டர் கூடித் தொழுது வணங்கவே
கண்ட கண்கள் களிக்கக் கருணையே
கொண்ட கோலம் ருத்திர கோலமே. 4

தில்லை யில்நட மாடிய தேவனார்
அல்லும் நற்பக லும்அடி யேன்தொழ
கல்லை யொத்த மனங்கரைந் தின்புறு
எல்லை ருத்திர நற்புரி எய்தினார். 5

ஏத்து மன்பர் இடரினைத் தீர்த்திட
சாத்தும் தண்மலர் சாந்தும் சுமந்தருள்
கூத்து மாடிக் குறைகள் தவிர்த்தருள்
ஆத்த னார்ருத் திரபுரம் அண்டுமே. 6

உத்த மர்கள் உகந்துகொண் டாடுவர்
நித்த மும்நிறை நீர்மல்கு நீள்கரை
அத்தன் அன்ப ரகத்துறு மாசையால்
சித்தம் வைத்தருத் திரபுரஞ் சேர்மினே. 7

சிந்தி யாதவர் சிந்தையிற் சேர்கிலான்
சிந்திப் பாரவர் சிந்தையிற் சேர்ந்துளான்
வந்திப் பாரை வளர்க்கும் வரம்தரும்
தந்தை யான்ருத் திரபுரம் தாழ்மினே. 8

தாயு மாகியென் தந்தையாய் வந்தவன்
ஆயு மன்பர் அகத்துறு மின்சுவை
காயும் காலனைக் காய்ந்துமார்க் கண்டற்காய்த்
தோயும் பாதன்ருத் திரபுரத் தோன்றலே. 9

அட்ட மூர்த்தம தாகிய அண்ணலார்
எட்டி னேரிரண் டொன்றறி யாவெனை
கட்ட றுத்த கருணைக் கடலினை
கிட்டி னேன்ருத் திரபுர மெய்தியே. 10

சோதி நல்லுரு வாகிய சுந்தரன்
பாதி பெண்ணுரு வான பரமனார்
ஆதி யந்த மளப்பரி யான்அன்பர்
நீதி யான்ருத் திரபுரி நிர்மலனே. 11

திருச்சிற்றம்பலம்

# கோயில் கொண்ட கோலமே

திருச்சிற்றம்பலம்

ஆதியந்த மானவா அற்புதா வமலனே
நீதியே நிறைமதி நீர்நிறைந்த சென்னியாய்
பாதிமாது பாகமாய்ப் பார்மிசை யுயிர்க்கெலாம்
கோதிலாத கோலம்ருத்திரக் கோயில்கொண்ட கோலமே. 1.

பண்டுமின்று முன்னையே பணிந்துபாத பங்கயம்
கண்டுகண் களித்திடக் கருணைசெய்த காரணா
மண்டு வாவிப் பாங்கரில் மகிழ்ந்தடியர் போற்றிட
கொண்டகோலம் ருத்திரக் கோயில் கொண்ட கோலமே. 2.

அண்டவாணர் வந்துன தடிமல ரடைந்ததை
கண்டஅன்பர் கண்கள்நீர் பெருக்கிநின்று போற்றவே
தொண்டுசெய்து வாழவே துறவெனக்குத் தந்தவன்
பண்டைருத் திரப்பரமன் செய்தநற் பான்மையே. 3.

மூந்தைவல் வினைகெட முடிவிலாத வின்பமாம்
உந்தனை யுணர்தியென் றுரைத்தவா சகத்தினை
தந்தெனது சஞ்சலம் தவிர்த்தசற் குருவினை
சிந்தைசெய் யுருத்திர சீர்பதி யமைந்ததே. 4.

தந்தைதாயும் நீயெனத் தரணியோர்கள் சாற்றுவார்
பந்தபாசம் நீக்கியுன் பாதபங் கயத்தினை
எந்தைநீ யெனக்களித் திசைந்தகோலம் பார்மிசை
வந்தகோலம் ருத்திர வளநகரின் கோலமே. 5.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரி லைம்பு லன்களால்
முந்தை நின்னை யேத்தி டாத மூர்க்க னேனை முக்கண்ணா
சிந்தை செய்து தோத்தி ரங்கள்சீ ரருட்டி றம்பெற
வந்த கோலம் ருத்திர புரியாம் வளமா நகரிற் கண்டனம். 6.

அந்தமி லருமறை யமைந்த வேத மந்திரம்
சிந்தை செய்யத் தந்தவன் சீரருள் திறத்தினை
கந்தமா மலர்கொடுன் கழலடி வணங்கிட
வந்த கோலம் ருத்திர புரியாம் வளமா நகரிற் கண்டனன். 7.

மாதவத்தர் கூற்றாய மலர்ந்தவாச கங்களால்
நிதி லாத அன்பருன் திறம்பல வழுத்தவே
கோதி லாத கோலங் காட்டிக் கோளறுத்த கொற்றவன்
மாதி னோடும் வந்து ருத்திர வளநகரின் மன்னினான். 8.

மந்திருந்து சோலையில் மலர்ந்த பொன்மலர்களால்
சிந்துதேன் மடுவினிற் செறிந் தினிக்கச் சீருள்
வந்தினிக்க வாழ்த்தியே வனம்பல திருத்தியே
எந்தைருத்திர நாயக னிணையடி யிறைஞ்சினர். 9.

சென்னிநாடர் போற்றிநின் சீரருளைப் பெற்றனர்
என்னையாள வென்றுன திணையடி யிறைஞ்சினேன்
கன்னிபாகம் கொண்டநின் கருணைசேர வேண்டியே
மன்னினாய் ருத்திரபுரி யமர்ந்த மன்னர் மன்னனே. 10.

திருச்சிற்றம்பலம்

✲

# செந்நெல்கள் காய்த்திடும் ருத்ரநற் பதியே

திருச்சிற்றம்பலம்

தென்னு தமிழை வளர்த்திடும் தேவனை வேத ரெல்லாம்
உள்ளி யுணர்தற் கரியவுயர்தனி யுத்தம னென்
கள்ளங் களைந்து கழலிணை காட்டிய காரணனாம்
வள்ளலை ருத்திர நற்பதியில் கண்டு வாழ்ந்தனனே 1

பொன்னும் புவியும் பொருளென்று பூவை நல்லார் சுகமே
நன்றென்று நாயடியேன் நலியாமல் நவின்ற இன்சொல்
என்றென்றும் என்னுள்ளம் தேக்கினாய் இளைப்பா றுதற்கு
நன்றென்று ருத்திர நற்பதி நல்கிய சற்குருவே 2

சற்குரு வாகியென் சஞ்சலந் தீர்த்த சதாசிவனே
நிற்குணனே நிலையில்லா வுடலை நிலையென் றெண்ணும்
எற்குணர் வாக்கி எழிலார் மெய்ஞ்ஞான மெனக்களித்த
சற்குணன் ருத்திர நற்பதி சால்புடன் சார்ந்தனனே. 3

அன்னா ளமரருல காண்டனை அவைநீத் தொருகால்
மன்னு வளம்பல மல்கிடவாதவூ ரமர்ந்த பொன்னே
பின்னா ளடியேம் பிழைபொறுத் தாண்டுநற் பேறுதவ
இந்நாளு ருத்திரநற் பெருங்கோயி லிசைந்த னையே 4

கல்லா வறிவிற் கடைப்பட்ட நானுன் கழலடைந்து
சொல்லாற் றுதித்துநின் சுந்தரக் கோலமுந் தொழுதுநின்று
செல்வச்சிவக் கொழுந்தே சிவனே யெனச் சிந்தை செய்ய
நல்லார் பயிலும் ருத்திரபதி நல்கிய நாயகனே. 5

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
தாயே யனைய கருணைவைத் தாண்ட தயாநிதியே
மாயப் பிறவி மயக்க மறுத்துன் மலரடிக்கீழ்
சேயாய் வளர்ந்திடச் சேர்ந்தாய் உருத்திர நற்பதியே. 6

அன்றாலின் கீழங் கறமொரு நால்வர்க் கறைந்தவனே
குன்றா விளக்கே குருமணி யேகுறை தீர்த்தெனையே
இன்றாள வெண்ணி யிசைந்து இனியநற் கோலங்கொண்டு
நின்றாய் உருத்ர நற்பதிக் கோயிலில் நிர்மலனே. 7

பக்தர்க் கருளிய பான்மையைக் கேட்டிந்தப் பாரிலுள்ளோர்
நித்தம் நினதடி நீங்காத நின்னருள் சேவையிலே
பத்திப் பரவச ராய்ப்பர மானந்த வெள்ளத் திலே
எத்திக்கி னும்பரந் தின்புறும் ருத்திர நற்பதியே. 8

சேல்உகள் வாவியிற் சீர்பெறு சோலையில் சிந்துமலர்
கால்கொணர்ந் தெற்றக் கமழும் களனிகள் சிறப்ப
கோல்கொள் உழவர் கொழுக்கொண்டு கூறிட்ட கூறுகளில்
கால்கொண்டு செந்நெல்கள் காய்த்திடும் ருத்திர நற்பதியே. 9

நாற்றிசை யும்மலர் நல்கிடும் சோலையின் நாப்பணொரு
கூற்றுதைத் தான்திருக் கோயிலைக் கும்பிட்டுக் கூத்துடனே
நாற்றிசைத் தேவரு நல்லருள் வேண்டி நயந்துநின்று
போற்றிசெய் ருத்திர நற்பதி கண்டனம் பூமியிலே. 10

திருச்சிற்றம்பலம்

*

# உருத்திரபுரீஸ்வரர் அபயப் பத்து

திருச்சிற்றம்பலம்

அன்னையென வளர்த்தாய் அருளாட்சி பலவளித்தாய்
முன்னை வினை யறுத்தாய் முதல்வா குருவாகி வந்து
பின்னைப்பிறப் பறுத்தாய் பிழையாவும் போக்கிவிட்டாய்
என்னை யபயமென வேற்றாய் ருத்திர பதியாய். 1

சொல்லும் பொருளுமென மனதின் சோர்வகற்றி
அல்லும் பகலுமடி யேன்மனத் திருந்து
நல்லுருகும் தன்மையென வுள்ளுருக்கிக் காத்தருளும்
நல்ருத்திர புரத்து நாயகனே நாமபயம். 2

மன்னுமரு மறைநூல் என்மனத்தில் மன்னுவித்தாய்
சொன்னசொல் லொன்றதனால் துயர்யாவும் தொலைத்துவிட்டாய்
கன்னலமு தெனவேயென் கருத்தில் இனித்து நின்றாய்
மன்னுறு ருத்ரபதி மகாதேவா வுனக்கபயம். 3

தன்னையெனக் களித்தான் தளராவினைக் கட்டறுத்தான்
சென்னியில் தன்னிரண்டு சேவடி சேர்த்து நின்றான்
தன்னைய டைந்தவர்க்குத் தளராநிலை தந்தருளும்
மன்னு ருத்திரபுரி மகாதேவா வுனக்கபயம். 4

சீலம்பல வளித்தாய் சிறுமைபல தீர்த்து நின்றாய்
காலம்பல கழித்த கடையேனைக் கருணை யினால்
சோலைக்குயில் மயில்கள் சுனையிற்படிந் தாடுகின்ற
சீலம்பல வுடையார் ருத்ரபுரிப் பதிக்கபயம். 5

சொல்லற் கரியதொரு சுருதிமுடி சொன்னவனே
வெல்லற் கரும்மயலை வீழ்த்திய வித்தகனே
கல்லொத்த வென்மனதைக் கரைவித்த கருணையனே
அல்லும்பகலு முருத்ரபதி யடைந்தே னுனக்கபயம். 6

ஆலமிடற் றவனேயடைந் தார்வினை தீர்ப்பவனே
காலனைக் காய்ந்தவனே கருணைக் குருவேயுனது
கோலமு ருத்திரபுரி கோயிலிற் கும்பிடவே
ஞாலத்தி லெற்களித்தாய் நாயகனே யுனக்கபயம். 7

மண்ணின் மயக்கறுத்த மணியேயுன் மலரடிக்கு
பண்ணிசை பாவினொடு பலதோத்திரம் பாடிநின்று
விண்ணில் முகில்தடவி விளங்குமெழிற் கோயில் கொண்ட
அண்ணல் ருத்ரபுரி யம்மையப்ப னுக்கபயம். 8

என்னைப் பிறப்பறுக்க வெழிலார் குருவாகிவந்து
மன்னுமறை முடிவென் மனத்தில் மலரவைத்த
மன்னுறு ருத்ரபுரி மாதேவன் மலர்ப்பதமே
சென்னியிற் சேர்த்தவென்றன் சீரருட் கேயபயம் 9

அன்னையு னக்கபயம் அப்பாவு னக்கபயம்
கன்னியு மைகொழுநர் கருணா கரவபயம்
சென்னியர் போற்றிசைக்கும் திருச்சே வடிக்கபயம்
மன்னுருத்ர புரிமகா தேவனுக்கே நானபயம். 10

சென்றன கால மெல்லாம் சிவனேயெம் செழுஞ்சுடரே
உன்றனைக் காண வெனதுள்ள முருகிநின்று
நன்மலர் கொண்டுனையே நாளும்நா நவின் றேத்திடவே
அன்னை யபயமென வெடுத்தாய் ருத்ரபதியாய். 11

திருச்சிற்றம்பலம்

---

★ நெஞ்சத்தை நெகிழவைக்கும் இந்த அபயப் பத்தைச் சுவாமிகள் ஒரு நாள் பாடிய பொழுது, முன்னை நாள் யாழ். அரச அதிபரும், காணி, நீர்ப் பாசன, மின்சக்தி அமைச்சின் செயலாளருமான திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் உரோமம் சிலிர்த்து கண்ணீர் பெருக்கிய காட்சி கண்ணை விட்டு நீங்காது.

திருத்தாண்டகம்

## உய்யுமா றருளும் நாளென்றோ

திருச்சிற்றம்பலம்

அன்றே யுன்னடி யடைந்தேன் அமுதே யன்பர்
அகத்துறையு மருந்தே அகல்ஞா லத்துள்
இன்றே யென்னுடல் பொருள்கள் யாவு மன்றன்
இணையடிக்கே இட்டிறைஞ்சி யிரந்து நின்றேன்
முன்னேசெய் வினையனைத்தும் முடிவித் தென்றன்
மூலமலக் கட்டறுத்து முடியாவின்ப
நன்னலந் தந்துன்னடிக் கீழிருத்தி ருத்ரதேவா
நாயடியேன் உய்யுமா றருளுநா ளென்றோ.

★

## அருளையளித்த ருத்ரபுர அம்பிகையே

திருத்தகு நற்சீர்பலவும் திகழ்ந்திடு நற்பயன் விளைக்கும்
கருத்துடையார் கழலடைந்தார் கற்பகமே நின்கரு ணையினால்
இருத்தியவர் பழவினைகள் இரிந்தோட இடர்களைந்துன்
அருளையருள் ருத்ரபுரத் தம்பிகையே யாண்டருளே.

அய்யனளித்த இருநாளி நெல்லையன் றொருநாள்
துய்ய வறம் பலவும் தொல்லுலகில் தோற்றுவித்த
செய்யமலர்ச் சேவடியாய் யெம்பவம் தீர்த்தருள
அய்யனொடும் ருத்ரபுரத் தமர்ந்தாயெம் அம்பிகையே!

சித்தம் தெளிந்து சிவகதியை யாம்சேர
முத்திநிலை நல்கும் முதல்நிலையின் மேலேற்றி
சத்திதந்த சற்குருவே தாயே சரண்புகுந்தேன்
ருத்ரபுரி யீஸ்வரியே யுமையே யுனக்கபயம்.

உண்ணாது நோற்றுனது உத்தமனார் பாதியுரு
பொண்ணாகச் செய்தருளும் பெருமைபெற்ற பெண்ணரசே
மண்ணாளும் மாந்தர்மதி மயக்கால் வாடுமெனை
தண்ணருள்செய் ருத்ரபுரித் தாயே தமியேற்கே.

அம்மாவென் றுந்தன் அடிமலர்த்தாட் கன்புசெய்து
இம்மா நிலத்து இரந்துருகி யெய்த்த வெமக் (கு)
இம்மாயந் தீர்த்திட்டு இடரகற்றி யின்னருள்செய்
பெம்மா னிடப்பாகம் பெற்றருத்ர நாயகியே.

திருச்சிற்றம்பலம்

## கிளிக் கண்ணி

### ஆணிமுத்தை யாவரறிவாரடி

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருக்க வைத்த
வல்லவன் பாத மதை — கிளியே
வாழ்த்தி வணங் கிடடி.

ஆழ்கடலில் ஆணிமுத்தை யாவரறி வாரடி
ஆழ்ந்து நிட்டை கூடிவிடிற் — கிளியே
அன்று தெரியு மடி.

*

## இரணைமடு

# அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் திருப்பதிகம்

(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

பொன்னார் புரிசடைப் புண்ணியன் பொன்னடி போற்றுமன்பர்
சின்னாள் சிறுபிணி சேராமற் செல்வம் செழித்திடவே,
முன்னா ளிரணை மடுஎனும் கங்கையின் பாங்கமர்ந்தாள்
என்னே கனகாம் பிகைதன தின்னருள் எந்தமக்கே. 1

எமக்கும தின்னருள் வேண்டுமென் றெண்ணி இரங்கி நிற்போர்
தமக்குத் தரணியில் தாழ்வின்றிச் செல்வம் தழைத்துமல்க
உமக்கே உதவ உயர்கங்கைப் பாங்கர் உகந்திருந்தோம்
எமக்கே பரமென ஏற்றாள் எமைக்கன காம்பிகையே. 2

கையே சிரமிசைக் கூப்பிக்கண் ணீர்மல்கிக் கால்தளர்ந்து
மெய்யே உருகி மனமாசு தீர்த்தநின் மெய்யடியார்
நைவே அகற்றிநல் வாழ்வே பெறநல் லமுதளித்த
மொய்யார் தடங்கரை முன்னமர்ந் தாய்கன காம்பிகையே. 3

ஆரணம் யாவும் அறிதற் கரிய அரும்பொருளே
பேரரு ளாகிப் பிறப்பறுத் தாண்ட பெருந்திருவே
தாரணி முற்றும் தழைத்தோங்கத் தண்ணருள் தான்சுரக்கும்
காரணி யேகடைக் கண்ணருள் செய்கன காம்பிகையே. 4

நீரா யிருப்பது நின்னருள் நீரின் நிறைவளமாம்
நீரா யிருப்பதும் நின்னரு ளென்று தெளிந்தவன்பர்க்
காரா வமுதளித் தாட்கொண்டு ஆனந்த வாழ்வுதவ
பேராத நீர்மடுப் பேணிவைத் தாள்கன காம்பிகையே. 5

பேணித்தன் மெய்யடி யார்பெறும் பேறும் பெருவளமும்
காணிக்கை யாய்க்கொண்டு கற்பக மாய்நின்று காத்திடுவாய்
தோணித் தொழில்பூண்டு தொண்டர் பவக்கட லைக் கடப்பாய்
ஆணிப்பொன் னேயடி யேந்துயர் தீர்க்கும் அருமருந்தே. 6

மருந்தாகி மந்திர மாகி மறுமைப் பிணியகற்றும்
பெருமருந் தாகிப் பரவித்தை யாகிப் பெறற்கரிய
கருவாதிக் குற்றம் பலகளைந் தாண்ட குணக்கடலே
தருவாய் உனது தடமலர்த் தாள்கன காம்பிகையே. 7

கனகப் பெருங்கங்கை நீரும் உமது கடைக்கண்களும்
மனக்கேதம் மாற்றும் மருந்து மலப்பிணிக் காம்உடற்கு
தினமே உறும்பசி தீர்க்கும் திருவமு தாய்த்திகழும்
கனமே உகந்திருந் தாய்எமை யாழ்கன கக்குன்றமே. 8

குன்றுதொ றாடும் குமரனைத் தந்து குறைதவிர்த்தாய்
மன்றில் நின்றாடிய வள்ளலின் பாங்கமர் மாமணியே
நின்றும் இருந்தும் நடந்தும் நினைப்பவர் நெஞ்சகலாய்
என்றுன் திருவடி யேத்திநின் றேன்கன காம்பிகையே. 9

நின்றேன் நினது திருவருட் பாங்கின் நிறைகருணை
என்றே பொழிந்தெனை ஏற்றருள் வாய்என் துயர்அகற்றி
குன்றே யனைய கொடுவிட மாயையின் கோளகல
நின்றே எமையாண் டருள்குரு வாம்கன காம்பிகையே. 10

**ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் திருவடி வாழ்க.**

உ

## ஞான சற்குரு
# மகாதேவர்க்குப் பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

பொன்னான புனிதன் திருவடி
போற்றுவோம் பல்லாண்டு
என்னிலென் னாலெனை என்னிடங்
காட்டு மீசற்குப் பல்லாண்டு
புன்னகை செய்தென் பொறிபுலன்
மாற்றிய போதற்குப் பல்லாண்டு
மன்னுமா மறையின் முடிவாம்
மாதேவர்க்குப் பல்லாண்டு. 1

## வேறு

சொல்லொன் றினால்சுகம் சேர்த்திடும்
செல்வர்க்குச் சொல்லுவோம் பல்லாண்டு
அல்லும் பகலும் மகிழ்ந்தெனை
ஆளாக்கிய அன்பர்க்குப் பல்லாண்டு
கல்லா மனத்துக் கடையேனை
ஆட்கொண்ட கழலடிக்குப் பல்லாண்டு
எல்லாரும் போற்றும் எந்தைமகா
தேவருக்கு ஏத்துவோம் பல்லாண்டு. 2

புல்லறி வாளர்கள் போற்றற்
கரிய புனிதற்குப் பல்லாண்டு
கல்லொத்த என்மனம் கரைவித்த
கருணைக் கடலுக்குப் பல்லாண்டு
எல்லவரும் தொழும் எந்தைமகா
தேவர்க்குக் கூறு பல்லாண்டு
பொல்லா மனத்தைப் புனிதப்
படுத்திய போதர்க்குப் பல்லாண்டு. 3

காதல் செய்யன்பர் கருத்திலிருப்பவன்
கழலடிக்கே தினம் பல்லாண்டு
சாதல் பிறப்பறுத் தாண்ட சதுரன்
தடமலர்த் தாளுக்கே பல்லாண்டு
போத நெறிதந்த புண்ணிய
மூர்த்தியின் பொன்னடிக்கே பல்லாண்டு
ஆதர வாகஅருளளித் தாண்ட
அருமைமா தேவர்க்குப் பல்லாண்டு. 4

பத்தி வலையி லெனைப்படுத்திப்
பரமாக்கிய பரமற்குப் பல்லாண்டு
சித்திறுமை யென்றென் னகத்தே
சொன்ன செல்வர்க்கே பல்லாண்டு
எத்திக்கும் தாமா யிருக்கும்
குருபரன் என்னகத்தான் பல்லாண்டு
தித்திக்கும் தேனா யிருந்த
மகா தேசிகர்க்கே தினம்பல்லாண்டு. 5

சுத்தித் திரிந்த கடையேனைத்
தொடர்ந்தாண்ட கழலடிக்கே பல்லாண்டு
தித்தித்த சொல்லால் திகைப்பறச்
செப்பிய சித்தர்க்கே பல்லாண்டு
முத்தியிற் சேர்க்க முடிமிசை
தாள்வைத்த முத்தர்க்குப் பல்லாண்டு
சுத்தப் பிரம்ம வடிவாம் மகா
தேவர்க்குத் தோத்திரம் பல்லாண்டு. 6

திருச்சிற்றம்பலம்

உ

# தவத்திரு வடிவேல் சுவாமிகள் பற்றிய முக்கிய குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் :- | வடிவேல் 2. ஊர்:- இணுவில் |
| 3. | பிறந்த திகதி :- | பராபவ வைகாசி 11 ( 1906-05-24) வியாழக்கிழமை |
| 4. | நட்சத்திரம் :- | உரோகிணி 5. குடும்பம்:- சோமநாதர் கத்தரை |
| 6. | தந்தையார் :- | காசிநாதர் (கந்தர்) 7. தாயார்:- சின்னக்குட்டி |
| 8. | உடன் பிறந்தவர்கள் :- | ஐந்து பெண்கள் ( ஐவரும் மூத்தவர்கள் ) |
| 9. | நாள் ஏடு தொடக்கியவர்: | இணுவில் பெரிய சந்நாசியார் |
| 10. | சமய தீட்சை செய்தவர் : | |
| 11. | ஆரம்பக் கல்வி:- | திண்ணைப் பள்ளிக்கூடம் |
| 12. | ஆரம்பப் பாடசாலை:- | இணுவில் அம்பிகைபாக வித்தியாசாலை |
| 13. | பாடசாலைக் கல்வி:- | ஆறாம் வகுப்பு வரை |
| 14. | ஒன்பது வயதில் சந்தித்த ஞானகுரு:- | யோக சுவாமிகள் |
| 15. | தொழில்:- | விவசாயம் |
| 16. | குலதெய்வங்கள்:- | பரமானந்த வல்லி, இணுவில் கந்தசுவாமி |
| 17. | ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்:- | இணுவில் - சேதுலிங்கம் (சேதர்) சட்டம்பியார், அ. க. வைத்திலிங்க உபாத்தியாயர், அ. மாணிக்கத் தியாகராசா (மாணிக்கச்) சட்டம்பியார். |
| 18. | இளமையிற் பயின்ற நூல்கள்:- | நிகண்டு, நன்னூல், அந்தாதி, இலக்கணஇலக்கியங்கள், புராண இதிகாசங்கள், நீதி நூல்கள். |
| 19. | ஞானசற்குரு:- | ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள். |
| 20. | குருவிடம் பயின்ற நூல்கள்:- | பன்னிரு திருமுறைகள், தருக்க நூல், கைவல்ய நவநீதம், ஞானவாசிட்டம், பகவத்கீதை, வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்கள், தாயுமானவர், பட்டினத்தார் பாடல்கள் |
| 21. | பயின்ற இடம்;- | கந்தமட ஊரிலுள்ள வேதாந்த மடம் |
| 22. | பண்ணிசை கற்பித்தது:- | ஆரம்பம்-மஞ்சத்தடி, பின்னர்-இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை, இணுவில் சைவப்பிரகாச வித்தியா சாலை, கோண்டாவில் சைவப்பள்ளிக்கூடம், கோண் டாவில் வடக்கு பரஞ்சோதி வித்தியாசாலை |

23. பண்ணிசை ஆசிரியராய்
இருந்தது:- அளவெட்டி சதானந்த வித்தியாசாலை

24. புராணபடனமும்
குருபூசையும் நடத்தியது:- மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

25. சூளுரைத்தது:- 1938 மாசிச் சிவராத்திரி தினவிழாவன்று இணுவில் கந்தசுவாமி கோயிலைப் பொதுக் கோயிலாக்குவதாக முருகன் முன்னிலையில் உறுதி செய்தார்.

26. பொதுக் கோயிலானது:- 1953 ஆம் ஆண்டு

27. விருப்பம் நிறைவேறியது:- 02 - 09 - 66 அன்று மேற்படி கோயில் கருவறையில் வள்ளி தெய்வானையுடன் கூடிய முத்துக்குமார சுவாமியை மூலவராகப் பிரதிட்டை செய்யப் பெற்றது. இதன் மூலம் நாவலர் பெருமானதும், சுவாமிகளதும் எண்ணங்கள் நிறைவேறியுள்ளன.

28. ஊர் மாறியது:- 1953 ஆம் ஆண்டு இணுவிலில் இருந்து கிளிநொச்சிக்கு

29. ஜெயந்தி நகருக்குக்
குடிவந்தது:- 1954 ஆவணி

30. மகாதேவ ஆச்சிரமம்
நிறுவியது:- 1955 ஆவணித் திருவாதிரை (ஸ்ரீமத் மகாதேவ சுவாமி களின் பிறந்ததினம்)

31. ஆச்சிரம ஆண்டு விழா:- ஆவணித் திருவாதிரை நாள்

32. சுவாமிகளின்
தோத்திரப் பாடல்கள்:- இணுவை நொச்சியம்பதி முருகன் தோத்திரம், உருத்திரபுரீஸ்வரர் திருப்பள்ளியெழுச்சி, மகாதேவக்குருமணி தோத்திரம், கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் துதி, உருத்திரபுரீஸ்வரர் திருப்பாடல்கள், இரணைமடு கனகாம்பிகை திருப்பதிகம், மகாதேவருக்குப் பல்லாண்டு.

33. பரிபூரணம் எய்தியது:- பிரமோதூத ஆனி (26 - 06 - 90) செவ்வாய்க் கிழமை அதிகாலை 4-00 மணி, ஆயிலிய நாள்.

34. குருபூசை நாள்:-

ஆண்டுபிர மோதூத ஆனி வளர்சதுர்த்தி
பூண்டநல் லாயிலியப் பொன்னாளில் - தூண்டா
மணிவிளக்காய் நின்ற வடிவேல் சுவாமி
அணிமலர்த்தாள் சேர்ந்தார் அமர்ந்து.
- கவிதை வை. க. சி.

35. சுவாமிகளின்
சமாதிக் கோயில்:- மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்தி நகர் (உருத்திரபுரம் வழி), கிளிநொச்சியில் அமைந்துள்ளது.

உ

அநுபந்தம்

# நீங்கா நினைவலைகள்

இணுவையம்பதி மெய்ஞ்ஞான ஊற்றிற்குக் குன்றென விளங்கும் திருவிடம். சான்றோர் மலிந்த - கலை பொலிந்த - கவினுறு மண்ணில் மெய்ஞ்ஞானத் திலகம் - கர்மயோகி - தவத்திரு வடிவேல் சுவாமிகள் பிறப்பெடுத்தார். இவர் புகழொடு தோன்றிய புனிதர்; செந்தமிழும் சிவநெறியும் இரு கண்ணென வாழ்ந்த புண்ணியர். ஆன்ம பலத்துடன் மனிதகுல ஈடேற்றத்திற்கு அரும்பணி புரிந்த சீரியர். ''மன்பதை பெரியார் மாட்டே'' என்ற வாக்கிற்கமையச் சமூக நலனிலும் நாட்டங் கொண்டு தேட்டம் பல புனைந்த பேராளர். அன்னவரின் திடசித்தமும், திருவருள் நீக்கமற நிறைந்த நெஞ்சமும் மண்ணில் வாழ்வோர்க்குப் பல்துறையிலும் அவரைப் பணிபுரிய வைத்தன.

''இளமையிற் கல்வி சிலையிலெழுத்''தென ஞானியார் உள்ளத்தை வெள்ளையாகவும், வெள்ளமாகவும் கொள்ளை கொண்ட திருநூல்கள் பல. அவை பகவத்கீதை, கைவல்யம், ஞானவாசிட்டம், சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்றவையாம். கல்வி கேள்விகளில் நாட்டங் கொண்ட சுவாமி அவர்கள் புராண இதிகாசங்களைக் கசடறக் கற்றுக் கைவரப் பெற்றார். வேதாந்த சித்தாந்த சாத்திரங்களைக் குருவழியிற் கற்று இயைபுற நெறி நின்று வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகையுமாவார். இவரது ஞானஒளி பல்லோர்க்கு நல்வழிகாட்டியாக அமைந்ததெனலாம்

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படுதல் போல சுவாமி அவர்களின் தூயவாழ்வின் சின்னமாக விளங்குவதே கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம். இணுவையம்பதி ஸ்ரீ பரமானந்தவல்லி அம்மன் தேவஸ்தான பரிபாலகராக நீறணி நெற்றியும் நன்னெறிப் பற்றும் கொண்டொழுகினார். அந்த நல்வேளைகளில் எம்போன்ற அன்றைய சைவ மாணவர்களை அச்சந்நிதானத்துக்கு அழைத்து, பண்ணிசை வகுப்புக்களை நடத்தி மனப்பக்குவத்தை நல்கிய இறைபாலன் இவர்.

அம்பாளின் பாதார விந்தத்தைப் பக்குவ மனத்துடன் பூசனை செய்து, போற்றி அடியார்களின் நற்கருணையையும் பெற்றவர் சுவாமிகள் என்பது போற்றற்குரியதே. தூயவெண்ணீறும் துதைந்த மேனியும் சிவனடி மறவாச் செம்மையும் கொண்ட தவத்திரு வடிவேல் சுவாமிகள் நல்லதொரு சைவ சமுகத்தை வடிவமைத்த வித்தகர். இச் செந்நெறிப் புரவலரின் செம்மை சான்ற வாழ்வின் தேட்டத்திற்கு ஒரு மலர் முகைவிடுகிறது. அதுவும் திரு. சோ. பரமசாமி அவர்களின் பெரு முயற்சியால் வித்திடப்பட்டதென்பது பெரு மகிழ்ச்சிக்குரியதே.

இவரது பேசற்கரிய பெருவாழ்வு சைவச் சான்றோர்க்கும், மண்ணில் நல்ல வண்ணம் வாழ முனையும் மக்கட்கும் பேரொளியாய் என்றும் நின்று வழிகாட்டுவதாக. அவரது நிழலில் நீலகண்டனின் நினைப்பினையும், நயப்புடைப் பண்ணிசையினையும் அனுபவித்தேன் என்று எண்ணும் போது நன்றிப் பெருக்கோடு சுவாமிகளின் பாதங்களுக்கு என் நீங்கா நினைவலைகளைச் சமர்ப்பிக்கின்றேன். அவர்தம் புகழ் என்றும் நின்று நிலவுக.

**இ. சுந்தரலிங்கம்**
கல்விப் பணிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
12-08-1993.

உ

# ஆயிரம் பிறை கண்டவர்

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

''ஒருநாள் இரவு, சுவாமிகள் (ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்) வடமராட்சியில் ஒரு கூட்டத்துக்கு என்னையும் அழைத்துச் சென்றார்கள். கூட வந்த மற்றொருவர் வடிவேற் சுவாமிகளாயிருக்குமென்று எண்ணுகிறேன். காரிலே பிரயாணஞ் செய்தோம்.''

தவத்திரு மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவு மலருக்கென எழுதிய கட்டுரையில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்கள். பென்னம் பெரியவர்களான மகாதேவ சுவாமிகள், பண்டிதமணி இருவரும் பிரயாணஞ் செய்த காரில் உடன் சென்றவர்கள் - நாம் எப்பொழுதுங் காணும் – இணுவில் வடிவேற் சுவாமியார் தானே என்ற எண்ணம் கட்டுரையைப் பிரதி செய்த பொழுது என் மனசில் எழுந்தது. வடிவேற் சுவாமியார் எமக்கு முற்றத்து மல்லிகையாகக் காட்சி தந்த காலம் அது. வடமராட்சிப் 'பயணத்தின் போது ஏற்பட்ட மூவர் பெரியார்களின் சந்திப்பு, திரிவேணி சங்கமத்தின் சிறப்பை ஒத்ததாகலாம் !

இணுவில் சந்நியாசி கந்தர் - சின்னக்குட்டி அம்மையார் குடும்பத்தில் முதலிற் பிறந்த குழந்தைகள் ஐவரும் பெண்களே. ஆறாவது குழந்தையும் பெண்ணாக இருக்குமோ என்ற ஏக்கம் இவர்களிடம் குடி கொண்டிருந்தது. பெரிய சந்நியாசியார் இத் தம்பதியினருக்குத் தரிசனம் அளித்து, ''ஆண்குழந்தை பிறக்கப் போகிறது; ஆனால், அவன் உங்கள் குடும்பத்துக்கு உதவான்'' என்றார்; உலகுக்கு 'உதவுவான்' என்பது அருத்தாபத்தி; குழந்தை பிறந்தது; பெயர் வடிவேல்.

ஈழத்துச் சித்தர்களான கொழும்புத் துறைத் தவமுனிவர் யோக சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள் உள்ளிட்ட பெரியார்களின் தொடர்பினை இளமையிலே பெற்றுக் கொண்டவரான வடிவேலர், மகாதேவ சுவாமிகளை அடைந்து அவரைத் தம் குருவாகக் கொண்டு துறவியானார் என்பதே வரலாறு. அடிகோலி வைத்தவர் பெரிய சந்நியாசியார். வடிவேலருக்கு ஐந்து வயசில் வித்தியாரம்பஞ் செய்து வைத்தவரும் ஏழு வயசில் தீட்சை கொடுத்தவரும் பெரிய சந்நியாசியார் என்பதிலிருந்து வடிவேலர் கருவிலேயே திருவுற்றிருந்தாரென்பது புலனாகும். தவமும் தவமுடையார்க்காகும் !

வடிவேலருக்குப் பாடசாலைப் படிப்புக் குறைவு. பெரியார்களின் சேர்க்கை அறிவுத்துறையில் அவரைப் பெரியவராக்கி விட்டது. உபந்நியாசம் செய்தல், கதாப்பிரசங்கம் நிகழ்த்துதல், கவிபுனைதல் முதலிய துறைகளில் இளமையிலேயே நாட்டங் கொண்டதுடன் வெற்றியுங் கண்டார். இவரின் பாடல்களோ பக்திச்சுவை மிக்கவை.

இணுவை நொச்சியம்பதி முருகனை நோக்கி ''என்னைக் கருணையினால் வல்லாளனாக்கிய வானவன்'' என்று உள்ள முருகிப் பாடுகின்றார் வடிவேற் சுவாமியார் அவர்கள். ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்ற விபுலாநந்த அடிகளாரின் காவிய நடையை இங்கு காண முடிகின்றது.

உ

# ஆயிரம் பிறை கண்டவர்

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

''ஒருநாள் இரவு, சுவாமிகள் ( ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ) வடமராட்சியில் ஒரு கூட்டத்துக்கு என்னையும் அழைத்துச் சென்றார்கள். கூட வந்த மற்றொருவர் வடிவேற் சுவாமிகளாயிருக்குமென்று எண்ணுகிறேன். காரிலே பிரயாணஞ் செய்தோம்.''

தவத்திரு மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவு மலருக்கென எழுதிய கட்டுரையில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்கள். பென்னம் பெரியவர்களான மகாதேவ சுவாமிகள், பண்டிதமணி இருவரும் பிரயாணஞ் செய்த காரில் உடன் சென்றவர்கள் - நாம் எப்பொழுதுங் காணும் – இணுவில் வடிவேற் சுவாமியார் தானே என்ற எண்ணம் கட்டுரையைப் பிரதி செய்த பொழுது என் மனசில் எழுந்தது. வடிவேற் சுவாமியார் எமக்கு முற்றத்து மல்லிகையாகக் காட்சி தந்த காலம் அது. வடமராட்சிப் 'பயணத்தின் போது ஏற்பட்ட மூவர் பெரியார்களின் சந்திப்பு, திரிவேணி சங்கமத்தின் சிறப்பை ஒத்ததாகலாம் !

இணுவில் சந்நியாசி கந்தர் - சின்னக்குட்டி அம்மையார் குடும்பத்தில் முதலிற் பிறந்த குழந்தைசள் ஐவரும் பெண்களே. ஆறாவது குழந்தையும் பெண்ணாக இருக்குமோ என்ற ஏக்கம் இவர்களிடம் குடிகொண்டிருந்தது. பெரிய சந்நியாசியார் இத் தம்பதியினருக்குத் தரிசனம் அளித்து, ''ஆண்குழந்தை பிறக்கப் போகிறது; ஆனால், அவன் உங்கள் குடும்பத்துக்கு உதவான்'' என்றார்; உலகுக்கு 'உதவுவான் என்பது அருத்தாபத்தி; குழந்தை பிறந்தது: பெயர் வடிவேல்.

ஈழத்துச் சித்தர்களான கொழும்புத்துறைத் தவமுனிவர் யோக சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள் உள்ளிட்ட பெரியார்களின் தொடர்பினை இளமையிலே பெற்றுக் கொண்டவரான வடிவேலர், மகாதேவ சுவாமிகளை அடைந்து அவரைத் தம் குருவாகக் கொண்டு துறவியானார் என்பதே வரலாறு. அடிகோலி வைத்தவர் பெரிய சந்நியாசியார். வடிவேலருக்கு ஐந்து வயசில் வித்தியாரம்பஞ் செய்து வைத்தவரும் ஏழு வயசில் தீட்சை கொடுத்தவரும் பெரிய சந்நியாசியார் என்பதிலிருந்து வடிவேலர் கருவிலேயே திருவுற்றிருந்தாரென்பது புலனாகும். தவமும் தவமுடையார்க்காகும் !

வடிவேலருக்குப் பாடசாலைப் படிப்புக் குறைவு. பெரியார்களின் சேர்க்கை அறிவுத்துறையில் அவரைப் பெரியவராக்கி விட்டது. உபந்நியாசம் செய்தல், கதாப்பிரசங்கம் நிகழ்த்துதல், கவிபுனைதல் முதலிய துறைகளில் இளமையிலேயே நாட்டங் கொண்டதுடன் வெற்றியுங் கண்டார். இவரின் பாடல்களோ பக்திச்சுவை மிக்கவை.

இணுவை நொச்சியம்பதி முருகனை நோக்கி ''என்னைக் கருணையினால் வல்லாளனாக்கிய வானவன்'' என்று உள்ளமுருகிப் பாடுகின்றார் வடிவேற் சுவாமியார் அவர்கள். ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்ற விபுலாநந்த அடிகளாரின் காவிய நடையை இங்கு காண முடிகின்றது.

தம் குருநாதரான மகாதேவ சுவாமிகளைத் துதிக்கும் முகமாக வடிவேற் சுவாமிகள் பாடிய பாடல்கள் அவரது உள்ளக் கிடக்கையைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. ''என்னையெனக் கறிவித்து அறிநெறியாந் துறவைச் சொன்னவன்'' என்று தமது குருநாதர் - ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் - தன்னை வழிப்படுத்திய வரலாற்றினைக் கூறி மிகவும் வியக்கின்றார் தவத்திரு வடிவேற் சுவாமியார் அவர்கள். குருபக்தியின் மகிமை இருந்தவாறு!

ஓங்கி உயர்ந்து வளர்ந்தவரான வடி-வேற் சுவாமியார் அவர்கள், மனப்பாங்கிலும் உயர்ந்தவர். முழந்தாள் வரை மறைக்கத்தக்க வகையில் அரையிலே காவி வேட்டி, தோளிலே சிறியதொரு அங்கவஸ்திரம். நெற்றியில் நிறைய விபூதி; அழகிய சந்தனத் திலகம்; பணிவினை எடுத்துக் காட்டும் புன்முறுவல் பூத்த முகம்; வடிவேற் சுவாமியாரின் குருநாதரான ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளும் இவ்வாறாகவே காட்சியளித்தார்கள். ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளைப் பெரிய நெடுவல் என்றும், அவரது சீடரான தவத்திரு வடிவேற் சுவாமியாரைச் சின்ன நெடுவல் என்றும் அடியார்கள் தம்மிடையே வரிசைப்படுத்தி உரையாடுவதுமுண்டு.

அன்புக்குரியார் எவரைக் கண்டாலும் மிகவும் பவ்வியமாக அழைத்து அளவளாவும் சுபாவம் உடையவர்களான வடிவேற் சுவாமியாரவர்கள், உரையாடலிடையே நீதிக் கருத்துக்களை நன்கு எடுத்துக்கூறி, மகிழ வைப்பது வழக்கம். பணிவுடைமை அவருக்குக் கிடைத்த முதுசொம். ''பணியுமாமென்றும் பெருமை ...'' என்னும் வள்ளுவர் வேதத்தின் உட்பொருளைத் தவத்திரு வடிவேற் சுவாமியாருடன் தொடர்புபட்டவர்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

''அருளது சத்தி யாகு மரன்றனக்
கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச்
சத்தி யில்லை ..''

என்கின்ற சித்தியார்ப் பாடலில் சிவ சக்தியின் பெருமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இணுவில் பரமானந்தவல்லி அம்பாள் வடிவேலரினதும் முன்னோரினதும் குல தெய்வம். வடிவேலரை வடிவேற் சுவாமியாராக்கிய பரமானந்த வல்லி அம்பாளின் அருட் பிரவாகமோ எழுத்தில் அடங்காதது.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்பதை வலியுறுத்திப் பல சந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் இருக்கின்றார் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் வழியில் புராண படன மரபினைப் பேணிக் காத்து வளர்த்தவர்களில் தவத்திரு வடிவேற் சுவாமியார் அவர்களுக்கும் பங்கு உண்டு.

''சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்'' என்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ... '' என்ற தொடர் சிவஞானபோதம் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் மூன்றாம் அடியாகத் திகழுகிறது. உள்ளும் புறமும் தூயவராகவும் சிவவேடதாரியாகவும் தன்னை நெறிப்படுத்திய தவத்திரு வடிவேற் சுவாமியார் அவர்கள் தமது தவ வாழ்க்கையின் வாயிலாக ஆயிரம் பிறைகண்ட பெருமைக்கும் உரியவராகின்றார்.

இணுவில், ''இணையில்'' பதியாக விளங்குவதற்கு இந்த நூற்றாண்டில் மூலவித்தாயமைந்தவர்களில் தவத்திரு வடிவேற் சுவாமியார் அவர்கள் முக்கிய இடத்தை வகித்தார்கள் என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

## நாமமது வாழ்க நன்றே

★

இணுவையிலே வந்துதித்தார்
இனியதமிழ் சைவத்தை
நுணுகியறிந் திடவிரும்பி
நூல்களினைக் கற்றுய்ய
அணுகினர்காண் மகாதேவ
சுவாமிகளின் அருளதனால்
நணுகுவடி வேற்சாமி
நாமமது வாழ்கநன்றே.